தாய்வீடு

அனைத்துலகப் பெண்கள் நாள்

உன் ஆளுமை இழந்த
எம் வெற்றுத் தடங்களின்
கொடுந்துயர் ஆற்ற முயன்று
தோற்றுப் போகிறது
உயிரிழந்த காற்று...




# பன்முக ஆளுமை கருணா வின்சென்ற்

# தாய்வீடு




THAIVEEDU MARCH 2019 மார்ச் HOME & LIVING One Dollar www.thaiveedu.com info@thaiveedu.com

# பன்முக ஆளுமை கருணா வின்சென்ற்



ISSN 2369-3657

# விண்ணை நிகர்த்த என் கருணா...




**- டிலிப்குமார் -**

அந்தக் கணங்களை என்னால் மொழி கொண்டு எழுத முடியாது.

அனைத்து அசைவிலும் என்னோடு இணைந்திருந்தவனைத் தேடிச்சென்ற ஒரு பொழுதில், அதைச் சற்றும் எதிர்பாராத மனநிலையில், தனியொருவனாக அவனை அவ்விடத்தில் உயிரற்ற நிலையில் கண்டபோது, நான் நொருங்கிச்சிதைந்த அந்தக் கணங்களை மொழிகொண்டு என்னால் விபரிக்க முடியாது.

அந்தளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் இடர்களையும் நான் சந்தித்திருக்கவில்லை. அன்று என்னை ஆற்றுப்படுத்துவதற்கு குரலெடுத்து அழுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

அகவுணர்வுகள் இப்போதும் அவனோடு பேசிக்கொண்டிருக்கின்றன. புறவுணர்வுகளோ நடந்ததை நம்பாமல் அவனைத் தேடிக் கொண்டிருக்கின்றன.

என்னுலகில் ஒளிவிட்டெறித்த சூரியன் பட்டப்பகலிலேயே காணாமற்போனான். திசைகள் அழிந்த காரிருளில் தனித்துவிடப் பட்டவனாக என்னை உணர்கின்றேன்.

கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளில், என் சமூகம் சார்ந்த புறச்செயற்பாடுகள் அனைத்திலும் கருணா என்னோடு இரண்டறக் கலந்திருந்தான். ஒரு ஆசானாக, அறிவுரைஞனாக, வழிகாட்டியாக, நண்பனாக... கருணாவை நான் கண்ட பரிமாணங்கள் பல.

எண்ணிலடங்காத் தேவைகளும் அவற்றுக்கான தேடல்களும் எமக்கிருந்தன. எதையும் நான் தேடியதாக எனக்கு ஞாபகம் இல்லை. எப்போதும் எதையாவது எமக்காகத் தேடுபவனாகவே கருணா இருந்தான். கடை-சிக்கணம் வரை தேடிக்கொண்டேயிருந்தான். சாவு உட்பட.

அவனுக்குள்ளிருந்த அற்புதங்களை ஏறக்குறைய முழுமையாக அறிந்திருந்தவன் நானாகத்தான் இருப்பேன். மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளைக் கொண்ட தாய்வீடு சார்ந்த செயற்பாடுகள் வழியே அதியுச்ச அளவுக்கு அவன் தன்னை வெளிப்படுத்தினான். அவனுடைய ஆற்றல்களோடு ஒப்பிட்டால் தாய்வீடு சிறிய களமே. கருணா வியாபித்திருக்க வேண்டிய களங்கள் வேறாகவே இருந்திருக்கவேண்டும்.

அரங்கநிகழ்வுகளில் நான் ஒரு நடிகனாகவும் கருணா ஒரு அரங்கத் தொழில்நுட்பவாளனாகவும்தான் அக்காலங்களில் அறிமுகமானோம். அவ்வேளையிலேயே கருணா கொண்டிருந்த ஆற்றல்களின் ஆழ அகலங்களை நான் உணர்ந்தவனாக இருந்தேன்.

2007ல் தாய்வீடு இதழை நான் முழுமையாகப் பொறுப்பெடுத்து நடத்தவேண்டிய சூழல். பல்துறை ஆற்றல்களை ஒருங்கிணைத்து மாதம்தோறும் இதழை வெளியிட வேண்டிய கடுஞ்சுமைகளாலான பணி. என்னால் இதழைக் கொண்டு நடத்தமுடியும் என்ற அசட்டுத் துணிவு என்னிடம் இருந்தாலும் உள்ளூரத் தயக்கங்கள் இல்லாமல் இல்லை.

அவ்வேளையில் கருணாவையும் அணுகினேன். நிறையக் கனவு காண்பவன் கருணா. எப்படியெல்லாம் சாதிக்க வேண்டும் என அடிக்கடி கூறிக்கொண்டிருப்பவன். ஒரு இதழ் எப்படி அமைய வேண்டும்? எவற்றையெல்லாம் கொண்டிருக்க வேண்டும்? என்ற கனவுகளைச் சுமந்து திரிபவன்.

என் தேவைகளில் அவன் மகிழ்ச்சியானான். என் தேவைகளும் அவன் கனவுகளும் ஒரு புள்ளியில் சந்தித்தன.

எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது. இந்த உரையாடல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த நாட்களில் ஒருநாள் Toronto star, The Global and Mail போன்ற மைய ஊடக இதழ்களை எடுத்து வைத்துக்கொண்டு என்னை அழைத்தான். ஒரு நல்ல இதழ் தொடங்க வேண்டுமாக இருந்தால், எங்கள் ஒப்பீடு உயர்ந்த இதழ்களோடானதாக இருக்கவேண்டும். அந்த இதழ்களில் தன்மைகளே எம் இதழுக்கு அளவிடாக இருக்க




வேண்டும் என்றான். அந்த இதழ்களை வைத்துக்கொண்டு ஏதோவெல்லாம் பேசினான். பேசியதில் பாதி எனக்கு விளங்கவேயில்லை.

தாய்வீடு இதழுக்கான வடிவமைப்பை சிறுகச் சிறுகச்செதுக்கினான். ஒவ்வொரு பக்கத்தையும் கட்டுரைகளுக்கு ஏற்ப வடிவமைத்தான். அவ்வேளை அவன் ஒரு விடயத்தைச் சொன்னான். அந்தப்பொழுதில் அது எனக்குப் பேரிடியாக இருந்தது.

மாதந்தோறும் என்னால் உங்கள் இதழை வடிமைக்க முடியாது. அது உங்களுக்குக் கட்டுப்படியாகாது. அடுத்த மாதத்திலிருந்து நீங்கள்தான் இதழை வடிவமைக்க வேண்டும். வடிவமைப்புச் சட்டகங்களை நான் உருவாக்கித்தந்துவிடுவேன். என்றான்.

'எனக்கு விளங்கவில்லை. எனக்கும் கணினிக்கும் எட்டாப் பொருத்தம். அதெல்லாம் சரிவராது' என்றேன்.

'சரிவரும். நாலு மாதத்துக்குள் நான் உங்களை மாற்றிக் காட்டுவேன்' என்றான்.

நடந்தது. மூன்றாவது மாதத்திலிருந்து இன்றுவரை பெரும்பாலான பக்கங்களை நானே வடிவமைத்து வருகின்றேன். சிறப்புப் பக்கங்களையும் சிக்கல்கள் ஏற்படும் போது வேண்டிய தீர்வுகளையும் தருபவ-னாகக் கருணா இருந்தான்.

கருணாவின் கைவண்ணத்தில், மற்றுமொரு பரிமாணத்தில் தாய்வீடு இதழ் வெளி-வரத் தொடங்கியபின், இவ்விதழுக்கென எழுதவல்ல தரமான கட்டுரையாளர்களைத் தேடவேண்டியிருந்தது. எழுதவல்லவர்களைத் தூண்டித்தூண்டி எழுத வைக்க வேண்டியிருந்தது. கருணா பலரோடு தொடர்பு கொண்டு கட்டுரைகளைப் பெற்றுத்தந்தான். புதிதாக எழுதத்தொடங்கிய பலருக்கு கட்டுரை எவ்வாறு எழுதவேண்டும் என்பதையும் கற்பித்தான். கட்டுரை எழுதுவோருக்கு வேண்டிய தகவல்களையும் குறைவில்லாது வழங்கிக் கொண்டிருப்பான்.

ஆண்டுதோறும் தாய்வீடு இதழ் நடத்தும் ஒன்றுகூடல்களை நீங்கள் அறிவீர்கள். தாய்வீடு சார்ந்த எழுத்தாளர்களை மட்டுமே அழைத்துக் கலந்துரையாடும் நிகழ்வு அது. ஆண்டுதோறும் இந்த நிகழ்ச்சியை வடிவமைத்து நடைமுறைப்படுத்தியவன் கருணாவே. எழுத்தாளர்களை மேம்படுத்துவதும் ஊடகங்களின் பணி என அடிக்கடி கூறுபவன் கருணா.

அச்சு இதழ்களில் படங்கள் குறிப்பிட்ட இடத்தை பெறவேண்டும் என்பது அச்சூடக விதி. அவற்றுக்குள் அழகாக ஓவியங்களைப் புகுத்தி அழகு பார்த்தவன் கருணா. ஓவியம் பற்றிய தொடர் கட்டுரைகளையும் எழுதியவன்.

இன்று தமிழுலகு அறிந்த அனைத்து ஓவியர்களும் தாய்வீடு இதழோடு இணைந்துள்ளனர். ஓவியர்களான மருது, ஆசை இராசையா, ராஜா, ஜீவா போன்ற அனைவரும் கருணாவல் அழைத்து வரப்பட்டவர்களே.

தாய்வீடு இதழ் அவ்வப்போது சிறப்பிதழ்களாக வெளிவருவதுண்டு. அத்தனை சிறப்பிதழ்களுக்குப் பின்னாலும் கருணாவின் உழைப்பு இருந்தது.

தாய்வீடு தொடர்பில் கருணாவின் தொடர்புகள் உலகெங்கும் பரவியிருந்தன. உலகெங்கும் பரந்துவாழும் துறைசான்ற ஆளுமைகளைத் தாய்வீட்டோடு இணைத்து வந்திருக்கின்றான்.

தாய்வீடு, அரங்கியல் விழா என்ற மற்றுமொரு தளத்தில் காலடி எடுத்து வைத்த போது அதிலும் எல்லாமாகி நின்றவன் கருணா. தொடக்கத்தில் இது இதழ் வெளியீட்டோடு பெருஞ்சுமையாகி விடுமோ என்ற தயக்கம் இருந்தாலும் பின்னர் களமிறங்கி தன் ஆற்றல்களால் அனைத்து விழாக்களையும் அழகுபடுத்தினான்.

கடந்த ஐந்து அரங்கியல் விழாக்களிலும் பங்குகொண்ட அத்தனை கலைஞர்களும் கருணாவை எளிதில் மறந்துவிடமுடியாது. ஒவ்வொருவருடனும் அவர்கள் துறைசார்ந்து நெருங்கிப் பணியாற்றும் வல்லமை கருணாவுக்கு இருந்தது. கூத்து, நாடகம், ஆடல் எனப் பல கலைவடிவங்களை எழுதுவோருக்கும் இயக்குவோருக்கும் அதை மேன்மைப்படுத்தும் நோக்கில் அறிவுரை கூற வல்லவனாகக் கருணா இருந்தான்.

கலையரங்கில் உள்ள தொழில் நுட்பங்களை நுணுக்கமாக ஆய்ந்து அவை யாவற்றையும் கலை வெளிப்பாட்டில் எப்படிப் பயன்படுத்தலாம் என்பதில் கருணா தொட்ட உச்சத்தைத் தமிழ் சமூகத்துக்குள் எவரும் தொடவில்லை என்பதே என் கருத்து.

நவீனத்துவ உத்திகள் மீது பெருங்காதல் கொண்டவன் கருணா. அனைத்துலகத் தரத்தை நோக்கியதாக எம் இதழியல், கலை வெளிப்பாட்டு இயக்கம் இருக்க வேண்டும் எனக்கருதி அதற்காகவே உழைத்தவன் கருணா.

அனைத்துலக சமூகத்தில் தாய்வீடு இதழுக்கென இன்றிருக்கும் மதிப்பை உருவாக்குவதில் கருணா கொண்டிருந்த பங்கு மிகப் பெரியது.

மேற்குறிப்பிட்ட அனைத்துக்கும் அப்பால், சிறந்த நண்பனாக, என் வலம், இடமாக நடமாடித் திரிந்தவன் கருணா. பெரும்பாலும் எமக்கிடையே எந்த ஒளிவு மறைவுகளும் இருந்ததில்லை. சிலவேளைகளில் கருத்துமோதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. குரலை உயர்த்திப் பேசியும் முரண்பட்டிருக்கின்றோம். மறுநாள் ஏதுமறியாதவரைப் போல் இருவரும் பேசிக்கொள்வோம். இவ்வாறான உறவுகள் அபூர்வமாகவே நமக்குக் கிடைக்கும்.

எனக்கு வலிக்கக் கூடாது என கருணா மேற்கொண்ட நடத்தைகள் பல. எனக்கு வலிகள் ஏற்பட்டபோதெல்லாம் அதை ஆற்றுப்படுத்தவென, கருணா முயன்ற பொழுதுகள் அதனிலும் பல.

நான் இழந்து நிற்கின்றேன்.

மொழி விபரிக்கும் பொருளுக்கு அப்பாற்பட்டு வியாபித்து நிற்கின்றது என் இழப்பு. கருணா என்ற ஒற்றை மையத்தைச்சுற்றியே என் தேவைகளும் தீர்வுகளும் குவிந்திருந்தன.

சூனியமாகிவிட்ட மையப்புள்ளியைச் சுற்றி, சூத்திரக்கிணற்று மாடுகளென வலம் வருகின்றன என் தேடல்கள்.

அவன் ஊன்றிச் சென்ற நம்பிக்கையே இன்னமும் மிஞ்சி இருக்கின்றது.

அவன் உருவாக்கிய வழிகளும் கண்ட கனவுகளும் எம்மை வழிநடத்திச் செல்லும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்ள நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

'ஒற்றைத் தடங்களில் உன்னால் நடக்க முடியும்' என்ற நம்பிக்கையை அவனே எனக்குள் விதைத்துச் செல்கின்றான்.

ஆதரவாய், ஆறுதலாய் எமை நோக்கி நீளும் அத்தனை விரல்களுக்கும் எம் நன்றி!

■ ■ ■

# உற்சாகம் தான் கருணா




**- டிராட்ஸ்கி மருது -**

அன்பிற்கினிய நண்பர் கருணா எனது வாழ்வில் மிகக் குறைந்த நாட்களே உட னிருந்தார். ஆனால் வாழ்வெல்லாம் உடன் இருந்தவர் போலவும் இருப்பவராகவும் இருக்கிறார் என்பது தான் உண்மை.

அவரை தாய்வீடு டிலிப் மூலம் தான் நான் அறிந்தேன். தொடர்ந்து டிலிப் என்னிடம் பேசி வருகிறபோதும் ஆரம்பத்தில் எனக் குக் கிடைத்த இதழ்களின் மூலமும் நான் அறிய முடிந்த ஓவியங்களின் வழியிலும் அதன் வடிவமைப்பு நிலை பற்றியும் டிலிப் அவர்களிடம் பேசிய போது கரு ணாவைப் பற்றிக் கூறி எனக்கு அவரை அறியப்படுத்தி என்னோடு பேசவைத்தார். அன்றிலிருந்து அந்த உணர்ச்சிப்பெருக்கு மிகுந்த குரலை நான் வாரம் ஓரிரு முறை கேட்டுக்கொண்டே இருக்கிறேன். உள்ளார்த் தமாகத் தேடுகிற அயராத குழந்தையின் வியப்பு நிலையிலேயே எப்போதும் ஆர் வம் கொப்பளிக்கும் உரையாடல் தான் அவர் உரையாடல். என்னை அவரில் பிர திபலிக்கக் கண்டேன்.

மாற்கு மாஸ்டரின் 70களின் முயற்சிகள் அனைத்தையும் நான் ஓவியக் கல்லூரி இறுதி ஆண்டுகளில் கேட்டும் சிலவற்றைப் பார்த்துமிருக்கிறேன். இன்று 40 ஆண்டுக ளில் ஈழத்திலும் புலம்பெயர்ந்தும் இருக் கிற ஓவியர்கள் வழி அவர் சிறப்பை அவர் வளர்த்து ஆளாக்கிய ஓவியர்கள் மூலம் கேட்டு வியந்துபோவேன். உண்மையில் இங்கு எங்கள் ஆசிரியர் சிற்பி தனபால் எப்படி எங்களுக்கெல்லாம் ஆதர்சமாக இருந்தாரோ அதுபோல மாற்கு மாஸ்டர் இருந்திருப்பதை அவர் மாணவர்கள் வியந்து அவரைப் பேசும் போது உணர்ந்திருக்கி றேன்.

மாற்கு மாஸ்டரைப் பற்றியும், உடன் கற் றவர்கள் பற்றியும் அதே காலகட்டத்துச் சென்னை ஓவியர்கள் பற்றியும் கருணா மிக ஆழமாகப் பேசியதைக் கேட்டிருக்கி றேன்.

நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன் கனடா வந்த போது நான் வந்து இறங்கிய நி- மிடம் கொண்டு டிலிப்புடன் கருணாவும் நான் இந்தியா திரும்பும் வரை அருகிலேயே இருந்தார்.

உரையாடலோடு வாழ்வைக் கொண்டாடு கிற அற்புதமான கலைஞனாக ஒவ்வொரு நிமிடமும் கருணா என் அருகில் இருந்தார். அந்தக் கணங்கள் எனது நட்பு நிலையில் மிகக் கொண்டாட்டமான கணங்கள்.

கருணாவுடனான பேச்சு கலாபூர்வமாக அதிலும் ஓவியம் என்று மட்டுமில்லாமல்



அவருக்கு இருந்த புகைப்படக் கலை, டிஜிட்டல் ஓவியம் மீது இருந்த வேகம் மிக்க வெறிமிக்க காதலும் அவர் பேச்சில் நிரம் பியபடியே இருக்கும்.

நண்பர்கள் ஒழுங்கு செய்திருந்த நிகழ்ச் சிகளை முடித்துக் கொண்டு கனடாவில் இருக்கும் அருங்காட்சியகங்களை எனக்கு காட்டுவதில் அளவில்லாத காதலோடு ஈடு பட்டார். ஒருமுறை மொன்றியாலுக்கு உறை யும் பனியில் 6 மணிநேரம் பயணித்துச் சென்று விடுதியில் தங்கிய போது நான் சோர்ந்து விட்டது குறித்து வருந்தி நின்ற வர், நான் அருங்காட்சியகத்திற்குள் நுழைந் ததிலிருந்து எனக்கு ஏற்பட்ட புத்துணர்ச்சி கண்டு அவர் புத்துணர்வு பெற்றார். எப் படிப்பட்ட உள்ளம் அவருக்கு!

அவருடைய பங்களிப்பை, குறிப்பாகத் தாய்வீட்டுக்கான பங்களிப்பை நண்பர்கள் மூலம் அறிந்தபோது அவருக்கிருந்த பல் துறையிலும் இயங்கும் ஆர்வமும் ஆற்ற லும் கண்டு வியந்தேன்.

புலம்பெயர்ந்து இருக்க வேண்டிய சூழல் அவரைப் பல்வேறு துறைகளில் இயங்க வைத்திருப்பதுடன் அவரைத் தேர்ச்சிபெற்ற கலைஞனாக மாற்றியிருக்கிறது.

டிஜிட்டல் புரட்சியுடனேயே சேர்ந்து காலத் தோடு வளர்ந்து வந்த கலைஞன் கருணா. ஓவியம். கணினி வரைகலை, புகைப்படம், டிஜிட்டல் ஓவியம் என்று இயங்கிக்கொண்டே இருந்த கலைஞனாக அவர் விட்டுச்சென்ற படைப்புகள் மூலமும் தீராத வேட்கை- யோடு இயங்கியவர் என்றும் வருங்காலத் தில் வளரும் கலைஞர்களால் கருணா அறியப்படுவார்.

எனக்கு கனடாவை நினைக்கும் போது எனது அனைத்து நண்பர்கள் நடுவில் அவர் இல்லையே என்று அறியும் போது நான் கனடா வந்து இறங்கிய அன்று மாலையே தாய்வீடு டிலிப் வீட்டில் அவ ரது பிறந்தநாள் நிகழ்ச்சி முதல் நாளாக அவரை சந்தித்திருந்த என்னை அவர் கட்டியணைத்த புகைப்படம்(அவர் மறைந்த செய்தி என்னைப் பல வழிகளில் வந்து சேரும் போது) நண்பர் கவிஞர் சேரன் அனுப்பியிருந்தார் அப்புகைப்படம் என்னை உடைந்து போகச் செய்துவிட்டது. உடன் கருணா, சேரனின் செல்லநாயோடு உட் கார்ந்திருக்கும் படமும் வந்தது. அப்பட மும் ஒரு அழியாத கலைஞனை எனக்கும் இவ்வுலகிற்கும் சொல்லும். ஆனாலும் அனைத்து நண்பர்களும் சொன்ன வார்த்தை தான் நினைவில் இருக்கிறது.

என்ன அவசரம்
கருணா!



trotskymarudu@thaiveedu.com

# கருணா என்னும் ஒரு கலைஞனின் மரணம்...

கருணா அண்ணனை நான் நேரில் கண் டதில்லை.

ஆனால் அவரோடு நிறைய உரையாடி யிருக்கிறேன்.

எங்களின் உரையாடல் ஓர் ஓவியத்தைப் பற்றியதாகவோ ஒளியமைப்பைப் பற்றிய தாகவோ நடனம் அல்லது கூத்துப் பற்றி யதாகவோ தான் பெரும்பாலும் இருக்கும்.

நாம் நம் வாழ்நாளில் பல மனிதர்களை, பல கலைஞர்களைச் சந்தித்திருப்போம். அவர்களில் மிகச்சிலரே நமது சிந்தனை யோடு கூட வருபவர்களாக, நமது செயற் பாடுகளைப் புரிந்து கொள்பவர்களாக, நமது படைப்புகளோடு அவர்களும் பய ணிப்பவர்களாக இருக்கின்றனர்.

அந்த வகையில் கருணா அண்ணன் எனது கலைப்பயணத்தில் ஆத்மார்த்தமான கருத் துக்களையும் பங்களிப்பினையும் தந்த ஒரு மனிதர்.

இத்தனைக்கும் எமது தொடர்பு முகநூலில் மட்டுமே இருந்திருக்கிறது. அவரது தொலை பேசி எண் கூட என்னிடம் இல்லை. சில மனிதர்கள் தூரமிருந்தாலும் வாழ்வோடு அருகிலிருப்பவர்களாகி விடுகிறார்கள்.

எனது ‘கறுத்த பெண்’ கவிதை நூலுக்கு கேட்டவுடனேயே முகப்பு ஓவியம் வரைந்து தந்தார். கேட்காமலேயே பறை அரங்கிற் குத்தமது பாணியில் வடிவமைப்புச் செய்து கொடுத்தார். எனது புத்தர் கவிதைகளுக்கு தனது கைத்தொலைபேசியிலேயே குட்டிக் குட்டிப் படங்கள் வரைந்து அனுப்புவார். அந்தப் படங்கள் இப்போது எனது கவி தைகளுக்கு மேலும் நெருக்கமாகிவிட்ட தாக உணர்கிறேன்.

அவருடைய மனதில் கலை பற்றியும் நமது கலைஞர்கள் பற்றியும் ஒரு வகைத் தீராத ஏக்கம் இருந்துகொண்டே இருந்ததை நான் அறிவேன்.

‘எப்படியாவது நமது கலைஞர்களை ஒரு படி உயரக் கொண்டு செல்லவேண்டும்’, ‘இன்னும் மேலதிகமாகச் சிந்திக்க வைக்க வேண்டும்’ என்பவை அவர் மனத்துள் எப் போதும் ஓடிக்கொண்டிருந்த விடயங்கள்.

பல நிகழ்வுகளை அனுப்பி அவைகளைப் பற்றி கருத்துக்களைச் சொல்லியே ஆக வேண்டும் என்று சொல்லும்வரை கேட்டுக் கொண்டே இருப்பார். இந்தக் கருத்துக்க ளைப் பிற நடனக் கலைஞர்களோடும் பகிர்ந்து கொள்வார்.

முகநூலில் நட்பாக இருக்கும் ஒருவரின் மரணம் எனக்கு இத்தனை மன அழுத் தத்தை ஏற்படுத்தும் என்று நான் எண்ணி யதே இல்லை.

கருணா அண்ணனின் இழப்பு தூர இருக்கும் ஒரு முகநூல் நட்பாக இருக்கும் எனக்கே இத்தனை மனஅழுத்தத்தை தருகிறதென் றால் அவர் அருகில் இருக்கும் மனிதர்க ளுடைய மனநிலை எப்படி இருக்கும்? அவருடைய மரணத்தை மனம் இன்னும் ஏற்றுக்கொள்ளவேயில்லை.

அவருடைய சிறு வயதுப் படம் ஒன்று எனக்கு மிக்கப் பிரியம் தருவதாய் இருந் தது.
அவ்வப்போது எனது புத்தாக்க விதைகளுக் குக் கைபேசியிலேயே படம் வரைந்து அனுப் பும் அன்பையும், ஒரு படைப்பைப் பற்றி உரையாடும் ஒரு உயிரையும் இழந்து விட்டேன். இது எத்தனை பெரிய இழப்பு என்பதைச் சிலராலேயே உணர்ந்துகொள்ள முடியும்.


அவருடன் பேசிய உரையாடல்களை மீண் டும் முகநூலில் மீளப் படித்துப் பார்க்கி றேன். ஆசைகளும், எதிர்பார்ப்புகளும் நிறைந்தது தானே வாழ்வு? முடிந்தவரை அவருடை கலைக்கனவுகளின் தொடர்ச்சி யாகவும் நீட்சியாகவும் வண்ணந் தீட்டும் என் மனத்தை தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

சில நேசங்கள் ஆழ வேரூன்றி விடுகின்றன.

அண்ணனின் அன்பு அப்படியான ஒன்று!

உண்மையான கலைஞனின் மரணம் நமக்குப் பேரிழப்பு.

கருணா அண்ணனின் ஆத்மா மீண்டும் ஒரு பிறவி
காணவேண்டும்.



**- கவிதா லட்சுமி -**

# நினைவேந்தல்



பல்துறை ஆளுமை
## ஓவியர்
## கருணா வின்சென்ற்

**மார்ச் 23, 2019**
**சனிக்கிழமை**
**பி.ப. 4:30**

**Armadale Community Centre,**
**2401 Denison St, Markham ON**

தொடர்புகளுக்கு: 416 857 6406 • 416 832 0929 • 416 731 1752

# கருணா ஒரு தகவல் களஞ்சியம்

**- மணி வேலுப்பிள்ளை -**

அமரர் கருணா அவர்களை 1991ம் ஆண்டு அவருடைய வேலைத்தலத்தில் நான் முதன்முதல் சந்திக்க நேர்ந்தது. எனது மொழிபெயர்ப்பு ஒன்றை வரைபடத்தில்



இடுவதற்கு அவரை நாடும்படி வேறொரு நண்பர் எனக்கு யோசனை கூறியிருந்தார். எனினும் எமது தொடர்பு நீடிக்கவில்லை.

ஏறத்தாழ இரு தசாப்தங்கள் கழித்து மார்க்கம்-நகெட் சந்தியில் உள்ள திம் ஹோர்ட்டன் சிற்றுண்டியகத்தில் கருணாவையும் டிலிப்குமாரையும் நான் அன்றாடம் காண நேர்ந்தது. எனக்கும் அவர்களுக்கும் செல்வம் அருளானந்தம் பொது நண்பர். செல்வம் ஊடாகவே மீண்டும் கருணாவுடன் எனக்குத் தொடர்பேற்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால், நானும் கருணாவும் ஒரே ஊரவர்கள்!

இப்பொழுது மீண்டும் அவருடன் பழகப் பழக அவரது சிறப்புக்கள் அடுத்தடுத்துப் புலப்பட்டன. கருணா ஒரு தகவல் களஞ்சியம், கணினி விற்பன்னர், வரைகலை வல்லுநர், நவீன ஓவியர், அரங்க நெறியாளுநர், நிழற்பட நிபுணர்... என்னை வியக்க வைத்த இன்னொரு சிறப்பு: எந்த ஓர் ஆங்கிலச் சொல்லாயினும் அதற்கு நிகரான தமிழ்ச்சொல்லைக் கண்டறிவதில் அவர் தளரா வேட்கை கொண்டவர். உண்மையில் இதுவே அவரையும் என்னையும் கட்டிப்போட்டது. ஆங்கிலக் கலைச்சொற்களின் பொருளைத் தேர்ந்து தெளிவதற்கு கருணாவின் உதவியை நான் திரும்பத் திரும்ப நாடினேன். இன்று மேன்மேலும் அவரது துணை எனக்குத் தேவைப்படும் சூழ்நிலையில் அவரை இழக்க நேர்ந்தமை ஓர் அவப்பேறே.

தனது உடல்நலக் குறைவைக் கருத்தில் கொண்டு தனது எதிர்கால வாழ்வு தொடர்பான பிரதிக்கினை ஒன்றை அவர் மேற்கொண்டிருந்தார். அவர் விரும்பியோ விரும்பாமலோ அவரது பிரதிக்கினை அவரைத் தனிமைக்கு இட்டுச் சென்றது. எனினும் பல்வேறு தரப்புகளுக்கும் அமைப்புகளுக்கும் பணிகளுக்கும் பற்பல வழிகளில் வலுவூட்டி, துணைநின்று, கைகொடுத்தவர் கருணா. ஆதலால் அன்னாரின் மறைவு உறவுகளையும் குழுமங்களையும் துறைகளையும் நாடுகளையும் கடந்து எதிரொலித்த வண்ணம் உள்ளது.

அமரர் கருணா அவர்களின் ஆத்மா சாந்தியடையும் வண்ணம் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளில் கலந்துகொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன். அதேவேளை அவரை இழந்து வருந்தும் குடும்பத்தவர்களின் துயரை இத்தால் நானும் பகிர்ந்து கொள்கிறேன்.

mani.velupillai@thaiveedu.com



**Publisher & Editor : PJ. Dilipkumar**
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : அருண்மொழிவர்மன், சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், கருணா, பொன்னையா விவேகானந்தன், ரவிச்சந்திரிகா.

ஓவியங்கள் : ஆசை இராசையா (இலங்கை), டிராட்ஸ்கி மருது (இந்தியா), ஜீவா (இந்தியா), கருணா (கனடா), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), ரமணி (இலங்கை), செந்தில் (இந்தியா), சௌந்தர் (இங்கிலாந்து), றஷ்மி (இங்கிலாந்து).

புகைப்படங்கள் : கருணா, K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), துசியந்தன் துரைரத்தினம்.

தட்டச்சு : ஜீவா, சாம் டானியல்.

ஒப்புநோக்கல் : கௌரி, கந்தசாமி கங்காதரன்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்).

பொது உறவுத் தொடர்பு : குமணன் தம்பிஐயா

ரொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன், சசி, மெய்யழகன்.

மொன்றியால் தொடர்பு : சுகுமாரன் சின்னையா.

ஒட்டாவா தொடர்பு : அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

அஞ்சல் முகவரி : **Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Tel : 416-646-3422, 416-857-6406**
**Fax : 416-849-0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

Printed on recycled paper

## வீட்டினுள்ளே வருபவை...

### பல்துறை ஆளுமை ஓவியர் கருணா வின்சென்ற்

| | |
|---|---|
| டிலிப்குமார் | 1 |
| டிராட்ஸ்கி மருது | 1 |
| கவிதா லட்சுமி | 1 |
| மணி வேலுப்பிள்ளை | 3 |
| அருண்மொழிவர்மன் | 4 |
| சேரன் | 5 |
| அஸ்மா பேகம் | 5 |
| கே. கிருஷ்ணராஜா | 6 |
| மு. நித்தியானந்தன் | 6 |
| கந்தசாமி கங்காதரன் | 7 |
| ராஜா மகேந்திரன் | 7 |
| செல்வம் அருளானந்தம் | 8 |
| அ. ராமசாமி | 9 |
| களப்பூரான் தங்கா | 10 |
| றெஜி மனுவேல்பிள்ளை | 11 |
| ராஜ்மோகன் செல்லையா | 11 |
| எஸ்.கே. விக்னேஸ்வரன் | 12 |
| ந. இரவீந்திரன் | 13 |
| கந்தையா ஸ்ரீகணேசன் | 14 |
| ஞானம் லேம்பட் | 15 |
| மு.பி. பாலசுப்பிரமணியன் | 15 |
| ஜீவா | 16 |
| அனார் | 16 |
| கருணா கோபாலபிள்ளை | 17 |
| பரமகுலராணி | 17 |
| நிமால் நாகராசா | 17 |
| தாமரை | 18 |
| ஆயணி விவேகானந்தன் | 18 |
| தமிழருவி குலராஜசிங்கம் | 18 |
| அருவி இரவீந்திரன் | 18 |
| கார்த்திகேசு விஜயசுகந்தன் | 19 |
| ஹரி ஆனந்தசங்கரி | 20 |
| **Sharry Aiken** | **21** |
| **Dishaly Ilamaran** | **21** |
| **Neethan Shan** | **21** |
| கருணா | 22 |
| அ. கந்தசாமி | 23 |
| ரதன் | 24 |
| பா.அ. ஜயகரன் | 25 |
| மனவெளி கலையாற்றுக் குழு | 25 |
| பார்வதி கந்தசாமி | 25 |
| குரு அரவிந்தன் | 26 |
| திருமுருகவேந்தன் | 26 |
| கார்த்திகா பார்த்திபன் | 27 |
| எஸ்.எம். வரதராஜன் | 28 |
| க. சிவமணி | 29 |
| தமிழ்நதி | 30 |
| பிரியதர்சன் | 31 |
| கனடா உலகத்தமிழர் பத்திரிகை | 32 |
| ஞானதாஸ் காசிநாதர் | 33 |
| கதி. செல்வக்குமார் | 34 |
| கார்த்திகா ஞானச்சந்திரன் | 35 |
| **Jennifer Dilipkumar** | **35** |
| றஷ்மி | 36 |
| தீவகம் இராசலிங்கம் | 36 |
| ஓவியர் அமரதாஸ் | 37 |
| அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார் | 38 |
| நேத்ரா ரொட்ரிகோ | 38 |
| பொன்னையா விவேகானந்தன் | 39 |

| | |
|---|---|
| **சமன்கோலைப் பார்த்துக்கொண்டேயிருக்கும் தமிழர்கள்**<br>அ. கணபதிப்பிள்ளை | 43 |
| **உயிர்ச்சத்து B9: Folic Acid**<br>ரவிச்சந்திரிகா | 44 |
| **துளிர் காலமும் மிதிவண்டியும்**<br>செந்தூரன் புனிதவேல் | 47 |
| **முகநூல் நட்பெல்லாம் நட்பல்ல**<br>க. நவம் | 48 |
| **செல்போன்களின் மறுபக்கம்**<br>எஸ். பத்மநாதன் | 51 |
| **வசந்தகால வீட்டுப் பராமரிப்பு (Spring - Home Maintenance)**<br>வேலா சுப்ரமணியம் | 52 |
| **நிலாவில் தரை இறங்கிய சாங்-இ- 4**<br>குரு அரவிந்தன் | 54 |
| **மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை**<br>முருகேசு பாக்கியநாதன் | 57 |
| **கோழிப் பொரியல் மன்னன்**<br>குமார் புனிதவேல் | 63 |
| **ஊடகவியலாளர் படுகொலைகளும் நீதி விசாரணையும்**<br>அதிரதன் | 64 |
| **ஏமாந்ததும் ஏமாற்றியதும்**<br>சோக்கல்லோ சண்முகநாதன் | 67 |
| **தாய் மண் காப்போம் - அன்பு நெறி**<br>ந. அரியரெத்தினம் | 72 |
| **ஜாக்டோ ஜியோ ஆசிரியர்கள், அரச ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பு**<br>ரொனி ராஜன் | 77 |
| **தவறுகளால் உரம் பெறுதல்**<br>P. விக்னேஸ்வரன் | 83 |
| **வாழ்புலத் தமிழரின் எதிர்கால இருப்பில் கலைகளின் முதன்மைத்துவம்**<br>பொன்னையா விவேகானந்தன் | 86 |
| **இலங்கையின் தொழிற்சங்க எழுச்சி**<br>ந. இரவீந்திரன் | 89 |
| **பெரியாரின் பெண் ஏன் அடிமையானாள்?**<br>மைதிலி தயாநிதி | 93 |
| **திருக்குறளிற் பெண்கள் பற்றிய கருத்துநிலை நோக்கு**<br>விமலா பாலசுந்தரம் | 94 |
| **இரண்டு நண்பர்கள்**<br>கீ டி மாப்பாசான் | 96 |
| **நான் என்ன செய்கிறேன்?**<br>அ. முத்துலிங்கம் | 103 |
| **சோழர்கால இலக்கியம்: சமய மரபுசார் இலக்கிய ஆக்கங்கள்**<br>நா. சுப்பிரமணியன் | 107 |
| **கார்ட்டூன் மொழியும், குறியீடுகளும்**<br>எஸ். தர்மதாஸ் | 109 |
| **இம்மனுவேல்**<br>செல்வம் அருளானந்தம் | 113 |
| **ஒரு கிராமம் நகரமாகிறது**<br>நெடுந்தீவு மகேஷ் | 117 |

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

# வாழ்வை உன்னதத் தருணங்களின் தொகுப்பாக்கியவன்!




- அருண்மொழிவர்மன் -

ஏற்றங்களும் இறக்கங்களும் சேர்க்கைகளும் பிரிவுகளும் இழப்புக்களும் நிறைந்தது தான் வாழ்க்கை என்பது மீள மீள நினைவூட்டப்பட்டாலும் இந்த இரவில் இருந்து திரும்பிப்பார்க்கின்றபோது இறந்துபோன நண்பர்களின் பிரிவுகளும் அவர்களுடன் சேர்ந்த களித்த, கழித்த தருணங்களின் தடங்களுமே நினைவெல்லாம் தளும்பிக் கிடக்கின்றது. வாழ்வில் தவிர்க்கவே முடியாத யதார்த்தம் மரணம் என்றபோதும் நெஞ்சார்ந்து கூடிப் பழகினவர்களின் மரணந்தரும் வலிகூட மரணத்திற்கொப்பானது. கருணா அண்ணையுடன் நான் நெருக்கமாகப் பழகியது மிகக் குறுகிய காலமே என்றாலும் அந்தத் தாக்கங்கள் இருந்தே தீரும்.

கருணா அண்ணையை நான் நெருக்கமாகச் சந்தித்த முதற்சந்தர்ப்பம் சுமதி ரூபன் வீட்டில் நிகழ்ந்த சந்திப்பொன்றில்தான். நிறைய நண்பர்கள் சந்தித்துக்கொண்ட அன்றைய பொழுதில் வரவேற்பறையில் இருந்த எல்லாக் கதிரைகளும் நிரம்பி விட நிலத்தில் விரிக்கப்பட்ட கம்பளம் ஒன்றிலும் சில நண்பர்கள் இருந்தனர். கருணா அண்ணை அந்தக் கம்பளத்தில் மஃப்ளர் ஒன்றினைத் தலையைச் சுற்றி உறுமால் போலக் கட்டிக்கொண்டு தொடர்ச்சியாக வெவ்வேறு விடயங்களைப் பற்றிச் சுவாரசியமாகப்பேசிக்கொண்டிருந்தார். அதுவரை ஓவியரென்று மட்டுமே அறிந்து கொண்ட கருணா அண்ணையை, வாசிப்பு, அரசியல், இலக்கியம், வரலாறு என்று பல்வேறு துறைசார்ந்த விரிவும் ஆழமும் நிறைந்த அறிவார்ந்த ஆளுமையாக அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் அன்றமைந்தது. கிட்டத்தட்ட அன்றைய சந்திப்பின் மையப்புள்ளி போன்றே அவரை நண்பர்கள் நடத்தினர். அவர்கள் அனைவருக்கும் கருணா அண்ணையுடன் நீண்டகால நெருக்கமான பரிச்சயமும் நட்பும் இருந்தது. அந்த நட்பு வழியே அத்தகைய ஓர் உரிமையையும் ஆளுமையையும் அவர் அவர்களிடத்தில் பதியவைத்திருந்தார். பின்னாட்களில் அவருடன் நெருக்கமாகப்பழகிய பல சந்தர்ப்பங்களிலும் தான் இருக்கின்ற எல்லா அவைகளிலும் தானே மையமாக விளங்குகின்ற, அங்கே நிகழுகின்ற அனைத்தையும் ஆளுமைமிக்க இசை நடத்துனர் ஒருவர் இசை நிகழ்வொன்றில் கலைஞர்களைக் கையாள்வதைப்போல தன் கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்கின்ற ஒருவராகவே கருணா அண்ணை விளங்குவதை நான் அவதானித்திருக்கின்றேன்.

அவருடன் நெருக்கமாகப் பழகுவதற்கான வாய்ப்பு 2014ல் இடம்பெற்ற தாய்வீட்டின் முதலாவது அரங்கியல் நிகழ்வின் மூலமாகக்கிடைத்தது. ஓர் இக்கட்டான நிலைமையில் நிகழ்வு நடப்பதற்கு இரண்டு நாட்கள் மட்டும் இருக்கக்கூடிய நிலையில் அந்த அரங்கியல் நிகழ்வில் நாடகம் ஒன்றை நெறியாள்கை செய்து நடித்த ராஜா அண்ணை (ஓவியர் கிருஷ்ணராஜா) கேட்டுக்கொண்டதன்படி ஒளி நிர்வாகம் செய்வதற்கு உடன்பட்டிருந்தேன். கருணா அண்ணை வீட்டிற்கு நான் சென்ற முதற் தடவையும் அதே, நவீன நாடகச் செயற்பாடுகளிலோ அல்லது ஒளி நிர்வாகத்திலோ எந்த முன்னனுபவமும் எனக்கு இல்லை என்று நான் சொன்னபோது, “நீங்கள் என்னென்ன செய்யவேண்டும் என்று சொல்லித்தருவேன், நீங்கள் அதைச் செய்தால் சரி. ஏதாவது பிரச்சனை என்றால் மைக்கில் கதைக்கலாம். இது உங்களுக்குச் சின்னப்பிரச்சனை, யோசிக்காதையுங்கோ” என்று மிகுந்த நம்பிக்கையுடன் கருணா அண்ணை சொல்லியிருந்தார். கருணா அண்ணையுடன் தொடர்ந்தும் நெருக்கமாகவும் பழகுவதற்கான தொடக்கமாக அந்த நிகழ்வு அமைந்தது.


தான் எடுத்துக்கொண்ட எந்த விடயத்தையும் நுண்ணுணர்வுடனும் அர்ப்பணிப்புடனும் செய்வது கருணா அண்ணையின் இயல்பு. அத்துடன் புதிய தொழிநுட்பங்களையும் புதிய சாத்தியங்களையும் அயர்விலா ஆர்வத்துடன் தேடித்தேடி அறிந்துகொள்வதுடன் அரங்க அமைப்பு, ஒளி, ஒலி நிர்வாகம் போன்றவற்றில் தொழிநுட்பத்தின் எல்லாச்சாத்தியங்களையும் பயன்படுத்த வேண்டும் என்பதே அவரது உறுதியான நிலைப்பாடாக இருந்தது. கூத்து போன்ற கலைவடிவங்களை நவீனமயமாக்குவது என்பதன் அங்கமாகவே அவர் கூத்து நிகழ்வுகளின் அரங்க நிர்மாணத்திற்கு மரபான அரங்க அமைப்பு அம்சங்களை விட்டு விலகி ஒளிச் சேர்க்கைகள் (Graphic Effects) மூலமாக பின்னணி சேர்ப்பதைச் செய்தார். தொழிநுட்பங்களில் தங்கியிருக்கின்றபோது தொழிநுட்பச் சிக்கலால் ஏற்படக்கூடிய பாதகங்களையும் அவர் அறிந்திருந்தார். தாய்வீட்டின் அரங்கியல் நிகழ்வின் முதல் இரண்டு சந்தர்ப்பங்களிலும் தொழிநுட்பக் கோளாறுகளால் சில தடங்கல்கள் ஏற்பட்டபோது வந்த சில விமர்சனங்கள் - அவை தொழிநுட்பக் கோளாறுகளின் சாத்தியங்கள் பற்றிய புரிதலே இல்லாமல் வந்தன என்பதால் அவருக்குச் சினமூட்டியதும் அவரைப் பாதித்ததும் உண்மை. ஆயினும் அவர் தொழிநுட்பத்தினைத் தொடர்ந்து பிரயோகிப்பது என்பதில் இருந்து சிறிதும் பின்வாங்கவில்லை. அவருடன் பேசிக்கொண்டிருந்தபோது நான் கூட பல தடவைகளில் இந்தப்பிரச்சனைகளைச் சுட்டிக்காட்டி ஏன் நாம் நவீன தொழிநுட்பங்களை அதிகம் கையாளாமல் மரபான வடிவங்களை நோக்கிப்போகக்கூடாது என்று கேட்டிருந்தேன். சர்வதேச ரீதியில் நடந்த நிகழ்வுகளில் கூட தொழிநுட்பம் எப்படிக் காலை வாரிவிட்டது என்று பல்வேறு சந்தர்ப்பங்களையும் கூறி, அதற்காகவெல்லாம் நாம் பின்வாங்கி விடக்கூடாது என்பார். ஆனால் தொழிநுட்பங்களைக் கையாள்வதில் மிக நவீனமான மனிதராகவும் மரபின் ஆழங்கள் தெரிந்தவராகவும் ஒருங்கே இருந்தார். தொன்மங்களையும் புராணங்களையும் மரபுகளையும் தேடிக் காதலுடன் பயணித்தவர் கருணா அண்ணை.



வாழ்வைக் கொண்டாடுதல் என்பது வாழ்வின் ஒவ்வோர் கணத்தையும் ஒவ்வோர் அம்சத்தையும் அழகுணர்வோடு உள்ளுணர்ந்து ரசித்து அதை அழகூட்டி வாழ்தல். அந்தப் பண்பு கருணா அண்ணையிடம் இருந்தது. அவரது ஆழ்ந்தகன்று தேடும் குணம் அவரது வாழ்வையும் இரசனை பூர்வமானதாக்கியதுடன் அவரைச் சுற்றி இருப்போருக்கும் அவரிடமிருந்தும் மெல்லத்தொற்றிக்கொண்டது. மதுக்கிண்ணத்தில் எந்த மட்டம் வரை வைனை வார்க்க வேண்டும் என்பதிலிருந்து எந்த மதுவை எந்தவிதமான குவளையில் எந்தவிதத்தில் வார்க்கவேண்டும் என்பதில் இருந்து, உணவகங்களில் உணவுண்ணும்போது கடைப்பிடிக்கவேண்டிய முறைகளைச் கடைப்பிடிப்பதில் இருந்து என்று பல்வேறு விடயங்களைத் திரும்பத் திரும்பச் சொல்வது அவரது வழக்கம். வாழ்வை உன்னதமான தருணங்களின் தொகுப்பாக்கவேண்டும் என்பதற்கான அவரது முயற்சிகளாகவே இப்போது அவற்றையெல்லாம் புரிந்து கொள்ள முடிகின்றது.

கருணா அண்ணையுடன் உணவங்களுக்குச்செல்வது என்பது மிகவும் அருமையான அனுபவம். ஒவ்வொரு நாட்டு உணவுகள் குறித்தும் அவற்றின் வரலாறு குறித்தும் விளக்கமாக அறிந்துவைத்திருப்பார். அவருடன் பழகத் தொடங்கிய ஆரம்ப நாட்களில் இந்த இந்த இடங்களுக்குப் போக போகின்றோம் என்று தெரிந்துகொண்டு அவை பற்றித் தேடி இவர் திட்டமிட்டே செயற்படுகின்றாரோ என்று கூட நான் நினைத்தது உண்டு. ஆனால் பழகப் பழக அவரது ஞானமும் அறிவும் வெறும் தகவல்திரட்டுகளால் நிறைந்தது அல்ல, அவர் முழுக்க முழுக்க வரலாற்றுப் பிரக்ஞையான மனிதர் என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. ஒருமுறை அவருடன் போய்க் கொண்டிருக்கின்றபோது அப்போதுதான் டிம் ஹோர்ட்டன்ஸ் அறிமுகம் செய்திருந்த Dark Roast என்ற வகைக் கோப்பி பற்றிய பேச்சுத்தொடங்கி இயல்பாக அது வெவ்வேறு விதமாக கோப்பிகளின் பெயர்க் காரணம், டிம் ஹோர்ட்டன்ஸின் கதை என்று தொடங்கி கனடாவில் இருந்த தற்போதும் இருக்கின்ற பல்வேறு கோப்பிக் கடைகளின் வரலாறு என்று மிக நீண்டதோர் பேச்சாக மாறியது. கருணா அண்ணையுடனான பேச்சுகள் ஒருபோதும் கொசுறுச் செய்திகளால் நிறைந்ததாக இராது, ஓர் ஆய்வாளருக்கு இருக்கக் கூடிய வரலாற்றுப்பார்வையுடனான பேச்சாகவே அவை அமையும். மேலே சொன்ன கோப்பிக் கடைகள் பற்றிய உரையாடலின் பின்னர், இவ்வளவு விடயங்களைத் தெரிந்து வைத்திருக்கின்றீர்களே என்று ஆச்சரியமாக இருக்கின்றது என்று சொன்னபோது ஒவ்வொரு நாளும் நாங்கள் பாவிக்கின்ற சின்னச் சின்னப்பொருட்கள் குறித்தும் நாங்கள் போய்வருகின்ற தெருக்கள், இடங்கள் குறித்தும் தேடத்தொடங்கினாலே நிறைய விடயங்கள் தெரியவந்துவிடும் என்று கூறிச் சில கணம் மௌனமாக இருந்து விட்டு, உங்கள மாதிரியாட்கள் அதைக் கட்டாயம் செய்யவேண்டும் என்று அழுத்தமாகச் சொன்னார். கலை, இலக்கிய, சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது வரலாற்று நோக்கும் மரபுரிமை பற்றிய புரிதலும் இருக்கவேண்டியதன் அவசியத்தினைப்பற்றி பகுபதம் அமைப்பில் நாம் உரையாடி பொது நிகழ்வுகளை மரபுரிமை இடங்களில் ஒருங்கிணைத்து அந்தச் சந்திப்புகளின்போது அந்த இடங்களின் வரலாற்றினைப்பற்றியும் உரையாடுவது என்ற முடிவுக்கு வந்திருந்தோம். எமது உள்ளக உரையாடல் ஒன்றினை Bellamy / Lawrence சந்திப்புக்கு அருகாமையில் உள்ள இரொக்குவா இனத்தவர்களின் நினைவுக்கல் உள்ள இடத்தில் ஒருங்கிணைத்திருந்தோம். இதுபற்றிக் கருணா அண்ணையிடம் கூறியபோது உற்சாகமடைந்து அது நல்லதோர் முயற்சி என்று பாராட்டியதுடன் றொறன்றோவில் உள்ள அத்தகைய மரபுரிமை இடங்கள் குறித்தும் மிக நீண்டநேரம் உரையாடிக்கொண்டிருந்தார். மரபுரிமை, ஆவணப்படுத்தல் என்று அடிக்கடி நான் பேசியும் செயற்பட்டும் வருவதை அவர் பிரக்ஞைபூர்வமாகச் செய்பவராக இருந்திருக்கிறார்.

கருணா அண்ணையின் மரணத்துக்குப்பிறகு அவர் பற்றிய நினைவுகள் அந்தாதி போல ஒன்றன் தொடர்ச்சி மற்றொன்றாகத் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. சில நேரங்களில் கருணா அண்ணை போன் பண்ணும்போது தூங்கப்போய் இருப்பேன், கருணா அண்ணை நான் தூங்கப் போய் விட்டேன் என்று சொன்னாலும் ஒருக்கா கொம்பியூட்டரை ஓன் பண்ணுங்கோ என்று சொல்வார், அதற்குப் பிறகு எனக்குச் சொல்வதற்காக எனக்குத் தேவையான பலவற்றை அவர் வைத்திருப்பார். பல சந்தர்ப்பங்களில் அது குறித்து எரிச்சலடைந்திருக்கின்றேன், இப்போது யோசித்துப் பார்க்கின்றபோது கருணா அண்ணையைப் புரிந்துகொள்ள நான் ஏன் ஒரு போதும் முயலவில்லை என்றே தோன்றுகின்றது.



arunmozhivarman@thaiveedu.com




# உறைந்த அருவி

சேரன்

பல்லாயிரம் ஆண்டுகளாகக் கோபத்தைத்
தேக்கி வைத்திருக்கும் விதைநிலத்தின் மீது
எஞ்சியிருக்கும் மரங்கள்
தமது துயரப் பாடல்களை ரகசியமாக மீட்டுகிறபோது
பனி விழுகிறது

மலர் சொரிவது போல
எலும்புகளை நொருக்குவது போல
ஏவுகணைகளைப் போல
யாரையும் கேட்காமல்
யார்க்கெனவும் இல்லாமல்
வீழும் பனி. தூவிப்பனி.
காற்று அடித்துச் செல்லும் பனி
நேர் கோட்டில் செல்ல மறுக்கிறது

வாழ்க்கையை நேர்கோட்டில் வரைய முடியாது
என்பது பெருந் தத்துவம் அல்ல
அந்த முயற்சியில் தோற்றுப்போனவர்களின்
குரலின் திரட்சியாக
அவலப் பாடல்களைச் சாவீட்டில் பாடுகிறது சமூகம்.
அவையும் காற்றில் அழிவன.

ஆனால்
அந்தத் தோல்வியைக் கொண்டாடுகிறான் கலைஞன். கவிஞன்.
அவனுக்கு மற்றையவர் சூட்டும் மணிமுடியில் எழுதி இருப்பவை:
குழப்பவாதி. விசரன். கலகம் செய்பவன்.
ஒற்றைப் போக்கன். பிச்சி.
மயிர் நீட்டி வாழ்வோன். மதுவன். அல்லது
மழித்தலைக் கொண்டாடும் மென் மார்பன்.

அந்தக் கலைஞனின் ஓவியத்துள் நானும்
என் கவிதையுள் அவனும்
கூடு விட்டுக் கூடு பாய்ந்த காலங்கள்
எப்போதுமே அகற்றப்பட முடியாத உறைபனிப் பாளங்கள்.

இந்த நகரத்தில்
இரவைக் காதலிப்பவர்களாக இருந்தோம்.
அலையும் பாணர்களாக இருந்தோம்.
எப்போதுமே வரைய முடியாத
ஒரு நேர்கோடு இருக்கிறது.
அதனை நமது வண்ணங்களும் வார்த்தைகளும்
கண்டடையட்டும்.



# தூரிகைகளுக்குக் கைகள் இல்லை

அஸ்மா பேகம்

நிறங்களின் அழுகையை
ஆழம் நிறைந்த புன்னகையை
உன் தூரிகைகள் கரைத்திருக்கின்றன

அவற்றின் பரிமாணங்கள்
உணர்ச்சிகளோடு
இரவுகளையும் பகல்களையும்
ஒரு தூரிகையில்
குழைத்ததாக வேண்டும்

உன்னால் வரையப்பட்ட
வட்டங்களின் மொழிகள்
கோடுகளின் இசைகள்
புள்ளிகளின் அபிநயங்கள்
அரூபத்தின் மௌன வார்த்தைகள்
எல்லாமே
நிறங்களில் முகிழ்த்திருக்கின்றன

இயற்கையும் நிழல்களும் புரட்டாத
பக்கங்களில்
நீ
தனிமையை வரைந்துகொண்டிருந்தாய்

ஒரு நீலப் பட்டாம்பூச்சியின் இறப்பாக
மென்மையின் தீராத நிலைப்பை
விட்டுச்செல்கின்றாய்

கரவெட்டியிலும்
ரொறன்ரோவிலும் உன்னுடைய கனவுகளை விற்பவர்
இனி யாருமிலர்

உனது பயணங்கள், உணவு மேசை
இசை, தூக்கம், நண்பர்கள்
எல்லா எதிரொலியையும்
வரலாறு திருப்பித் தருகிறது
அது ஒருநாளும்
ஓவியங்களைப் புதைப்பதில்லை.



# கருணா: ஈடுபாடு - அர்ப்பணிப்பு - செயற்றிறன்




- கே. கிருஷ்ணராஜா -

மரணம் என்பது நிச்சயமானதுதான், ஆனாலும் அந்த மரணம் நாம் நேசிக்கும் ஒருவரைப் பற்றிக் கொள்ளும் போது நெஞ்சம் இடிந்து நிலை குலைந்துதான் போகிறோம். என் துயரங்களை வார்த்தைகளால் முழுமையாக வெளிப்படுத்த முடியாத நிலையில் இப்போதெல்லாம் அது அழுகையாகவே தொடர்கிறது.....என் அன்புக்குரிய நண்பனே! கருணாவே! என் உயிருள்ளவரை உன் நினைவு என்னுடன் தொடரும்.

90களின் ஆரம்ப நாட்களில் வெளிவந்த சிறுசஞ்சிகை ஒன்றில் பிரசுரமான ஓவியமொன்றின் அடியில், எனது குரு மாற்கு மாஸ்டரின் கையொப்பம்போல் கருணா என்றிருந்தது. இவரும் மாற்கு மாஸ்டரின் மாணவனாக இருப்பாரோ என்கிற தேடல் என்னுள் எழுந்தது. விசாரித்து அறிந்ததில் மாற்கு மாஸ்டரின் மாணவன் நீ என அறிந்த போது, உன்னைச்சந்திக்க ஆவல் கொண்டேன். கனடா வந்த சமயம் நான் உன்னைத்தேடி வந்தேன். உன்னைச் சந்தித்த அந்த நாள் இன்னும் என் நினைவில்.... முதல் சந்திப்பே முன்பின் தெரிந்திராத உனக்குள்ளும் எனக்குள்ளும் ஒரு வித பிடிமானத்தினை, நெருக்கத்தினை ஏற்படுத்தியதை இன்று வரை என்னால் மறக்க முடியவில்லை, உண்மையில் சொன்னால் இருவருக்கும் இடையே ஒரு காதல் இருந்தது. அந்தக் காதல் உன் மரணம் வரை தொடர்ந்தது.

வாழ்வின் பெரும்பாலான நேரத்தினைத் தனிமையில் கழித்தவன் கருணா. தனிமைதான் தனது சுமைகளை இறக்கி வைக்கத் தோதான இருள்வெளி என நம்பியவன் அவன். வாழ்வை அதன் வழியே அவன் அமைத்துக் கொண்டான். அந்த இருளை சற்று விலக்கிப் பார்க்க அவன் திறந்த சாளாரங்கள்தான் அவனது கலை ஈடுபாடும் அறிவியல் தேடல்களும். இடைவிடாத கலை உழைப்பும் நாளாந்த அதீத களைப்பும் கருணாவின் உயிரைக் குடித்து விட்டது என்று சொல்வதுதான் மிகப் பொருத்தம்.

ஓவியன், ஒளிப்படக் கலைஞன், அரங்க ஒளி ஒலி அமைப்பாளன், நூல் வடிவமைப்பாளன், நவீன கணினித் தொழில் நுட்பத்தினையும், புகைப்படத் தொழில் நுட்ப நவீன மாற்றங்களையும் தமிழ்ச் சூழலுக்கு அறிமுகப்படுத்தியவன். நவீன தொழில் நுட்ப வளர்ச்சிகளை அந்தந்தக் கால கட்டத்திற்குள் தேடித்தேடிக் கற்று நமக்குள் கொண்டுவந்து சேர்த்தவன். அனைத்தையும் ஒரு பரிசோதனை முயற்சியாக மேற்கொள்வான். இசையை, நடனத்தை இரசிக்கத் தெரிந்தவன், நட்பு உறவுகள் மீது ஆழ்ந்த அன்பை தரக் கூடியவன், நண்பர்களையும் சூழலையும் மகிழ்ச்சி ததும்ப வைத்திருப்பதில் மிக அக்கறை காட்டக்கூடியவன் என கருணாவைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போகலாம்.



எங்களின் சமூகத்தில் ஓவியக்கலை தொடர்பான ஈடுபாடும் இரசனையும் இல்லையே என்ற ஏக்கம் அவனுள் தொடர்ந்து வந்தது. இது அவனைப் பற்றித் தொடர்ந்து வந்த துயரங்களில் ஒன்று. இதுபற்றி அடிக்கடி கருணா என்னுடன் உரையாடுவான். ''மேடை அரங்க ஒளி ஒலி, பின்னணி வர்ணக் கலவை, நாடக மாந்தர்களின் உடைகளுடன் ஒத்திசைய, தனது ஓவிய ஈடுபாடுதான் அடித்தளம்'' என்பான். தனது அனைத்து கலை ஈடுபாட்டுக்குமான தொடக்கப் புள்ளி மாற்கு மாஸ்டரே என்பான். எனக்கும் அவர்தான் ஆசான் என்பதுதான் நமக்குள் இருந்த தனிப்பட்ட நேசத்திற்கு அடிப்படையான ஈடுபாடு என்பதை நானறிவேன்.

தன்னைப் புரிந்து கொள்ள, ஒரே கலைத் தளத்தில் வேலை செய்யும் உன்னால்தான் முடியும் என்று நீ அடிக்கடி சொல்வாய். நாம் மணித்தியாலக் கணக்காய் எவ்வளவு பேசி இருப்போம். அரங்கியல் விழாவில் உனது ஒலி, ஒளி நிர்வாகத்தைப் பார்த்து நான் அசந்துபோனேன். இவையெல்லாம் ஒருவகை ஆக்கப்படைப்புகள்தான். அதை ஈடுபாட்டோடும், அர்ப்பணிப்போடும் செயலாற்றுவதாலேதான் நேர்த்தியாகவும் நிறைவாகவும் இருந்தது. நான் அவனைப் பாராட்டியதை திரும்பத்திரும்ப என் வாயால் கேட்க ஆசைப்படுவான். அதை ஒரு கலையாகவே கருணா செய்தான், கனடா அரங்கியல் நாடக விழா அரங்குகளும், நடன நிகழ்வுகளும் அதற்குச் சாட்சி.

எனது கனடாப் பயணம் எப்பொழுதும் மகிழ்வாவதும் ஆர்வம் தருவதும் அவனாலேதான். கருணாவுடன் குடிக்கலாம், கதைக்கலாம் பகிடிவிடலாம், பாடலாம், பயணம் செய்யலாம் என்பது எனக்குப் பெருத்த ஆர்வத்தினை தரக்கூடியது. அதனால் எனது இரண்டாவது புகலிட நாடு கனடா என்றானது.

இப்போ?

கருணா இல்லாத கனடாவை, இனி என்னால் எப்படி நினைத்துப் பார்க்க முடியும்?. உன் அன்பும் நேசமும் மிக்க நினைவுகள் எம்முடனேயே இருக்கும், நாமும் பயணிப்போம் மரணிக்கும் வரை...



krishnarajah.k@thaiveedu.com

# கருணா: கரைந்துபோய்விட்ட நிழல் உரு

- மு. நித்தியானந்தன் -

ககனவெளியில் கரைந்துபோய்விட்ட நிழல் உரு.

காலநதியின் பேரோட்டத்தில் சின்னக்குமிழ்.

புள்ளி, கோடு, கோலம் எதுவும் இல்லை.

தொடக்கம், இறுதி, ஆதி, அனந்தம்: யார் கண்டது?

கருணா -
நீரில் கரையும் வண்ணமாய், அவன் எங்கள் நெஞ்சில் கலந்துவிட்டவன்.

இன்று எங்கள் சிந்தையில் அவன் ஒரு நினைவு. அரூப உரு.

இனிய இசை போன்ற அவன் சிரிப்பு-

மனசிலிருந்து எழும் அவன் பேச்சு, வானவெளியில் கண்ணுக்குத்தெரியாத சின்னப் பறவையின் சிறகசைப்பு போல.

கருணாவின் இறுதி வழியனுப்புதலில், அவனது உடலை முடியிருந்த பெட்டியின் மீது ஓவியர் ராஜா கண்ணீருடன் ரோஜா மலரை வைத்து அஞ்சலி செய்தபோது, காணொளியில் அதைப்பார்த்துக்கொண்டிருந்த என் கண்களும் கலங்கின. ராஜாவின் பாக்கியம் அது.

முப்பத்தைந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் குகைமனிதன் தீட்டிவைத்த மிருகங்களின் துல்லியக்கோடுகளில்-

ஜொகானீஸ் பேமியர் என்ற டச்சு ஓவியன் வரைந்த பால்காரியின் அழகை வார்த்திருக்கும் அழகில்.

பிரெஞ்சு சைத்திரீகன் வில்லியம் பூகுரு தீட்டிய பிஞ்சுக்குழந்தைகளின், காந்தர் வக்கன்னிகளின் ஒளி வீசும் ஓவியங்களில்.

லியனார்தோ டாவின்சி தீட்டிய 'இறுதி இரவு உணவு' விருந்தோவியத்தில் எளிமையையும் ஏசுவையும் மையப்படுத்தும் மாந்திரீகத்தில்.

சிந்தை இழந்து போன ஓவிய ரசிகன் இவன்.

'தாய்வீடு' இதழ்களில் இவன் எழுதிய ஓவியக்குறிப்புகள், நம் மண்ணில் எழுந்த ஓவிய விமர்சகனின் ரசனைத்தெறிப்புகள்!

கனடாவின் கலை இலக்கிய விகசிப்புகளில் எல்லாம் அவன் முகம் தெரிந்தது.

தான் எடுத்துக்கொண்டுவிட்ட ஓவியம் சார்ந்த வேலைப்பாடெனில், ராஜாவைப் போல இரவுக்கும் பகலுக்கும் பேதம் தெரியாமல் உழைப்பைச்சிந்திய கலைஞன்.

நாங்கள் கனடா வந்திருந்தபோது, என் பிஞ்சுக்குழந்தைகளை நயாகரா நீர்வீழ்ச்சியில், சி.என்.கோபுரத்தில் கருணா எடுத்துத்தள்ளிய நிழற்படங்களை, இப்போது திரும்பிப்பார்க்கையில் கண்களில் நீர் மல்குகிறது.

என்ன நேசம் இது?

ஒரு சௌகரியத்தைத் தரும் அவனது இருப்பு.

வாழ்க்கையை ரசிப்பவன் நண்பர்களுக்கு நெஞ்சில் சிம்மாசனம் தருபவன். இன ஒற்றுமைக்காக ஓசை இல்லாமல் வேலை பார்த்தவன். ஓவியனாகவே - கலைஞனாகவே வாழ்ந்து முடித்தவன். மாமனிதனாக உயர்ந்தவன்.

கருணாவோடு பழகக் கிடைத்த தருணங்கள், நாட்கள் விரல்விட்டு எண்ணி விடக் கூடியவைதான். அதனாலென்ன?

என் நெஞ்சமெல்லாம் வியாபித்து - நினைவு ஓடையில் புன்னகைத்து நிற்கிறானே, இதற்குப்பெயர் என்ன?



nithiyananthan.m@thaiveedu.com

# என்ன அவசரம் மச்சான்?




- கந்தசாமி கங்காதரன் -

இயூஜின் கருணாகரன் என் பள்ளித்தோழன். கரவெட்டி - திரு இருதயக் கல்லூரியின் தொடக்க நிலைப்பள்ளியான R.C (Roman Catholic) பள்ளிக்கூடத்தில் முதலாம் வகுப்பில் அறிமுகமானான் கருணா. அவனுடைய அன்னை ரெஜினா ரீச்சர் தான் எங்கள் ஆசிரியை. 3 மாதத்திலேயே தந்தையின் பணி நிமித்தம் பலாலியில் வாழ்ந்து தெல்லிப்பளை - யூனியன் கல்லூரியில் படித்துவிட்டு 4 ஆண்டு கழித்து மீண்டும் வந்து சேர்ந்தால், இலகுவில் அடையாளம் கண்டு கொண்ட முகங்கள் சிலவே. அவற்றுள் கருணாவின் முகமும் ஒன்று. இரண்டு தவணைகள் அங்கு. தொடர்ந்து 6ம் வகுப்புக்கு ஹாட்லிக் கல்லூரி போனோம். வெவ்வேறு பிரிவுகளில் இருந்தாலும் தனியார் கல்வி நிலையங்கள் Modern இலும் சயன்ஸ் சென்ரரிலும் ஒரே பிரிவிலேயே இருந்தோம். எல்லோரும் ஹாட்லியில் செல்வகுமார் - மதியழகனின் சித்திரக் கதைக்குக் கருணா படம் வரைந்ததை நினைவு கூருகின்றனர். கருணாவிடம் நான் இரசிக்கும் இன்னொரு விடயமும் அப்போதே இருந்தது. மைப்பேனாவால் எழுதும் கருணாவின் எழுத்துகள் ஒன்றையொன்று அளவில் மிஞ்சுவதில்லை. மிகவும் அழகான உறுப்பெழுத்து என்பதற்கு உதாரணம் அவன் எழுத்து.

நெல்லியடி - இலக்சுமி திரையரங்கில் 1981 மட்டில் Charlie Chaplin Film Festival ஒன்று நடந்தது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு படம். கருணா தந்தையார் வின்சென்ற் மாஸ்ரருடன் வந்திருந்தான். நான் ஓர் உறவினனுடன். ஒரு படம் மட்டுமே பார்த்தேன். கருணா சில படங்களைப் பார்த்திருப்பான். பள்ளிக்கூடத்தில் கதைப் புத்தகங்களைக் கொண்டு வந்து பரிமாற்றம் செய்வதில் கருணாவும் ஒருவன். பல தடவைகள் கருணாவோடு நானும் கதைப்புத்தகங்கள் பரிமாற்றம் செய்திருக்கிறேன். வாசிப்புப் போலவே திரைப்படங்களும் எங்கள் இருவருக்கும் பொதுவான ஈடுபாடாக இருந்தது. Airport ‘75, Airport ‘77, கொட்டி வலிகய (சிங்களம்) என்று நானும் கருணாவும் இன்னும் சில நண்பர்களும் இலக்சுமியில் பார்த்த படங்கள் பல. கனடாவிலும் பல நல்ல திரைப்படங்களை நான் பார்த்தமைக்கும் சிலவற்றுக்கு விமர்சனம் எழுதியமைக்கும் கூடக் கருணாவே காரணன்.

ஈழத்தமிழர்களுக்கு விதிக்கப்பட்ட அலைந்துழல்வில் அகப்பட்டு கருணா 1991 இலும் நான் நாடுகாண் பயணங்கள் மேற்கொண்டு 2004 இலும் கனடா வந்து சேர்ந்தோம். எங்கள் நட்பும் தொடர்ந்தது. அவனது டொன்மில்ஸ் அலுவலகத்தில் இரவு ஒரு மணி தாண்டியும் இருந்து கலை, திரை, ஓவியம், இசை பலதையும் அசைபோட்டு வீடு வருவோம்.

நான் கனடியத் தமிழ் வானொலியில் பணியாற்றத் தொடங்கியதில் பெருமகிழ்வடைந்த அவன், என் நிகழ்ச்சிகளைத் தவறாது கேட்டு நேருக்கு நேர் எவ்வி



தமான தயவு தாட்சண்யமுமின்றிக் குறை நிறைகளைச் சொல்லுவான்.

‘திருப்பிறப்பன்று ஒலிபரப்ப ஏதாவது பாடல் வேண்டும் மச்சான்’ என்றால் 20 - 25 நிமிடத்துக்குள்ளாக சில பாடல்கள் என் மின்னஞ்சலில் இருக்கும். மேலும் உதவியாயிருக்கக் கூடிய பல இணையத்தள இணைப்புகளும்.

ஒரு தடவை தமிழகத்து Super Singer Junior இறுதிச் சுற்றில் பங்கேற்ற இளம் பாடகர்கள் ஐவர் திடீரென வந்திறங்க, CMR வானொலியில் ஒரு திடீர் நேர்காணல். முடித்த கையோடு ‘Excellent interview Machan, This is professionalism’ என்றொரு குறுஞ்செய்தி அவனிடமிருந்து. அதன் பிறகு சில நாள்கள் பலருக்கும் அந்த நேர்காணலைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான்.

தாய்வீட்டில் நான் எழுதும் கட்டுரைகளுக்கும் ஓர் அக்கறை மிகுந்த ஆலோசகனாயும், கட்டுரை வெளியான பின் கண்டிப்பான விமர்சகனாயும் இருந்தான்.

A Gun & A Ring படத்தின் இயக்குநர் லெனின், படம் வெளிவரமுன்பே அவனுக்குக் காட்டியிருந்தார். பின்னர் என்னைச் சந்தித்தபோது எழுந்துநின்று கைதட்டி அருகே இருந்த நண்பர்களுக்கும் விபரத்தைச் சொல்லி என்னைத் தழுவி என் நடிப்பைப் பாராட்டிய இனிய தோழன் அவன். கருணா பாராட்டிய பின்னர்தான், ‘ஓ! நடித்திருக்கிறேன்’ என்ற நம்பிக்கை எனக்குள் வந்தது.

இளையோரோ பெரியவர்களோ யாராயினும் உரிய இடத்தில் பாராட்டி அவர்களை ஊக்குவிப்பதில் அவன் வள்ளல்.

முகத்துக்காகப் புகழ்வதோ வேண்டுமென்றே இகழ்வதோ அவனிடம் இருந்ததில்லை.

அவனுக்கு இருந்த பெரும் ஆதங்கம், தமிழர் வீடுகளில் தமிழர் வாழ்வையும் வரலாற்றையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் ஓவியங்கள், கலைப் படைப்புகள் இருக்கவேண்டும் என்பதே. தன் ஓவியங்கள் தான் இருக்கவேண்டுமென்றும் அவன் ஆசைப்பட்டதில்லை. ‘யாரோ பெயர் தெரியாத ஓவியர் எதையோ வரைந்து வைத்திருக்க. அது என்னவென்றே தெரியாமல் வாங்கிக் கொண்டு வந்து வீட்டில் தொங்கவிடுவதில் என்ன பெருமை?’ என்பான்.

என் பிறந்த நாளைத் தன் பிறந்தநாள் போலப் பார்த்துப் பார்த்துச் செய்து என்னை வியப்பிலும் மகிழ்விலும் ஆழ்த்திய என் 44 ஆண்டுகால நண்பன் சடுதியாக எல்லோரையும் தாங்கொணாத் துயரில் ஆழ்த்தி விட்டுப் போய்விட்டான்.

*நல்ல நண்பன் வேண்டும் என்று அந்த மரணமும் நினைக்கிறதா?*

நா. முத்துக்குமார் எழுதிய இந்த ‘நண்பன்’ படப் பாடல் வரிகளைச் சில ஆண்டுகளுக்கு முன் கேட்டபோது அதன் ஆழமும் வீரியமும் விளங்கவில்லை. ஆனால், அண்மையில் கருணாவுக்காக இந்த வரிகளைச் செல்வகுமார் நினைவூட்டிய போதுதான் அதன் ஆழமும் வீரியமும் புரிந்து சொல்லில் வடிக்கமுடியா மனவேதனையையும் வெறுமையையும் உணர்கிறேன்.

நித்திய இளைப்பாற்றினை அடைவாய் நண்பா!



gangatharan.k@thaiveedu.com

# எமது நினைவில் டிஜி கருணா

கருணாவினதும் ‘விளம்பரம்’ பத்திரிகை மற்றும் ‘உலகத் தமிழோசையினதும் 20 ஆண்டுகளுக்கும் மேலான தொடர்பு இன்று நிழலாக மாறியது. கனவா நினைவா என்று கூடத் தெரியவில்லை. அவ்வாறான ஓர் அதிர்ச்சி. விளம்பரம் பத்திரிகையின் பாதையில் ஏறக்குறைய 30 வருட தொடர்ச்சியில் எழுத்தாளர், கவிஞர், ஓவியர், தொழில்நுட்ப உதவியாளர், எழுத்து வடிவமைப்பாளர் எனப் பலரை காலத்துடன் தவறவிட்டு வருகிறோம். இதன் தொடர்ச்சியாக டிஜி கருணா என அழைக்கப்படும் Eugine Karunaharan Vincent என்ற மற்றுமொரு நண்பனை இன்று இழந்துவிட்டோம். பல வகையிலும் பல்வேறு தளங்களிலும் சிறந்த ஆளுமை கொண்ட கருணாவின் மறைவு தமிழ் உலகின் முக்கியமாகத் தமிழர் உலகில் பெரும் இழப்பாகக் கருதுகிறோம். இவரின் இழப்பை நிரப்புவது என்பது இலகுவாகாது என்பதே எமது எண்ணம்.

2002 இலிருந்த 2005 வரை உலகத் தமிழோசை என்ற கனடிய தமிழ் சஞ்சிகையின் வடிவமைப்பு, எழுத்தமைப்பு, உருவமைப்பு, கலை அமைப்பு, புகைப்படம், தொழில்நுட்பம் யாவற்றிற்கும் பொறுப்பாக இருந்தவர் இவரே. இதுவரை கனடாவில் மட்டுமல்ல வட அமெரிக்காவிலே தமிழில் வெளிவந்த சிறந்த சஞ்சிகையாகத் தமிழ் இலக்கிய உலகில் மதிக்கப்படுவது இச்சஞ்சிகையே. இதற்குரிய அளப்பரிய பெருமை கருணாவையே சேரும். கனடிய இலக்கியத்தமிழ் உலகம் இருக்கும் வரை இவர் நினைவு கூரப்படுவார் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

விளம்பரம் பத்திரிகையின் விளம்பரம் ‘Logo’ வை காலத்திற்குக் காலம் சிறப்பாக மிக அழகாக வடிவமைத்துத் தந்தவரும் இவரே. விளம்பரம் தலைப்பின் அடையாளம் இவரை என்றும் நினைவூட்டும். எம்முடன் ஆரம்பத்தில் தொழில் புரிந்த பலரிற்குத் தொழில்நுட்ப அறிவை வழங்கிய ஆசானும் கருணாவே. விளம்பரம் பத்திரிகையின் 25வது ஆண்டு சிறப்பு நூலான ‘அடுத்த காலடி’ இன் அட்டையை வடிவமைத்தவரும் கருணாவே. அத்துடன் மே 24 2015 அன்று எமது 25வது ஆண்டு நிகழ்வை அவருடைய நண்பருடன் இணைந்து புகைப்படம் எடுத்துதவியரும் இவரே.

வருடா வருடம் விளம்பரம் பத்திரிகையின் ஒன்றுகூடலில் சமூகமளித்து எல்லோரையும் மகிழ்ச்சிப்படுத்தி தானும் மகிழ்ச்சியாக இருந்து வந்தார். தவிர்க்க முடியாத சில காரணங்களால் இவ்வருடம் (2019 ஜனவரி 05) நடைபெற்ற சந்திப்பில் மட்டும் அவரால் எம்முடன் இணைந்து கொள்ள முடியாமல் போயிற்று. இயற்கையின் நியதியோ தெரியவில்லை. இவரின் வருகையின் தொடர்ச்சி இவ்வருடத்துடன் நிலையாகவே நிறுத்தப்பட்டு விட்டது.

அவரது நினைவுகள் விளம்பரம் பத்திரிகையுடனும் எங்களுடனும் என்றும் தொடரும். இதுவே இயற்கை எமக்குத் தரும் பாடம்.

அவரின் ஆத்மா
அமைதியடையட்டும்.



- ராஜா மகேந்திரன் -
விளம்பரம் பத்திரிகை

# அழுத விழி காயவில்லை அழுத மொழி கேட்கவில்லை




**- செல்வம் அருளானந்தம் -**

‘வாழ்க்கையின் ஒரு பகுதிதான் மரணம்... மரணத்தின் ஒரு பகுதிதான் வாழ்க்கை’ இதை கூட்டங்களில் இலகுவாகப் பேசி விட்டு வரலாம். ஆனால் அது முகத்துக்கு நேரே முட்டும்போது தடுமாறிச்சரிகின்றோம்.

நண்பன் கருணாவைப் பற்றி எழுதித் தாருங்கள் என்று ‘தாய்வீடு’ கேட்கின்ற போது எனக்கு எதை எழுதுவது என்று தெரியவில்லை. கருணாவோடு சேர்ந்து வேலை செய்த கூத்தொன்றில் எங்கள் கலைஞர்கள் பாடிய ‘அழுத விழி’ பாட்டுத்தான் ஞாபகத்திற்கு வருகின்றது. என் இலக்கியப் பாதையில் மாத்திரமல்ல, குடும்ப உறவிலும் ஒரு ‘தம்பி’ போல் இருந்தான் கருணா. என்னுடைய பெண் மக்கள் இன்னும் அழுது முடியவில்லை. இப்பிரிவுத்துயர் அள்ள அள்ளக் குறையாத பனி போல் குவிந்து கொண்டிருக்கின்றது.

நானும் எழுதி ஏதாவது தாய்வீட்டில் வர வேண்டும் என்ற என் நண்பர்களில் விருப்பத்திற்காகச் சின்னச்சின்னக் குறிப்பாகச் சிலவற்றை நினைவு கூருகின்றேன்.

எப்போது எங்கே முதலில் கருணாவைக் கண்டேன் என்ற ஞாபகம் சரியாக இல்லை. ‘எஞ்சியிருப்பவை கரித்துண்டுகளாயினும் எழுதியே முடிப்போம்’ என்று செழியன் சொல்லச் சொல்ல கருணா எழுதிக் கொடுத்த அந்த இரவாய் இருக்கலாம்.

அதன்பின் ஒருதடவை அவனைத் தனிப்பட சந்திக்க வேண்டியதொரு தேவை ஏற்பட்டது. அடிகளார் மரியசேவியரின் ‘கலைமுகம்’ கனடாச் சிறப்பிதழை நான்தான் செய்ய வேண்டும் என்று கேட்டபோது நண்பர் குமரனிடம் கருணாவின் தொலைபேசி இலக்கத்தை வாங்கி, அவனுடன் பேசிவிட்டு, அவன் இருந்த வீட்டுக்குச் சென்றேன்.

அன்று தொடங்கிய நட்பு அவன் இல்லாமல் போகும்வரை இரண்டொரு வருடங்களைத் தவிர்த்து தொடர்ந்து ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் பேசுவோம். இரண்டு மூன்று நாள்கள் நேரில் சந்திக்காவிட்டால் பெரும் அலுப்புக்கொடுப்பான்.

ரிம் ஹோட்டனில் சந்தித்துவிட்டு, வீட்டுக்கு வந்தபின், இரவு படுக்கமுன் திரும்பவும் தொலைபேசியில் அழைப்பான் கருணா.

‘கருணா எடுக்கிறார் போல... இப்பதானே கோப்பிக்கடையில் அவரோடை இருந்திட்டு வந்த நீங்கள்..கதையள் முடியேல்லைப் போல...’ என மனைவி பேசிப்பேசிச் சிரிப்பார்.

அவனைச் சந்திக்கத் தொடங்கிய அந்த நாட்களில், அவன் பேச்சுகளில் ஓவியர் மாற்கு அடிக்கடி வருவார். ஒரு நாள் நான் கேட்டேன் ‘நாங்கள் எல்லாம் அவரை அறியத் தவறிவிட்டோம் அவர் பற்றி ‘காலம்’ ஒரு சிறப்பிதழ் செய்தால் என்ன?” கருணா மிகச் சந்தோசமானான். அவனே எல்லா பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ள, இலக்கிய உலகம் பாராட்டும் வண்ணம் ‘காலம் - 13’ வெளிவந்தது. அதற்குரிய செலவை நான் தருவதாகச் சொன்னபோது கருணா மனம் வருந்தினான். எனக்கு அப்போ மணித்தியாலத்திற்கு 6 டொலர் சம்பளம். என் தலைக்கு மிஞ்சிய வேலைதான். ‘அண்ணை உங்களை கஸ்ரப்படுத்திப் போட்டேன்” என்றான். ‘இல்லை கருணா இவ்விதழ் எனக்கொரு மைல்கல். உன்னால் தான் இப்படி அழகாக வந்தது” என்றேன். அடுத்த இதழ் சுந்தர ராமசுவாமி சிறப்பிதழ். மிகுந்த ஈடுபாட்டுடன் அழகாகச் செய்து தந்தான்.

அவனுக்கான நன்றிக்கடனாக, என் புத்தகக் கண்காட்சியின் போது அவனுடைய சில ஓவியங்களையும் காட்சிப்படுத்தினேன். விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே வந்து பார்வையிட்டார்கள். அண்டைக்குத்தான் ஒரு நண்பர் பகிடிவிட்டார். ‘இண்டைக்கு மாவீரர் நாள். அதனால சனம் இரண்டாய்ப் பிரிஞ்சு போச்சு.. அல்லாட்டில் சனத்தை அடக்கேலாமல் போயிருக்கும்” எண்டார். இதை நீண்ட நாட்களாய்ச் சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தோம்.




தாயகம் பத்திரிகையில் அவ்வப்போது எழுதியது, விளம்பரம் பத்திரிகையில் சில குறிப்புகள் எழுதியதைத் தவிர்த்துப்பார்த்தால் நான் இங்கு பெரிய எழுத்தாளன் அல்லன். தாய்வீடு பத்திரிகை தொடங்கப்பட்டு, கருணாவும் அதில் ஓராளாகி, சில காலத்திற்குப் பின்னர், ‘பாரிசில நடந்த கதைகள் கனக்க எனக்குச் சொல்லியிருக்கிறியள். அதை எழுதுங்கோவன்” என கருணா அடிக்கடி வற்புறுத்துவான். நான், ஓம்...ஓம்...என்று சொல்லித்தவிர்த்து வந்தேன். ஒவ்வொரு நாளும் சந்திச்சு பேசுகிற நண்பன் கருணா. அவனிடமிருந்து கனகாலத்துக்குத் தப்பியிருக்க முடியவில்லை. குடைச்சல் தாங்க முடியாமல், ‘ஒரு கல்யாணமும் ஒரு வீடியோவும்’ என்ற தலைப்பில் ஒரு சம்பவத்தை எழுதிக்கொடுத்தேன்.

கருணாவுக்கு அது பிடித்துக் கொண்டது. அதைக் காட்டிக் கொள்ளாமல் ‘‘வீடியோ குழப்பிய கல்யாணம்’ என்ற தலைப்பில் அதை இன்னும் நல்லா எழுதித் தாங்கோ” என்றான்.

தொடர்ந்து நான் 25 அத்தியாயங்கள் எழுதினேன். அவ்வளவையும் என்னிடமிருந்து வாங்குவதற்கு கருணா தந்த அலுப்பு சொல்லி மாளாது. இதனால் என்னோடு கோபித்தும் இருக்கிறான். டிலிப்குமாரும் கருணாவும் படம் வரைந்த ஓவியர்களும் இல்லாவிட்டால் ‘எழுதித்தீராப் பக்கங்கள்’ என்ற அனுபவக்குறிப்பு ஒரு நூலாக வெளிவந்திருக்காது. ஐம்பதுக்கு மேற்பட்ட விமர்சனங்களும் பாராட்டுகளும் கிடைத்திருக்காது.

தாய்வீடு அரங்கியல் விழா தொடங்கிய போது டிலிப்குமாருக்கு எமது மரபுக்கலையான கூத்தைத் தொடர்ந்து அரங்கேற்ற வேண்டும் எனத் தீரா ஆசை. கூத்துக்காரரை இணைக்கும் பொறுப்பு என்மீது சுமத்தப்பட்டது.

கருணாவும் எம்மோடு ஒரு கூத்துக்காரனாய் இணைவான் என நான் மட்டுல்ல, யாரும் நினைத்திருக்கவில்லை. நடைபெற்ற நான்கு கூத்திலும் கருணா ஏற்றிருந்த பாத்திரம் மிகப்பெரியது. ஒளியாலும் ஒலியாலும் ஒளிப்படக் காட்சிகளாலும் நவீன அரங்கியல் நுட்பங்களோடு கூத்தைப் பிணைத்து, கூத்துக்கலையை மற்றுமொரு தளத்துக்கு நகர்த்தியவன் கருணா.

இவைகள் பற்றித்தொடர்ந்து எழுத வேண்டும். ஆனால் இப்போது எழுதுகின்ற மனநிலை என்னிடம் இல்லை.

கருணாவிடம் உள்ள தனிப்பெருஞ் சிறப்பு புறம் பேசத்தெரியாமை. விடுப்புப் பிடுங்கும் வல்லாண்மை மிக்க எவராலும் கருணாவிடமிருந்து எந்த விடுப்பையும் பிடுங்க முடியாது. எம்மைப் பற்றிப் பிறரிடமும் பிறரைப் பற்றி எம்மிடமும் குறையறிவித்துப் பேசியதில்லை.

என்னைப் பகைவனாக் கருதும் பலரிடமும் கருணாவுக்கு நட்பு உண்டு. அவர்கள் என் மீதான ஆசுகவிதைகளை கருணாவைக் காணும்போது அள்ளி வீசியிருப்பார்கள். ஆனால் கருணா ஒருபோதும் அவற்றை எனக்குக் கூறியதில்லை.

‘முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்.. மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள்...’

என்பதைப் போல, கருணா எந்த ஊர் என்று அறியவே 3 ஆண்டுகள் சென்றன.

‘டேய் கருணா..... நீ எங்களை ஏமாத்திப் போட்டாய்..வாழ்க்கையென்ற ஓடிக் கொண்டிருக்கும் பஸ்சிலையிருந்து திடீரென்று எங்கடா பாய்ஞ்சு போனாய்..?”

நான் கண்ட நாள்முதலாய் நண்பர்களால் சூழப்பட்டு வாழ்க்கையை கொண்டாடிக் கொண்டிருப்பாய். படுக்கையைத் தவிர, நீ தனியே இருந்ததில்லை.

அந்த வெள்ளிக்கிழமை சபிக்கப்பட வேண்டும். யேசுவை காட்டிக் கொடுத்த அந்தக் கள்ள வியாழனில் நீ வாழ்வைப் பிரிந்திருக்கலாம்.

நான் கார் ஓடிக்கொண்டிருந்தபோது நண்பர் விவேகானந்தனின் ‘கருணா போயிட்டான்” என்ற குரல் கேட்டு நின்றேன்.. நின்றேன்..நெடும்மரம்போல நின்றேன். இன்று வரை அந்தக்குரல் மாத்திரமே ஒலிக்கிறது. அவன் மீண்டுமொரு தடவை எனக்கு தொலைபேசி எடுக்க மாட்டானா? என்னோடு பேசமாட்டானா? என ஏங்குகின்றது மனம்.

இலக்கியத்தில் பிரியமுள்ளவன் கருணா. என்னளவில் கருணா ஒரு முக்கிய இலக்கிய ஆளுமை என்று சொல்வேன். ஓவியம், புகைப்படம் எடுத்தல், ஒளி - ஒலி வடிவமைப்பு, வரைகலை, கணினி பற்றிய பேரறிவு... இவற்றெல்லாவற்றையும் விட கருணா பெரிய வாசகன். வாசித்தவைகளை உள்வாங்கிக் கொண்டு, வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் அவற்றை வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்கவன்.

அவன் வரைகலையை ஒரு தொழில் நிறுவனமாகத் தொடங்கிய போது, ஆக்கங்களைத் தட்டச்சுசெய்தல் வேறு, பக்க வடிவமைப்பு வேறு, நூலை அச்சிடுவது வேறு என்பதைப் பெரும்பாலான தமிழர்கள் அறிந்திருக்கவில்லை.

இத்துறைகளில் வல்லாண்மை மிக்கவனாக இருந்த கருணா இந்தச்சமூகத்துக்குள்தான் இயங்கினான். குறிப்பிட்ட ஒரு வட்டத்தைத் தவிர, கருணாவின் ஆற்றல்களை எங்கள் சமூகம் முழுமையாகப் பயன்படுத்தத்தவறியிருக்கின்றது

கூர்மதியும் நுண்ணுணர்வும் நல்நோக்கும் கொண்ட பெரும் கலைஞனைச் சமூகம் இழந்திருக்கின்றது. ஆத்மார்த்தமான நண்பனை நான் இழந்திருக்கின்றேன். தன் ஆருயிர் நண்பன் பாரியைப்பார்த்து பெருங்கவி கபிலர், ‘நீரிலும் இனியவனே’ என்பார். கருணாவையும் அப்படியே அழைக்கத் தோன்றுகின்றது.

எழுதி முடிக்க முடியாத பெருங்கதை இவன். சொல்லுக்குள் சுருக்க முடியாத வெள்ளத்தனையன். காலம் வழி வகுத்தால் பின்பொரு பொழுதில் இவனோடான அனுவங்களைத் தொகுக்கலாம்.

மாணிக்கவாசகரின் திருவாசகம் ஒன்றை எழுதி இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

*நோக்கரிய நோக்கே*
*நுணுக்கரிய நுண் உணர்வே*
*போக்கும் வரவும்*
*புணர்வும் இலாப் புண்ணியனே*
*காக்கும் என் காவலனே*
*காண்பரிய பேரொளியே*
*ஆற்றின்ப வெள்ளமே*
*அத்தா மிக்காய் நின்ற*
*தோற்றச் சுடர் ஒளியாய்ச்*
*சொல்லாத நுண் உணர்வாய்*



*selvam.a@thaiveedu.com*




# கருணா வின்சென்ற்: காண்பியக் கலையின் ஆழம்

- பேராசிரியர் அ. ராமசாமி -

எனக்கு நண்பர்களின் எண்ணிக்கை குறைவு.

உறவுகள், சொந்த ஊர், உடன் பயின்றோர், பணியிடம் என்ற வகைப்பாட்டின் அடிப்படையில் என்னைத் தொடர்ந்துவரும் நட்புகள் குறைவு. நான் தொடர்பு கொண்டிருக்கும் நண்பர்களின் எண்ணிக்கை அதிகம் இல்லையென்றே கூடச் சொல்லிவிடலாம்.

அதே நேரத்தில் நான் இயங்கும் கலை இலக்கியம் சார்ந்த நட்புகளின் எண்ணிக்கை கணிசமானது. தொடர்ச்சியாக அவர்களின் பிரதிகளை வாசிப்பதின் வழியாகவும் அவை குறித்துப் பேசுவதின் வழியாகவும் அவர்களின் நட்பைத்தொடர்ந்து கொண்டிருக்கிறேன். கவிதை வாசிப்பு சார்ந்து எனது நீண்ட நாள் நட்பு கவி சேரன். என் வயதொத்த கவி சேரனின் கவிதைகளைத் தொடர்ச்சியாக வாசித்து வருபவன். அவர் வழியாக அறிமுகமாகி தனது காமிராவின் வழியாகவும் ஓவியங்கள் வழியாகவும் எனக்கு நண்பராகி விட்டவர் கருணா வின்சென்ற்.


ஒரு மாத இடைவெளியில் இருவரும் கனடாவின் ரொறன்ரோவில் சந்தித்துக்கொண்டோம். அந்தச் சந்திப்பு உருவாக்கித் தந்த புரிதல் திரும்பவும் கனடாவிற்குச் செல்ல வேண்டும், கருணாவின் ஓவியங்களையும் படங்களையும் குறித்து அவரோடு தனியாகவும் பார்வையாளர்கள் முன்னாலும் பேசிக் களிக்கவேண்டும் என்ற எண்ணத்தைத் தந்துகொண்டே இருக்கிறது.

இன்னொரு தடவை நான் கனடாவிற்குப் போகக்கூடும். கருணாவின் காட்சி உருவாக்கங்களான ஓவியங்கள் குறித்தும் படங்கள் குறித்தும் பார்வையாளர்கள் முன்னால் பேசிவிட முடியும். ஆனால் தனியாக அவரோடு தனியாக ஒரு மதுக் கூடத்தில் அல்லது பெருஞ்சாலையின் மரத்தடியில் நின்று விவாதிக்கமுடியாது. அவரைக் கட்டித் தழுவிக் கொண்டு ஒரு படம் பிடித்துக்கொள்ள முடியாது. கனடா போனபோது இந்த அனுபவங்களை எனக்குத் தந்த கருணா இப்போது இல்லை என்பதை நினைக்கும்போது அவரோடு ரொறன்ரோ நகரில் சுற்றித்திரிந்த சில நாட்கள் நினைவில் ஓடிக்கொண்டே இருக்கின்றன.

கனடா என்னும் தேசத்திற்குச் செல்ல வேண்டும் என்ற நினைப்பைத் திருப்பத் திருப்ப உண்டாக்கியவர் கவி சேரனே. நான் போலந்தில் இருந்த 2011- 2013 காலத்தில் அங்கிருந்து கனடா செல்லும் முயற்சிகள், விசா வாங்கும் சிக்கல்கள் காரணமாக சாத்தியப்படவில்லை. தொடர்ச்சியான அழைப்பு காரணமாக 2016 மே மாதம் அது சாத்தியமானது. அங்கிருக்கும் யோர்க் பல்கலையில் ஈழ நாவல்கள் குறித்து விரிவான கட்டுரையொன்றை வாசிக்கும்பொருட்டு என்பதாகப் பயணத் திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு கனடாவிற்கும் அங்கிருந்து அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் வசிக்கும் மகனிடமும் போவது என்பதாகத் திட்டமிட்டுப் போயிருந்தபோதுதான் கருணாவைச் சந்தித்தேன்.

அரைமணி நேரம் தாமதமாகவே கருத்தரங்கம் நடக்கும் அரங்கில் நுழைய நேர்ந்தது. தாமதமாக வரும் என்னைக் கைபிடித்து அழைத்துப் போன முதல் கரம் கருணாவின் கரம். சேரன் அவரிடம் சொல்லியிருப்பதாகச் சொல்லி என்னை அருகழைத்து உட்காரவைத்துக் கொண்டார். அதுவரை அவர் பெயர்கூட எனக்குத் தெரியாது. அந்த முதல் பயணத்தில் அவர் எடுத்துத் தந்த படங்கள் மட்டுமே என்னிடம் இருந்தன. அவர் முகமும் பதிந்திருந்தது. ஆனால் ஒரு மாத இடைவெளியில் திரும்பவும் போனபோது கருணாவின் காமிராவும் நட்பும் பேச்சும் கண்களின் சாத்தியங்களைப் பற்றிய அவரது பார்வையும் அப்படியே என்னிடம் ஒட்டிக்கொண்டது.

கலைகளைப் பற்றிய பேச்சுகளில் ஓவியத்தையும் சிற்பத்தையும் நுண்கலை என்ற



வகைப்பாட்டில் வைத்துப் பேசுவதையே கேட்டிருக்கிறேன். அப்படிப் பேசுபவர்கள் நுண்கலைப் பொருட்களை ஒரு விரிவான தளத்திற்கு அறிமுகப்படுத்தும்போது 'காண்பியக்கலை' என்ற விரித்துப் பேசுவதை விரும்புகிறார்கள். ஒரு புகைப்படம் அல்லது நிழற்படம் அதன் தயாரிப்பு சார்ந்து எப்போதும் ஒரு தொழிலாகவே இருக்கிறது, இருந்தது என்பது எண்ணமாக இருந்தது. அந்த எண்ணத்தை எப்போதாவது ஓரிருவர் அசைத்துப்பார்ப்பார்கள். அப்படி அசைத்துப் பார்த்ததின் பின்னணியில் இருந்தது என்ன என்று நினைத்துப் பார்த்தால், அவர்கள் தேடிப்பிடித்துக்காட்டிய பொருளாக அல்லது இயற்கைக் காட்சியாக, அல்லது அலையும் கூந்தலோடு சிரிப்பை மறைக்க முயலும் ஒரு பெண்ணாக இருக்கும்.

காட்சிகளையும் பொருட்களையும் நபர்களையும் பதிவுசெய்யும் காமிரா என்னும் கருவியைக் கையாள்வதில் பெரிதும் இருப்பது தொழில்நுட்பம் சார்ந்த அறிவு என்று மட்டுமே என்ற நம்பிக்கை எனக்கு இப்போதும் உண்டு. அந்தக் காமிராவே நகரும் ஒன்றாக - சலனப்படக்கருவியாக மாறும்போது அதற்கெனத் தனித்துவமான மொழியை உருவாக்கிக் கொள்கிறது. அந்த மொழிக்கு இயற்கை மொழியையொத்த அலகுகளும் வரையறைகளும் நேரடி அர்த்தங்களும் மறைமுக அர்த்தங்களும் உண்டாகிவிடும். சலனப்படக்கருவிக்கான மொழியையொத்த படைப்பாக்க மொழிக்கூறுகளை நிலைப்படக்கருவி யைக் கையாள்பவர்களும் உருவாக்குவதுண்டு என்பதை அந்தச்சந்திப்பில் கருணா உருவாக்கினார்.

புகைப்படம் எடுப்பது அது ஒரு தொழில் பலபேருக்கு. சிலபேருக்கு அது ஒரு பொழுதுபோக்கு. ஆனால் மிகச்சிலபேருக்குக் கலையாகவும் இருக்கிறது என்ற நம்பிக்கை அப்போது உருவாகிடக் காரணமாகிவிட்டார். முதல் சந்திப்பு மே முதல் வாரத்தில் நடந்தது. சேரன் வழியாக அவரது பெயர் காதிற்குள் நுழைந்தது. அது மனதில் நிற்கவில்லை. காரணம் அவரது கையிலிருந்த காமிரா. அதிகப்படியான எடையுடன் பிறந்த குழந்தையைக் கையாள்வதுபோல் அதைக்கவனமாகக் கையாண்டபடி இருந்தார். அப்போது அவர் எடுத்த படங்களை உடனடியாகப் பார்க்கவில்லை. இரண்டாவது தடவையாகத் திரும்பவும் ரொறன்ரோவுக்குப் போனபோது ஒருநாள் முழுவதும் நான் அவரோடுதான் இருந்தேன். அப்பொழுதும் அவரது படங்களைப் பற்றியோ, அவர் காமிராவைக் கையாள்வதின் நுட்பங்கள் பற்றியோ அதிகம் பேசிக்கொள்ளவில்லை. பேசிக்கொண்டதெல்லாம் சாப்பாடு, மது, நட்பு, ஊர் சுற்றல். அவ-ரோடு இன்னொரு நண்பரும் இருந்தார். தாய்வீடு பத்திரிகையின் ஆசிரியர் டிலிப்குமார். அவரது பேச்சுகள் ரொறன்ரோவில் அகதியாக இருப்பதன் பாடுகள் பற்றிய-தாக இருந்தன.

மாலையில் புத்தகவெளியீட்டு விழாவிற்கு மூவரும் போனோம். கருணா தனது எடை கூடிய குழந்தையை விளையாட அனுமதித்தார். விளையாடிய பிள்ளை பிடித்து வைத்த பொம்மைப்படங்கள் எதனையும் இரண்டு நாட்களுக்குக் கண்ணில் காட்டவில்லை. நான் அமெரிக்கா திரும்பிய பின் அனுப்பிவைத்தார். தமிழ்நதியின் 'பார்த்தீனியம்' நாவலின் வெளியீட்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் மொத்தமாக இப்போதும் என்னிடம் இருக்கின்றன. அந்தப் படங்களில் இருக்கும் மனிதர்கள் நேரில் பார்த்தபோது இப்படியானதொரு அழகிலும் உணர்வு வெளிப்பாட்டிலும் இருந்தார்களா? என்ற சந்தேகம் திரும்பத்திரும்ப எழும்பிக்கொண்டே இருக்கிறது. ஆனால் கருணா இருந்ததைத்தான் பிடித்திருக்கிறார். ஒரு நூல் வெளியீடு மற்றும் விமரிசன அரங்கு என்னும் சுவாரசியமில்லாத - ஒரு புகைப்படக்காரருக்குச் சுவாரசியம் தராத வெளியில் எடுக்கப்பட்ட படங்கள். இந்தப்படங்களுக்குள் மனிதர்களின் சுவாரசியமான கணத்தைக் கச்சிதமாகப் பிடித்துக்காட்டும் எத்தனிப்பு அந்தப்படங்களில் வெளிப்பட்டது. அவை உண்டாக்கிய உணர்வில் உடனடியாக ஒரு வேண்டுகோளை அனுப்பினேன்.

கூட்டங்கள், நிகழ்ச்சிகள் என உள்ளரங்கப் படங்கள் தவிர வெளியில் எடுத்த படங்களை அனுப்பமுடியுமா எனக்கேட்டேன். ஒரு தொகையாக அனுப்பிவைத்தார். அந்தப் படங்களைப் பார்த்த பின்பு பெரிய தவறொன்றைச் செய்துவிட்டதாகத் தோன்றியது. அவரோடு இருந்த நேரங்களில் புகைப்படம் எப்படிக் கலையாக மாறுகிறது என்பதைப் பற்றியே பேசியிருக்க வேண்டும். அதன் மூலம் கலையின் பரிமாணங்களை விவாதித்திருக்க முடியும் என்று தோன்றியது.

கலைகளைப் பற்றிய சொல்லாடல்களைத் தொடங்குவதற்கு அடிப்படையாகத் தெரிந்திருக்கவேண்டியன நாம் பேசவிரும்பும் கலையின் எந்திரவியல் கூறுகள். அவை எவ்வாறு இணைகின்றன, இணைந்து பொருளாக (matter) மாறுகின்றன என்று தெரிந்துகொண்டால், அந்தப் பொருள் உருவாக்கத்தின் எந்திரவியல் கூறுகளோடு இணையும் படைப்பாக்கக் கூறுகள் எப்படிக்கலையை உருவாக்குகின்றன என்று பேசத்தொடங்கிவிடலாம். இந்தச் சொல்லாடல் முறைமை தெரியாமல், நேரடியாகப் படைப்பாக்கக் கூறுகளைக் கூடச் சொல்லாமல், கலையின் விளைவுகளைப் பேசுவதே தமிழில் கலை பற்றிய பேச்சாக - திறனாய்வாக இருக்கிறது.

கலையின் அடிப்படையான வேலை உருவாக்குவது. புதிதாக உருவாக்குவது. ஒன்றுபோல இல்லாமல், ஒவ்வொன்றையும் ஒவ்வொன்றாக உருவாக்குவது. மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவராகப் படைக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் படைத்தவர் யார் என்ற ரகசியம் தெரியாததால் இறை அல்லது கடவுள் என நம்புகிறது உலகம். புகைப்படத்தைக் கலையாக நினைப்பவர்கள் எதையும் உருவாக்குவதில்லை. இருப்பதைப் பிடிக்கிறார்கள். இருப்பதைப் பிடிப்பதில் என்ன படைப்பாக்கம் இருக்கமுடியும்? உருவாக்கத்திற்குத் தேவை தேர்வு. கலைப்படைப்பை உருவாக்கத் தேவையான அடிப்படைப் பொருட்களை எந்திரத்தனமாக இணைத்தாலும் தேர்வு(selection) செய்வதன் மூலமும் நுட்பங்களை உருவாக்குவதன் மூலமும் கலையாக மாறுகிறது. புகைப்படத்திலும் ஒரு தேர்வு இருக்கிறது. இருப்பதைப் பிடிப்பதில் எப்படி இருக்கும்போது பிடிப்பது என்பதில் அந்தத் தேர்வு வெளிப்படுகிறது. பிடிப்பதற்கான கணப்பொழுதைக் கவனமாகக்கண்டுபிடிப்பதில் தான் கலையின் நிகழ்வினையைக் காட்ட முடியும். இயற்கைப் பொருளொன்று இருப்பதில் வெளிப்படும் உணர்வைப் பிடிக்கிறபோது அது கவிதையின் வெளிப்பாடாக மாறிவிடும். இருப்பது அசைந்துகொண்டிருந்தது என நம்பச்செய்யும்போது நடனத்தின் வெளிப்பாட்டைக் காட்டிவிடமுடியும். இருப்பது உரையாடுகிறது என உணர்த்தும்போது நாடகத்தின் பகுதியாக ஆகிவிடும். இருக்கும் பொருளுக்குள் என்னென்னவோ ரகசியங்கள் பொதிந்துகிடக்கின்றன என்று ஆச்சரியத்தை உண்டாக்குகிற நிலையில் கலையின் கலவைத்தன்மையைக் காட்டிவிட முடியும். இப்படியெல்லாம் கருணா-வோடு பேச நினைத்தேன்.

தொடர்ச்சியாக அவரது முகநூல் பக்கங்களைப் பார்த்துவிடுவேன். ஓவியங்களும் படங்களும் பதிவேற்றப்படும் வண்ண உலகம் அது. இரண்டிலும் படத்தின் ஒளி அளவும் உருவாக்கப்படும் நிழலின் பரவலும் அதனால் உண்டாகும் வண்ணக் கலவையும் தரும் காட்சி இன்பம் சொல்லிப்புரிய வைக்க இயலாதவை. பார்த்து இரசிக்கவேண்டியவை. காமிராவில் கலையின் அர்த்தத்தை உருவாக்கும் வித்தகம் உருவாவதை அவரோடு இருந்த நேரத்தில் கவனிக்கவே செய்தேன். நான் பார்த்தவரை கருணா ஒரு சோம்பல் பூனை. சோம்பல் பூனை உடல் முறித்து முன் கால்களை நீட்டி எழுவதுபோலக் கைகள் உயரும் போது, கருணாவின் வட்ட முகத்தை முற்றிலும் மறைத்துவிடுகிறது. தேவை யான அளவுக்கட்டுப்பாட்டுக் கண்ணாடிகள் - லென்சுகள்- பொருத்திக்கொண்ட காமிரா அவருடையது. எப்போது எடுப்பார்? எப்போது தவிர்ப்பார்? என்பதெல்லாம் அவர் விருப்பம். தனது காமிராக் கண்கொண்டு ஒருவரை அல்லது ஒரு பொருளைக் கவ்விக்கொள்ள அந்தப் பூனை எப்போது வாயைத் திறக்கும் என்று தீர்மானமாகச் சொல்லமுடியாது. வாயைத் திறந்து கவ்வித்தந்த படங்களை அவ்வப்போது பார்த்துக்கொண்டே இருக்கிறேன். அவை புகைப்படக்காரர்கள் பற்றிய எனது நம்பிக்கையைக் கலைத்துப் போட்டுவிட்டன. அவர் இப்போது இல்லை என்ற உண்மை படங்களின் உறைவுபோல
உறைய மறுக்கின்றது.



ramasamy.a@thaiveedu.com

# அவன் வண்ணங்களும் என் வரிகளும்




**- களப்பூரான் தங்கா -**

பதினெட்டு வருடங்களின் முன், மார்கழியில் ஒரு நாள் சக்கரவர்த்தி வீட்டில் கருணாவுடன் அறிமுகமாகின்றேன். எல்லோரும் சொல்வதுபோல் அன்றிலிருந்து தொடரவில்லை எம் நட்பு. எட்டு வருடங்களாக என்னைக் கணக்கே எடுக்கவில்லை சீமான். ஒரு கலைஞனாய் அவனை அணுகி ஆர்ப்பரிக்க முனைந்த ஒவ்வொரு முயற்சியும் தோல்வியாய் அமைந்தது. விட்டு விட்டேன் ஏன் இந்த வீண் முயற்சி.

இரண்டாயிரத்திப் பத்தில் சேரன் வீட்டில் ஒரு குட்டி விருந்து. சிங்கனும் வந்திருந்தார். சினம் தீர்க்க நாள் கிட்டியது. விஸ்கி சூடாக்க சூடாக்க எங்கள் விவாதம் தொடர்ந்தது. ஓவியத்தில், புகைப்படத்தில், ஒன்றானோம். நாடகமும், கூத்தும் நாக்குகளில் விளையாடின. மட்டக்களப்பு வடமோடியையும் தென்மோடியையும், மரபு மாறா அதன் மணத்தையும் பூசிவிட்டேன் அவன் மேனியெங்கும். அன்றுதான் அவன் வண்ணங்களும் என் வரிகளும் மாலையாகத் தொடுக்கத் தொடங்கின.

அரங்கியல் ஓர் அடித்தளமாய் அமைந்தது எங்கள் உறவுக்கும், உணர்வுகளுக்கும் தீனி போட. கூத்துப் பயிற்சிகளில் என் ஆர்வமும் அவன் ஈடுபாடும் மேலும் இறுக்க இறுக்க நள்ளிரவுத் தொலைபேசிகள் அலறத் தொடங்கின.

தொழில்நுட்பம் பூசவந்த தொழிலாளியாய் அல்ல. அவன் உரையாடல்களில் - இயக்குநராய், நடிகனாய், இசைஞனாய், வாத்தியக்காரனாய், வண்ணக்காரனாய், ஒளிக்காரனாய் ஒட்டுமொத்த மேடையையும் கட்டி ஆளும் கதாநாயகனாய்க் காட்சியுற்றான். சர்க்கரை தேடித் திரிந்தவனுக்குக் கூடவே தேனும் கிடைத்துபோல் உணர்வுகளில் ஒழுகினான். மேலும் ஒன்றானோம் களரிகளில்.

நிகழ்த்துகலையின் நேர்த்தியில் மிகக் கண்டிப்பானவனாகச் செயற்பட்டான். மேடையின் ஒவ்வொரு அங்குலமும் கதை சொல்ல வேண்டும். கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் போன்றவற்றை மீண்டும் மீண்டும் திருத்தி ஓர் இறுதிப் படைப்பை உருவாக்கலாம். ஓவியம் ஒருதரம் வரைவதுபோல், நிகழ்வும் ஒரு தரம் மாத்திரமே என்பான்.

தொடர்ந்தது பயணம். வரலாறு உள்வாங்கிய தலை சிறந்த ஓவியங்களின் கண்காட்சி ரொறன்ரோ கலைக் கூடத்தில் நடைபெற்றது. ஒருநாள் முழுவதும் கொட்டினான் ஓவியத்தின் வரலாற்றை, வகைகளை, தூரிகைகளின் நுட்பங்களை, நிறங்களின் பிரிகைகளை, படைபாளிகளின் பாணிகளை, வாசிப்பு முறைமைகளை. வான் கோவும் மைக்கல் அஞ்சலோவும், பிக்காசோவும் லாவஞ்சியும் எங்களுடன் அன்றைய நாள் முழுவதும் திரிந்தார்கள். ஓவியத்தில், ஒருவருட டிப்ளோமா முடித்த அறிவு கிடைத்தது.

ஓர் உணர்வினைச் சொல்லும் ஓவியத்துக்குள்ளும் பல உணர்வுகளைக் கொட்டும் வண்ணங்களுக்குள்ளும் உட்செல்வது, இலக்கியங்களுடன் பயணிப்பது போன்றதாகும். எல்லாச் சந்தர்பங்களிலும் வாசகனின் சிந்தனை ஓட்டத்திற்குச் சுதந்திரம் உண்டு. இருந்தும் ஓவியங்களைப் பார்ப்பதற்கு மேலாக வாசிக்கும் பரிச்சயம் ஏற்பட ஏற்பட ஓவியனின் பயணம் நம்மால் உணரப்படும். ஓவியவாசிப்பனுபவம் ஆழமாகி இரசனையுடன் கலக்க, ஓவியனின் பயணம் புரியத்தொடங்கும். அவன் வார்த்தைகள் என் நரம்புகளால் ஈர்க்கப்பட்டன.

நள்ளிரவு உரையாடல்கள் சவால்களாய் மாறத் தொடங்கின. தன் கையடக்கத் தொலைபேசியில் ஓவியம் வரையும் ஒரு புதிய மென்பொருளை இறக்கிவிட்டு, எளிமையான கோடுகளையும் நிறங்களையும் கொழுவி அனுப்பத் தொடங்கினார் மாப்பிள்ளை. ஐந்தே நிமிடத்தில் அவருக்கு பதில் வேண்டும் கவிதையாக. நானும் இயன்றளவு வாசித்து எழுதத் தொடங்கினேன் என் வரிகளை. அதிகாலைவரை நீடிக்கும் ஆயிரம் கதைகளும் களங்களும். என்னுடன் உரையாடிய ஒவ்வோர் இரவும், தான் ஒரு கூட்டத்துடன் இருந்து கும்மாளம் அடித்ததுபோல் உணர்ந்ததாய்ச் சொல்வான்.

அப்பப்போ அவன் அனுப்பிய சித்திரங்



களுக்கு நான் அப்பிய வரிகளில் ‘நெம்புகோல்’, ‘கட்டுமரம்’ இரண்டினையும் மெச்சினான்.

### கட்டுமரம்

*வலி சுமந்த மனத்திரை*
*தோள் கனக்கும் கடினம்*
*காவுதற்கு நாதியில்ல*
*கனவுகளில் பயணம்*
*உந்தியேனும் இழுப்பதற்கு.*

*உறவிருந்தும்*
*தனி வெளியில் பறப்பதற்கு*
*ஒரு சோடிச் சக்கரங்கள் போதுமென்று*
*புறச் சிறையின் கதவுடைப்பு.*
*மழை நூலில் மிதந்துவரும்*
*மேகத்தின் பாதைகளில்*
*நம்பிக்கை.*

*காற்றோடு மல்லுக் கட்டு*
*ஒவ்வோர் உந்துதலும்*
*உணர்வொழுகி அகம் நனைத்து*
*நதிமூலம் தேடிவரும் காட்டாறு*
*கடல் சேர.*

*நடை தூரம் பாராது*
*புயல் வீசும் தேசத்திலே*
*கொண்டல் அசைவுகளாய்*
*போர் வீசும் திசையெங்கு மோடி*
*திரவியங்கள் தேடிய கட்டுமரம்*
*உடையாது கரைசேரும்*
*ஒரு நாளில்*
*அதன் பாட்டில்.*

ஆயிரம் அன்புகள் அடுத்தாற்போல் இருந்தாலும் தனிமை ஒரு பெரும் விலங்கு. நம்மை அறியாமலேயே மெல்ல மெல்ல நம்மை விழுங்கிக் கொண்டிருக்கும். ஐந்து வருடங்களாய் பூட்டப்பட்ட அறையுள் விழுங்கப்பட்டு, அக்கொடிய மிருகத்தின் நகங்களாலும், பற்களாலும் குதறப்பட்டு கக்கப்பட்ட அனுபவம் எனக்குள் இன்னமும் குமுறிக் கொண்டே இருப்பதால், அவனுடன் உரையாடுவது என் மனப் புண்களுக்கு தைலமாய்த் தடவியது.

‘நெம்புகோல்’ அவனையும் என்னையும் அழைத்துச் சென்றது, வாழ்வின் ஆரம்ப நாள்களுக்கு. இந்த ஓவியத்தின் உணர்வுகளுக்கு இன்று வரையும் ஏங்குபவன் நான். அவனோ, அதை அணு அணுவாய் அனுபவித்தவன். அனுபவ நிறங்களும் ஏக்க வரிகளும் கலந்ததுதான் இந்த இணைப்பு.

### நெம்புகோல்

*தளர் நடையில்*
*சிறுகுருவி தடுமாறும் பறப்பதற்கு*
*சிறகணைத்து நடை பயிற்றி*
*மிதக்கவிடும் பெரும்புலவன்.*

*ஆழி*
*மேலுயர்ந்து மோதிடினும்*
*துகள் உரியா நெஞ்சுறையும்*
*கடும் பாறை*
*ஈரம் நிறைந்து.*

*கண்கள்*
*சிறு நெருஞ்சி முள் பொறுக்கும்*
*சேயின்*
*கால்நகரும் திசைகளிலே.*
*கைகள் தலை கோதும்*
*துயர் இடுக்கில்*
*மனஞ் சரியும் வேளையிலே.*
*மெய்நீரை அறிந்தூட்டும் அன்னம்*
*கன்றுகளின் காட்டில்*
*பொய்மழை கொட்டுகையில்.*

*உள்ளத்து மேகங்களில் மின்சாரம்*
*ஒவ்வோர் கணப்பொழுதும்*
*நெம்பி*
*எனை நானே*
*முந்தித் தள்ளுதற்கு.*

அவன் அழைத்த அந்த வண்ண இரவுகள் இனி இருளாகத்தான் விரியும். ஓவியங்களை அனுப்பிவிட்டு, ‘தல, அனுப்பியிருக்கின்றேன். போட்டுத் தாக்குங்கோ’, என்ற செய்திகளும் வெற்றிடமாய்த்தொடரும். கவிவரிகள் காணப் பதில் கேட்கும் தொலைபேசி ஊமையாய் உறையும்.

தாய்வீடு அவனின்றித் தனித்தே திரியும். நாளெடுக்கும் உடைந்த செல்வத்தார் மீண்டுவர. பொன்னையா அவன் அழைப்பு இலக்கத்தை அழிப்பாரா வைத்திருப்பாரா? கங்காவுக்கு ஒரு கை நட்புவாத நோயால் இழுத்துவிடும். சில நாட்களுக்கு, சேகர் தொலைந்து விடுவார். சேரன் வீட்டு நாய்க்குட்டி அவன் ஓவியத்தையும், சேரனின் முகத்தையும் மாறி மாறிப் பார்க்கும். சக்கரவர்த்தி ஓசோவின் பக்கங்களைப் புரட்டுகின்றார். கருணாவின் கணினி இனி தானாய் வரையத் தொடங்கும்.

*கருணா எனும் நட்பு*
*வண்ணங்கள் சிதற*
*கண்ணெல்லாம் கனக்கின்றது*
*உன் கைவிரல்கள் உதறிய*
*ஒவ்வொரு துளியும்*
*கலைகளாய்க் கொட்டினவே.*

*கண்ணீரல்ல*
*உன் கதைகள்தான் வருகின்றது*
*எம் கண்கள் முன்னே.*
*நெஞ்சகலா நினைவுகளை*
*நிலம் முழுதும் விதைத்துவிட்டு*
*நீண்டுவிட்டாய்*
*அறுவடையில் நனைகின்றோம்*
*அணு அணுவாய்.*

*எதுவெல்லாம்*
*உன் நிறம் அப்ப நினைத்தனவோ*
*அதுவெல்லாம்*
*இருண்டே கிடக்கும் இனி.*
*அன்றையநாள் மேடைகளில்*
*உன் பங்களிப்பை எண்ணி எண்ணி*
*அரங்காடல் அழுகின்றது.*

*தேடுகின்றது தேடகம்*
*உன் அட்டைச் சித்திரங்களை*
*பார்த்திட, பகிர்ந்திட,*
*நினைவிடை தோய்ந்திட.*

*இன்றைய அரங்கியல் விழாவில்*
*பல நிறங்களுடன் நீ நின்றாய்*
*நிழலாக, தூணாக,*
*நெடு உயரப் பனையின் வேராக.*
*இனி*
*அங்கு நிறங்கள் வரும்*
*அதில் நீ இருக்கமாட்டாய்.*

*சிலரே உன் சினேகிதம்*
*சிலரே உன் முரணும்*
*இன்று பலரோ முன் வரிசையில்*
*உன் பக்கங்களைப் புரட்டுதற்கு.*

*ஆண்டுகளைக் கடந்தும்*
*அப்பிக்கொண்டு திரியும்*
*உன் ஒளிக் கலப்பும் நிறப் பிரிவும்*
*எம் நினைவுகளில்*
*நிழலாடி*
*கனவுகளில் களமாடி.*

*தனி அறையில் கிடந்து*
*அன்று தவித்துப் பிரிகையிலே*
*யாரையடா நினைத்தழுதாய்*
*உன் தாயினையா ?*
*தமக் கையினையா ?*
*உன் மனக் களத்தில் உரம் புதைத்த*
*மார்க் மாஸ்டர் அவர்களையா?*
*தினம் தாங்கிப் பிடித்த உன்*
*தோள் கொடுக்கும் தோழர்களையா?*

*பாவி எமைத் தவிக்கவிட்டுப்*
*பாய்ந்தாயடா*
*உன் நிறக் கலவைச் சட்டியிலே*
*இன்று*
*நிழல் படமாய், சித்திரமாய்*
*நீள் சுவரில் தொங்குதற்கு.*

*நண்பா,*
*பழகிய நாட்கள் சிறிதே*
*நம் பயணமோ பெரிது*
*இன்று நீ முந்தி*
*நாளை*
*நான் பிந்தி.*



thanga@thaiveedu.com

# பட்டப் பகலின் நெட்டைக் கனவோன்




வத்திக்கான் நகரத்தின் புனித இராயப்பர் பேராலயத்திலுள்ள, பெரும் சிற்பி மைக்கல் ஆஞ்சலோவின், பியாதா (Pieta) சிற்பத்தை நேரில் பார்த்த அனுபவம் பற்றிக் கருணா விபரிக்கும் போது அகலத்திறந்த விழிகளோடு அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். வியாகுல மாதாவின் மடியில் கிடந்த யேசுவின் உடலின் பாரம் தன் மனதை அழுத்தியதாகவும், மாதாவின் உடையில் இருந்த மடிப்புகளின் இயல்புத் தன்மையில் மனம் சிக்குண்டதையும், இயேசுவின் உடலில் இருந்த உறைந்து போன நாளங்களின் வலைப்பின்னலில் தன் மனம் உறைந்து போனதையும் சொல்லிக்கொண்டே இருந்தார். இது தான் கருணா. உலகெங்கிலும் உள்ள சிறந்த கலைப்படைப்புகளில் தன் மனதைப் பறிகொடுத்து அவற்றினூடு பயணிப்பதும் அவை உருவாகிய பின்னணியையும் படைப்பாளிகளின் வாழ்க்கை வரலாறுகளையும் தேடுவதில் தீராத் தாகம் கொண்டவர்.

ஓவியங்களில் மட்டுமன்றி சிற்பம், சினிமா, இலக்கியம், அரசியல், வரலாறு என இவரது தேடல் பரந்துபட்டது. இந்த தேடல்களுக்கான விதையை தன்னுள் இட்டவர் தன் ஓவிய ஆசான் அ.மார்கு அவர்கள் என அடிக்கடி கூறுவார். இந்தத் தேடல்களின் தரிசனத்தில் அவர் பெற்ற அனுபவங்களும் அறிதல்களுமே அவரை ஒரு சிறந்த படைப்பாளியாக மாற்றியது. தனக்குத் தெரியாதவற்றை எவரிடம் இருந்தும் கற்றுக் கொள்ளும் மாணவ மனநிலை இறுதிவரை அவரிடம் இருந்தது. இதுவே அவர் ஓவியத்திலும் வரைகலையிலும் சிற்றிதழ்கள், பத்திரிகைகள், விளம்பரங்கள் வடிவமைப்பதிலும் பெரும் ஆளுமை செலுத்தப் பெரும் பலமாக இருந்தன.

தன் தேடல் அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதில் பெரும் ஆர்வம் காட்டினார். தாய்வீடு பத்திரிகையில் ஓவியங்கள் பற்றி அவர் எழுதிய கட்டுரைகளும், AGO போன்ற ஓவியக் கண் காட்சிக்கூடங்களுக்கு அவருடன் சென்ற பயணங்களும் என்னுள் ஓவியங்கள், சிற்பங்கள் மீதான பெரும் காதலை ஏற்படுத்தியது. அதன் உந்துதலால் பாரிசில் உள்ள லூவர் (Louvre), மியூசி டோசே (Musee d'orsay), ஜேர்மனி, முன்ஸ்ரர் நகரில் உள்ள பிக்காசோ (Picasso) காட்சியகம் என்பவற்றிலுள்ள உலகப் புகழ்பெற்ற ஓவியங்களையும் சிற்பங்களையும் காணும் வாய்ப்பு ஏற்பட்டது.



**- றெஜி மனுவல்பிள்ளை -**

தாய்வீடு அரங்கியல் விழாவில் ஒலி, ஒளி அமைப்பில் கருணாவின் ஆளுமை அளப்பரியது. கூத்துக்களின் ஒலி, ஒளி அமைப்புகளில் காட்சிகளின் உணர்வுகளுக்கு ஏற்ற வண்ணங்களைத் தெரிவு செய்யவதில் கருணா அதீத திறமை கொண்டிருந்தார். கூத்துக் கலையை அடுத்ததளத்துக்கு எடுத்துச் செல்வதில் அவரது தொழில்நுட்பப் பங்களிப்பு பெரும் உந்துதலாக அமைந்தது. கூத்து, நாடகம், ஓவியம், சினிமா என்பவற்றில் ஈழத்தமிழினம் உலகத் தரத்தை எட்ட வேண்டும் என்பதில் பல திட்டங்களையும், கனவுகளையும் எம்மோடு பகிர்ந்துகொண்டவர். அந்தப் பாதையில் பயணிப்பதற்கான திறமையும் தேடலும் அர்ப்பணிப்பும் கொண்ட அவரின் இழப்பு தமிழ்க்கலையுலகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அண்மையில் ஒரு நாள், கனடாவில் பல்கலைக்கழகம் ஒன்றில் சினிமா, வரைகலை, ஓவியம் பயிலும் 20 வயது மாணவர் ஒருவர், தான் கருணாவின் படைப்புகள் பற்றியும் அவரின் கலை ஆளுமை பற்றியும் அறிந்ததாகவும், அவரை நேரில் காண விரும்புவதாகவும் என்னிடம் கேட்டுக்கொண்டார். நான் கருணாவைச் சந்திப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாக உறுதியளித்தேன். மறுநாள் கருணா மறைந்த செய்தியை முகநூலில் அறிந்த அந்த மாணவர்; தன் அதிர்ச்சியை என்னோடு பகிர்ந்துகொண்டார்.

தம் வேர்களைத் தேடும் அடுத்த தலைமுறை கருணாவின் படைப்புகளினூடாக அவற்றைக் கண்டடையும் என்ற எண்ணம் என்னுள் உதித்தது.

வண்ணங்களில் எப்போதும் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் கருணாவின் கனவுகளைக் கைவசப்படுத்துவதே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும்.



regi.m@thaiveedu.com

# முடிவுறாத இன்மை!

**- ராஜ்மோகன் செல்லையா -**

ஒரு காலத்தை நாம் கடந்து செல்கையில் எம்மிடம் தொடர்பில் இருக்கும் பல மனிதர்கள் எங்கள் மனங்களில் அழகிய பூக்களை விதைத்துச் செல்வார்கள். ஆனால், சில மனிதர்கள் எங்களிடம் ஒரு நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தி அப்படியே உயிரோடு ஒன்றித்துப்போய்விடுவார்கள். அவர்களிடம் இருந்து விலகியிருக்கவோ அல்லது விலத்தியிருக்கவோ முடியாதவாறு ஏதோவொரு பிணைப்பு எம்மை இழுத்து வைத்துக்கொண்டேயிருக்கும். இப்படியான ஒரு பிணைப்பில் நீண்ட காலமாக என்னுடன் இணைந்து, கடந்த மாதம் திடீரென மறைந்துபோன கலைஞர் கருணாவுடனான உறவு ஓர் அனுபவ பாடமாகியதோடு மட்டுமல்லாது வாழ்க்கையின் சோகமாகவும் அமைந்துபோய்விட்டது.

கருணா ஒரு காந்த சக்தி கொண்ட மனிதர். அவர்பால் இழுத்து நிற்கும் மனிதர்களின் பட்டியலையும், அவர்கள் சொல்லும் செய்திகளையும் அடையாளப்படுத்த முனைந்தால், ஆயிரம் கோடி பக்கங்கள் தேவைப்படும். உயர்வுகளும் தாழ்வுகளும் இணைந்து நிற்கும் பல துறைகளில் தனது ஆளுமையை முழுமையாக வெளிப்படுத்தி, மேலான ஒரு வாழ்க்கை வாழ்ந்து, இயற்கையுடன் இணைந்துவிட்டமை எமக்குப் பெரும் இழப்பாகிவிட்டது.


1995 கடைசிப் பகுதியில், ரோஜா சஞ்சிகையின் ஆசிரியர் வி. எல். ஆனந்த்தின் மூலம் எனக்கு அறிமுகமாகியவர்தான் கருணா என்ற மனசுக்கு பிடித்த நண்பர். கனிவான குரல், தெளிவான பேச்சு, பரந்துபட்ட சிந்தனை, தேடும் இயல்பு, நகைச்சுவைப் பண்பு போன்ற பல விடயங்கள் அவரைச் சந்தித்த முதல் நாளே எமக்கிடையிலான அன்னியோன்னியத்தை ஏற்படுத்திவிட்டிருந்தது. ரோஜா சஞ்சிகையில் ஓவியராகவும் படப்பிடிப்பாளராகவும், வித்தியாசமான ஆக்கங்கள் தரும் எழுத்தாளராகவும் நல்ல விமர்சகராகவும் சிறந்த வரைகலை வடிவமைப்பாளராகவும் தன்னை நன்கு வெளிகொண்டுவந்த கருணாவுடன் சேர்ந்து கடமையாற்றிய காலங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத பொற்காலங்கள் எனலாம். கருணாவுடன் சேர்ந்து 'ஒப்பரேசன் ரொறன்ரோ' 'எழுதியவர் மிஸ்டர் லிபரேசன்' என்று ரொறன்ரோ நகரின் அதிரடி 'றவுண்டப்புக்களை' நடத்தி, பலரது பகைகளுக்கு ஆளாகி எதிர்கொண்ட அனுபவங்கள் என்றும் நிலைத்திருக்கக் கூடியவை. நவீன ஓவியம், படப்பிடிப்பு, நாடகம், விமர்சனக் கூட்டம், புத்தக வடிவமைப்புபோன்ற பல துறைகளில் அவருடன் பயணித்த பொழுதுகள் அவரது மரணத்தை ஏற்க மறுத்து நிற்கின்றன.

கனடாவின் ஆரம்பகால தமிழ் பதிப்புத் துறையில் பல புதிய பரிமாணங்களை பா.அ.ஜயகரனுடன் சேர்ந்து தமிழ் எழுத்துலகுக்கு அறிமுகப்படுத்திய அக்காலங்களில்தான், பதிப்புத்துறை பெருவளர்ச்சி கண்டது. கவிஞர் சேரன், திருமாவளவன், செழியன், பாபு போன்ற பல நண்பர்களுடன் கவிஞர் சக்கரவர்த்தியின் வீடு ஒவ்வொரு வார இறுதியிலும் களைகட்டிவிடும். படப்பிடிப்பில் முழு அக்கறைகொண்ட கருணாவுடன், மில்ரன் பகுதியில் உள்ள காடு, மலை, தோட்டம், துரவு என்று அலைந்து திரிந்து எடுத்த படங்கள் பல சோகங்களைப் பாடி நிற்கின்றன. ஒரு வெள்ளிக்கிழமை மாலை என்னை அழைத்து 'வெளிக்கிட்டு வாரும் டவுண்ரவுண் செல்வோம்' என்றார். குதுகலமாக எனது சிவப்பு நிற அக்குறா காரில் அவரை ஏற்றிய பின்னர் இறங்கச்சொன்ன இடம் சேர்ச் அன்ட் குயின் வீதிச் சந்திப்பு. காரில் இறங்கிய பின் கமராக் கடைக்குள் நுழைந்தார். ஒரு நிக்கொன் மனுவல் கமராவை எடுத்து மேசையில் வைத்தார். கடைக்காரரிடம் எனது பெயரில் பில் போடச்சொன்னார். 'நானா பணம் செலுத்த வேண்டும்' என்று வியந்தபோது 'உமது கமராவுக்கு நீர் தானே பணம் கொடுக்க வேண்டும்' என்றவர் எனது சம்பளம் அன்றுதான் வந்திருக்கும் என்பதை நன்றாகவே புரிந்து வைத்திருந்தார். அன்றில் இருந்து அவரிடம் பழகி, தொடங்கியதுதான் எனது பொழுதுபோக்கு படப்பிடிப்பும் அதில் கிடைக்கும் சிறு நிம்மதியும்.

எல்லோரையும் போலவே கருணாவின் வாழ்க்கையிலும் எவ்வளவோ மேடுபள்ளங்கள் குவிந்துகிடந்தன. ஆனால், வாழ்க்கையுடன் சார்ந்துவரும் வருத்தங்கள் எதனையும் மனதில் தக்கவைத்துக் கொள்ளும் குணத்தை இவரிடம் கண்டுகொள்ள முடிவதில்லை. தன்னுடன் பழகும் ஒவ்வொருவரது மனதிலும், தான் கண்ட நிறைவு-களை மட்டும் பேசுவதே இவருடைய அணுகுமுறையாக அமைந்திருந்தது. இதுவே இவருக்கும் உலகுக்குமிடையிலான தொடர்பு நிலையாகவும் இருந்தது.

ஒரு காலத்தில் இப்படித்தான் எனக்கும் கருணாவிற்குமான உறவுகள் தொடர்ந்து கொண்டுவந்தன. எனது திருமணத்திற்குப் படப்பிடிப்பாளராக மட்டும் வராமல், திருமணத்தை வழமையான சினிமா பாடல்கள் அற்ற மெல்லிய இசையுடன் புதுவிதமாக நடத்தி முடித்த கருணா இன்று இல்லை! ஆனால், நான் இருக்கின்றேன்! முன்னரெல்லாம் தூக்கம் தொலையும் இரவுகளில் கருணாவும், நானும் விடியும்வரை பேசிக்கொண்டிருப்போம். இப்போதும் கருணா பற்றிய நினைவுகளாலும், அவரது இல்லாமையினாலும் என் தூக்கம் தொலைகின்றது. கருணாவோடு பேச விரும்பினாலும் மறுமுனையில் கருணா இல்லை என்றாகிவிட்டது. கருணாவுடன் சேர்ந்து வேலை செய்யவென பலவிடயங்கள் காத்துக்கிடக்கின்றன. காலத்தை நான் தான் வெல்ல மறுத்துவிட்டேன்.

“நாடக மேடைகள் யாவும் உனது உயிர் துடிப்போடு வாழ்வது தெரிகின்றது. உன் ஓவியங்கள் உயிர் கொண்டு நடமாடுவது புலனாகின்றது. உன் பிராணன் பிரிந்து போகவில்லை. அது தனித்தன்மையுடனும், உயிர்ப்போடும் வாழ்ந்து உன் இருத்தலை நிலைநிறுத்துகின்றமை தெரிகின்றது”



*rajmohan@thaiveedu.com*

# கருணா இல்லாத கனடா




எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. கருணாவைப்பற்றி, அவர் ஒரு மிகச்சிறந்த ஓவியர் என்று முதன்முதலாகக் கேள்விப்பட்டது 2000ம் ஆண்டு டிசம்பர் மாதம். வத்தளையில் நாங்கள் புதிதாகக் கட்டிக் குடிபுகுந்திருந்த வீட்டுக்கு அப்போதுதான் முதன் முதலாக் கனடாவிலிருந்து வந்திருந்தார் கவிஞர் சேரன். 'உங்கள் வீட்டு வரவேற்பறையில் அலங்கரிக்கவென அங்கிருந்து கொண்டுவந்தது' என்று கூறி சட்டகமிடப்பட்டுப் பொதிசெய்யப்பட்ட ஓவியம் ஒன்றை என்னிடம் கையளித்தார். ஆச்சரியமும் ஆர்வமும் பொங்க அதைத் திறந்து பார்த்த நான் அடக்கமுடியாத ஆவலுடன் 'அழகான ஓவியம்... யாருடைய ஓவியம் இது' என்று கேட்டேன். 'உங்களுக்கு அவரைப்பற்றி முன்பே சொல்லியிருக்கிறேன். கனடாவில் வசிக்கும் என்னுடைய அன்புக்குரிய நண்பர் கருணாவின் ஓவியம் இது' என்று அவர் சொல்லும் போதே எனக்கு ஞாபகம் வந்துவிட்டது. சரிநிகர் பத்திரிகை தொடங்கியபோது, அதற்குரிய சரிநிகர் என்ற தலைப்பை சேரன் தான் எழுதியிருந்தார். பின்னர் எமக்கு அதை ஓஃப் செற் அச்சு வசதிக்கேற்ற விதத்தில் டிஜிற்றல் வடிவில் கனடாவில் தனது நண்பர் ஒருவர் மூலம் செப்பனிட்டுத் தந்தபோது அதை செய்தவர் கருணா என்று சொல்லியிருந்தார். ஆனாலும் அவர் ஒரு ஓவியர் என்பதை நான் அறிந்திருக்கவில்லை. அசையும் நீரின் அடியிலிருந்து வருவதுபோல் தோன்றும் மெல்லிய வெளிர் நீலமும் மென்சிவப்பும் கலந்த நிறங்களிலாலான கோலங்களைக் கொண்டதாக இருந்த அந்த ஓவியத்துக்கு எந்தத்தலைப்பும் இடப்பட்டிருக்கவில்லை. அது வெளிப்படுத்தும் அர்த்தம் என்ன என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஓவியர் அதற்கு இட்ட பெயர் 'வாழ்க்கை' (Life) என்று சேரன் தெரிவித்தபோதும் எனக்கு அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை, ஆயினும் அழகாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு அதை எமது வரவேற்பறையில் தொங்கவிட்டேன். சேரன் நகைச்சுவையாக 'வாழ்க்கை'யைப் புரிந்து கொள்வது ஒன்றும் அவ்வளவு இலேசான விடயமல்லவே விக்கி'' என்று சொன்னது இப்போதும் ஞாபகத்தில் இருக்கிறது.

எமது வீட்டுக்கு புதிதாக வரும் ஒவ்வொருவரும் அந்த ஓவியத்தின் முன்னால் சில கணங்கள் நின்று பார்த்துவிட்டு 'நல்லாயிருக்கு, என்ன இது' என்று கேட்பதும் அவர்களுக்கு 'வாழ்க்கை' என்று சொல்வதும், அவர்கள் புரியாமல் விழிக்கும்போது. நானும் சேரன் சொன்னது போலவே வாழ்க்கையைப் 'புரிந்துகொள்வது அவ்வளவு இலகுவானதல்ல' என்று சொல்வதும் பின்னாளில் அடிக்கடி நடக்கும் விடயங்களாகிப் போய்விட்டன. அப்போதெல்லாம் முகம்தெரியாத கருணா பின்னர் நமக்கெல்லாம் தெரிந்த ஒருவராகிவிட்டார். பின்னர் அவர்பற்றிப் பல விடயங்களை கனடா வருவதற்கு முன்பாகவே சேரன் மூலமாக நான் தெரிந்து வைத்திருந்தேன்.

2013 ஜூனில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வந்து சேரனது இல்லத்தில் இறங்கிய இரண்டொரு நாட்களில் ஏற்கனவே கனடாவுக்குப் புலம்பெயர்ந்திருந்த எனது வேறும் சில நண்பர்களுடன் கருணாவும் எங்களைச் சந்திக்கவென்று அங்கு வந்திருந்தார். கருணாவுக்கு சேரன் என்னை அறிமுகம் செய்து வைத்த அந்த நேரத்திலிருந்து, ஏற்கனவே நீண்டகாலம் பழகிய ஒரு நண்பரைப் போல இயல்பாகவே என்னுடன் உரையாடத் தொடங்கிவிட்டார். சரிநிகர் எழுத்து, எமது வீட்டில் தொங்கும் அந்த ஓவியம் என்பவை தொடர்பாக ஆரம்பித்த அந்த அன்றைய உரையாடல் நிகழ்ந்த ஒருசில மணி நேரத்துக்குள்ளேயே, அவர் வெறுமனே ஒரு வரைகலை நிபுணரோ அல்லது ஓவியரோ மட்டுமல்ல, பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட ஒரு ஆழமான பல்துறைக் கலைஞர் என்ற மனப்பதிவை என்னிடம் ஏற்படுத்தி விட்டிருந்தார். இலக்கியக்கூட்டங்கள், நண்பர்களுடனான சந்திப்புக்கள் என்பவற்றின் போதெல்லாம் பின்னர் தொடர்ச்சியாகச் சந்திக்கும் வாய்ப்புக்கள் கிடைத்தன. அப்படிக்கிடைக்காத நேரங்களில் தொலைபேசியில் உரையாடும் வாய்ப்புக்கள் கிடைத்தன. அப்போதெல்




லாம் அவர் 'இந்தக் காலம் உங்களுக்கு நிறைய நேரமிருக்கிறது. பிறகு வேலை வீடு என்று நீங்கள் பிஸியாகிவிடுவீர்கள். கனடாவில் பார்க்க நிறைய இடங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பார்க்கத் தவறிவிடாதீர்கள். அதிலும் நீங்கள் கட்டாயம் பார்க்க வேண்டியவை' என்று சொல்லி பல இடங்கள் பற்றிக்குறிப்பிடுவார். ஒரு சாதாரண உல்லாசப் பயணிக்கு இடம் காட்டுவது போலல்லாமல், கனடாவின் அடையாளங்களை, அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை, கலை பண்பாடு சார்ந்த அவற்றின் தனித்துவங்களை என்று ஒவ்வொரு சந்திப்பின் போதும் அவருடன் பேச எனக்கு நிறைய விடயங்கள் இருக்கும்,.

பிறகு நாம் ஸ்காபரோவில் வசிப்பதற்காக வந்தபின் அவர் எங்களது இல்லத்துக்கு அடிக்கடி வந்துபோகும் ஒரு நெருக்கமான குடும்ப நண்பராக மாறிவிட்டிருந்தார். ஒரு தொலைபேசி அழைப்பிலேயே, நாட்டுக்குப்புதிதாக வந்தவர்கள் என்ற முறையில் வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்குதல் போன்ற சின்னச்சின்ன தேவைகள் முதல் வேலை தேடுதல் வரை எமக்கு ஏற்படும் எல்லாவிதமான தேவைகளுக்கும் எங்களுக்கு முன்பே தெரிந்த பல நண்பர்கள் முன்வந்து உதவியது போல கருணாவும் தனக்கு முடிந்த அளவுக்கு உதவுபவராக இருந்தார். அதைவிடவும் முக்கியமாக, கனடியப்பத்திரிகைகள் சஞ்சிகைகள், அவை ஒவ்வொன்றினதும் பலம், பலவீனம் பிற ஊடகங்கள், கனேடிய அரசியல், கனேடிய பூர்வகுடிகள் தொடர்பான வரலாறு, இங்குள்ள படைப்பாளிகள் என்று உரையாடவும், கற்றுக் கொள்ளவும், தளராமல் ஆலோசனையும் வழிகாட்டலும் செய்யும் ஒருவராக கருணா அளவுக்கு எனக்கு உதவியவர்கள் வேறுயாரும் இல்லை என்று சொல்லவேண்டும்.

ஸ்காபரோவுக்கு நாம் வந்தபின்னான மூன்று ஆண்டுகள் எங்கள் வீட்டில் கருணா இல்லாத ஒரு நண்பர்கள் சந்திப்போ அல்லது ஒரு இராவிருந்தோ நடந்ததில்லை எனலாம். அப்போதெல்லாம்

- எஸ்.கே. விக்னேஸ்வரன் -

அவருடனான சந்திப்புகள் மிகவும் ஆர்வமும் மகிழ்ச்சியும் அனுபவங்களைப்பகிர்ந்து கொள்ளும் திருப்தியும் அளிப்பவையாக இருந்தன. தாய்வீடு இதழில் நான் எழுதத் தொடங்கியபின் தாய்வீடு சம்பந்தமாகவும் அதன் எழுத்துக்கள் சம்பந்தமாகவும், எங்களுக்குள் தொடர்ச்சியான உரையாடல்களும் விவாதங்களும் நடக்கும். தாய்வீடு பத்திரிகையின் வடிவமைப்பு, அதில் வரும் உள்ளடக்கங்கள், அதன் தலைப்புக்கட்டுரை, நேர்காணல்கள் என்று ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் அவர் தமது தெரிவுகள் பற்றிய தெளிவுடன் இருந்தார். என்னுடைய பார்வையில் அதில் இன்னமும் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் என்று நான் சொல்பவை பற்றி தொடர்ச்சியாக அவர் விவாதிப்பார். ஆயினும் நான் குறிப்பிடும் பல விடயங்களுக்குரிய பத்திரிகையாகவல்ல தாம் தாய்வீடு பத்திரிகையை கொண்டுவர விரும்புவது என்பதில் அவர் தெளிவாக இருந்தார். நேர்த்தியாக, தகவற் பிழை அற்றதாக, பெருமளவான வாசகர்களைச் சென்றடையக் கூடியதாக விடயங்கள் எழுதப்பட வேண்டும் என்பதில் அவர் மிகவும் கறாராக இருப்பார். மாற்றுக் கருத்துக்களை உதாசீனம் செய்யாது கேட்கும் அதே வேளை தான் என்ன செய்கிறேன் என்பதில் அவர் தெளிவாகவும் இருக்கிறார் என்பது எனக்கு அவரில் பிடித்த ஒரு முக்கியமான பண்பு.

வசதியான வார இறுதி நாட்களிலெல்லாம் எங்கள் வீட்டில் நாம் சந்தித்துக் கொள்வோம் அப்படிச்சந்தித்த ஒரு நாள் நிழற்படக் கலை தொடர்பான உரையாடல் ஒன்று ஆரம்பமானதைத் தொடர்ந்து அவர் தனது தொலைபேசியில் சேமித்து வைத்திருந்த தனது புகைப்படங்களை எங்களுக்கு காட்டத் தொடங்கினார். கிட்டத்தட்ட நிழற்படம் எடுத்தல் பற்றிய ஒரு சுவையான விளக்கமளித்தலாக அமைந்த அந்த உரையாடல் நடந்த அன்றுதான், உண்மையில் அந்தக் கலையின் பின் இவ்வளவு விடயங்கள் இருக்கின்றன என்பதை நான் தெரிந்துகொண்டேன். நிழற்படம் எடுப்பதில் ஆர்வமுள்ள எனது மகள்மார் இருவரும் ஆர்வமுடன் அவர் சொல்லும் ஒவ்வொன்றையும் கேட்டுக்கொண்டிருந்தனர். அந்த நாள் நள்ளிரவின் பின் அவர் விடைபெறும் போது அடுத்தவாரம் எங்கள் வீட்டில் எங்களை வைத்து ஒரு 'ஃபோட்டோ சூட்' செய்ய வருவேன், தயாராக இருங்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றார். ஆனால் அவர் செல்லும் போது நானும் அவரும் இருந்த 'சந்தோசமான' நிலை காரணமாக, அந்த 'ஃபோட்டொ சூட்' நடக்குமென்று எங்கள் வீட்டில் யாரும் - அடுத்தவாரம் சொன்னபடி தான் வரப் போவதாக கருணா அறிவிக்கும் வரை - நம்பியிருக்கவில்லை. சொன்னபடி அவர் தனது அனைத்துக் கருவிகளுடனும் வந்து சேர்ந்தபோது தான், உண்மையிலேயே அது ஒரு பெரிய வேலை தான் என்பது எனக்குப் புரிந்தது. அந்தப் 'படப்பிடிப்பு' முடிந்து சென்று இரண்டொரு நாட்களில் எங்கள் ஒவ்வொருவரதும் ஒவ்வொரு படப் பிரதியை எங்களுக்கு அனுப்பியிருந்தார், அருமையான படங்கள். ஆனால் மீதிப்படங்களை அவர் அனுப்பவில்லை. ஏன் அனுப்பவில்லை என்று கேட்ட போது, என்ன அவசரம் ஆறுதலாக செய்து தருகிறேன் என்றார். அதற்கான பணம் பற்றியும் நான் கேட்டேன். அதற்கு கருணா சொன்ன பதில்: 'இது நான் கேட்டு எடுத்தது. உங்கள் வீட்டில் படம் எடுக்க வேண்டிய சந்தர்ப்பம் வரும்தானே, அப்போது அதைப்பற்றிக் கதைப்போம்'.

இன்னொரு சிலநாட் கழித்து நான் படங்கள் பற்றிக் கேட்டபோது, 'படங்களை என்ன நான் செத்ததுக்குப் பிறகு போட வைச்சிருக்கிறியளோ' என்று கிண்டலாகக் கேட்டேன். கருணா, ஓம் அதுக்கும் என்னட்டை படம் இருக்கு. எடுத்திட்டன். உங்களை மட்டுமல்ல நிறையப் பேற்றை வச்சிருக்கிறன். ஆனால் மற்றப் படங்களை தாறன் கொஞ்சம் இப்ப பிஸி அதுதான். என்று சொன்னார். மெல்லிய சிரிப்புடன்.

காலச்சுவடு வெளியீடாக வெளிவந்த ஔவையின் 'எதை நினைந்தழுவதும் சாத்தியமில்லை' கவிதைத் தொகுப்புக்கான அட்டைப்படமாக உங்களது படம்தான் வரவேணும் என்று சொன்னபோது சந்தோசமாக அதை வடிவமைத்துத் தந்தார். பின்னர் மார்க்கத்தில் நடைபெற்ற அவரது ஓவியக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஓவியங்களில் அந்த அட்டைக்கான படமும் பெரிய அளவில் காட்சிப்படுத்தப் பட்டிருந்தது. அதை நாம் வாங்குவதாக சொல்லிவிட்டு வந்தோம்.

2017 பெப்ரவரி 26 அன்று ஒரு கடும் குளிர் வேளையில் வீடு தேடிவந்து அந்த ஓவியத்தை நாங்கள் வசித்த அப்பார்ட்மென்ற் வாசலில் வைத்து தந்துவிட்டுச் சென்று தனது முகநூலில் எனக்குக்கையளித்த படத்தையும் வெளியிட்டிருந்தார்.

என்னி இரண்டு வருடங்கள். இப்போது அவர் இல்லை. நான் மொன்றியல் போனால் கியுபெக் போனால் அல்லது வேறெங்கு போனாலும், அதைப்பாருங்கள், அங்கே இதைப்பாருங்கள் என்று சொல்வது மட்டுமல்ல, அவை பற்றிய விபரங்களை கூகிளிலிருந்து தேடி எடுத்து எனக்கு அனுப்பியும் வைப்பார். நான் நிற்குமிடத்துக்கு 'கோல்' பண்ணி அதைப் பார்த்தீங்களா? எப்பிடியிருக்கு? என்று அக்கறையோடு கேட்டு எனது சந்தோசத்தைப் பார்த்து தானும் சந்தோசமடையும் அந்தக் கருணா இன்று இல்லை. கருணா இல்லாத கனடாவை நினைக்க, கனடாவுக்கும் எனக்குமான உறவை வளப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய கருணா இல்லாத கனடாவை நினைக்க நினைக்க, இவ்வளவு அன்பும் மதிப்பும் வைத்திருந்த நாட்டைவிட்டு இவ்வளவு விரைவாக ஏன் சென்றான் என்ற கேள்வி ஒரு மலையாக என் நெஞ்சில்.



vickneaswaran.sk@thaiveedu.com

# கலையுலகின் நித்திய ஜீவிதம் கருணா




- ந. இரவீந்திரன் -

என்னில் இணைந்த நினைவாகத் தொடர்கின்ற பல நண்பர்களுடனான முதல் சந்திப்பு எதுவென எவ்வளவுதான் தேடிய போதிலும் கண்டுணர இயலாத ஆழம் பலர் தொடர்பில் உண்டு கருணா வின்சென்ற் உடனான தொடர்பு ஏற்பட்ட தருணம் மறக்கவியலாததாக அமைந்தது. தொழில் முறை புகைப்படக் கலைஞராக கனடாவில் 2013ம் ஆண்டு ஜுன் மாதம் சந்தித்து உரையாடிய முதல் அனுபவத்தில் அவருடைய சமூக அக்கறையை கண்டுணர இயலுமாகி இருந்ததே அல்லாமல் அவரது கலைத்திறன் பரிமாணங்கள் பற்றி தெரிந்து கொள்ள வாய்ப்பிருக்கவில்லை. தன்னை எடுத்த எடுப்பில் வெளிப்படுத்திக் கொள்கிற அவசரம் ஏதுமற்ற தேர்ந்த கலையுள்ளத்துடனே உரையாடிச் சென்றார்.

தொடர்ந்தும் நட்புணர்வோடு கனடாவைக் கண்டு தரிசிக்க அவசியமானவற்றைக்காட்டிச் செல்கிற சந்தர்ப்பங்களிலும் புகைப்படங்களாய் அந்த தருணங்களைப்பதிவதிலும் சமூக அரசியல் பண்பாட்டு தளங்கள் சார்ந்த உரையாடல்களிலும் ஈடுபட்டாரே அன்றித் தனது ஓவிய ஆற்றல் பற்றி எந்த அடையாளத்தையும் காட்சிப்படுத்தவில்லை எனது ஈடுபாடு அதன்கண் இல்லை என்பதால் வலிந்து அதனுள் நுழைப்பதற்கு அவசரப்படவேண்டாம் எனக் கருதியிருக்கக் கூடும். சேகர் வீட்டில் சுவரில் தொங்கிய ஓர் ஓவியத்தில் நான் லயித்திருந்தபோது சேகர்தான் கருணாவின் கை வண்ணம் அது எனக்கூறி அவருடைய ஆற்றல் குறித்து விரித்துரைத்தார். கடந்த வருடம் ஜுலை மாதம் சேகர் வீட்டில் இரவு உணவு முடித்து உரையாடிக்கொண்டிருந்தபோது, தீவிரமான ஒரு விவாதத் தொடரை இடைநிறுத்தி சேகரின் மகளுடைய ஓவிய முயற்சி ஒன்றைக் கண்டு அவருடனான கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையில் கருணா ஈடுபடத் தொடங்கிய போது அந்தக் கலையுள்ளம் பற்றிய நேரடி அனுபவம் எனக்கு கிட்டியிருந்தது.

அவருடைய அந்தக்கலையுணர்வின் பரிமாணங்களில் இங்கு நான் இறங்க முயலவில்லை. அதுவாக இயங்கிய அவருள்ளம் சமூக ஊடாட்டத்துடன் நட்புப் பாராட்டி எனக்கு காட்டி இருந்த புதிய தடங்கள் குறித்து ஓரிரு நினைவுகளை இங்கு மீட்பது அவசியம். சேகர், கருணா, தாய்வீடு டிலிப்குமார் ஆகியோர் ரொறன்ரோவில் உள்ள பூர்வகுடிமக்களது அருங்காட்சியகம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றிருந்தனர். ஒவ்வொரு நண்பரும் தத்தம் நோக்கில் அதனை கண்டுணர வழிப்படுத்தியது போல கருணா பூர்வகுடி மக்களின் கலை உணர்வூடாக அவர்களது வாழ்வை தரிசிக்க ஆற்றுப்படுத்தினார். மக்கள் கலையின் அழகியலைத் தனது நவீனத்துவக் கோட்பாட்டு விருத்தியோடு கையாளுகின்ற கலைப்பாணியை இதன் வாயிலாக அவர் வெளிப்படுத்துகிறார் என உணர முடிந்தது(அந்த அருங்காட்சியகம் அடுத்த வருடத்தில் மூடப்பட்டு விட்டது என சேகர் கூறியிருந்தார் இவர்கள் அக்கறையுடன் நண்பர்களை அழைத்துச் சென்று காட்டுவதை போலப் பலரும் ஆர்வம் காட்டாத காரணத்தால் நட்டத்துடன் கொண்டியக்க இயலாமல் மூடப்பட்டுவிட்டதான செய்தி துயர் மிகுந்தது).

அவர்கள் தெரிவுசெய்து காட்டுவது தவிர்ந்து பார்க்கவேண்டியதான என்னுடைய விருப்பம் ஏதும் உள்ளதா எனக் கேட்டபோது நோர்மன் பெத்யூன் நினைவில்லத்தைப் பற்றி கூறியிருந்தேன். ஒரு முழுநாளை அதற்காக சேகர் எங்களுக்கு ஒதுக்கிய போது கருணாவும் எங்களுடன் இணைந்து கொண்டார். வைத்தியத்துறையில் பல சாதனைகளைப் புரிந்து கண்டுபிடிப்புகளின் நாயகராகவும் துலங்கிய நோர்மன் பெத்யூன் பிறந்து வளர்ந்த இல்லம் ஒன்ராறியோ மாகாணத்திலேயே உள்ளது.

ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிராக சீன மக்கள் முன்னெடுத்த போராட்டத்தில் செஞ்சேனை வீரர்களுடன் பயணித்து வைத்தியப் பணியாற்றித் தனது காயத்துக்கு உரிய மருத்துவம் பெற இயலாது மரணத்தை தழுவிய நோர்மன் பெத்யூன் மக்கள் சீனத்தால் பெரிதும் மதித்துக் கொண்டாடப்படுகிறவர். கனடாவில் அவரது இல்லம் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிக்கான வாழ்வியலையும் அன்றைய வைத்திய



நுட்பங்களையும் காட்டும் வகையில் அருங்காட்சியமாகத் திகழ்கிறது. அன்றைய நாள் எமது குடும்பம் அந்த வீட்டில் 'வாழ்ந்த' கணங்களை கருணாவின் புகைப்படக் கருவி அற்புதமாகப் பதிவாக்கி நிரந்தரப்படுத்தித் தந்துள்ளது.

அந்தப் பயணிப்புக்குரிய அரசியல் - சமூக உணர்வலையுடன் இணைந்த சம கால எமது வாழ்நிலைச் செல்நெறிகள் குறித்த விவாதம் மிக ஆரோக்கியமாக அமைந்திருந்தது. அவையனைத்தும் விரிவாக மீட்டுப்பார்க்க உகந்தவை. இங்கு பதச்சோறாக ஒரு அம்சம் மட்டும். எழுபதாம் ஆண்டுகளின் முற்போக்கு இயக்க அரசியல் எழுச்சியில் இயக்கம் கொண்டிருந்த எனக்கு, எண்பதாம் ஆண்டுகளில் தமது பதின்ம வயதைக்கடந்து சமூக அக்கறையுடன் உலகைப் புரிந்துகொண்ட கருணா, சேகர் ஆகியோருடைய கருத்து நிலைகளுடன் ஏற்கனவே விவாதப் பரிச்சயம் உண்டு. முற்போக்கு இயக்கம் தேசிய இனப்பிரச்சினையைச் சரியாக அணுகவில்லை என்ற விமர்சனம் பலரிடம் உள்ளதைப் போன்று அவர்களிடமும் காணப்பட்டிருந்தது.

கூடவே, முற்போக்கு இயக்கம் களமாடிய சாதியத் தகர்ப்புப் போராட்ட எழுச்சியின் பதிவுகள் தொடர்பிலும் கருணா கேள்விகளை எழுப்பியிருந்தார். குறிப்பாக டானியலின் நாவல்கள் சார்ந்தவை அவை. பஞ்சமர், பஞ்ச கோணங்கள் போன்ற நாவல்களில் வெள்ளாளப் பாத்திரங்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் போராட்டத்திற்கு வழிகாட்டுவது போல டானியலால் சித்திரிக்கப்பட்டிருப்பது எவ்வகையில் சரியாகும் என்ற கேள்வி தொடர்பில் கருணாவின் தர்க்கங்கள் விரிந்திருந்தன. தமிழகத்தின் பல தலித்திய விமர்சகர்களுங்கூட இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளனர். அந்தப் பாத்திரங்கள் எவையும் டானியலின் கற்பனைகள் அல்ல. வாழ்ந்து செயற்பட்டவர்களையும் உண்மைச் சம்பவங்களையும் அவர் படைப்பாக்கி இருந்தார். இந்த விடயங்களை கருணாவுடன் விவாதித்த போது எமக்கான வெளிப்பாட்டு வடிவங்கள் குறித்த கற்றல் தெளிவை முற்போக்கு அணியினர் பெற்றாக வேண்டும் எனும் புரிதல் எட்டப்பட்டிருந்தது.

ஐரோப்பாவில் வாழும் நண்பர்கள் கூடக் கூறுகின்ற ஒரு விடயம், கனடாவில் உள்ளவர்கள் தங்களிடம் வருகின்ற நெருங்கிய உறவினர்களுக்காகவும் நேரம் ஒதுக்க இயலாமல் வாழ்வைத் தொலைத்து பகட்டாக வாழ்வதாகப் பிறருக்குக் காட்ட ஓடிக்கொண்டு இருக்கிறார்கள் என்பது. அத்தகைய சூழலில் பல வேலைப்பளுக்களின் மத்தியிலும் இந்த நண்பர்கள் தமது நேரத்தை ஒதுக்கி இருந்தனர் மக்கள் நல நாட்டத்துடன் சமூக மாற்றத்தை வேண்டி நிற்கும் மனப்பாங்கு சார்ந்தது இப்பண்பு. மக்களை நேசித்த, விடுதலைப் போராட்ட தடங்களை சரியாக வெளிப்படுத்த வேண்டும் என்ற அக்கறையைத் தனது உயிர் மூச்சாகக் கொண்டிருந்த, அதன் வெளிப்பாடாகத்தூரிகையால் பேசிச் சென்ற மனிதத்தின் ஒரு பதிவு கருணா வின்சென்ற் தொடர்ந்தும் மக்கள் உணர்வெழுச்சிகளில் உரையாடியபடி வாழ்வார்.




raveendran.n@thaiveedu.com

# கலை வாழ்வைத் துலங்கவைத்த கலைஞன்




மொழிபெயர்ப்புக் கற்கைநெறியின் வழி நடத்துதலுக்காக பல்வேறு பல்கலைக் கழகங்களில் நடைமுறைகளுடாக பயிற்சி பெறும்முகமாக கனடாவுக்கு முதன்முதலில் சென்ற வேளை ஈழத்து இலக்கிய நண்பர்களின் தரிசனம் ரொறன்ரோவில் கிடைத்தது. மிகவும் அன்போடு பழகிய பழைய முகங்கள் இரண்டு. ஒருவர் ஈழத்தில் எங்கள் காலத்து இளங்கவிஞனாக பரிணமித்தவர், ஈழத்துப்போர்க்கால அவலங்களை, அரசியல் குரலை ஓங்கி ஒலித்தவர். தற்போது யோர்க் பல்கலைக் கழக சமூகவியல்துறைப் பேராசிரியர் உருத்திரமூர்த்தி சேரன். மற்றயவர் மாணவரும் முன்னைநாள் யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக கலை கலாசார மன்றத்தின் தலைவரும் ‘தடம்’ சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினரும், வவுனியா கலை இலக்கிய வட்ட செயற்பாட்டாளருமாகிய திரு. தம்பிராசா விஜயசேகர், இவர்களோடு ‘காலம்’ சஞ்சிகை ஆசிரியர் திரு.செல்வம் அருளானந்தம் மற்றும் எமது அன்புக்கு பாத்திரமாக தொடர்ந்த அன்பர் ஓவியர், புகைப்பட பிடிப்பாளர் திரு.கருணா வின் சென்ற்.




ஒரு புகைப்படப்பிடிப்பாளராகவே எனக்கு அந்த 2013 கனடாப் பயணத்தின் போது அறிமுகமாகி ‘தாய்வீடு’ பத்திரிகையில் எனது நேர்காணலின் படங்களை அழகுற எடுத்து பதிப்பு அழகியலுக்கு ஏற்ப இதழ் அமைப்பில் கவனம் செய்து பதிப்பித்து நேர்காணலின் கருத்துக்களுக்கு ஒரு கவர்ச்சியையும் ஏற்படுத்தியிருந்தார். அக்கவர்ச்சியின் மந்திரம் ஏது என ஆராய்ந்ததில் ஓவியர் கருணாவின் அழகியல் பார்வையின் பதிவுதான் அது என சேகர் மூலம் புரிந்துகொண்டேன்.

இந்த மேற்படி புரிதல் நேரிடையான அனுபவமாக 2017ம் ஆண்டு கனடா பயணத்தில் கிடைக்க வழிகோலியது. கருணாவுடன் சேகர் ஏற்படுத்திய சந்திப்புக்கள், ‘தாய்வீடு’ சமூகத்தின் அனுசரணையுடன் தமிழ் ஆய்வு மையத்தின் அழைப்பின் பேரில் கிடைத்த அடுத்த பயணத்தில் கருணா எனும் ஓவியரின் பிரமாண்டமான கலைப் பார்வையை தரிசிக்க முடிந்தது. இடைக் காலத்தில் அவ்வப்போது கனடாவில் இருந்து சேகர் மூலம் கிடைக்கும் ‘தாய்வீடு’ பத்திரிகை ஊடாக கருணா அவர்களது இதழியல் அமைப்புக்கலை பற்றி சற்று அறிய முடிந்தது. பின்னர் நேரடி சந்திப்புகளில் அதை அனுபவிக்கவும் நேர்ந்தது. ‘தாய்வீடு’ குழுமத்தின் நாடகவிழாவின் போதும், Art Gallery of Ontarioவில் ஓவியங்களைப் பார்வையிட்ட போதும் பின்னர் Alexander Graham Bellன் வீட்டைப் பார்க்கச் சென்ற வேளையிலும், இரண்டு பாலங்கள் இணைக்கப்பட்டும் திறக்கப்பட்டும் கப்பல்களில் இயக்கத்திற்கும் வழிவிடும் கனடாவின் நீர்ப்பாலம் ஒன்றை பார்வை இட்ட போதும் கருணா அவர்களின் தீட்சண்யமான கலைப்பார்வை, நுணுகி ஆராயும் திறன் ஆழமான மனித வாழ்வின் தரிசனம் என்பவற்றை அனுபவிக்க முடிந்தது.

அருகிருந்து வாகனத்தில் செல்லும் போதும் ‘தாய்வீடு’ பத்திரிகை இதழ்களைப் புரட்டிக்காட்டி எவ்வாறு எப்படிப் படங்கள் இதழ் அமைப்பில் வைக்கப்பட வேண்டும், தலைப்புக்களின் எழுத்து அளவுகள், குறுக்கு வெட்டில் வைக்கப்பட வேண்டிய செய்தியின் அளவுமட்டமும் அமைப்பும், படங்கள் வைக்கப்பட வேண்டிய கோணம், உருவ அமைப்பு உள்ளடக்கம் என்பவற்றின் இடங்களை துல்லியமாக எடுத்துரைத்தார்.




கலை இரசனைக்கு முக்கியமாக கலைப் பார்வை அவசியம் ஆகும். அத்தகைய காத்திரமான கலைப்பார்வை பெறுவதற்கு ஒரு படிப்பு அவசியம். ஒரு வழிகாட்டல் அவசியம். ஆரம்ப காலங்களில் சூழல் தரும் கலை இலக்கியப் பார்வை, கல்வி, வாசிப்பு, பார்வையிடல் வழிகாட்டுவோர் என்பன போன்ற காரணிகளால் வளப்படுத்தப்படுகின்றது. புடம் போடப்படுகின்றது. வீட்டுச்சூழலின் அழகியல், உறவுகளின் இரசனை, பின்னர் நட்பு வட்டத்தின் கலைப்பார்வை ஆசிரிய உலகின்

**- கந்தையா ஸ்ரீகணேசன் -**

வழிகாட்டல் என்பவற்றால் மெருகூட்டப்பட்ட பார்வை என்னளவில் பேராசிரியர் மௌனகுருவினால் பெருமளவு வளர்க்கப்பட்டது. தொடர்ந்து குழந்தை சண்முகலிங்கம். அலை ஆசிரியர் யேசுராசா, கவிஞர் சேரன், நாடகக் கலைஞர் சிதம்பரநாதன், எழுத்தாளர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், ஓவியர் ஆசை இராசையா எனப் பல கலை இலக்கிய கல்வி உள்ளங்களால் வழிகாட்டப்பட்டு வளர்க்கப் பட்டது. தொடர்ந்த இந்த ‘கற்கும் போக்கில்’ கருணா முக்கிய இடம் பெறுகிறார். ஆர்ட் கலரியில் (Art Gallery) ஒவ்வொரு காலகட்ட ஓவியர்களின் வார்ப்பு பாணி, வடிவம், செல்வாக்குச்செலுத்திய அம்சங்கள் எனப் பலவற்றை விளங்கப்படுத்தியிருந்தவை நினைவுக்கு வருகிறது. ஈழத்தில் மாற்கு மாஸ்ரரின் ஓவியங்களை இரசிக்க பழகி அவர் மாணவிகளின் ஓவிய கண்காட்சி பற்றியும் (வாசுகி, அருந்ததி...) கட்டுரை எழுதியிருந்தேன். பின்னர் ஆசை இராசையாவுடன் பழகி அவரது பார்வை பற்றியும் பரிச்சயம் கொண்டிருந்தேன்.

இடையில் நாடகக்கலைஞர் எஸ்.ரி.அரசு அவர்கள் கூறியிருந்த ‘புகைப்பட எடுப்பு’ பற்றிய விரிவுரையையும் மனதில் கொள்ள வேண்டும். எந்த முகத்துக்கு எந்தக் கோணத்தில் எடுத்தால் நல்லது என்று எனது முகத்துப் படங்களை எடுத்துக் காட்டி விளக்கியிருந்தார். அப்படியே ஓவியர் ரமணி வரையும் அட்டை ஓவியங்களின் சிறப்பையும் இரசனையாக எடுத்துரைத்திருந்தார். பல்கலைக்கழக மற்றும் திருமறைக் கலாமன்ற ஓவிய சிற்பக் கண்காட்சிகள் ஊடாகவும் கலாநிதி சனாதனனின் ஓவியம், கட்டுரைகள் ஊடாகவும் நவீன ஓவியங்கள் பற்றிய அறிவை சற்றுப் பழகி இருந்த நிலைமையில் கருணாவுடன் கனடாவில் பழகிய வேளைகளில் அவர் கொடுத்த விளக்கங்களும் வியாக்கியானங்களும் ஓவியங்கள், புகைப்படங்கள் அவற்றின் ‘வைப்பு முறைமை’ பற்றி எல்லாம் சரியாக அறிய முடிந்தது. மேலும் நாடக விழாக்களின் போதும், பயிற்சிகள் நடைபெறும் போதும், ஒளி அமைப்பு மேடை ஒழுங்கில் கவனம் கொள்ள வேண்டிய அம்சங்கள் பற்றி நண்பர்களுடன் விவாதிப்பார். பின்னர் விழா பற்றிய பதிவுகள் ‘தாய்வீடு’ மற்றும் சஞ்சிகைகளில் (காலம்) வெளிப்படுத்தும் போது அவற்றின் அமைப்புக்களில் சிறந்த கரிசனை கொள்வார்.

நிறைவாக, அவர் குறிப்பிட்டு வந்த ஒரு விடயம் இன்னும் மனத்தில் ஒலிக்கிறது. ஆமாம், அவர் எழுதிய ஓவியர்கள், மற்றும் ஓவிய இரசனை பற்றிய கட்டுரைகள் ‘தாய்வீடு’ மற்றும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த அவரது கலைசார்ந்த கட்டுரைகள் ஓவியங்கள் பற்றிய பரிச்சயத்துக்கு வழிகோலும் கட்டுரைகள்,இவைகளை தொகுத்து நூலாக்கினால் இளைய தலைமுறையினரும், தாயக தமிழ் வாசகர்களும் வாசித்து அறிய வழிகோலும் என நான் அங்கலாய்த்த போது அவர் அது பற்றி மிகவும் ஆசுவாசப்பட்டார். தனது கட்டுரைகளை மாணவர் விரும்பப் படிப்பார்களா எனக் கேள்வி எழுப்பினார். ஏற்கனவே ஓவியங்கள் பற்றி ஓரிரு கட்டுரைகள் எழுதிய அனுபவத்தில் கூறினேன். ‘தங்கள் கட்டுரைகள் ஓவியத்துக்கான பொறிமுறையுடன் கூடிய விளங்கங்களாக உள்ளன. நாங்கள் எழுதும்போது அந்தளவு விபரங்களை கொடுக்க எம்மிடம் அறிவு, அனுபவம் இல்லை. ஆகவே தங்கள் கட்டுரைகளை தொகுத்து நூலாக்குதல் மிகவும் அவசியம். எப்படி சுப்புடுவின் பார்வை இசை நடனத்துக்கு பொருந்துமோ, அப்படியே கருணாவின் பதிவு ஓவிய, புகைப்பட உலகுக்கு ஒரு புதிய தரிசனமாகும். ‘தாய்வீடு’ குழுமத்தினரும் நண்பர் டிலிப்குமாரும் கவனம் கொள்ள வேண்டிய அஞ்சலிச் செயற்பாடு அமரர் கருணாவின் ஓவியம் சார்ந்த பதிவுகளை தொகுப்பாக வெளிக்கொணர்வதே. அதுவே அவரது ஆத்ம சாந்திக்கு வித்திடும்.

shriganeshan.k@thaiveedu.com



# கருணா என்றொரு கலைஞன்: நினைத்துப் பார்க்கிறேன்




- ஞானம் லேம்பட் -

'கருக்கல் வழியில் காத்திருந்த எமக்குக் களத்து மேட்டைக் காட்டிய உங்களுக்கு எனது வாழ்த்துகள்' என்று தன்னை எனக்கு அறிமுகப்படுத்தினார், பாபு வீட்டில்.

அன்றிலிருந்து நேற்று விட்டுப்போகும் வரை என்னை உற்சாகப்படுத்தியவர்.

றோம் நகர் சென்று திரும்பிய பின் நீங்கள் கட்டாயம் போய் அங்குள்ள சிலைகளையும் சிற்பங்களையும் ஓவியங்களையும் பார்க்க வேண்டும் எனத் தூண்டியவர்.

கலையம்சம் நிறைந்த படங்களைப் பார்த்த உடனே சினிமாக் கொட்டகையிலிருந்தே தொலைபேசியில் அழைத்து அப்படங்களைப் பார்க்க வைத்தவர்.

மனித வாழ்வில் அவலங்களை விரசமின்றி, நெருடலின்றித் தூரிகையால் தூவி விட்டவர். அவரது ஓவியங்கள் கூறுபொருளுக் கேற்பக் குரலெழுப்பி, வலுவாக ஆடி ஓவியத்தின் உட்பொருளைக் கூறுவன. அவ்வோவியங்களின் நெளிவும், சுளிவும், கோடுகளும், வர்ணங்களும் பொருட்களும், அர்த்தங்களும் நிறைந்தவை.

கவனத்தை ஈர்த்து மனதை ஆக்கிரமிக்க வைக்கும் வலிமையானது அவரது ஓவியம். பல்வேறு உணர்வுகளைத் தந்து மனதைத் தத்தளிக்க வைக்கும் சில ஓவியங்களிலுள்ள ஒற்றை வரிகள் நிறைந்த அர்த்தங்களையும், நெருக்கத்தையும் தருவன.

ஓவியங்களை அர்த்தமுள்ளதாக்கி சமகாலப்பிரச்சினைகளை, உணர்வுகளை அதில் ஓடவிட்டு அவற்றை அர்த்தத்துடனும் தெளிவுடனும் வாழ்வியலோடு நெருக்கமாக அமைத்தவன். அவை மனித சமூகத்தின் அனுபவங்களை, மக்களின் துயர் நிறைந்த வாழ்வனுபவங்களைக் காட்டுவன.

முள்ளிவாய்க்கால் படுகொலை இரத்தமும் சதையுமாகக்காட்டப்பட்டது. உறவுகளை இழந்தவர்களின், உடலுறுப்புகளை இழந்தவர்களின் துயர் நிறைந்த அலறல்கள் அவரது ஓவியங்களிலிருந்து வந்தன.



குடம் ஒன்றைத் தலையில் தாங்கிய ஒரு பெண்ணின் ஓவியம். பெரும்பாலும் பெண் தெய்வங்களை வேண்டி ஆண்களால் ஆடப்பட்ட கரகாட்டம் (சக்திக் கரகாட்டம் அல்லது சாமிக்கரகாட்டம்) நாளடைவில் நாதஸ்வரம், தவில், உறுமி, சால்ரா, பம்பை ஆகியவற்றின் இசைக்கலவைக்கு பெண்கள் ஆடும் ஆடுகரகத்தை நினைவூட்டியது.

உலகியல் ரீதியாகவும், கலைரீதியாகவும் முரண்பாடுகளையும், பரிசோதனைகளையும் கண்டவராதலின் கலை பற்றிய தெளிவான கருத்தைக் கொண்டிருந்தார். இதனால்தான் என்னவோ 'கருஞ்சுழி' நாடக மேடையேற்றத்திற்கு ஒளியமைப்பின் இயக்குனராகக் கேட்ட போது அந்நாடகத்திற்கு ஒளியமைப்பே முதுகெலும்பு போன்றது. எனவே நீங்களே அதைச் செய்யுங்கள் என மறுத்தவர்.

கலைபற்றிய வாசிப்பும், அனுபவமும் நாடகங்களை விளங்கிக் கொள்ளவும், அதன் நுணுக்கமான கூறுகளை அடையாளங் கண்டு நாடக நிகழ்த்துகைக்கு நாடகத் தயாரிப்பாளர்கட்கு ஆலோசனை கூறுபவனாயும் காணப்பட்டான். நாடக நிகழ்த்துகையின் பின்னரும் பதட்டமில்லாத மனிதனாய் அந்நாடகம் பற்றிக்கலந்துரையாடியதையும் விவாதித்ததையும் கண்டிருக்கிறேன்.

சிறந்த ஓவியராக இருந்ததால் அவனது நாடகச் செயற்பாடுகள் மற்றவர்களால் அதிகம் அறியப் படாததாக இருந்தன. நாடகம் சமூக இரசனையில் தாக்கம் உண்டாக்கும் காலம் வருகையில், இவரது செயற்பாட்டால் ஊக்கம் பெற்றோரால் அவரது நாடகப் பயன்பாடுகள் வெளிவரும்.

கலையைக் காசாக்கவும், பெயராக்கவும் பலர் முயலும் இக்காலத்தில் கலையைக் கலையாகக் கண்ட கருணாவை நினைத்துப் பார்க்கிறேன்.



gnanam.lambert@thaiveedu.com

# ஓவியக் கலைஞர் கருணா


2014 செப்டம்பரில் நான் கனடா சென்றிருந்த போது கனடாவில் கல்விச் சபை அதிகாரியாகப் பணியாற்றும் பச்சையப்பன் கல்லூரியில் படித்த என் மாணவர் பொன்னையா விவேகானந்தன் மூலம் அறிமுகமானவர்கள் கருணா வின்சென்ற், கங்காதரன் கந்தசாமி என்னும் இருவர், என்றைக்கும் என்னால் மறக்க முடியாதவர்கள். கனடாவில் நான் கலந்து கொண்ட இலக்கிய நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் வருகை தந்தவர்கள்.

நயாகரா நீர்வீழ்ச்சிக்குக் சென்றபோதும் விஞ்ஞானி கிரகாம் பெல் இல்லத்தில் காலடி எடுத்து வைத்தபோதும் இன்னும் பல இடங்களைப் பார்வையிடப் பயணம் மேற்கொண்ட போதும் விவேகானந்தனுடன் கருணாவும் கங்காவும் வருகை தரத் தவறுவதில்லை. அப்போது கருணா 35 வயது இளமைத் தோற்றத்தோடு பொலிவோடு இருப்பார்.

கருணா ஸ்கார்பரோ பகுதியில் வாழ்ந்தவர். அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி இராதிகா சிற்சபை ஈசனின் நன்மதிப்பைப் பெற்றவர். அன்னாரின் உதவி-யோடுதான் 25.9.2014 அன்று கனடா நாடாளுமன்ற வளாகத்தைக் காணச்சென்றோம். நாடாளுமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே உள்ளே சென்று வருகையாளரின் சிறப்பு இருக்கையில் அமர்ந்து, நாடாளுமன்ற நடவடிக்கைகளை நேரில் காணும் வாய்ப்பினைப் பெற்றேன்.

என் மாணவர் விவேகானந்தன் இல்லத்திலும் கருணா, கங்கா இருவருடனும் பேசிக் கொண்டிருப்பதில் மகிழ்ந்து போனவன் நான்.

இதயங்கவர்ந்த அந்த இளவல் கருணாதான் அண்மையில் இயற்கை எய்திய செய்தியை விவேகானந்தன் மூலம் அறிந்து துடித்துப்போனேன். தற்பொழுது அவருக்கு 50 அகவை இருக்கலாம். நான் சந்தித்த போது 35 அகவை இளைஞனாக மிகப் பொலிவோடு காணப்பட்டார். சிரிக்கச்சிரிக்கப் பேசுவார். பழகுதற்கு இனிய பண்பின் சிகரமாகத் திகழ்ந்து என்னை மிகவும் கவர்ந்தார்.



சிறந்த ஓவியராகவும் ஒளிப்படப்பிடிப்பா-ளராகவும் வரைகலைக் கலைஞராகவும் திகழ்ந்து ஒளிர்ந்தார். 'முதல் ஈழத்தமிழ் டிஜிட்டல் ஓவியர்' என்ற பெருமைக்கு உரியவர் கருணா. ஈழத்தில் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர். மாணவ-னாக இருக்கும்போதே சித்திரக் கதை கையெழுத்து ஏட்டிற்குப் படம் வரைந்திருக்கிறார் அவர். அவரது படம் மாணவரிடையே நல்ல வரவேற்பை அந்நாளி-லேயே பெற்றது. நவீன ஓவியக் கலையின் நுட்பங்களை எல்லாம் அறிந்தவராகப் பீடுநடை போட்டவர் கருணா.

2017ம் ஆண்டு தமிழர் மரபியல் பண்பாட்டு மையம் முன்னின்று நடத்திய பொங்கல் விழாவில் கருணாவின் நாற்பதுக்கும் மேற்பட்ட ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. அவ்விழாவில் சிறந்த ஓவியக் கலைஞராக விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார்.

தாய்வீடு இதழ் நடத்தி வரும் அரங்கியல் விழாவில் அரங்க ஒளியமைப்பில் மிகப் பெரும் ஆளுமையைச்செலுத்தி வந்த அரிமா கருணா ஆவார்.

கருணாவின் பிரிவை என்னால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. கனடாவில் நான் உலாவந்த நாட்களில் என் உள்ளத்தோடு ஒன்றி உலாவந்தவர் கருணா எனில் அது முற்றிலும் உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

கண்ணியமிக்க கருணாவின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, கருணாவுக்கு என் கண்ணீரைக் காணிக்கையாக்கி வருந்துகின்றேன். அவர் நினைவிடம் நோக்கி
வணங்குகின்றேன்.



- பேராசிரியர்
மு.பி. பாலசுப்பிரமணியன் -


# கண்ணீரைத் தவிர என்னிடம் இப்போது ஒன்றுமில்லை




**- ஓவியர் ஜீவா -**

தாய்வீடு இதழுக்கு ஓவியங்கள் வரைய ஆரம்பித்தபோது, கருணா அடிக்கடி தொலைபேசி வழியாக என்னுடன் பேசிக்கொண்டிருப்பார். பெரும்பாலும் ஓவியங்கள் குறித்த உரையாடல்கள்தான். தாய்வீடு வழியாக ஒரு wacom போர்டு நான் வரைவதற்காக வந்துசேர்ந்தது. கருணா தேர்ந்தெடுத்து டிலிப் அனுப்பி வைத்தார். 2013 பிப்ரவரி மாதம் நடைபெற இருந்த அவ்வாண்டின் தாய்வீடு எழுத்தாளர் சந்திப்புக்கு வரமுடியுமா என்று கேட்டனர். முன்னே பின்னே கடல் தாண்டாத எனக்கு அது ஓர் இன்ப அதிர்ச்சி. வரும்போது தனது தந்தையின் portrait ஐ வரைந்து கொண்டு வரமுடியுமா என்று கருணா கேட்டார். மகிழ்வுடன் சம்மதித்து, வரைந்து எடுத்து வந்தேன். இங்கு பயண ஏற்பாடுகள் நடக்கும்போது தினமும் கருணாவிடமிருந்து மெயில் வரும். கனடாவின் நகரங்கள் குறித்து, அருங்காட்சியகம் குறித்து, நான் வந்து இறங்கப்போகும் Pearson இன்டர்நேஷனல் ஏர்போர்ட் குறித்தும் நிறைய தகவல்கள். விமான நிலையத்தில் இறங்கியவுடன் அருமை நண்பர்கள் டிலிப், துஷி, கருணா, கங்கா, விவேகானந்தன், சேகர் அனைவரையும் முதன் முதலில் பார்த்த மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை.

கருணா தங்கியிருந்த அடுக்ககத்தின் விருந்தினர் அறையில் முதல் மூன்று நாட்கள் வாசம். கருணாவின் அலுவலகமும் வதிவிடமுமான வீட்டில் நானும் உடன் தங்கிக் கொள்கிறேன் என்றவுடன், வசதிகள் பற்றாது என்று சொல்லி டிலிப் அவர்களின் சகோதரர் இல்லத்தில் தங்க வைத்தனர். ஒரு குழந்தையின் ஆர்வமுடன் கருணா தனது போட்டோ ஆல்பங்களைக் காட்டுவார். அவருடைய ஓவிய ஆசிரியர் மாற்கு குறித்துப் பேச அவர் சலித்ததேயில்லை. ஆசிரியரின் ஓவியங்கள் அடங்கிய நூல்களைக்காட்டுவார். அவருடைய பிரம்மாண்டமான wacom போர்டில் வரைய என்னை அனுமதித்தார். முதன் முதலாக ஒரு போர்ட்ரைட்டை wacomல் வரைந்தது அவர் அறையில்தான். மாடலாக நண்பர் விவேகானந்தன். என்னையும் அலங்கரித்து ஓர் அற்புதமான ஸ்டுடியோ போர்ட்ரைட் ஒன்றும் எடுத்து தந்தார்.



என்னை ஓவிய அருங்காட்சியகங்களுக்குக் கூட்டி சென்று காண்பிப்பதை வெகு ஆர்வத்துடன் கருணா செய்வார். மாண்ட்ரியல், ஒட்டாவா, டொரோண்டோ என்று அலைந்து திரிந்தோம். கனடியப் பழங்குடிகளின் அருங்காட்சியகங்களையும் விட்டு வைக்கவில்லை. IMAX திரைப்படம் ஒன்றை கனடாவில் பார்த்தே தீரவேண்டும் என்ற ஆவலையும் நிறைவேற்றி வைத்தார்.

இதற்கு நடுவில் என்னுடைய வருகையை புகைப்பட பதிவுகளாகவும் செய்து வந்தார் புகைப்படக்காரர் கருணா. நான் நடத்திய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான ஓவியப்பட்டறைகளை நெறிப்படுத்துவதில் அவர் பங்கு மகத்தானது.

நான் அங்கிருந்த ஒரு மாதமும் கருணாவுடன் செலவழித்த நிமிடங்களை பற்றி எழுதினால் நீண்டு கொண்டே போகும். அவருடைய அக்காள் குடும்பத்தையும் மாமன் மகள் குடும்பத்தையும் அறிமுகம் செய்து வைத்தார். கருணா சீரியசாக முகத்தை வைத்திருந்தாலும் நகைச்சுவை உணர்ச்சியில் தோய்ந்து கிடப்பவர். நான் தமிழக அரசியல்வாதி குறித்த ஜோக் கொன்றைச் சொல்லப்போக, எந்தப் புதிய நண்பரைப் பார்த்தாலும், "ஓவியர், அந்த நிகழ்ச்சியைக் கொஞ்சம் விளக்குங்கள்" என்பார். அப்புறம் என்ன.. வெடிச்சிரிப்பு தான்!

ஐம்பது என்பது மிகவும் இளவயதுதான். கம்பீரமான ஆகிருதி கொண்ட கருணா இவ்வளவு விரைவில் நம்மை விட்டுச் செல்வார் என்பது யாருமே எதிர்பார்க்க முடியாத கடும் அதிர்ச்சி. வெறும் மூன்று வாரங்களை அவருடன் கழித்த எனக்கே இப்படியிருக்கிறது என்றால், அவருடன் எப்போதும் இருந்து வந்த நண்பர்களை நினைத்துப் பார்க்கிறேன்.

கண்ணீரைத் தவிர என்னிடம் இப்போது ஒன்றுமில்லை.



jeeva@thaiveedu.com

# முதலில் வார்த்தைகளைத் தின்றுவிடுகிறது மரணம்

**- அனார் -**

வழியற்றவர்களின் பாதைகளிலும் பயணங்களிலும் விதிக்கப்பட்டிருக்கும் அனுபவங்களே வாழ்வாகும். மரணத்தின் பிறகும் இடமற்ற வெளியில் மிதக்கின்றது காலத்தின் அதிசயமாய்.

நிரந்தரமான ஏதோ பிணைப்பின் வழியாகவே ஓர் உறவு நம்மை இணைத்திருக்கின்றது.

மரணம் திடீரென நம்மை கையறு நிலையில் நிறுத்திவிடும்போது இந்த வாழ்வெனும் அபத்தங்களின் நோக்கத்தை விளங்கியும் விளங்காமலும் ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றோம்.

இலக்கியம் தொடர்பான குறிப்பிடத்தக்க இந்த இருபது வருடங்களில் மிக முக்கியமான என் இலக்கியம் சார்ந்த நண்பர்களை மரணம் பிரித்துச் சென்றிருக்கிறது. அவர்கள் என் புலன்களுக்கு அப்பால் உள்ள ஒரு வெளியில் அமர்ந்திருக்கிறார்கள்.

ஓவியர் கருணாவுடனான தொடர்பை ஏற்படுத்தித் தந்தவர் கவிஞர் சேரன் அவர்கள்தான். என்னுடைய 'எனக்குக் கவிதை முகம்' கவிதைத்தொகுப்பிற்கு அட்டைப்பட ஓவியத்தை கருணா அவர்களே வரைந்து தந்திருந்தார். அப்போது மட்டுமல்ல எப்போதுமே அந்த அட்டைப்பட ஓவியம் மனதிற்கு நிறைவானதாகும். அந்த அழகான அட்டை ஓவியத்தை வரைந்ததற்காக கருணாவிடம் நன்றி தெரிவித்துப் பேசிய போது அவர் "நீங்கள் அதிர்ஷ்டக்காரப் பெண். பிற தொகுப்புகளுக்கு இத்தனை அழகாய் அமையவில்லை. உங்கள் கவிதைகளுக்கு அப்படியொரு பொருத்தமும் அழகுமாய் அமைந்துவிட்டதில் ஏதோவொரு




அதிர்ஷ்டமிருப்பதாய் நினைக்கிறேன்" என்றார். அவ்வார்த்தைகள் என்னை இன்னும் சந்தோசப்படுத்தின. அவர் கூறியது போலவே 'எனக்குக் கவிதை முகம்' தொகுப்பு ஒரு அதிர்ஷ்டமிக்க கவிதைத் தொகுப்பாகவே இருக்கிறது. அதன் பிறகு பல சந்தர்ப்பங்களில் கருணாவும் நானும் உரையாடியிருக்கிறோம்.

2015ல் நான் கனடா சென்றபோது, காலம் செல்வம் அவர்களுடன் தாய்வீடு ஆசிரியர் டிலிப்குமார் அவர்களையும் ஓவியர் கருணா அவர்களையும் சந்தித்தேன். பின்னர் ஓவியர் கருணாவும் டிலிப்குமார் அவர்களும் என்னையும் அஸீமையும் அழைத்துக்கொண்டு பல இடங்களைச் சுற்றிக் காட்டினார்கள். ஒவ்வொரு இடத்தையும் பற்றிய விளக்கங்களையும் மிக அர்த்த பூர்வமாக விளக்கிக்கொண்டே இருந்தார் கருணா. அழகான Toronto Music Garden முழுக்க கருணாவுடன் உரையாடியபடி நடந்தபடியேயிருந்தோம். எங்களை நிறையப் புகைப்படம் எடுத்தார். நான் கூறினேன் "எப்பவும் ஒரு புகைப்படத்திற்கான நேர்த்தியான முகவடிவம் எனதில்லை. இன்று உங்களுக்கு ஒரு சோதனையான நாள்தான் கருணா". அவர் சிரித்தபடியே பொறுமையாக அன்று மாலை வரை புகைப்படங்களை எடுத்துக்கொண்டே இருந்தார். ஓவியம் போன்றமைந்த சில புகைப்படங்கள் இன்றும் என்னிடம் உள்ளன. கனடாப் பயணம் முடியும் தறுவாயில் காலம் செல்வத்தின் வீட்டில் இரவு உணவுடன் உரையாடல் இடம்பெற்றது. அப்போது கருணா மனம் நெகிழ்ந்தபடி அவருடைய வாழ்வின் சில தருணங்களை உருக்கமாகப் பகிர்ந்து கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் அவரது அழுகை தீவிரமாக வெடித்தது. உணர்ச்சிகரமாக நீண்டு சென்ற அந்த நேரத்தில் அவருடைய சொற்கள் என்றுமே காயாத ஈரச் சுவர்போல பாசிபற்றிக் கொண்டிருக்கும் செங்கற்களைப்போல என்னுள் இருக்கின்றன.

சமீபமாக சென்ற வருடத்தில் (2018) மீண்டும் அவரே தொடர்பை ஏற்படுத்தினார். சில இளைய கலை ஆர்வமுள்ள நண்பர்களை இணைத்து இன நல்லுறவுக்கான கலை இலக்கிய விழிப்பூட்டல் நிகழ்வுகள் தொடர்பாக ஆலோசனைகளையும் திட்டங்களையும் பேசிக்கொண்டோம். கருணாவின் முயற்சியால் அவ்விதமான சில நிகழ்வுகள் நடந்தேறின. அதைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான விருப்பத்தினைக் கொண்டிருந்தார். அவருடைய நெருங்கிய நண்பர்களைப்போல் கருணாவை நான் ஆழமாக அறிந்திருக்கவில்லை. ஆனால் உண்மையான பரிவும் தோழமையும் பரஸ்பர மரியாதையையும் இருவரும் கொண்டிருந்தோம். சென்ற டிசம்பரில் அவர் இறுதியாகப் பேசும் பொழுது அந்த உரையாடல் வெவ்வேறு நிகழ்வுகளும் திட்டங்களும் நட்புவட்டம் தொடர்பாகவும் மிகுந்த சந்தோசமான உணர்வுகளோடுமிருந்தது. எங்கள் உரையாடலில் 'ஆம்' என்பதற்கும் 'இல்லை' என்பதற்கும் நடுவில் கருணாவின் மரணம் மறைந்திருந்ததா? என் பதை அன்று நான் அறிந்திருக்கவில்லை...



anar@thaiveedu.com

# கருணா! ஒரு புரியாத புதிர்

**- கருணா கோபாலபிள்ளை -**

1998 மட்டில் ஏதாவது ஓர் வியாபாரம் செய்யலாம் என்ற எண்ணத்தில் விசிட்டிங் காட் வடிவமைப்பதற்காக சந்தித்த ஓர் விசித்திரமான மனிதர் தான் கருணா அண்ணா. இருபது வருட நெருக்கமான நட்பு என்றும் கூறமுடியாத துண்டிக்கப் பட்ட உறவு என்றும் கூறமுடியாத, பட்டும் படாத பழக்கம் என்றும் வர்ணிக்க முடியாத தனக்கென ஓர் உலகத்தில் வாழ்ந்தவர் அவர்.

எனது கேள்விகளுக்கெல்லாம் பதில் அமைதியான புன்னகைதான். அவரைப்பொறுத்தவரை அவரது நுணுக்கமான கலையுணர்வை புரிந்து கொள்ளத் தெரியாத அல்லது முடியாதவர்களின் வரிசையில் நானும் ஒருவன். இருப்பினும் எனது காரியம் ஆற்றுவதற்காக பல தருணங்களில் அவரது படங்களை, ஓவியங்களைப் பார்த்து புகழ்ந்து தள்ளியபோது என்னை அவர் ஏளனமாக பார்த்தது கூட உண்டு.

ஓவியர், படப்பிடிப்பாளர், அரங்க ஒருங்கமைப்பாளர், வடிவமைப்பாளர் என்பதனையெல்லாம் தவிர்த்து இறுதிவரை அவர் ஓர் புரியாத புதிராகவே எனக்குள் தோன்றினார். சாதாரணமான மனிதர்களின் தேவைகள், ஆசைகள், பேராசைகள், ஏக்கங்கள் யாவுமே அவரை பாதித்ததாக நான் ஒரு போதும் பார்த்ததில்லை. எளிமையான தோற்றம், ஆடைகள், மென்மையான பேச்சு, மிகவும் பதுமையான நடை என்று ஓர் வேற்றுலக வாசியாகவே நான் அவரைப்பார்த்ததுண்டு. நாங்களெல்லாம் எதையோ தேடி ஓடிக்கொண்டிருக்க இந்த மனிதன் மாத்திரம் தனக்குள் எதனையோ ஆழமாகத் தேடினார். பல சந்தர்ப்பங்களில் எனக்கும் அவருக்குமான பேச்சுக்கள் ஆன்மீகம் கலந்து காணப்படும். இதில் பல மதங்கள், பல அழகிய விளக்கங்கள், தேடல்கள், பதிவுகள் என்று ஓர் அறிவுப்பெட்டகம் போல் தோன்றுவார்.

எதிர்பார்ப்புகளையும் தேவைகளையும் குறைத்துக்கொண்டால், ஏமாற்றங்கள், ஏக்கங்கள் வராது என்பதனை அவரிடம் நான் என்றுமே பார்த்ததுண்டு.

அதிகூடிய மிக முக்கிய தேவைகளாக கருணா அண்ணா கருதியது உணவு,உடை, உறையுள்தான். இவ்வாறு மிகவும் எளிமையாக வாழ்ந்த அம்மாமனிதனுடன் பல முறை சேர்ந்து உணவருந்தியும் களியாட்டங்களில் கலந்து கொண்டும் நான் மீண்டும் பெறமுடியாத அழகிய தருணங்களை அனுபவித்ததுண்டு.

இறுதிக் காலங்களில் பலமுறை வேண்டுதல்களின் பின்னர் எனது அலுவலகத்தில் ஓர் In-House Designer ஆக பொறுப்பேற்ற பின்னர் தனக்குரிய பாணியில் பல அழகிய வியாபார நுணுக்கங்கள் வடிவமைப்புகளையெல்லாம் தனது பதிவுகளாக விட்டுச் சென்றுள்ளார். அவை என்றென்றும் எம்முடன் வாழும் என்பதில் பெருமையே.

எம்முடன் வாழும் பெரும் கலைஞர்களிடம் காணப்படும் ஓர் பெரிய குறை அவரிடமும் இருந்தது. அதாவது அவரை அல்லது அவரது பெரும் கலைத் திறனை சுற்றியுள்ளவர்கள் அறிந்து கொள்கிறார்கள்



இல்லையே என்பதுதான். அந்த வேதனையே அவரை மௌனியாக்கிவிட்டது. இந்த மௌனம் கருணா அண்ணாவின் மரணம் அல்ல - இது ஓர் அரிய பொக்கிசத்தின் மௌனிப்பு.



karunagopalapillai@thaiveedu.com

# வாழ்வாய் என்றும் எம் உள்ளத்தில்!

*கருணா!*
*அடக்கமான இதயம்!*
*ஆடம்பரமில்லா மனிதம்!*
*தற்பெருமை கொள்ளா உள்ளம்!*
*அறிந்ததை விரிவாக விளக்கும் அற்புதம்!*
*கருணா, ஒரு புத்தகம் அல்ல,*
*ஓர் நூலகம்!*

*திறமைகள் பல இருந்தும்*
*பெருமை கொள்ளா மனமுடையான்!*
*அறிவால் சம்பாதித்தாயா நண்பரை,*
*அல்லது அன்பால் அணைத்தாயா?*
*உன் அடக்கம்! உன்அறிவு!*
*உன் திறமை! உன் பணிவு!*
*அத்தனையும் உன் பக்கம்!*

*உன் அநுபவங்களை*
*நீ வெளிப்படுத்தும் அழகு அற்புதம்!*
*உன் முகத்தில் குதூகலிக்கும் உற்சாகம்,*
*வார்த்தையில் வழிந்தோடும்!*

*நீ விளக்கிய வத்திக்கான் அநுபவம்*
*என் காதில் இன்றும் ஒலிக்கிறது!*
*மாதாவின் மடியில் இறை இயேசு!*
*உன் இதயத்தை இக்காட்சி*
*உலுக்கியதை நான் உணர்ந்தேன்.*
*இயேசு உயிர்த்த நாள்*
*கொண்டாட்ட நேரத்தில்,*
*என் வாய்பேசா மாணவியின் மகளுக்கு*
*வரைதலின் முறைமையை*
*அழகாகக் கற்பித்தாய்.*
*உன் கலையை முறையாய்ப்*
*பயிற்றுவிக்க நீ முயன்றாய்.*
*உன் ஆற்றல்,*
*உன் திறமை அத்தனையும்*
*மற்றவர்க்குக் கற்றுக்கொடுக்க*
*ஆர்வமாய் முன்வந்தாய்.*

*உன் இதய தாகம்!*
*தமிழ் மேல்! கவி மேல்!*
*ஓவியம் மேல்! இலக்கியத்தின் மேல்!*
*மொத்தமாய்ச் சொன்னால்,*
*மெய்யான இயற்கைக்கு மேல்!*
*கருணா!*
*உன் இறப்பின் பின் அறிந்து கொண்டேன்,*
*உன் பெருமை!*
*என் நெஞ்சம் விம்முகிறது*
*உன் இழப்பால்!*
*நீ வாழ்வாய்! என்றும் எம் உள்ளத்தில்!*



**- பரமகுலராணி -**




# கருணா என்றொரு மனிதன்

**- நிமால் நாகராஜா -**

தன் வாழ்வில் சந்தித்த அத்தனை மனிதர்களையும், தன் எதிர்பார்ப்பில்லாத அன்பினால் வசீகரித்துப் போன கருணாவை நான் 96ம் ஆண்டு 'திண்ணை' எனும் சஞ்சிகை வெளியீட்டின்போது முதன் முதலில் சந்தித்தேன். புதுமையாகவும், அதிநேர்த்தி மிக்கதாகவும் கருணா வடிவமைத்த அந்த இதழ் நிறையவே எமைக் கவர்ந்திருந்தது.

பின்பு 'நுட்பம்' எனும் தொழில்நுட்ப இதழ் ஒன்றை, சில நண்பர்கள் இணைந்து வெளியிடத் தீர்மானித்த போது, கருணாவிடம் தான் வடிவமைப்பு செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம். கருணாவுடனான மிக நீண்ட கால நட்பு அங்கே தான் ஆரம்பமானது. பல நாட்கள் இதழின் வேலை பின்னிரவு வரை நீளும். சில வேளைகளில் அதிகாலை வரையும் கூட கருணாவின் அலுவலகத்தில் அரைத் தூக்கத்துடன் இருந்திருக்கிறோம். கிஞ்சித்தும் களைப்படையாமல், உடனிருப்பவர்களை உற்சாகப்படுத்திக்கொண்டு, தான் விரும்பும் தரம் இதழில் வரும் வரை சலிக்காமல் உழைக்கும் அலாதியான திறமை கருணாவுக்கு இருந்தது. இந்தக் காலங்களில் ஓவியங்கள், புகைப்படக் கலை, இசை, இலக்கியம், நாடகம், நடனம், இன்னும் பலவற்றை பற்றி உரையாடியிருப்போம். இந்த சம்பாசனைகளில் கருணாவின் பங்கே அதிகமாக இருக்கும். ஒரு குழந்தையின் ஆர்வத்தோடு கருணா கதைக்கும் அழகில், ஆர்வத்தில் நாங்கள் லயித்துப் போவோம்.

நுட்பத்தைத் தாண்டியும் எங்கள் தோழமை அகலவே விரிந்தது. கருணாவின் நண்பர்கள் எமது நட்புகளாயினர். எங்கள் நண்பர்கள் கருணாவின் அன்பு வட்டத்திற்குள் வந்து சேர்ந்தனர். கருணாவுடனான ஒவ்வொரு சந்திப்பும் நிறையத் தரம் மீண்டும் வேண்டுவதான, வாழ்வின் இறுதிக் காலம் வரை நினைவில் நிற்கக் கூடிய அற்புதத் தருணங்கள்.

மனவெளி கலையாற்றுக் குழுவினரோடு கருணா இயங்கிய காலத்தில், இரண்டு நாடகங்களில் என்னை இழுத்துக் கொண்டு போய் நடிக்க வைத்தார். செழியன் எழுதிய 'என் தாத்தாவுக்கொரு குதிரை இருந்தது' எனும் நாடகத்தை கருணா இணை நெறியாள்கை செய்த போது அவரின் ஆளுமையின் இன்னொரு பரிமாணத்தை நான் கண்டேன். நிறைய தேடல்களுடன், சின்ன விசயங்களுக்கு கூட அதிசிரத்தையாக கவனம் எடுத்துக் கொண்டார். எள்ளலாக சொல்லவேண்டிய வசனம் ஒன்று நாடகத்தில் அடிக்கடி வரும். அதை நான் உச்சரிக்கும் விதத்தில் கருணாவுக்கு திருப்தியில்லை. எனக்கோ அந்த எள்ளல் அடித்துப் போட்டாலும் வராது போலிருந்தது. கருணாவோ விடுவதாயில்லை. நாடகத்தையே விட்டு விடுகிறேன் என்று கூட சொல்லிப் பார்த்தேன். கருணா மசியவேயில்லை. அந்த ஒற்றை வசனத்திற்காக ஏகப்பட்ட ஒத்திகைகள் எனக்கு நடந்தன. மேடையில் இந்த ஒரு வசனமே என் மனதை ஆக்கிரமித்து மற்றவற்றை மறந்திடுவேனோ என்று கூட பயந்தேன். இறுதியில் மேடையில் சரியாக உச்சரித்திருக்கிறேன் போலிருக்கிறது. கருணா சிரிப்புடன் என்னை கட்டிப்பிடித்த நினைவு, இருபது வருடங்கள் கடந்தும் இன்னும் மனதில் உயிர்ப்போடிருக்கிறது.

வாழ்வில் நாம் எடுத்த அத்தனை முயற்சிகளிலும் கருணா துணையிருந்தார். கருணாவை நம்பியே நிறைய விடயங்களை நாம் முன்னெடுத்திருக்கிறோம். தெரியாத விடயங்களில் கூட அதீத தேடல்களுக்குள்ளால் அற்புத படைப்பைத்தரும் வல்லமை கொண்ட கருணா, தன் எண்ணற்ற திறமைகள் குறித்துச் சிறிதேனும் கர்வம் கொண்டவரில்லை. இவருடன் நட்பாய் இருக்கிறேன் என்ற எண்ணமே எனக்குக் கர்வம் தந்திருந்ததே உண்மை.

ஒப்பற்ற ஓர் ஓவியன். அதீத ஆளுமை நிறைந்த ஓர் அற்புதக் கலைஞன். எதிர்பார்ப்பில்லாத தனது இதயத்தின் மொழியுடன் எமை ஆகர்சித்துப் போன உயர்ந்த மனிதன். எல்லைகளற்ற திறமைகளுடன் எம் சமூகத்திற்குக் கிடைத்த மிகப் பெரும் பொக்கிஷம். இவனுடன் நானும் வாழ்வில் பயணித்தேன் என்ற நினைவு மட்டும்தான் இப்போதைய ஒரே ஆறுதல்.

இவனது ஓவியக் கைகள் ஓய்வெடுக்க சரியாக ஒரு கிழமையின் முன் தொலைபேசியில் கதைக்கும் போது, எம் வீட்டிற்கு வந்து நாளாகி விட்டது, ஒரு நாள் விருந்துண்ண வருகிறேன் எனக் கேட்ட கருணா, வீட்டிற்கு வரமுதலே விடை பெற்ற கொடுந்துயரில் நான் இப்போது உழல்கிறேன்.

எம் வீட்டின் சுவர்களில் கருணா உயிர் கொடுத்த, எங்கள் மூன்று தலைமுறையின் நினைவுகள் ஓவியங்களாயப் பேசுகின்றன. பார்க்கும் நேரமெல்லாம் கதைகள் பல சொல்லும் அந்த உயிரோவியங்களுக்குப் பின்னே கருணா எனும் பெருங் கலைஞன் ஒளித்திருந்து சிரிக்கின்றான். அழகிய அந்தப் படங்களின் நடுவேயுள்ள மேசையில், அவனுக்கான மது ஊற்றாக் குவளையும், விருந்துண்ணாத்தட்டும் இன்னும் காலியாகவே கிடக்கின்றன. அவனது நினைவுகளின் நீட்சியில் எம் நெஞ்சமெல்லாம் எரிகின்றன.

கண்ணீர் கரைக்க இயலாப் பெரும் காலத் துயர் இது. கரையேற முடியாப் பெரும் சோகச் சுமை இது.

மலையாய் மேலெழும் அவன் நினைவுகளை எங்கே போய்ப் புதைத்து நான் அழுவேன்?



nimal.nagaraj@thaiveedu.com

# கருணா மாமா எனும் ஓர் ஊக்கசக்தி

நிழற்படக்கருவியை (camera) எப்படிப் பயன்படுத்துவது என்று எனக்கு கற்பித் தீர்கள்.

அதில் இருந்து தான் எனக்கு தெரியும், உங்களுக்கு புகைப்படங்கள் எடுப்பது எவ்வளவு மகிழ்ச்சியை தருகின்றது என்று.

எனது பள்ளியில் ஒரு ஆவணப்படம் எடுக்க வேண்டியதாக இருந்தது. ஆனால் என்னிடம் ஒரு நிழற்படக்கருவியும் இல்லை. எனது தொலைபேசியாலும் அழகான நிழற்படங்களும் வீடியோவும் எடுக்கலாம் என்றும் சொல்லித்தந்தீர்கள். படங்களையும் வீடியோக்களையும் எப்படி எடுப்பது என்று எனக்குக் காண்பித்தீர்கள். மேலும் அந்த காட்சிகள் எப்படி இருக்கவேண்டும் என்று எனக்கு வரைந்து காட்டினீர்கள். ஒரு சின்ன மாற்றமே ஒரு பெரிய வித்தியாசத்தைக் காட்டும் என்று எனக்கு விளங்கப்படுத்தினீர்கள்.

ஒரு நிழற்படமோ வீடியோவோ எடுக்கும் போது அதை எடுப்பவரின் எண்ணமும் பார்வைக்கோணமும் இணைந்த photographers eye எவ்வளவு முக்கியம் என்று விளங்கப்படுத்தினீர்கள்.

இவை எல்லாவற்றையும் நீங்கள் எனக்கு விளங்கும்படி பொறுமையாகச் சொல்லித் தந்தீர்கள்.

நான் இப்போது எனது தொலைபேசியுடன் ஓரளவு சிறந்த படங்கள் எடுப்பதற்கு காரணம் நீங்கள் தான் கருணா மாமா.

என் ஆவணப்படத்துக்காக விருது கிடைத்து நான் மிகவும் பெருமைப்பட்டேன். உங்களின் உதவி இல்லாமல் இருந்திருந்தால் நான் அந்த பரிசை வென்றிருக்கமாட்டேன் மாமா.

மார்க்கம் நகரசபைக் கட்டடத்தில் நடந்த உங்களது ஓவியக் கண்காட்சியில் என்னைத் தொண்டராகப் பணியாற்றுமாறு கேட்டீர்கள். எவ்வளவு பெருமையாக உணர்ந்தேன் தெரியுமா?

அந்தக் கண்காட்சியில் உங்களது ஒவ்வொரு ஓவியத்தையும் எனக்கு விளக்கப் படுத்தினீர்கள். சில ஓவியங்களின் கருத்து எனக்கு விளங்காமல் இருந்தால், மீண்டும் பொறுமையாக, நான் விளங்கும்படி கூறினீர்கள்.

Art Gallery of Ontarioவுக்கு உங்களோடு வந்த நாள் ஓவியங்களைப் பற்றி நீங்கள் சொல்வதைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்த இரண்டாவது நாள். முதல் தடவை மார்க்கம் நகரில் உங்கள் ஓவியங்களைப் பற்றி அறிந்தேன். இரண்டாவது தடவை Art Gallery யில் உலகப் புகழ் பெற்ற ஓவியர்களைப் பற்றியும் அவர்கள் வரைந்த ஓவியங்களைப் பற்றியும் அறிந்தேன்.

தாய்வீட்டில் என்னை எழுத ஊக்கப்படுத்தி, நான் எழுதிய கட்டுரையையும் திருத்தியுதவி, பலரும் என்னைப் பாராட்டச் செய்தீர்கள்.

ஆனால், திடீரென கருணா மாமா எனும் ஓர் ஊக்கசக்தி எம்மை விட்டுப் பிரிந்து விட்டது.

எல்லாவற்றையும் பொறுமையாகச் செய்தீர்கள்...

ஏன் எங்களைப் பிரிவதில் மட்டும் இவ்வளவு அவசரம்
கருணா மாமா?



**- தாமரை -**

# அன்பாகப் பழகும் கருணா மாமா

கருணா மாமாவை எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே தெரியும். எங்கள் வீட்டில் நடக்கும் எல்லா நிகழ்ச்சிக்கும் வருவார். என்னுடைய எல்லா பிறந்தநாள் நிகழ்ச்சியிலும் நான் அவரைக் கண்டிருக்கின்றேன்.

அவருடைய ஓவியங்களை நான் பார்த்திருக்கிறேன். கண்காட்சிலும் பார்த்தேன். அப்பா அவருடைய ஓவியங்ளைப் பற்றிக் கூறியிருக்கின்றார். கருணா மாமா அழகாகப் படங்கள் எடுப்பார். என்னையும் அழகாகப் படங்கள் பிடித்திருக்கின்றார். வீட்டுக்கு வரும்போது எனக்கும் மற்ற பிள்ளைகளுக்கு ஓவியம் பற்றிக் கூறுவார். எப்படி பென்சில் பிடிப்பது? எவ்வாறு வரைவது என்றெல்லாம் சொல்லித் தந்திருக்கின்றார்.

எங்களை Art Gallery of Ontarioக்கு அழைத்துச் சென்று காட்டினார். புகழ்பெற்ற ஓவியர்களைப் பற்றியெல்லாம் கூறினார். அன்று ஓவியங்களைப் பற்றி நிறையத் தெரிந்து கொண்டோம்.

நான் நாடகம் நடித்தபோது, அடிக்கடி வந்து பார்ப்பார். அப்படிச் இப்படிச் செய் என்று எனக்குப் பல விடயங்களைக் கற்றுத் தந்தார்.

அவருக்கு இசையைப் பற்றியும் நிறையத் தெரியும். என்னுடைய கடந்த பிறந்தநாளில் அதைப் பற்றித்தான் நிறையக் கதைத்துக் கொண்டிருந்தார்.

எனக்கு you tube channel ஒன்று திறந்து பல நிகழ்ச்சிகளைச் செய்ய விருப்பம். அதை அப்பா அவருக்குச் சொன்னார். அவர் என்னை அழைத்தார். 'நான் உனக்கு எல்லா உதவியும் செய்யுறன். ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு எல்லாத்துக்கும் நான் உதவி செய்வன். உன்ர 13வது பிறந்தநாளுக்குப் பின் நாங்கள் தொடங்குவம்" என்றார்.

எனக்கு பெரிய மகிழ்ச்சி. என்ற you tube கனவு நிச்சயமாய் நிறைவேறும் என்று நம்பினேன்.

இப்படிச் சொன்ன கருணா மாமா இப்ப இல்லை. அன்பாகவும் இனிமையாகவும் பழகுகின்ற மாமா இப்ப இல்லை என்று நினைக்க பெரிய வேதனையாக இருக்கிறது.

என்னுடைய அடுத்த பிறந்தநாளுக்கு கருணா மாமா இருக்கமாட்டார் என்று நினைக்க
அழுகைதான்
வருகின்றது.



**- ஆயணி விவேகானந்தன் -**



# அமைதியும் சாந்தமும் நிறைந்த கருணா மாமா

கருணா மாமா மிகவும் அன்பானவர். சாந்தமானவர். அவரை மிக சிறந்த கலைஞர் என்று என் அப்பா சொல்லுவார். ஒரு தடவை கருணா மாமா என்னை பென்சிலால் ஓவியமாக வரைந்து தந்தார்.

எனது நடனம் கருணா மாமாவுக்கு மிகவும் பிடிக்கும். எப்போதும் என்னைப் பாராட்டுவார். சின்னப் பிள்ளைகளுடன் பழகுவதற்கும் அவர்களுக்கு ஓவியம், நிழற்படம் எடுத்தல், தமிழில் தட்டச்சு செய்தல் போன்றவற்றைச் சொல்லிக் கொடுப்பதற்கும் கருணா மாமாவுக்கு மிகவும் விருப்பம்.

புலிமகள், ஈழமகள், அகரன், அருவி, ஆயணி, டிஷாலி அக்கா, தாமரை அக்கா, சின்னக்கா, பெரியக்கா ஆகியோரோடு என்னை Art Gallery of Ontario வுக்குக் கூட்டிக்கொண்டு போய்,. ஓவியங்களைப் பற்றியும் மிகவும் விளக்கமாக எங்களுக்கு சொல்லி தந்தவர். Vincent Van Gogh, Picasso, Leonardo Da Vinci, Michel Angelo போன்ற ஓவியர்களை பற்றி நிறைய விடயங்கள் எங்களுக்கு சொல்லித் தந்தார். கருணா மாமா.

தனக்கு தெரிந்தவற்றை எல்லோருக்கும் சொல்லித் தந்து ஊக்குவிப்பார். எனது சின்னக்காவுக்கு படம் கீறும்போது பென்சில் எப்படிப் பிடிக்க வேண்டும் என்று மிக நுனுக்கமாகச் சொல்லித் தந்தவர்.

எனக்கு மட்டும் அல்லாமல் எனது தங்கைகள், அக்காக்கள், நண்பர்கள் ஏன் உங்கள் எல்லாருக்கும் கருணா மாமா நீண்ட காலம் வாழ்ந்து சொல்லி தர வேண்டிய விடயங்கள் நிறைய இருந்தன.


கருணா மாமாவின் இழப்பு எங்கள் எல்லோருக்கும் பேரிழப்பாகும்.



**- தமிழருவி குலராஜசிங்கம் -**

# கருணா மாமா எங்கள் இரசிகர்

கருணா மாமாவை முதன்முதலில் பல ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தேன். எங்கே என்று நினைவில்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள், என்னையும் என் தம்பியையும் படம் பிடிக்க விரும்புவதாக என் பெற்றோரிடம் சொன்னது என் நினைவில் இருக்கிறது. ஒரு நாள் திடீரென விவேகானந்தன் மாமா வீட்டுக்கு எங்களை கூப்பிட்டு, எங்களை விதம் விதமாகப் படம் பிடித்தார். படங்களைப் பார்த்தவர்கள் எல்லாருமே பாராட்டும் வண்ணம் படங்கள்



இருந்தன. கருணா மாமா பிடிக்கும் படங்கள் எல்லாமே அப்படித்தான் இருக்கும் என்று பின்னர் அவர் பிடித்த பல படங்களைப் பார்த்து தெரிந்துகொண்டேன். என் தம்பியின் படத்தைப் பார்த்து நிறையப்பேர் தனது முகநூல் பக்கத்துக்கு Like செய்தனர் என்று மகிழ்ச்சியோடு சொன்னார்.

எங்கள் வீட்டில் நடக்கும் பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கு அவரையும் அழைப்போம். அப்படி வந்தபோது என்னையும் தம்பியையும் அம்மாவையும் பார்த்துப் படம் வரைந்தார். அவை கோடுகளைக் கொண்ட படங்கள். கோட்டோவியம் என்றார்.

போன ஆண்டு ஜனவரியில் Niagara Fallsக்கு சில குடும்பங்கள் சுற்றுலாச் சென்றோம். கருணா மாமாவும் வந்திருந்தார். அங்கு வைத்து, ஒருவரின் கண்ணை எப்படி வரைவது என்று எனக்குப் பொறுமையாகச் சொல்லித்தந்தது நேற்று மாதிரி இருக்கிறது.

ஓவியர் Vincent Van Gogh, Claude Monet, Paul Gauguin போன்றோரின் ஓவியங்கள் 2017 பிப்ரவரியில் Art Gallery of Ontarioவில் வைக்கப்பட்டிருந்தன. கருணா மாமாவும் கங்கா மாமாவும் என்னைப் போன்ற பலரை அழைத்துச்சென்றனர். Van Gogh வரைந்த *Starry Night over the Rhone at Arles* ஓவியத்தை எங்களுக்கு அறிமுகப் படுத்தியதே கருணா மாமாதான். ஓவியங்கள் பற்றி எவ்வளவு விடயங்களைச்சொல்லித் தந்திருப்பார்!

எங்கள் வீடுகளில் நடக்கும் பிறந்தநாள் விழாக்களிலும் வேறு மேடைகளிலும் நாங்கள் நடனம் ஆடினால், நாடகம் நடித்தால் கருணா மாமாதான் எங்கள் மிகப் பெரிய இரசிகர். வாய் ஓயாமல் பாராட்டுவார். தமிழை மறக்கக்கூடாது என்று அடிக்கடி சொல்லுவார்.

இப்படி எல்லாம் எங்களோடு பழகிய எங்கள் அன்புக் கருணா மாமா திடீரென எங்களை விட்டுப் போய்விட்டார்.


நீங்கள் எடுத்த படங்களிலும் ஓவியங்களிலும் எங்கள் நினைவுகளிலும் இருப்பீர்கள் கருணா மாமா.



**- அருவி இரவீந்திரன் -**

# நாளைகளை நிறுத்தியவன்...




**- கார்த்திகேசு விஜயசுகந்தன் -**

'We have to cancel tomorrow' இது தான் கருணாவின் வெளியுலகக் கடைசித்தொடர்பு. இந்த SMSஜப் பார்த்தபோது, அடுத்த நாள் காலையில் என்னுடன் இருந்த சந்திப்பை மட்டுமல்ல, தனது வாழ்நாளில் இருந்து நாளைகள் எல்லாவற்றையுமே நிறுத்தப்போகிறார் என்று நான் எதிர்பார்த்திருக்கவில்லை. 'வெற்றிடங்களை இயற்கை விடுவதில்லை' என்கிறது சேரனின் ஒரு கவிதை. ஆனால், கருணாவின் இடத்தை நிரப்புவதென்பது இயற்கையாலும் இயலாதவொன்று.

கருணா எனது நெருங்கிய நண்பன். கருணாவுடனான தொடர்பு 96ம் ஆண்டு 'திண்ணை' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் தொடங்கி 'நுட்பம்' சஞ்சிகையினூடாக அது நெருங்கிய நட்பாக வேரூன்றியது.

1998ம் ஆண்டு நானும் எனது நண்பர்கள் சிலரும் 'நுட்பம்' என்ற தொழில்நுட்ப சஞ்சிகை ஒன்றை வெளியிடுவதற்கான வேலைகளை ஆரம்பித்திருந்தோம். நுட்பத்தின் வரைகலை வடிவமைப்பைச் செய்வதற்காகக் கருணாவை நாம் இணைத்துக் கொண்டோம். கருணா, ஒரு விடயத்தில் ஆர்வம் எடுத்து வேலைசெய்யத் தொடங்கினார் என்றால், அவர் அவ்விடயத்திற்காக முற்றாகவே தன்னை அர்ப்பணித்துவிடுவார். அது கவிதைக்கு ஓவியம், புத்தகத்திற்கு அட்டைப்படம், பத்திரிகை வடிவமைப்பு, நாடக ஒலி – ஒளி அமைப்பு, சஞ்சிகை வடிவமைப்பு, அல்லது ஒரு கட்டுரை, எதுவாக இருந்தாலும் தன்னை முற்றாக அர்ப்பணித்து வேலைசெய்வார். நுட்பம் சஞ்சிகையில் வடிவமைப்பு மட்டுமின்றி, தினமும் எம்மை ஊக்கப்படுத்தி, கட்டுரைகளை எழுதவைத்து, அவற்றை வடிவமைத்து நுட்பத்திற்கு உயிர்கொடுத்தவர் கருணா. நுட்பம் சஞ்சிகைக்காக எத்தனையோ நீண்ட இரவுகள், சில நாட்களில் விடியும் வரை எங்களோடு இருந்து சலிக்காது வேலைசெய்வார்.

'தரம்' (Quality)! இதுதான் கருணாவின் அடையாளம். தான் செய்யும் வேலை எதுவாக இருந்தாலும் அதனுடைய தரம் எப்போதுமே சிறந்ததாக இருக்கவேண்டும் என்பதற்காக அதிமுயற்சியெடுத்து வேலைசெய்வார். எமது தமிழ்ச்சமூகத்தில், தரத்திற்கு ஒருவரும் முன்னுரிமை கொடுப்பதில்லை என்பதில் மிகவும் கோபமாக இருப்பார். சஞ்சிகை, பத்திரிகை, பிரசுரம், விளம்பரம் என்பவற்றின் வடிவமைப்புகளில் இருந்து, கலைவிழாக்கள், நாடகங்கள், கூட்டங்கள் என்பற்றின் தரத்தில் ஒருவருமே கவனம் செலுத்துவதில்லை என்பது கருணாவுக்கு மிகவும் ஆதங்கமான விடயம். இவற்றின் தரங்களைப் பற்றி விமர்சிப்பதற்கு அவர் ஒருநாளும் தயங்கியதில்லை. வரைகலை வடிவமைப்பிலும், நாடக அரங்கு, ஒளி, மற்றும் ஒலி அமைப்பிலும், தரமான படைப்புகளைப் படைத்து எமக்கு முன்னோடியாக இருந்தவர் கருணா.




என்னைக் கட்டாயப்படுத்தி நாடகங்களில் நடிக்கவைத்தவர் கருணா. அவர் ஒரு நாடகத்தில் ஈடுபட்டு வேலைசெய்தார் என்றால், இயக்குநர், நடிகர்களைத் தாண்டி அந்நாடகத்தின் வெற்றிக்காக மிகவும் பாடுபட்டு உழைப்பார். அனேகமான நாடகங்களில் ஒலி அல்லது ஒளி அமைப்பு கருணா என்றுதான் பொதுவாக அறிவித்திருப்பார்கள். ஆனால் அந்த நாடக இயக்குநருக்கும் நடிகர்களுக்கும்தான் தெரியும் அந்த நாடகத்தின் வெற்றிக்கு கருணாவின் பங்கு எவ்வளவு என்பது. எதுவித அங்கீகாரத்தையும் எதிர்பார்க்காமல், திரைக்குப் பின்னின்று தான் ஈடுபடும் விடயத்திற்கு முற்றாகத் தன்னை அர்ப்பணித்து வேலை செய்பவர் கருணா. நான் புராந்தகனின் 'விட்டு விடுதலையாகி...' என்ற நாடகத்தில் ஒரு பாத்திரமேற்று நடித்திருந்தேன். அப்போது, நான் வேலைவிடயமாக வன்கூவர் செல்லவேண்டி இருந்ததால், ஒரு நாடகப் பயிற்சிக்கு என்னால் வரமுடியாது என்று கருணாவுக்கு கூறினேன். என்னைக்கட்டாயப்படுத்தி, என் விமான ரிக்கெட்டை மாற்ற வைத்து, வன்கூவரில் இருந்து ரொறொன்ரோவிற்கு வந்து, நேராக நாடகப் பயிற்சிக்கு வரவைத்தவர் கருணா. ஒரு நாடகத்தின் வெற்றிக்கு பயிற்சிகள் தான் முக்கியம். ஒரு பயிற்சியைத்தானும் ஒருவரும் தவறவிடக்கூடாது என்பதில் கருணா மிகவும் கண்டிப்பாக இருப்பார். நாடகத்தில் நடிக்கும் அனைவருக்கும் மிகுந்த ஆரோக்கியமான முறையில் தனது கருத்துகளையும் அவதானங்களையும் விமர்சனங்களையும் சொல்லி அவர்களின் ஆற்றலை வெளிக்கொணர்வதில் மிகவும் அக்கறை காட்டுவார். செழியனின் 'என் தாத்தாவுக்கு ஒரு குதிரை இருந்தது' நாடகத்தை நான் இயக்கும்போது, எனக்குத் துணை இயக்குநராக இருந்து, அந்த நாடகத்தின் வெற்றிக்குத் தீவிரமாக உழைத்தவர்.

கருணாவுடன் நான் பழகத் தொடங்கிய நாளில் இருந்து, இன்றுவரை எனது வாழ்க்கையின் ஒவ்வொரு முக்கிய நிகழ்விலும் கருணா என்னோடு இருந்திருக்கிறார். நான் எழுதிய எல்லாக்கட்டுரைகளையும் முதலில் வாசித்து விமர்சித்துத் திருத்துவது கருணாதான். அவரைப் பற்றிய இந்தக் கட்டுரையை வாசித்து, விமர்சித்து, திருத்த கருணாவைத் தேடுகிறேன்.

கருணாவின் ஓவியங்களும் அவர் எடுத்த புகைப்படங்களும் எனது வீட்டுச்சுவர்களில் அவரை நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. இப்படியொரு இனிய நண்பனை, ஒரு பெருங்கலைஞனை இழந்து எனது நெஞ்சம் அழுதுகொண்டிக்கின்றது. கருணாவுடன் பழகிய இனியநாட்களின் நினைவுகளுடனும், இப்படியொரு கலைஞனுடன் நண்பனாக பயணிக்கக் கிடைத்ததே என்ற பெருமையுடனும் எனது
நாளைகள்
தொடர்கின்றன.



suganthan@thaiveedu.com



# கருணா தொடர்ந்தும் வாழ்வார்




- ஹரி ஆனந்தசங்கரி -
கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்

கருணா வின்சென்ற் கடந்தவாரம் எங்களை விட்டு அகாலமாகப் பிரிந்தார்.

அவரைப்பற்றி பல்வேறு வகைப்பட்டவர்களும் எழுதிய பல புகழுரைகளை நான் படித்தேன். அவர்கள் கருணாவுடன் கலைமூலமாக தொடர்புபட்டிருந்தார்கள். அவர்களுடைய நட்புறவுகள் கலையால், கலைமூலம் மலர்ந்தவை. கருணா ஒரு கலைஞனாக வாழ்ந்தார், சுவாசித்தார், தொழிலாற்றினார்.

தொழிற் பாதுகாப்பையோ பொருளாதார சுதந்திரத்தையோ பட்டங்களையோ வழங்கும் தொழிற்துறைகளையே பெரும்பாலும் நாடிச்செல்ல உந்தும் ஒரு உலகிலேயே நாம் வாழ்கிறோம்.

கருணா அதன் மறுதலையைத் தெரிவு-செய்தார். அவர் கலைத்தொழில் ஆற்றுவதைத் தெரிவுசெய்தார். தனது ஆன்மாவும் உயிரும் இரண்டறக்கலந்த ஒரு தொழிலை அவர் தெரிவுசெய்தார். அவர் ஒரு கலைஞனாகத் தன்வாழ்வை வாழ்ந்ததை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன்.

கருணாவை எனக்கு இருபத்தைந்து ஆண்டுகளாகத் தெரியும். அவரை முதலில் எப்போது சந்தித்தேன் எனச் சரியாகச் சொல்லத்தெரியவில்லை, ஆனால் 2008ல் துஷி ஞானப்பிரகாசத்துடன் இணைந்து அவர் பங்காற்றிய நாடகமொன்றின் மேடை-யேற்றத்தின் பின்னரே நான் அவரின் நண்பனானேன். குலை பற்றியும் நாடகங்கள் பற்றியும் வடிவமைப்புப் பற்றியும் சமூகம் பற்றியும் மக்கள் பற்றியும் அளவளாவுவதில் நாங்கள் எண்ணிலடங்காத மணித்தியாலங்களைச் செலவிட்டிருக்கிறோம். அவர் எப்போதுமே ஈடுபாட்டுடன் உற்றுக்கேட்பவராயும் தன்னைச் சூழ நடப்பவைகளைக் கூர்ந்து கவனிப்பவராயும் இருந்தார். ஆனால் அவர் பேசியபோது எப்போதும் அமைதியான கருத்துத்தெளிவுடனும் உலகம் பற்றிய அறிவுடனும் பேசினார்.

இந்த இடைப்பட்ட காலத்தில், பல்வேறு விடயங்கள் பற்றியும் நாங்கள் அடிக்கடி பேசிக்கொண்டோம். அவர் எப்போதுமே தன் நண்பர்கள் தாம் விரும்பியதை அடைவதற்காக உழைக்கும் ஒரு பகட்டற்ற போராளியாகவே விளங்கினார். ஒளியமைப்பு, நிழற்படப்பிடிப்பு, வரைகலை வடிவமைப்பு உள்ளிட்டு ஒரு நிகழ்வையோ செயற்திட்டத்தையோ வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத்தேவையான அனைத்தையும் அவர் செய்தார். அவர் குறைப்பட்டோ, மற்றவர்களை அவசரப்படுத்தியோ நான் கண்டதில்லை. அமைதியாகக் கவனித்து தனது நண்பர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்குவார்.

எமது சமூகத்தில் பலரும் பல மணித்தியாலங்களையும், ஏன் நாட்களையும், அவருடன் கணினியின் முன்னால் செலவிட்டிருக்கிறார்கள். அவர் தனது வாடிக்கையாளர்களுடன் உன்னிப்புடன் பணியாற்றி ஒரு திறமான வடிவமைப்புப்பூரணமாகும் வரை உழைப்பார். வாடிக்கையாளர்களுக்கு வெவ்வேறு தெரிவுகளை வழங்கி அவர்கள் திருப்தியடையும்வரை அயராது செயலாற்றுவார். அதன்பின்னும் குறையற்று முழுமையடைந்த அந்தப் படைப்பை மேலும் மெருகேற்ற உழைப்பார். அவரைப்பொறுத்தவரை அந்தப் படைப்பு அவருடைய வாடிக்கையாளர்களைப் பற்றியது மட்டுமல்ல. அது அவரது கலையையும் பற்றியது. அது வெறுமனே ஒரு நுகர்பொருளல்ல. அது அவரின் வாழ்வின் ஓர் உயிருள்ள எச்சம். அவரின் கலைப்படைப்புகளைத் தமிழ்ச் சமூகத்தில் எங்கெங்குமே காணலாம். முக்கிய நிறுவனங்களினதும் தொழில் முனைவோரினதும் சின்னங்களில் இருந்து, நூல்களினதும் சஞ்சிகைகளினதும் வடிவமைப்புகள், விளம்பரங்கள் என டிஜி வரைகலை மையத்தினதும், அதன் நீட்சியாக கருணாவினதும் தடங்கள் தமிழ் வணிக சமூகமெங்கும் ஆளப்பதிந்துள்ளன. பெரும்பாலும் எளிமையாக ஆரம்பித்து ரொறன்ரோ பெரும்பாகத்தின் முக்கிய தொழில்முனைவர்களாக வளர்ந்த தனது வாடிக்கையாளர்கள் பலருடனும் அவரும் வளர்ந்தார்.



சமகாலத்திலேயே ஓர் ஓவியராகவும் அவர் முதிர்ச்சியடைந்தார். ஒரு வரைகலைஞராக தனது வாழ்வாதாரத்தைத் தேடிக்கொண்டே தனது உண்மைக் காதலான ஓவியங்களிலும் கவனம் செலுத்தினார். நள்ளிரவும் தாண்டி நீளும் பொழுதுகளில் பல நாட்களாக உழைத்து வாழ்வின் உண்மையான பக்கங்களை எடுத்துக்காட்டும் ஒரு தொகுதி ஓவியங்களை உருவாக்கினார். அவர் ஓவியங்கள் பல்வேறு தடவைகள் காட்சிப்படுத்தப்பட்டன. தமிழியல் மாநாட்டிலும் வேறு பல ஓவியக்கண்காட்சிகளிலும் அவரது ஓவியங்கள் அறப்பணிகளுக்கு நிதிதிரட்டும் நோக்குடன் விற்பனை செய்யப்பட்டோ, பரிசாக வழங்கப்பட்டோ உள்ளன. அவர் ஓவியங்கள் பற்றி விளக்கவுரைகளை நிகழ்த்தியதோடு இளம் ஓவியர்களுக்கும் வழிகாட்டியாகச் செயலாற்றினார்.

கருணாவுக்கு நாங்கள் விடைகொடுக்கும் அதேவேளை அவரது ஓவியங்கள் ஊடாகவும் கலைப்படைப்புக்கள் ஊடாகவும் அவரது வாழ்வு தொடரும் என எமக்குத் தெரியும். எமது சுவர்களில் தொங்குகின்ற… எமது நூல்களை அலங்கரிக்கின்ற…எமது வாழ்வின் பல்வேறு நினைவுகளை இனிமையாக்குகின்ற அவரது ஓவியங்கள் ஊடாக அவர் வாழ்வார். ஒரு கலைஞன் ஒருபோதும் உண்மையாக மரணிப்பதில்லை. கருணா தனது கலையூடாக எம்முடன் தொடர்ந்தும் வாழ்வார்.



gary.a@thaiveedu.com

# Karuna's Memory will Always be for A blessing

It's a Jewish tradition when someone dies to say "may her or his memory be for a blessing". This can mean two things: that the memory of the person who has passed be a constant blessing in our lives… or it could also mean that we offer the person who has passed a blessing of our own. I am cercain both meanings are apt as I think about Karuna's recent passing and the gaping hole it is has left for our family. So to honour Karuna, I want to share a few of my memories - the personal ones.

I first met Karuna a very short while after meeting my partner Cheran and that was over twenty years ago now. In some interesting ways I immediately noticed that the two men shared many attributes - both intensely creative people who resisted convention, loved good conversation and fine red wine (we always kept a bottle of Chianti in the cupboard for Karuna).

Karuna was the one who our late dog Lhasa adored. Whenever Karuna visited, Lhasa would inevitably find his way onto Karuna's lap or be curled up alongside him. Karuna was with us for most occasions and all the important milestones - for every birthday party when our twins were small (and lots of photo shoots), for holidays and adventures as well as crises. Karuna travelled out to Banff to spend time with Cheran so that the two of them could explore the badlands of Alberta; Karuna was one of a small group of friends who travelled all the way to the cemetery in Belleville to accompany me when we buried my late Mother; he was there in the hospital when Cheran had a kidney transplant; and even when Karuna wasn't around, he would call. Many of Cheran's friends have been very warm and welcoming - but there are just a few that made the effort to develop an independent friendship with me. Karuna was one.

So many people have passed through our home over the years - but Karuna didn't pass through - his was a constant and fiercely loyal presence. I miss Karuna… and know that his memory will always be for a blessing.



- Sharry Aiken -
Queen's University

# I am still Amazed of Your creativity

Since I've known you for almost 3 years

I always wanted to learn from you

because I was and I am still amazed of your creativity

and talent.

It's the only thing I wish to spend my entire life doing… Art.

I'm sorry to the loved ones who will always miss you,

including myself.

And I'm proud for all those great things

you achieved in your life.

But remember that

you have touched us

and you will always stay

in our hearts forever.

May your soul rest in peace.



- Dishaly Ilamaran -

# Karuna Anna: An Irreplaceable Loss







Very shocked and saddened to hear of the passing of a very talented Tamil Canadian visual artist and a very supportive and community conscious human being. This is a huge irreplaceable loss for the Tamil community and for the world of arts. My heartfelt condolences to his family, friends and colleagues. Rest In Peace Karuna Anna.

After starting Tamil Heritage Month Initiative in late 2009, the first person I went to see to get the first ever Tamil Heritage Month poster was Karuna Anna.

I knew that his work always had creativity, innovation, progressive and futuristic thinking, respectful, broad appeal and high standard. He delivered this awesome poster for January of 2010 and this image on the poster became a widely used image for the past ten years.

He was a humble individual, yet always had a strong sense of pride in the work he did, rightly so. As we reflect today, a significant part of Tamil Canadian history is filled with his work and has his mark all over it (from music album designs, book covers, event photos, business and organizational logos, posters, advertisement designs for businesses, artwork depicting our journeys, relationships, histories and struggles, illustrations that supported many literary works and the list goes on).

Because he maintained a strong sense of independence as an artist, he continued to produce the highest quality work. Many people who valued that became his close friends and well-wishers. Those who seek to control and restrict artists couldn't find ways to co-opt his work. He is a very knowledgeable person with an articulate speaking style but he often didn't speak much as he wanted his work to speak, and we all know that his work speaks volumes.

In the unfortunate current reality where awards are being given on a weekly basis, (most not all, but significant portion of them) being given to friends, sponsors and family members, we sometimes end up not honouring and celebrating great talents to the level they deserve. But every social media post I see online about Karuna Anna in the last few hours comes with deep reflection of the kind of impact he has had. This is the testament of the work this incredible artist had done.

His legacy will live on through his work and through the artists he inspired. He will be remembered not just as a talented artist, but as a great human being who taught us a lot more, through the way he lived.



- Neethan Shan -
neethan.shan@thaiveedu.com

# சாதாரண மக்களை வரைந்த ஓவியன்
# ஜோகனஸ் வெர்மீர்
## (Johannes Vermeer)

நீங்கள் வலது பக்கத்தில் பார்ப்பது உலகில் அதிகம் பேசப்படும் ஒரு ஓவியம். ஓவியத்திலிருக்கும் பெண்ணை வடக்கின் மொனாலிசா என்றும் அழைக்கிறார்கள். இந்த ஓவியத்தைப்பற்றி ஒரு நாவல் எழுதப்பட்டிருக்கிறது, ஒரு திரைப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதை வரைந்த ஓவியர் வறுமையில் வாடி தனது 43வது வயதிலேயே இறந்துபோனார்.

ஜோகனஸ் வெர்மீர் (1632 - 1675) நெதர்லாந்தைச் சேர்ந்த ஓவியர். நெதர்லாந்தின் Delft நகரில் இவர் வாழ்ந்தார் எனினும் இவரைப்பற்றி அதிக தகவல்கள் கிடைக்கவில்லை. இவர் இறந்தபோது இவருக்கு 11 பிள்ளைகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. 19ம் நூற்றாண்டின் இறுதிவரை இவரைப்பற்றி உலகம் பெரிய அளவில் அறிந்திருக்கவில்லை.

வெர்மீருடைய சிறப்பு அவர் சாதாரண மனிதர்களையே வரைந்தார். அரச மாந்தர்களும், சமயக்காட்சிகளுமே வரையப்பட்ட ஒரு காலப்பகுதியில் இது வழமைக்குப் புறம்பானது. அவருடைய மிகச் சில ஓவியங்களே இன்று கிடைத்தாலும் அவை பெரும்பாலும் சாதாரண மனிதர்களின் வீடுகளின் உட்புறங்களையே காட்சிப்படுத்தியுள்ளன. சில ஓவிய வரலாற்றாளர்களின் கூற்றுப்படி பெரும்பாலான ஓவியங்களில் இரண்டு அறைகளின் உட்புறங்களே சிறு மாற்றங்களுடன் பின்னணியாக மீண்டும் மீண்டும் வரையப்பட்டுள்ளன. வெர்மீர் வறுமையிலிருந்தபோதும் தனது ஓவியங்களில் மிக விலையுயர்ந்த வர்ணங்களையே பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

**- கருணா -**

வெர்மீருடைய ஓவியங்களில் மிகவும் புகழ்வாய்ந்ததாகக் கருதப்படுவது வலது புறமிருக்கும் ‘Girl with a Pearl Earring’ என்ற ஓவியமாகும் (படம் 1). இந்த ஓவியத்திலிருப்பது யாரென்று சரிவரத் தெரியவில்லை. இது அவருடைய பதின்ம வயதுள்ள மகளாக இருக்கலாம் எனப் பலரும் நம்புகின்றனர். படத்திலுள்ள பெண் தலையில் கட்டியிருக்கும் துண்டும் அப்பாவித்தனமான பார்வையும் காதிலுள்ள முத்தால் ஆன தோடும் பார்வையாளரை ஓவியத்தை நோக்கி இலகுவாக ஈர்த்துவிடுகின்றன. ஓவிய நுட்பங்களைப் பொறுத்தவரை வெர்மீர் எவ்வாறு சமாந்தரக்கோடுகளைப் பாவித்து இந்த ஓவியத்தைக் கட்டமைத்தார் (படம் 3) என்பதிலிருந்து அவரது திறமையைப் புரிந்து கொள்ளலாம்.

வெர்மீரின் இந்த ஓவியத்தைப் பின்னணியாகக் கொண்டு 1999இல் ‘Girl with a Pearl Earring’ என்ற பெயரிலேயே ஒரு நாவல் வெளியானது. பின்னர் 2003இல் இந்த நாவலை அடிப்படையாகக் கொண்டு இதே பெயரிலேயே ஒரு திரைப்படம் வெளியாகி பெரும் புகழையும், விருதுகளையும் வென்றது.

படம் 2இலிருக்கும் ஒரு பணிப்பெண் பாத்திரத்தில் பாலூற்றிக்கொண்டிருக்கும் வெர்மீரின் ஓவியமும் (The Milkmaid) மிகப் புகழ்பெற்றது. இந்த ஓவியத்திலிருக்கும் எளிமையும் மிகச் சாதாரண தளபாடங்களும் ஓவியத்தில் ஈர்ப்பை ஏற்படுத்துகின்றன. பால் ஊற்றிக்கொண்டிருப்பது ஒரு பணிப்பெண் என அவரது ஆடைகளிலிருந்து தெரிந்தாலும் மிக வறுமையான ஒரு அறையிலேயே இருக்கிறார். அது ஒரு சமையலறையாகவோ அல்லது பணிப்பெண்ணின் அறையாகவோ இருக்கலாம். சுவரில் அழுக்குப் படிந்திருப்பதையும் பெண்ணின் முகத்திலுள்ள உணர்வையும் கவனியுங்கள்.

இந்த ஓவியத்தைப் பார்த்தவுடன் பெண்ணின் கைகளை நோக்கியும் பாத்திரத்தை நோக்கியும் உங்கள் பார்வை செல்வதை அவதானித்திருப்பீர்கள். ஓவியரின் நோக்கமும் அதுவே. இதை எவ்வாறு ஓவியர் சாத்தியப்படுத்தினார்? தாய்வீட்டின் பெப்ரவரி, 2017 இதழில் வெளியான ‘இறுதி இரவு உணவு’ என்ற ஓவியத்தைப் பற்றிய ஆக்கத்தின் Vanishing point என்ற நுட்பத்தைப் பற்றிப் பார்த்தோம். இந்த ஓவியத்திலும் வெர்மீர் அதே நுட்பத்தையே பயன்படுத்தியுள்ளார். ஓவியத்திலுள்ள நேர் கோடுகளை இணைக்கும்போது அவை கைகளையும் பாத்திரத்தையும் நோக்கியே போவதை நீங்கள் அவதானிக்கலாம். (படம் 5)

இந்த இரண்டு ஓவியங்களிலும் கருப்பொருட்களில் எவ்வாறு ஒளி விழுகிறது என்பதை அவதானியுங்கள். வெர்மீர் எவ்வாறு ஒளியைத் தனது ஓவியங்களில் பாவித்தார் என இன்று பலரும் ஆச்சரியப்படுகின்றனர். கரவாஜ்ஜியோ, ரெம்பிரான்ற் போன்ற ஓவியர்களின் ஓவியங்களில் ஒளியும் இருளும் அதிக அளவில் வேறுபடுத்தப்பட்டிருக்கும். நிழல் மிகக் கடுமையானதாக (இருளானதாக) இருக்கும். வெர்மீரின் ஓவியங்களில் நிழல் மிக மென்மையானதாகவும், பல ஓவியங்களில் ஒளி வரும் யன்னல் ஓவியத்தின் ஒரு பகுதியாவும் காட்டப்பட்டிருக்கிறது.

தனது வாழ்நாளில் பெருமளவில் அறியப்படாவிட்டாலும் இன்று ஜோகனஸ் வெர்மீர் நெதர்லாந்துப் பொற்காலத்தின் மிகச்சிறந்த ஓவியர்களில் ஒருவர் என அறியப்படுகிறார்.

அடுத்த ஆக்கத்தில் ஐரோப்பாவுக்குக் காண்டாமிருகத்தை அறிமுகப்படுத்திய ஓவியரைப் பற்றி அறிந்து கொள்வோமா....


■ ■ ■



படம் : 1




படம் : 2



படம் : 3



படம் : 4



படம் : 5

# இமயம் இன்றில்லை!




நண்பன் கருணாவை முதலில் எப்போது எச்சூழலில் சந்திக்க நேர்ந்தது என்பதன் தரவு என் ஞாபக அடுக்குகளில் இன்று இல்லை.

அந்தநாள் நினைவுகள் யாவும் பசுமை யாய்ப் பூத்திருக்க, கருணா எப்போது அறிமுகமானான் என்ற வினாவின் விடை மட்டும் ஏன் வழுக்கிச் செல்கிறது?

கருணா என்பவன் ஒற்றைப் பரிமாணம் கொண்டவனாக அறிய நேர்ந்திருந்தால் நினைவின் ஏதோ ஒரு படிமத்தில் பதிந் திருக்கக்கூடும்.

அவன் ஆயிரம் ஆற்றல்களின் ஒன்றியம் அல்லவா! எதனை இரை மீட்பது?

வண்ணச்சோலைகளுக்குள் என்னைத் தொலைய வைத்து, மீளும் வழி தெரியாது மிரண்டு நின்றபோது, “இப்போது நீங்கள் உணர்ந்தது ஒரு துளி, இன்னும் உள்ளே… உள்ளே பயணப்படுங்கள். பல வெளிச் சங்கள், பல பரிமாணங்கள்… இது தான் மாஸ்ரர் ஓவியம்” என்று ஓவியக்கலையின் அடிவாரத்திற்கு அழைத்துச்சென்ற ‘மாற்கு’ மாஸ்ரரின் மாணவன் கருணாவையா?

நாடகமேடைகளில் ஒளி ஓவியம் வரைந்த பிரமாண்டத்தின் மறுபெயராகத் திகழ்ந்த கருணாவையா?

எந்தக் கருத்தையும் எங்கள் உதடு கூட் டுவதற்கு முன்பே உச்சரித்து, பலநூறு தரவுகளையும், ஆதாரங்களையும் அடுக்கி விட்டுக்கொடுப்புக்குள் கசியும் புன்சிரிப்பு டன் கடந்து செல்லும் கலை இலக்கியவா திகளின் கடைசி நண்பன் கருணாவையா?

அற்புதமான திரைப்படங்களைப் பதிவி றக்கம் செய்து, “இதை நீங்கள் கட்டாயம் பாக்கவேணும் மாஸ்ரர்” என்று அப்படங் கள் ஏற்படுத்திய மனத்தாக்கத்தால் பல இரவுகளின் தூக்கத்தை தொலைக்க வைத்த கலை ஊக்கி கருணாவையா?

அவன் பல்வேறு ஆளுமைகளின் மொத் தத் தொகுப்பு.

தான் தேர்ந்த தடங்களில் முழுமையான தெளிவும் அறிவும் அதனை மேம்படுத்த முயல்வதும் தான் மனிதமேன்மை. கருணா விடம் இத்தன்மை அள்ளக்குறையா ‘நிலா வெளி நீர்ச்சுனை’யாய் நிரம்பி வழிந்தது.

கலைக்கிளைகளில் தோன்றும் முரண்க ளுக்கும் இயங்குநிலை இடர்ப்பாடுகளுக் கும் கருணாவிடம் தெளிவான தீர்வுகளும் நேரான வழிப்படுத்தலும் இருந்தன.

கலை இலக்கிய விழுமியங்களின் உயிர் நாளங்கள் மீது கருணாவின் பார்வையும் பங்களிப்பும் காத்திரமானது. எதிர்கொள் ளும் முரண்களுக்கான பின்னீடுகளைப் பற்றி அலட்டிக்கொள்ளாமல் தன் அறிவின் விசாலிப்பை இறுதி மணித்துளிவரை நிகழ்த் திக் கொண்டிருந்த மனிதன் அவன்.

‘மாற்கு’ மாஸ்ரர் என்ற மாபெரும் கலை ஞனை அவர் மாணாக்கர்களும் கைவிரல் மடிப்புக்குள் தொலைந்து போகக்கூடிய சில யாழ்ப்பாணிகளும் அறிவர். ‘பிக்கா சோ’வை எழுத்துக்கூட்டத் தெரிந்த மிகப் பலரில் ஒரு சிலருக்காவது ‘மாற்கு’ மாஸ் டரின் வீச்சும் சாதனையும் தெரிந்திருக்கக் கூடும். குப்பையில் கிடந்த மரத்துண்டுக- ளிலும் வீசி எறியப்பட்ட சிலாகைகளிலும் ஒடிந்து தொங்கிய மரக் கொப்புகளிலும் ஒளிந்திருந்த மாயக் கலைவடிவங்களுக்கு உயிர் தந்த, கோட்டோவியக் கலையில் புதிய பரிமாணங்களை உருவாக்கிய மாம னிதர் ‘மாற்கு’ மாஸ்ரர். ஈழத்தமிழர்களுக் குப் பெருமை சேர்த்த அந்த மனிதரின் மகிமை உணரா நம் சமூகம் தலைதூக்க பல நூற்றாண்டுகள் செலவாகும்.

‘மாற்கு’ மாஸ்ரரின் கடைசிக் கந்தாயத்தில் அவருடைய மாணவனான கருணா, குறு கிய 50 ஆண்டு கால தனது உயிர்ப்பின் ஒவ்வொரு பின்னத்திலும் அவரைச் சுவா சித்து வாழ்ந்தவன்.

கருணா வரைந்த ஓவியங்களில் ஏதோ ஒரு புள்ளியில் ‘மாற்கு’மாஸ்ரரின் வெண் பனிப் புன்னகை மறைந்திருக்கும். பனிக் கட்டிகள் மிதக்கும் கிண்ணங்களை ஏந்திய




கரங்களோடு கருணாவுடன் நடத்திய உரை யாடல்களில் ‘மாற்கு’ மாஸ்ரரும் அருப வெளியில் எங்களோடு இருப்பதை உணர் வோம். தன் ஆசானை தனக்குள் ஒருவராக உருவகித்து முன் நிறுத்தியவன் கருணா! தனிமை கருணாவிற்கு மிக உவப்பானது. நீரிற்கு வெளியே சுவாசிக்க தலை நீட்டும் மீன்களைப் போல, அவ்வப்போது மனித அரவங்களைத்தன் வெளியில் அனுமதிப் பார். தன் அறிவில் சேகரமான ‘கோகினூர்’ களை எதிராளியின் கொள்ளளவின் பரிமா ணம் தெரியாமலே விதைத்துச் செல்வது அவர் இயல்பு!

தான் புதிதாக தெரிந்து கொண்டவற்றை மற்றவர் மனதில் பதியம் வைக்கும் அங் கலாய்ப்பு எப்போதும் கருணாவிடம் நிறைந் திருக்கும்.

எம் முகரத்தின் எல்லா இதழ்களையும் கரு ணாவின் பிரதான பங்களிப்போடு வெளிக் கொணர்ந்தோம். அந்த நீண்ட பயணத்தின் எந்தக் கணத்திலும் அவரது ஆளுமை வரம்பினுள் அடிவைக்க, அபிப்பிராயம் சொல்ல எவர்க்கும் அனுமதி இல்லை.

முகப்புப் படத்தை கருணாவே தீர்மானிப் பார். எனக்கும் இணை ஆசிரியர்களுக்கும் அட்டைப்படம் பற்றிய புகைமூட்டமான முன் முடிவு இருக்கும். கருணா எங்கள் கருத் திற்கும் புலப்படாத ஒரு மாயப்புள்ளியில்… தன் கவனத்தைக் குவிப்பார்.

மீறிக்கசியும் மௌன அலைகளை உண ரும் போது அவர் இப்படிச்சொன்ன நினைவு.

“மாஸ்ரர் ஓவியம் என்றது ஒரு சட்டகத்தின் நீள அகலத்துக்குள் சிக்குப்பட்ட சிறைக் கைதி இல்ல. கருந்துளையைப்போல உங் களை உள்ளிழுத்து தன்வசப்படுத்தி, காலா அநுபவங்களில் உழன்று வெளியே உமிழும்போது உண்மையை உணருவீங் கள்.”

**- அ. கந்தசாமி -**

நண்பர் யேசுராசா கனடா வந்திருந்த நேரம். டிலிப்குமாரும் கருணாவும் நானும் பலமுறைகள் பார்த்துச் சலித்த பக்கத்து வீட்டுப்பெண்ணை மீண்டும் பார்க்கும் உணர் வுடன் அவரை நயகரா நீர்வீழ்ச்சிக்கு அழைத் துச் சென்றோம்.

கருணாதான் காட்சிகளின் விளக்கங்களைச் சொல்லிக்கொண்டு வந்தார். யேசுராசா என்றுமே ஒற்றைத்தரவில் திருப்தி அடை பவர் அல்லர். அவர் கேள்விகளும், கரு ணாவின் விரிவான விளக்கங்களும் அள விறந்த தகவல்களை அள்ளி வீசிக்கொண் டிருந்தன.

நயகரா நீர்வீழ்ச்சியின் தொன்மம், இருப் பைத் தக்க வைத்துக்கொள்ள கனடா அமெரிக்காவுடன் நடத்திய போர்கள், எப் போதாவது மலரும் ராட்சசக் கணியமுள்ள துர்நாற்றம் வீசும் மலர்… என்னவெல்லாமோ காட்டினான், அனைத்துக்கும் விளக்கங் கள் சொன்னான். அதுவரை நான் அறிந் திராத நயகராவை எனக்கு அன்று அறிமு கப்படுத்தியவன் கருணா.

நான் பௌதிகம் பயின்றவன். இன்று வரை கற்பிப்பவன். பாடவிதானம் ஏறத்தாழ மனப் பாடம். நீர்வீழ்ச்சிக்கு நேர்எதிரான மேட் டின் சரிவில் நாங்கள் தொற்றிக் கொண் டிருந்தபோது கருணா ‘மாஸ்ரர் உங்களுக்கு ‘ரெஸ்லா’ வைப்பற்றித் தெரியும்தானே” என்று தொடங்கினான்.

பௌதிகத்தில் மின்னியல் அரிச்சுவடி தெரிந்தவனுக்கே ‘ரெஸ்லா’வைத் தெரி யும். நேர்மின்னோட்டத்தை எதிர் மின்னாக்கி உலகத்தையே மின்சாரத்தால் ஒளிரச் செய்த மாமேதை.

“அவற்றை சிலை உதுதான் மாஸ்ரர், பர டேயும் மற்ற விஞ்ஞானியளும் இவரை இருட்டடிப்புச் செய்தபோது இங்கைதான் வந்திருந்தவர். கனடாதான் அவற்றை கண்டு பிடிப்புக்கு ஊக்கம் கொடுத்தது” கருணா கதைத்துக்கொண்டே போனார். நான் திகைப் பூண்டில் மிதித்தவன்போல் ‘ரெஸ்லா’வின் நெடுத்த சிலையின்முன் நிலைகுலைந்து நின்றேன்.

எத்தனை தடவைகள் வந்துசென்றிருப்போம். ‘ரெஸ்லா’ நீர்வீழ்ச்சியை பார்த்துக்கொண்டு புன்னகைப்பது ஏன் கண்ணில் படவில்லை. ஏபிரகாம் லிங்கனைத்தெருவிளக்கின் மின் னொளியில் கற்க வைத்தவனல்லவா ‘ரெஸ்லா’! கருணாவிற்கு பௌதிகப் புத் தகத்தின் ஓரங்களில் கிடக்கும் பல விஷ யங்கள் எப்படித் தெரிந்தது?

கருணா அதிமானிடன்.. அதிசயன்.

கருணா ஓர் உணவுப் பிரியன். இசையை, நுண்கலைகளை நுகர்ந்து பரவசமடைவது போல் சுவையான உணவை ஆராதிப்ப வன். பொரித்து, தாளித்து, நெய் மிதக்கும் உணவு வகைகளைத் தன் சாப்பாட்டு மேசையில் அனுமதிப்பதில்லை.

தெருவிற்குப் பலவாக கிளை பரப்பி இரத்த ஓட்டத்திற்கு அணை கட்ட அமுது படைக்கும் உணவகங்களை முடிந்த வரை தவிர்த்தே வந்திருக்கிறான். கருணாவுடன் உணவருந்தச் செல்வது சுவையான அநு பவம்.

உணவகத்திற்குப் போவதற்குமுன் அல் லது போகின்ற வழியில் அங்கு பரிமா றப்படும் உணவுவகைகளின் பட்டியல் பற் றிப் பேசுவான். அதில் ஒரு பெயரைக் கூட என்னால் உச்சரிக்கமுடியாது. பரிமா றுபவன் தானும் இத்தனை சுருதி சுத்தமாக ஒப்புவிப்பானோ தெரியாது. அவர் சொல் லும் போது பல்வேறு உணவுகளின் வெவ் வேறு சுவைகளை நாங்களை அநுபவிப் போம். உணவுச்சாலை எல்லைக் குள் வந்ததும் அங்கு பரிமாறப்படப்போ கும் ‘பானங்’களைப் பற்றிய விவரணங்கள் ஆரம்பமாகும். அக்குடிவகைகளின் ஆதி மூலம் என்ன? எவ்வகை மூலகங்களால் தயாரிக்கிறார்கள், அந்த மூலப் பொருட் களை எங்கெல்லாம் பயிரிடுகிறார்கள், எந்தத் தேசத்தின் நதிநீரைப் பயன்படுத் துகிறார்கள், எவ்வாறான சீதோஸ்ணத்தில், எத்தனை அடி ஆழமுள்ள நிலவறைகளில் எத்தனை ஆண்டுகள் நொதிய வைத்து…

தொடரும் அவன் கதையில் தலை கிறு கிறுத்து….‘செப்பேட்’ தெருவில் அமைந்த அந்த யப்பான் உணவகத்தின் வாசற்படி தடக்கி நான் நெடுஞ்சாணையாய் விழ… ..

சத்தியமாய் இது உண்மை!

அவசர அந்தரத்திற்கு நேரம் மட்டுமட்டாக இருப்பின், கருணாவின் ‘கொண்டோ’ விலி ருந்து நீளப் பாய்ச்சல் செய்தால் மார்க் கம் தெருவை குறுக்கால் கடந்து அதரப் பழசாக ஒப்பனை பூண்ட உணவுச்சாலை யின் வரவேற்பு மண்டபத்தில் விழுவோம்.

ஆதியில் ‘ஜோன் வெய்ன்’ காலத்துக்குதி ரைகள் பூட்டிய ‘செரியற்’ வண்டிகள் நீண்ட பயணத்தின்போது தரித்து உணவருந்திப் போன மரபு அந்த உணவத்திற்கு உண்டு.

கருணாவிற்கு இங்கு ராஜமரியாதை.

பல கோடி மனிதத் துளிகளின் சங்கமிப்பில் சிதறிக் கரைஒதுங்கிய ஒரு துகளாக கரு ணாவின் அகால மறைவை என்னால் கடந்து போக முடியவில்லை


இது ஒரு தனி மனிதனின் மரணமல்ல.
அட்சய பாத்திரம் போல்
அள்ள அள்ளக் குறையா
கலை ஆளுமையின் வீழ்ச்சி!
பன்முத் தன்மைகொண்ட ஒரு
சமூகக் குறியீட்டின் சரிவு!

கருணா ஓர் அற்புதன்

ஓவியக்கலையின் பல உயரங்களைத்
தீர்மானித்தவன்
புகைப்படக் கலையில் பல திரைகளைத்
திறந்து வைத்தவன்.
அரங்கமேடைகளில் ஒளிஓவியம்
வரைந்தவன்.
சூரியக்கதிர்களைப் போல் முடிவிலித்திற
மைகள் திகைத்தவன்.
பல்துறை ஆற்றல்களின் ஒன்றியம் அவன்

தன் கலை ஆளுமைகளின் கதவுகளைத்
திறந்த
‘மாற்கு’ மாஸ்ரரை நித்தமும் சுவாசித்து
வாழ்ந்தவன்
ஒப்புக்கொடுத்த எந்தப் பணியிலும்
தான் உயிரின் ஒரு பாகத்தை ஆகுதி
ஆக்கியவன்.
கருணா!
கிழிக்கப்படாத
நாட்காட்டியின்
ஒரு தாளாக
உன்நினைவு
எங்களுள் என்றும்
நிலைத்திருக்கும்.

பிரிவுத்துயரால் வாடும் கருணாவின் குடும் பத்தினருக்கும் அத்தியந்த நண்பர்களுக் கும் எமது ஆதரவும்
அநுசரணையும்
எக்காலமும் உண்டு.



kandasamy.a@thaiveedu.com

# தூங்கச் சென்ற சூரியன்




- ரதன் -

ஓர் ஓவியம் அழகானதாக இருக்கும், பார்வையாளனுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கலாம், பார்வையாளனை ஒரு சிறந்த பிரசையாக மாற்றலாம், வாழ்க்கையின் அர்த்தத்தை அல்லது நோக்கத்தைப் பார்வையாளனுக்குத் தெளிவுபடுத்தும், சிந்தனைகளை மாற்றும் இவற்றுடன் can make us smarter, art is a time travel machine, art can protect us , art can give us pleasure (‘What to read and why’ by Francine Prose).

ஓவியம் இவ்வளவு மாற்றங்களை மனிதனுக்கு ஏற்படுத்துமானால், ஓவியனே அவ்வாறான மாற்றங்களுக்கு காரணமாகவுள்ளான். அண்மையில் மறைந்த ஒளி ஓவியன் கருணாவின் ஓவியங்கள் என்னில் பல மாற்றங்களை ஏற்படுத்தின.

கருணாவை நான் சிறு வயது முதலே அறிவேன். ஆனாலும் நேரடிப் பழக்கம் இல்லை. கனடா வந்த பின்னரே, ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கறுப்பு ஜுலை இன அழிப்பின் பத்தாண்டு நிறைவையொட்டிய ஓவியக்கண்காட்சியே முதல் அறிமுகத்தை ஏற்படுத்தியது. அப்பொழுதும் அவரது ஓவியங்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட உரையாடல்கள் அவருடன் ஏற்படவில்லை. சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா மலர் வடிவமைப்புச் செய்யக் கருணாவை அணுகிய போதே அவருடனான முதல் நேரடிச்சந்திப்பு ஏற்பட்டது. அதன் பின்னர் நடைபெற்ற அனைத்து விழாக்களுக்கும் கருணாவே மலர் தயாரிப்பினைச் செய்தார். இணையத் தளத்தையும் கருணாவே வடிவமைத்தார். இந்தியாவிலிருந்து அதிகளவு குறும் படங்கள் ரொறன்ரோ சர்வதேச திரைப்படவிழாவுக்கு அனுப்பப்படுவதற்கு கருணாவின் லே அவுட்டினாலான மலரும், இணையத்தளமுமே முக்கிய காரணமாகும். விழாவுக்கான அறிவித்தலில் இருந்து சுவரொட்டி வரை கருணா வின் கைவண்ணத்திலேயே உருவாகின. இவரது விளம்பரச் சுவரொட்டிகள் மிகவும் வித்தியாசமானவை. பிரதான ஊடகங்கள் சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவினை திரும்பிப் பார்க்க காரணமாயிருந்தன. ரொறன்ரோ சர்வதேசத் தமிழ்த் திரைப்பட விழா தொடர்ச்சிக்கும், வெற்றிக்கும் கருணாவின் சிறப்பான பங்களிப்பு மிக முக்கிய காரணம்.

சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவில் வெற்றி பெற்ற குறும்பட படைப்பாளிகள் பலர், தமிழ்நாட்டில் முழு நீளத் திரைப் படங்களில் இணைந்து பணியாற்ற, விழா மலரினையும், இணையத்தளத்தினையும் சான்றுகளாகக் காட்டியுள்ளனர். பலருக்கு இதனால் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. ரொறன்ரோவில் உள்ள திரைப்படப் படைப்பாளிகளுடன் கருணாவிற்கு நெருக்கமான உறவிருந்தது. அவர்கள் ஒவ்வொருவருடனும் தொடர்பு கொண்டு, மென்மையான குரலில் அவர்களை உற்சாகப் படுத்தி, அவர்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார். திரைப்படங்கள் எவ்வாறு திரையிடப்பட வேண்டும் என எங்களுக்கு ஆலோசனைகளையும் கூறியுள்ளார். ரொறன்ரோவில் தமிழ்த்திரைப்பட வளர்ச்சியில் கருணாவின் பங்கு மிக முக்கியமானது.

ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா கருணாவின் முக்கிய தேடல் களமாகவிருந்தது. ஒவ்வொரு வருடமும் கருணா விழாவில் திரையிடப்படும் முக்கிய படங்களைப் பற்றிக்கூறுவார். அவ்வாறு அவர் கூறி பல படங்களை நான் பார்த்துள்ளேன். Frida Kahloவின் சுயசரிதையை முன்வைத்து Frida என்ற படம் 2002ல் வெளியாகியிருந்தது. ஒரு நாள் அவரது வீட்டில் அப்படத்தை அவருடன் பார்த்தேன். அதில் வரும் ஓவியங்களை மிக விரிவாக விளங்கப்படுத்தினார். Van Gogh, The Adventures of Picasso, Renoir, Loving Vincent, Surviving Picasso போன்ற ஓவியங்கள் பற்றிய படங்களைப் பற்றி மிக விரிவாக உரையாடுவார்.

இவற்றுடன் ஒடுக்கப்பட்ட மக்கள் பற்றிய படங்களில் கருணாவின் தேடல் அதிகமாகவிருந்தது. கனடாவில் முதற்குடிகள், அவர்களது வாழ்வியல், அவர்கள் பட்ட அவலங்களை நன்கறிந்திருந்தார். அவர்கள் வாழும் பிரதேசங்கள் சிலவற்றுக்கும் சென்றுள்ளார். அவர்கள் வாழ்வியலைப் புகைப்படமெடுத்துள்ளார். முதற்குடிகள் பற்றி அவரளவிற்கு எவருக்கும் தெரியாது என்றால் மிகையாகாது. முதற்குடிகள் பற்றிய பெரும்பாலான திரைப்படங்கள் கருணா பார்த்துள்ளார். அவற்றை அறிமுகப்படுத்துமாறு என்னிடம் பல தடவைகள் கூறியிருந்தார்.

கடந்த வருடத்தின் பின்பனிக் காலத்தில் காணாமல் போனோரைப் பற்றிய ‘உரு’ குறும்படத்துடன் ஞானதாஸ் கனடா வந்திருந்தார். ‘உரு’வை மக்கள் மத்தியில் கொண்டு செல்லவேண்டும் என்ற முனைப்புடன் கருணா மிகத் தீவிரமாகச் செயற்பட்டார். பல முக்கிய விமர்சகர்களிடம் படத்தைக் காட்டி அவர்கள் கருத்தை ஒளிப்படமாக்கி சமூக வலைத்தளங்களில் பதிவேற்றினார். வீதிகளில் நின்று சுவரொட்டிகள் வழங்கினார். காணாமல் போனோரைப் பற்றிய அரசியல் விழிப்புணர்வு ரொறன்ரோவில் ஏற்பட்டமைக்கு கருணாவின் செயற்றிறன் மிக்கசெயல்பாடுகள் முக்கிய பங்குவகிக்கின்றன.

எனது முதல் நூலுக்கு (ஒளி தேடும் நிழல்) கருணாவே அட்டைப் படம் கீறியிருந்தார். அதன் பின்னர் ‘எதிர் சினிமா’ நூலை காலச்சுவடு வெளியிட்ட போது, அதன் அட்டையை கருணாவிடம் வடிவமைக்குமாறு காலச்சுவடு கண்ணன் கூறியிருந்தார். காலச்சுவடு பதிப்பகத்தின் பல நூல்களின் அட்டைப்படங்களை கருணா வடிவமைத்திருந்தார். இவரது அட்டைப் பட வடிவமைப்பைப் பல விமர்சகர்கள் புகழ்ந்துள்ளனர். நூலின் உள்ளடக்கத்தை இவர் வடிவமைக்கும் அட்டைப்படங்கள் மிகத் தெளிவாக வெளிப்படுத்தும்.

சிலகாலம் நாடகவெளியில் பங்காற்றியுள்ளேன். அங்கும் கருணா காணப்படுவார். நாடக மேடையேற்றத்தை கருணாவின் ஒளியமைப்புக்கள் இலகுவாக்கியுள்ளன. மார்க்கம் தியேட்டரில் உள்ள ஒளிக் கருவிகளை அதிகளவு கருணா பயன்படுத்தியுள்ளார். இதனை மனவெளியின் ஆரம்ப கால நாடகங்களில் காணலாம். கனடா நாடகவெளியில் கருணாவால் பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.




கருணாவுடன் உரையாடும் ஒவ்வொரு பொழுதிலும், அவர் புதிய தொழில்நுட்பங்களைப் பற்றி குறிப்பிடத்தயங்கமாட்டார். லே அவுட், ஒளிப்பதிவு, ஓவியம், ஒலிப்பதிவு, எடிட்டிங், கமராக்கள் என அனைத்தின் புதிய வடிவங்களை நன்கறிந்து வைத்திருந்ததார். அச்சு வேலைக்கு மிக இலகுவாக கருணாவின் லே அவுட்டுகள் அமைந்திருக்கும். அதே போல் திரைப்பட சுவரொட்டிகள் பல இவரது கைவண்ணத்திலேயே உருவாகியிருந்தன. ஏ.ஆர் ரகுமானின் கனடிய இசை நிகழ்ச்சியின் சுவரொட்டியை கருணாவே வடிவமைத்திருந்தார். ரகுமானே மிகவும் ஆச்சரியத்துடன் அந்த சுவரொட்டியை பார்த்துப் பாராட்டியதாக, நிகழ்ச்சி அமைப்பாளர்கள் கூறினார்கள். விளம்பர வடிவமைப்பில் ஒரு புதிய பாணியை அதற்கு ஒரு சீரிய அந்தஸ்தை இவரது வடிவமைப்பு பெற்றுக் கொடுத்தது.

இவர் படைக்கும் ஒவ்வொரு படைப்பிலும் மிக நேர்த்தி இருக்கும். மிகவும் ஈடுபாட்டுடன் செயல்படுவார். ஒரு சிறு தவறும் அதில் வரக் கூடாது என்பதில் குறியாக இருப்பார். இரவு மூன்று மணிக்கும் தொலைபேசியில் இது தவறாக உள்ளது. திருத்தி அனுப்புங்கள் என்பார்.

ஒரு தடவை நான் இத்தாலிக்கு செல்ல விருப்பம் என அவருடன் உரையாடும் பொழுது குறிப்பிட்டிருந்தேன். சில நாட்களின் பின்னர் அவரை அவரது வீட்டில் சந்திக்கும் பொழுது, இத்தாலியில் என்ன பார்க்கவேண்டும் எங்கு நீங்கள் தொலைந்து போக வேண்டும், பயணத்தின் மிக முக்கிய பங்கெது. எங்கு தங்கலாம், எங்கு நல்ல சுகாதாரமான உணவை, மிகக் குறைந்த விலையில் பெறலாம் என அனைத்தையும் கூறினார். நான் வெனிசையும் வேறு சில இத்தாலிய நகரங்களையும் சுற்றிப்பார்ப்பதற்கு கருணா கூறியவை பேருதவியாக இருந்தன.

பல திறமைகள் கொண்ட மிகச் சிறந்த ஓவியன். நவ அரூப வெளிப்பாடுகளை தனது ஓவியத்தில் வெளிப்படுத்துவார். ஓவியப் பெருவெளியில் இவரது ஓவியங்கள் பல கருத்துக்களை பார்வையாளன் மனதில் ஏற்படுத்தும். கருணா தனது படைப்புக்கள் மூலம் ஒரு புதிய உலகையே நிர்மாணித்தார். அதற்குள் எம்மை அழைத்துச் சென்றார். இன்றும் நாம் அவருடன் பயணிக்கின்றோம்.
வெனிஸில் காணாமல் போனால் எவ்வாறு திரும்பலாம் எனத்தெளிவுபடுத்திய கருணா, தொடர்ந்து புதிய உலகை நிர்மாணிக்க அவருக்கான உதவியை செய்யாமல், அவரது இயக்கம் நிற்பதை தடுக்க முடியாமல் போன குற்ற உணர்வு என்னுடன் என்றும் பயணிக்கும்.



rathan@thaiveedu.com




# கருணா: எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ஒளி

- பா.அ. ஜயகரன் -



ஓவியர் என்பவர் வண்ணத்தோடு பிறந்து, வண்ணத்தோடு வாழ்ந்து, வண்ணத்தோடு மரித்துப்போகிறார். எம்மைச் சூழ்ந்த வண்ணங்களையும், எம் கண்களுக்குப் புலப்படாத வண்ணங்களையும் எமக்கு காண்பிக்கக்கூடிய சக்தி அவர்களிடம்தான் உண்டு. ஒளியற்றுப் போனால் வண்ணங்களை நாம் அறிய முடியாது. ஒளியின் மாயையான வண்ணங்களை மனித மனத்தோடு பொருத்தக்கூடிய ஆற்றல் ஓவியருக்கே உரித்தானது. ஓவியம் என்பது வெறுமனே கோடுகளும் காட்சிகளுமல்ல. அது மனதுடனான உரையாடல் வெளி. அது ஒளியின் வெளி. அதைப் புரிந்துகொண்டவர்கள் தாம் ஒப்பற்ற ஓவியங்களை எங்களுக்கு தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவை காலகாலமாக நம் வாழ்வைப் பேசிக்கொண்டிருக்கின்றன. நமது சமூகத்தில் ஓவியராய் வாழ்வதென்பது ஒரு துறவு. நல்ல ஓவியர்களை உருவாக்கி வளர்த்தெடுத்து அவரைத் தாங்கும் சமூகமாய் நாம் இருக்கவில்லை. இச்சூழலில் ஓவியராய் உருவாகும் எண்ணமென்பது தன்னார்வ உள உத்வேகமே. ஓவியரானவர் புறச் சூழலுடன் போராடியே ஒவ்வொரு கணத்தையும் கடக்கவேண்டியுள்ளது. அவர்களின் ஆத்மார்த்தமான ஓவியக் கவனம் சிதைக்கப்படுகிறது. வாழ்வைக் கடத்துவதற்காக வேறு துறைகளில் கவனம் செலுத்த வேண்டிய துயரம் நிகழ்ந்துவிடுகிறது. இவ்வகையான தன்மைகளுடனேயே கருணாவைப் பொருத்திப் பார்க்கவேண்டியிருக்கிறது. கருணாவின் ஓவியம் மீதான கவனத்தையும் தேர்வையும் நாம் முன்னிறுத்திப் பார்க்க வேண்டும். அவர் தன் வாழ்நாளில் ஓவியத்தைச் சமூகம் புரிந்துகொள்ள வேண்டும் என்று பாடுபட்டவர். அதற்காய் ஓவியப் பட்டறைகள், ஓவியக்கருத்துரைகள், ஓவியக்கண்காட்சிகள் என்பவற்றை நடத்தியவர். கவனிக்கத்தக்க ஓவியராய் வருவதற்கான ஆற்றலும் ஆத்மார்த்த தேடலும் அவருக்கு இருந்தது. ஆனாலும் சமூகமாய் ஒரு தலை சிறந்த ஓவியரை உருவாக்கத் தவறிவிட்டோம். ஆயினும் தான் ஈடுபட்ட முயற்சிகள் அனைத்திலும் தனக்கான அடையாளத்தை அவர் விட்டுச் சென்றிருக்கிறார். குறிப்பாக வரைகலை வடிவமைப்புத் துறை, புகைப்படத்துறை, ஒளியமைப்புத்துறையில் அவரது பங்களிப்பு மிக முக்கியமானது. கனடியத்தமிழ்ச் சூழலில் அவரது படைப்புகள் என்றும் எமது கவனத்தில் நிற்கும். அவர் முன்னேயிருந்த நீண்ட பயணமும் அதை எதிர்கொள்ள அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் திடீர் மரணத்தால் நிறுத்தப்பட்டிருக்கின்றன. முக்கியமாக ஈழத்தில் முஸ்லிம் - தமிழ் மக்களுக்கிடையேயான புரிந்துணர்வு முயற்சி. அவரது மனத்தில் அணையாதிருந்த ஒளியை எம்மிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். அவ்வொளியில் வண்ணங்களைத் தேடவேண்டியவர்கள் நாங்களே. ஓவியருக்கு என் ஆத்மார்த்தமான அஞ்சலி.



jayakaran@thaiveedu.com

# நினைவில் நீங்காத ஓவியம்

- மனவெளி கலையாற்றுக் குழு -

மனவெளியின் ஆரம்ப காலங்களில் எம்மோடு உறுப்பினராக இணைந்து அதன் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு வழங்கிய நண்பர் டிஜி கருணாவை இன்று நாம் இழந்து நிற்கிறோம். சிறந்த ஓவியராக, புகைப்படக்கலைஞராக, வரைகலை நிபுணராக, தகவல் தொழில்நுட்பம் கைவரப் பெற்றவராக, நாடகமேடைகளில் ஒலி,ஒளி சார் தொழில் நுட்பவியலாளராக, அண்மைக் காலங்களில் சிறந்த கட்டுரையாளராக, கவிஞராக என்று விளங்கிய பல்கலை ஆளுமை ஒன்றைக் கலை, இலக்கிய உலகம் இழந்திருக்கிறது.

அவர் மனவெளியில் இணைந்த காலங்களில் வரைகலை தெரிந்தவர்கள் மிகவும் அரிதாகவே இருந்தனர். நுணுக்கமான கலையுணர்வுடனும் தேர்ந்த செய் நேர்த்தியுடனும் எடுத்த பணியை மற்றவர்களின் தூண்டலின்றி செவ்வனே செய்து முடிக்கும் இவரது இயல்பு மனவெளிக்கு ஒரு பெரிய பலமாகவும் சொத்தாகவும் இருந்தது. அவர் மனவெளியில் இணையும் வரை அரங்காடல் மேடைகளில் ஒலி, ஒளி தொழில்நுட்பங்களைத் தனி ஒருவராகவே கவனித்து வந்த நண்பர் சிவத்தின் பணி கருணாவின் வருகையால் மிகவும் இலகுவாக்கப்பட்டது.

அவரோடு பழகிய காலங்களில் அவருடைய பல சிறப்பியல்புகளை எம்மால் அவதானிக்க முடிந்தது. ஒத்திகைகளின் போது ஒரு குழந்தையைப் போல குதூகலிப்பதும் அங்கதச் சுவை தோய விஷயங்களை பரிமாறிக் கொள்வதும் மிகுந்த தேடல் மூலம் தான் இரசித்தவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதும் இன்றும் எமது கண்முன் நிழலாடுகின்றன. நாடகங்களில் தனக்குரிய பணிகளுக்கும் அப்பால் ஓர் உதவி இயக்குநருக்குரிய பொறுப்போடும் ஆர்வத்தோடும் எம்மோடு ஒத்துழைப்பார் அண்மைக் காலங்களில் அவர் எழுதிய கட்டுரைகளை வாசிக்கும் எவரும் அவருடைய தனித்துவமான எழுத்துப் பாணியை இனங்கண்டிருக்கக்கூடும்.

*சோம்பேறிகளும் முட்டாள்களும்கூட*
*சாளரங்களைத் திறந்து*
*மரணத்திற்காகக் காத்திருப்பதில்லை.*

*பெருவெளியில்*
*அலைந்து கொண்டிருந்த மரணம்*
*ஊஞ்சலில் வந்தமர்ந்தது...*

என்று தொடரும் அவர் எழுதிய கவிதை ஒன்றினை அண்மையில் வாசிக்க நேர்ந்தது. அது இவ்வாறு முடிகிறது .

*அது எமக்காகவும் காத்திருக்கிறது*
*பிம்பவெளிகளில் இருள் கனமாகி*
*நிழல்கள் விலகி நகர*
*நெளியும் அசைவில் நமக்கான*
*காத்திருப்புத் தெரிகிறது.*

அவரே கூறியிருப்பது போல நாம் எல்லோரும் மரணத்துக்காகக் காத்திருந்தாலும் மரணம் அவர் வாழ்வை இவ்வளவு சீக்கிரத்தில் அணுகுமென்று நாம் எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

அவர் வடிவமைத்த ‘அரங்காடல்’ என்ற எழுத்துருவைத்தான் நாம் இன்றும் உபயோகப்படுத்துகின்றோம். அவருடைய வாழ்வும், பணியும் மனவெளியில் என்றும் நீங்காத ஓவியமாக நிலைத்திருக்கும்.

- மனவெளி கலையாற்றுக் குழு.

■ ■ ■

# கருணா இல்லை என்பதை இதயம் மறுக்கின்றது

- பார்வதி கந்தசாமி -

கருணா எனக்கு ஒரு தம்பியாகவே பழகினார். வாஞ்சை ததும்பும் வார்த்தைகள்! அன்பினால் அனைத்து நட்புக்களையும் பேணிப் பாதுகாத்தவர். நான் கனடாவுக்கு வந்த புதிதில் தமிழ்ப்பெண்கள் சிறகொடிந்த பறவைகளாக அனுபவித்த துன்பங்கள் பலவற்றை அறிந்துகொண்டேன். அவர்களுக்கு ஆங்கில மொழி தெரியாததால் பல துன்பங்கள். மக்களும் வைத்தியத் தேவைகளை உணரவில்லை. மாரடைப்பால் பல ஆண்கள் இறந்தனர். பெண்களுக்குக் காப்பகம் பற்றிய அறிவு இருக்கவில்லை. பல பெண்கள் சிறகொடிந்த பறவைகளாகித் தற்கொலையை நாடினர். அப்பொழுது இலங்கைக் குடும்ப வேவைகள் சங்கம் என்ற நிறுவனம் ஜானகி பாலகிருஸ்ணன் தலைமையில் உருவாக்கப்பட்டிருந்தது. தமிழர் கனடாவில் அனுபவிக்கும் துயரம் பற்றி ரொறன்ரோ நகரசபையிடம் நாம் இருவரும், தமிழருக்கு அறிவூட்டல், விழிப்புணர்வு ஊட்டல் தேவைகளை எடுத்துக் கூறி நான்கு கைநூல்கள் தயாரிப்பதற்கான சிறு தொகை பணத்தைப் பெற்றுக்கொண்டோம். அவை தட்டச்சு மூலம்தான் தயாரிக்கப்பட்டன. இவற்றுக்கான படங்களை வரைவதற்காகத்தான் கருணாவை நாடினேன். அப்பொழுது டொன்மில்ஸை அண்டிய கிழக்கு யோர்க் பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த ஓவியர் மாற்குவின் மாணவனின் திறமைகளை அறிந்து அவரிடம் இந்த நான்கு நூல்களான, ‘காப்பகம்’, ‘மனஉளைச்சல்’, ‘மாரடைப்பைத் தடுப்பது எவ்வாறு?’, ‘பற்களைப் பாதுகாப்பது எவ்வாறு?’ ஆகியவற்றை ஆக்கிக்கொண்டேன். அவற்றுக்கான வரைபடங்கள் ஓவியர் கருணா கைவண்ணத்தில் உருவாகின. அவை சமூகத்தால் பெரிதும் வரவேற்கப்பட்டன. காப்பகம் என்ற கையேடு பெண் பலவித துன்பங்களால் அமுங்குவதைப் பல கைகள் அவளை நோக்கிய எறிகணைகளாக இருக்கக் காட்டப்பட்டுள்ளது. அந்த நூல் ஆண்களிடையே அச்சத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

பின்னர் எயிட்ஸ் நோயால் சமூகத்தில் இழப்புகள் ஏற்படத் தொடங்கியபோது எங்கள் பேசாப்பொருளாகக் காலாகாலத்தில் வைத்திருந்த பாலியல் தொடர்பான சிக்கல்களை அவிழ்ப்பதற்கு அறிவூட்டலைச் செய்யவேண்டிய தேவை அவசியமாக இருந்தது. இதற்காகக் கருணா செய்த அட்டைப்படம், அவர் தேர்ந்து கொண்ட கையேட்டுக்கான தலைப்பான, ‘மன்மதக் கலை’ கருணாவின் ஆளுமையையும் காட்டின. பாலியல் பற்றிய பிரச்சனைகள் பற்றிய வரை படங்கள் இலகுவாக மக்கள் புரியும் வகையில் அமைந்திருந்தன. பல ஆண்கள் மதுவுக்கு அடிமையாகி இருந்தனர். மதுபோதையில் மனைவி, பிள்ளைகளை வைத்து வாகனம் ஓட்டுவார்கள். இன்றும்கூட அவ்வாறான குற்றம் புரிந்து சிறையில் இருப்பவர்களில் தமிழர் தொகை அதிகமாகக் காண்ப்படுகின்றது. மது அரக்கன் என்ற கையேடு ஒரு வயதுப்பிள்ளைக்கான பிறந்த நாள் விழாவுக்கு குழந்தையின் முன்பாக மெழுகுவர்த்தி கொழுத்தப்பட்ட கேக்கும் இருபுறமும் பெரிய சாம்பெயின் வைன் போத்தல்கள் நுரை கக்கிக்கொண்டு பிள்ளையை வாழ்த்துவதாகவும் இருந்த வரைபடம் சமூகப் பிரச்சனையைத் தெளிவாகக் காட்டியது. முதியோர் வன்முறை என்ற நூலுக்கும் அட்டைப்படம் வரைந்தார். வசந்தம் என்ற நிறுவனத்தின் இலச்சினை கருணாவால் உருவாக்கப்பட்டது.

கருணாவின் இதயம் சமூகக் கொடுமைகளுக்கு எதிராகவே என்றும் இயங்கியது.

அவர் எங்களை எடுத்த புகைப்படங்களும் உயிரோவியங்களாகவே இருக்கின்றன. கருணாவுக்கு நான் சுட்ட அப்பங்களில் அபாரப் பிரியம்.

கருணா இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள என் இதயம் மறுக்கின்றது. ஆனால் இதயம் கனக்கின்றது. கருணாவின் ஆத்மா மக்கள் உள்ளங்களுடன் ஒன்றித்து இருக்கும் என்பதற்குக் காலம் கடந்தும் வாழப் போகும் அவரது படைப்புகள் சான்றாகும்.



parvathy.k@thaiveedu.com

# எமது சமூகத்தின் பேரிழப்பு




- குரு அரவிந்தன் -

ஓவியர் இயூஜின் கருணாகரன் வின்சென்ற் அவர்களின் மறைவு அவரை அறிந்தவர்கள் எல்லோருக்கும் அதிர்ச்சி தரக்கூடியதாக இருந்தது. ‘நேற்றிருந்தார் இன்றில்லை’ என்ற வாக்கியம் எவ்வளவு உண்மை என்பதை இந்த மரணம் எல்லோருக்கும் நினைவூட்டியது. எந்தவொரு தற்பெருமையும் இல்லாது, மிகவும் அன்பாகவும் அமைதியாகவும் வார்த்தைகளை அளந்து பேசும் இவர் எங்கள் மத்தியில் இன்று இல்லாதது ஓவியக் கலைக்கு மட்டுமல்ல, எமது சமூகத்திற்கும் பெரும் இழப்பாகும்.



கனடாவில் தை மாதத்தை மரபுத்திங்களாகக் கனடிய அரசு பிரகடனப்படுத்தியதில் இருந்து தமிழர் கலாச்சார நிகழ்வுகள் பலவற்றிலும் இவருடைய ஓவியங்கள் இடம்பெறத் தொடங்கியதால் தமிழ் ஆர்வலர்கள் பலரின் பார்வையும் இவர் வரைந்த நவீன ஓவியங்கள் மீது திரும்பியிருந்தன. மிக அற்புதமாக ஓவியம் வரைவதில் மட்டுமல்ல, நவீன யுகத்திற்கு ஏற்ப கணினி மூலம் தனது ஓவியங்களுக்கு மெருகூட்டுவதிலும் வல்லவர். எனது நண்பர் பி. விக்னேஸ்வரனின் ‘வாழ்ந்து பார்க்கலாம்’ என்ற நூலுக்கான அட்டைப் படத்தை டிஜிட்டல் முறையில்தான் வடிவமைத்திருந்தார். இது போன்ற பல நூல்களுக்கு இவர் அட்டைப்படம் வரைந்திருக்கின்றார்.

மார்க்கம் நகரசபை மண்டபத்தில் இவரது ஓவியக் கண்காட்சி மிகவும் சிறப்பாக நடைபெற்ற போது அந்த ஓவியங்களைப் பார்த்து ரசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. பெரிதும் சிறிதுமாகச் சுமார் 40 ஓவியங்கள் வரை அங்கே பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் கொண்ட ஆர்வம் காரணமாக அவர் ஏதாவது நூல்களுக்கு அட்டைப் படம் வரைந்திருந்தால் அவரைச்சந்திக்கும் போதெல்லாம், அதைப் பற்றி நான் பாராட்டுவேன். நூலின் உள்ளடக்கம் என்ன என்பதை இவரது அட்டைப்படம் அப்படியே எடுத்துச் சொல்லும் வகையில் இவரது ஓவியங்கள் கதை சொல்லும்.

இரண்டு வாரங்களுக்கு முன் அவருடன் உரையாடியபோது, ஓவியக்கலை பற்றி, குறிப்பாக நூல்களுக்கு அட்டைப்படம் வரைவது பற்றி ஒரு குட்டிப் பிரசங்கமே செய்திருந்தார். ஒரு நூலின் நீளம், அகலம் மட்டுமல்ல எத்தனை பக்கங்கள் என்பதும், எத்தகைய தாளில் அச்சடிக்கப்படுகிறது என்பதும் அவசியம் என்பது போன்ற பல நுணுக்கமான விடயங்களைத் தனது அனுபவத்தின் மூலம் தெளிவு-படுத்தியிருந்தார். தாய்வீடு பத்திரிகையில் ஓவியம் பற்றிய தனது அனுபவங்களைக் கட்டுரைகளாக எழுதியிருக்கின்றார். ஓவியக்கலை அருகிவரும் இக்கால கட்டத்தில் அனுபவம் மிக்க இவரது இழப்பு எம்மினத்திற்குப் பெரும் இழப்பாகும்.

*நெருநல் உளனொருவன் இன்றில்லை*
*- எனும்*
*பெருமை உடைத்து இவ்வுலகு.*

- திருக்குறள்-336

குறள் சொல்லும் நிலையாமையைப் புரிந்து கொண்டு அமைதி காண்போம். இனிய நண்பரின் ஆத்மா சாந்தியடைய நாங்களும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பிரார்த்திப்போம்.



*kuruaravindan@thaiveedu.com*

# ஓவியர் கருணாவுடனான நினைவலைகள்...

1996ம் ஆண்டு ‘முழக்கம்’ ஏடு ஆரம்பிக்கப்பட்டாலும் அதற்குப் பல வடிவமைப்பாளர்கள் உருவாக்கியிருந்த தலைப்பு ஆசிரியர் குழுவுக்கு நிறைவு அளிக்கவில்லை.

வடிவமைப்பாளரும் ஓவியருமான கருணா அவர்களின் திறமையைக் கேள்வியுற்று 1997ம் ஆண்டின் இறுதியில் அவரை அணுகியிருந்தோம். நமது எதிர்பார்ப்பைக் கேட்டுவிட்டு இருநாள் கழித்து வரச் சொன்னார்.

இருநாளில் ஆறு தலைப்புகளை வரைந்து வடிவமைத்து வைத்திருந்தார். அவரது திறமை கண்டு மலைத்துப்போனோம். அவர் வரைந்த ஆறில் ஒன்றினையே அன்றிலிருந்து ‘முழக்கம்’, 2009 மே 17ல் நிறுத்தப்படும்வரை பதிப்பில் பயன்படுத்தி வந்தோம்.

பின்நாளில் சிறப்புப் பதிப்புக்கு ஓவியர் மருது அவர்கள் வரைந்த கோட்டு ஓவியத்தைத் முகப்பாகப் பயன்படுத்த வடிவமைத்துத் தந்தார் கருணா அண்ணா.

அவரது அறையில் பல ஓவியங்கள் இருந்தன. ஓவியங்கள் அருமை எனப் பாராட்டினேன். தன்னைச் செதுக்கிய ஓவியர் மாற்கு அவர்களுக்குத்தான் அந்தப்பாராட்டு முழுமையாகப்போகவேண்டும், தனக்கு அல்ல என்று மிகவும் தன்னடக்கமாகக் கூறினார்.

அந்தத் தொழில்முறை சந்திப்பு காலப்போக்கில் நமக்கும் அவருக்குமான பெரும் நட்புப் பிணைப்பாக மாறிவிட்டது.

தனித்துவம், புதுமை, படைப்பாற்றல் - இவை மூன்றுக்கும் கருணா அண்ணன் அவர்கள் கொடுக்கும் முக்கியத்துவம் அளப்பரியது. அது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது.

முழக்கம் ஏட்டுக்கு ஒரு தனித்துவம் வேண்டும், அதற்காகப் பல விடயங்கள் செய்ய வேண்டும். முக்கியமாக ஒரு தனி எழுத்துரு (font) செய்யுங்கள். பத்திரிகையின் ஒரு துண்டு கிழிந்து தெருவில் கிடந்தாலும் அது ‘முழக்கம்’ ஏட்டின் ஒரு பகுதி என மக்களுக்குத் தெரியவேண்டும். அந்த அளவுக்கு எழுத்துரு மற்ற ஏடுகளிலும் விடத் தனியானதாக இருக்கவேண்டும் என அவர் எமக்கு ஆலோசனை சொன்னார்.

அது பெரும் வேலை, செலவு என நாம் அதனை நிராகரித்தோம். ஆனால் ஒரு சில கிழமைகளில் ‘முழக்கம்’ என்ற பெயரில் அதற்கான தனி எழுத்துருவைத் தானே வடிவமைத்துக்கொடுத்தார். மூன்று, நான்கு தடவைகள் அச்சேறவிட்டு மக்களின் கருத்து அறிந்து அதிக நேரம் வாசிக்க ஏற்றாற் போல் அந்த எழுத்துருவைச் செய்து கொடுத்தார்.

இவ்வாறாகப் பதிப்பு ஊடகத்துறையில் அவருக்கு இருந்த திறமை அளவு கடந்தது.

நாங்கள் வடிவமைப்பை பேச்மேக்கர் எனப்படும் மென்பொருளில் செய்து வந்தோம். அதை மாற்றுங்கள் உலகின் முன்னணி பத்திரிகைகள் எல்லாம் பயன்படுத்துவது குவாக் எக்ஸ்பிரஸ் என்ற மென்பொருள். அது இலகுவானது. செயல் தொழில்நுட்பம் மிக்கது என அறிவுரை சொல்லி நம்மை மாற்றவைத்தார்.

முழக்கம் இணையத்தளம் வடிவமைத்துத் தந்தார். மக்கள் களம், நேர்காணல், வளரும் தமிழினத்தில் மிளிரும் தமிழர்கள், புகலிட நிகழ்வுகள், இளநீர், மன்னர் பொன்னர் என முழக்கம் ஏட்டில் வெளிவந்த அத்தனை பகுதிகளுக்கும் இலச்சனைகள் வரைந்து கொடுத்தார்.

தியாகி திலீபன் நினைவு நாள் சிறப்பிதழ் முதன் முதலாக வர்ணப் பதிப்பு கொண்டு வந்தோம். அதுதான் கனடாவில் முதன் முதலில் வெளிவந்த தமிழ் முழுவண்ணப் பத்திரிகை.

ஏன் ஒவ்வொரு பதிப்பையும் கலரில் கொண்டு வரமுடியாது? புதுமைசெய்யுங்கள். மாற்றங்களைக் கொண்டுவாருங்கள் என்று அடிக்கடி சொல்வார். செலவு அதிகமாகும் கனடியத் தமிழ் வணிகர்களின் பொருளாதார பலம் அதற்கு ஏற்றதாக இல்லை என மறுக்க தானே அதற்கான புதிய தொழில்நுட்பத்தையும் தேடித் தந்து தானே பல ஆண்டுகள் முழக்கத்தின் முகப்பையும் வடிவமைத்துக் கொடுத்தார்.

பொதுவாக ஒவ்வொரு வியாழக்கிழமையும் நான் இரவு 8 மணிக்கு அவர் பணிமனைக்குப் போவேன். அவருக்குப் பிடித்த சிற்றுண்டிகளும், கோப்பியும் கொண்டுபோ-வேன். பலவேளைகளில் இரவு 2, 3 மணி வரை வரைகலை, விளம்பர வடிவமைப்பு வேலைகள் நேரமெடுக்கும். “கடிக்கச் சிற்றுண்டிகள், குடிக்கக் குளம்பி (கோப்பி) கொண்டு வந்திருக்கிறீர்கள். கேட்க ஒன்றும் இல்லையா” என நக்கலாகக் கேட்பார். ‘கேட்க’ என்பது தன்னுடைய படைப்புகள் குறித்து மக்கள் என்ன விமர்சனம் வைக்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்வது. அவருக்குச் சாப்பாடு, பணம், செலவுகள் போன்றவற்றைவிட தனது படைப்புக்கள் பற்றிய மக்களின் விமர்சனம் முக்கியம். விடியவிடிய வேலைசெய்து அவரை அவரின் அக்கா வீட்டில் இறக்கிவிட்டு நான் திரும்புவதுண்டு.

முழக்கம் ஏட்டின் அரசியல் நிலைப்பாட்டில் அவருக்கு அதிக உடன்பாடு இருக்கவில்லை. ஆயினும் சாதிமத மறுப்பு தொடர்பான, அவற்றுக்கு எதிரான செய்திகள் வெளியிடுவது, வெளிப்படையாக இயங்குவது போன்றவற்றில் பெரும் ஆர்வமும் உடன்பாடும் இருந்தது. தனது சொந்தப் பெயரிலும், புனைபெயர்களிலும் கட்டுரைகள், விமர்சனங்கள், தொழில்நுட்பம் போன்றவை எழுதிய கருணா அண்ணனுடனான பிணைப்பு முழக்கம் 2009ல் நிறுத்தப்பட்டதும் குறைந்துவிட்டது. அதன் பின்னர் அவ்வப்போது தொலைபேசி உரையாடல். அல்லது எங்காவது புத்தக வெளியீட்டில் கண்டால் பேசுவது. கடைசியாக இயக்குநரும் அவருடைய பள்ளித்தோழருமான அண்ணன் ஞானதாஸ் காசிநாதர் கனடாவுக்கு வந்தபோது சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த சந்திப்புப் படங்களை அழகுற எடுத்துதந்த கருணா அண்ணன், நம்மை விட்டு இவ்வளவு சடுதியாக விண்ணோடி விடுவார் எனச் சற்றும் எதிர்பார்க்க முடியவில்லை. ஊரில் பார்த்த காட்சிகளை, அந்த முகங்களை இயல்பான ஓவியமாக்கும் திறன், இயல்பான படங்கள், இயல்பான வடிவவமைப்புச் செய்யும் திறமை - இவை அனைத்தையும் கொண்ட கருணா அண்ணனது மறைவு எம் அனைவருக்கும் பேரிழப்பு!

கண்ணீர் வணக்கம்
அண்ணாச்சி....!



- திருமுருகவேந்தன் -

# சமகாலத்தில் நான் சந்தித்த உன்னதக் கலைஞன்!




சகலகலா வல்லவன் என்று கருணா அண்ணனைச் சொன்னால் அது மிகையல்ல, முற்றிலும் பொருத்தமே.

2017 இல் நடைபெற்ற தாய்வீடு அரங்கியல் விழாவுக்கான நடன நாடகம் ஒன்றைத் தயார்படுத்துவதற்கான சந்திப்பின் போது கருணா அண்ணனும் வந்திருந்தார். தாய்வீட்டின் ஆசிரியர் டிலிப்குமார் அவர்கள், அரங்கியல் விழாவின் நோக்கம், அதன் வரையறைகள் யாவற்றையும் சுருக்கமாகக் கூறிவிட்டு, கருணா அண்ணனைக் காட்டி, “இவர் உங்கட நாட்டியத்தை மேலும் மெருகூட்ட உதவுவார். எங்களிட்ட இருக்கிற ஒரு திறமைசாலி. அவரை வடிவாப் பயன்படுத்துங்கோ” என்றார்.

அதுவரை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த கருணா அண்ணன், மெதுவாகப் பேச ஆரம்பித்தார். “எங்களிட்ட இருக்கிற நல்ல தொழில்நுட்ப வசதிகளை நாம் பயன்படுத்தவேணும்” என்று ஆரம்பித்து, “இன்றைய நவீன வசதி கொண்ட அரங்குகளில் நினைப்பதைச் செய்ய முடியும்” என்று நம்பிக்கையான வார்த்தைகளைக் கூறினார். டிலிப்குமார் அவர்களும் “உங்கட விருப்பத்துக்குச் செய்யுங்கோ” என்ற உறுதிபடக் கூற, எமது படைப்பிற்கான இயக்கம் தொடங்கியது.

ஒரு படைப்பாளிக்குச் ஒரு சுதந்திரமான வெளி தேவை. அப்போதுதான் படைப்பு முழுமையடையும்.

கருணா அண்ணனோடு 2 மாதங்கள் முழுமையாக இணைந்து அரங்கியல் விழாவிற்கான நடன நாடக உருவாக்கத்தில் ஈடுபட்டிருந்தேன். என்னுடைய விருப்பங்களை அவரிடம் முதலில் கூறினேன். ஏன் என்றால் ஓர் அரங்க நிகழ்வு என்பது (theatrical performance) நடன உருவாக்கம் செய்யும் போது அதன் கதையோட்டத்துக்கு ஏற்ப, இசைக்கேற்ப அமையப் பெற்றிருக்கும். ஓர் இயக்குநரின் நோக்கங்களின்படி அந்த நடனத்தினைப் பல தொழில்நுட்ப வசதிகளுடன் காட்சிப்படுத்துவதே ஒளியமைப்பாளர் பணியாகும். இந்த வகையில் நான் சொன்னவற்றை உள்வாங்கியபின் தனது விருப்பத்தை அவர் கூறினார்

அது என்னை வெகுவாய்க் கவர்ந்தது. சரி அண்ணன் உங்களின் விருப்பம் போல் செய்வோம் என்று அவர் மேல் தோன்றிய நம்பிக்கையுடன் அவருக்கு முழுச் சுதந்திரத்தினை வழங்கினேன்.

என்னுடைய நாட்டியப் படைப்புகளில் புதிதாக இணையும் ஒவ்வொருவரிடமும் நான் கேட்கும் ஒரு கேள்வியை அண்ணனிடமும் கேட்டேன். “அண்ணன், நீங்கள் இந்த அரங்கியல் விழாவில் கடந்த பல ஆண்டுகள் இணைந்து செயல்படுகிறீர்கள். என்ன நோக்கத்துக்காக இந்த அரங்கியல் விழாவை முன்னெடுக்கின்றீர்கள்?” என்று கேட்டேன்.

‘எமது கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவர வேண்டும், அதுவும் சிறந்த அரங்கிலே சிறந்த தொழில்நுட்ப வசதிகள் அனைத்துமே நாம் வாழ்கின்ற இந்த நாட்டிலே கொட்டிக் கிடக்கிறது, அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். மேலும் எமது அடுத்த தலைமுறையினருக்குத் தலைமைத்துவப் பண்பையும் ஒன்றுகூடுகின்ற பண்பையும் அதேநேரம் எம்முடைய மரபுக்கலைகளையும் அவர்களிடம் எடுத்துச்செல்ல வேண்டும் என்ற இலக்குகளை மையமாகக் கொண்டே இந்த இந்த அரங்கியல் விழாவை நடத்தி வருகின்றோம்.” என்றார். அழகாகவும் ஆழமாகவும் இருந்தது அவருடைய நேர்த்தியான பதில்.

எமது பாரம்பரியக் கலையான கூத்து, நடனம், நாடகம் போன்றவற்றை இக்காலத்துக்குரிய தொழில்நுட்ப வசதிகளுடன் இணைத்து மெருகூட்டி அதை அடுத்த தளத்துக்கு எடுத்துச் செல்வது இவரது கனவு.

அந்தக் கனவை நனவாக்கும் முயற்சிகளின் உன்னத களமாக தாய்வீட்டின் அரங்கியல் விழாவைப் பயன்படுத்தினார் கருணா அண்ணன்.

‘ரோமியோ ஜூலியட்’ நாடகத்தை, பிரமாண்ட அரங்கிலே (mainstream performance theatre) பார்க்கக் கிடைத்தால் வாய் பிளப்போம். அந்தளவுக்கு நவீன உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியிருப்பார்கள்.



எமது கலைகளையும் இவ்வாறான தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி, பார்வையாளர்களுக்கு அற்புத அனுபவத்தை வழங்க வேண்டும் என்பது அண்ணனின் பேராசை. இதுவே அவரது தொலைநோக்குப் பார்வையும் கூட.

கருணா அண்ணனுக்கு எமது மார்க்கம் கலையரங்கம் மிகவும் பிடித்தமான அரங்கம். அங்கு அவருக்கு எல்லாம் அத்துப்படியாக இருந்தது. அங்குள்ளள்ள ஒளி, ஒலி அமைப்புகளின் நுட்பங்களை நன்கு அறிந்தவராக இருந்தார்.

நடனத்தில் பேசப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தைகளும் கூத்திலே பாடப்படுகின்ற ஒவ்வொரு வரிகளும் நடனப் பாடல்களும் வாசிக்கும் வாத்தியக்கருவிகளின் இசைகளும் எந்த பிசிறுகளும் இல்லாமல் துல்லியமாகப் பார்வையாளர்களிடம் போய்ச் சேர வேண்டும் என்பதில் எப்போதும் மிகக் கவனமாக இருப்பார்.

எங்களுடைய நடன நாடகத்தில், காட்சி அமைப்பில் கருணா அண்ணன் ஆற்றிய பங்கு மிகப்பெரியது.

கவிஞர் அறிவுமதியின் ‘ஆடல் கண்ணகி’ என்ற கவிதைக்கு முதன்முதலில் நான் நடன அமைப்புச் செய்திருந்தேன். அது கருணா அண்ணனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதற்கு அவர் அமைத்த பின்னணிக் காட்சியும் அசையும் காட்சியும் அனைவரையும் கவர்ந்திருந்தது. இரண்டு காட்சிகளிலும் அது பெரும் வரவேற்பைப் பெற்றது.

அதை காணொளிக் காட்சியாகப் பார்த்த கவிஞர் அறிவுமதி, நேரடியாகத் தொடர்பு கொண்டு கருணா அண்ணனைப் பாராட்டியதுடன் அதன் காட்சியமைப்பு பற்றி பெரிதும் மகிழ்ந்திருந்தார்.

‘எங்கெங்கு காணினும் சக்தியடா’ நாட்டிய நாடகம் கிட்டத்தட்ட 45 நிமிடங்களைக் கொண்டிருந்தது. இயற்கையுடன் ஒன்றிய பழந்தமிழர் காலம், பக்திக்காலம், காப்பியகாலம், இடைக்காலம், நவீனகாலம் என்று தமிழ் அன்னை நடைபயின்ற காலகட்டங்கள் ஒவ்வொன்றிலும் பெண் தன்னை எப்படி வெளிப்படுத்தினாள் என்பதைப் பொன்னையா விவேகானந்தனின் வரிகளில் நடன வடிவில் கொண்டு வந்தோம்.

இந்த நடன நாடகத்தின் ஒவ்வொரு காட்சிகளையும் தன்னுடைய ஒளியமைப்புகளாலும் பயன்படுத்திய பல்வேறு பின்னணிக்காட்சிகளாலும் பேரழகாக்கினார். ஒவ்வொரு காட்சிக்கும் பொருத்தமான பின்னணிப் படங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றுக்குப் பொருத்தமான ஒளியை அரங்கில் வீழ்த்துவது எளிதல்ல. அதியுயர்ந்த கற்பனை வளமும் படைப்புத் திறனும் வண்ணக் கலவைகள் பற்றிய அறிவும் இருக்க வேண்டும். கருணா அண்ணனிடம் அவை யாவும் இருந்தன. தன் ஆற்றலால் எங்களையும் அவையோரையும் பேரானந்தப்படுத்தினார்.

பார்வையாளர்கள் தங்களுடைய அனுபவத்தினைப் பகிரும்போது ஒரு திரைப்படத்தைப் பார்த்ததுபோல் இருந்தது என்று கூறினார்கள்.

இன்னொரு கட்டத்திலும் அவரின் தொழில்நுட்பம் பேசப்பட்டது.

‘ஏழிசையாய் இசைப்பயனாய்...’ எனும் சுந்தரரின் தேவாரத்துக்கு ஏழு இசைக் கருவிகளை நான் தொட, அவை உயிர் பெற்று இயங்குவது போன்றதொரு காட்சி வரும். அந்தக் காட்சிக்கு ஒளியால் உயிரும் உணர்வும் ஊட்டினார் கருணா அண்ணன். அக்காட்சியின் போது, ஏழு விதமான கோணங்களில் இருந்து ஏழு spotlight ஐப் பயன்படுத்தி அவர் செய்த ஒளிச்சேர்க்கை என் அனுபவத்துக்குப் புதிதாக இருந்தது.

இந்த நடனத்துக்காக இவர் செலவிட்ட நேரம், அதற்காக அவர் வெளிப்படுத்திய தேடல்கள் எம்மை ஆச்சரியப்படுத்தின. ஐந்து தடவையேனும் எமது ஒத்திகையைப் பார்த்திருப்பார். அந்தநேரத்தில் அதை மேம்படுத்தும் நோக்கில் தனது கருத்துக்களை மென்மையாகவே கூறுவார்.

இந்த நடன நிகழ்ச்சி மேடையில் தொடங்கும் நேரம். மாணவர்கள் அனைவரும் தயாராக நிற்க, திரை விலகுகின்றது. முதற்காட்சி விரிகின்றது. இயற்கையின் அதிகாலைப் பொழுது. திருப்பள்ளியெழுச்சி இசைக்கப்படுகின்றது. அவ்வேளை காலைப்பனியாக விலகாத புகாருக்கிடையே வண்ணநிற ஒளியைப் பாய்ச்சுகிறார் கருணா அண்ணன். என்னவொரு அற்புதமான தருணம். புலருமொரு அழகிய பொழுதில் திருப்பள்ளியெழுச்சி இசை செவிகளைத் தொட, அந்த அரங்கில் நான் தேவலோகக் காலைப்பொழுதையே கண்டேன்.

மெய்சிலிர்த்து ஆனந்தக் கண்ணீர் விட்ட அந்தத் தருணத்தை நான் என் வாழ்நாளில் மறக்க முடியாது. ஓர் ஆடல் நிகழ்ச்சிக்கு முழுமையான சுதந்திரத்துடன் ஒளியமைக்க வேண்டும் என்ற தன்னுடைய கனவை எங்கள் நிகழ்ச்சி வாயிலாக நிறைவேற்றியிருந்தார் கருணா அண்ணன். இதை நான் எனக்குக் கிடைத்த பாக்கியமாகவே கருதுகின்றேன்.

கருணா என்னும் படைப்பாளி விட்டுச் சென்ற சிந்தனைகளும் வழிகாட்டல்களும் எம் அனைவரிடமும் நிறைந்துள்ளன.

கருணா அண்ணனோடு பணியாற்றக் கிடைத்த தருணங்கள் அழகானவை. அறிவூட்டியவை. புதிய தேடல்களுக்கான கதவுகளைத் திறந்து விட்டவை. அவையே இனியும் எனக்கு வழிகாட்டவல்லனவாக அமைகின்றன.

குறுகிய காலமே பழகினாலும் அவர் என் ஆடல் துறையில் பகிர்ந்து கொண்ட அனுபவப் பரிமாற்றம் மிகப் பெரிது!



- கார்த்திகா பார்த்திபன் -

# நான் கண்ட கருணா




கலைகளில் அவள் ஓவியம் என்பது கவி யரசர் கண்ணதாசனின் திரைப்படப் பாடல் வரி.

கவிதையையும் இசையையும் தினமும் இரசித்துணர்ந்த அற்புதக்கலைஞர். அவ ருக்குள் ஓவியத்தின் மகிமை அப்படிப் புகுந்ததன் காரணம் என்ன?

கலைகள் யாவினதும் பரிமாணத்தை வெளிக்காட்டும் ஆற்றல் ஓவியத்திற்கு உள்ளதை அவர் அப்பவே உணர்ந்தி ருந்தார் போலும்.

பொதுவாகவே கலைகளுக்கு இதுதா-னென்று ஒரு வரலாற்றைத் தீர்மானிக்க முடியாது. மனித சமூகத்தின் ஆரம்ப கால வளர்ச்சியோடு அவை ஒவ்வொரு கட்ட டத்தில் ஒவ்வொரு ரூபத்தில் இணைந்தி ருக்கின்றன.

கூத்து, இசை, நாடகம் என்பன எப்போது ஆரம்பித்தன என்று சொல்லமுடியாது. ஓவியம் என்பது குழந்தைக்கு சந்திரனைக் காட்டி உணவு தீத்துவதிலிருந்து ஆரம் பிக்கின்றது. தூரத்தில் தெரியும் மாட்டைக் காட்டி ஆட்டைக் காட்டி உணவூட்டுவதி லிருந்து தொடங்குகிறது. சந்திரனைக் காட்டி "உம்மாண்டி" என்பதோ அல்லது அவ்வைப்பாட்டி என்பதோ எதுவானாலும் குழந்தைக்கு அங்கு நவீன ஓவியம் தொடக்கிவிடப்படுகிறது.

## நவீன ஓவியம்:

17ம் நூற்றாண்டில் வந்த காமராப்பெட்டி மரபு வழியாக வந்த ஓவியர்களின் வயிற் றில் நெருப்பைக் கொட்டத்தொடங்கியது.

மரபுவழி வந்த ஓவியர்கள் தமது ஓவி யங்களில் வரையறுக்கப்பட்ட பரிணாமம், இணக்கப்பாடு, சமநிலை, அமைவு , நிறச் சேர்க்கை போன்ற பல அம்சங்களை மரபு ரீதியான ஓவியர்கள் வரையறுத்த னர். வித்தியாசமான அபூர்வமான கலைத்தன்மை வாய்ந்தவர்களாக இருந்தனர்.

அரசர்களையும் இராணிகளையும் நிலச் சுவாந்தர்களையும் பண்ணையார்களையும் அவர்களின் பாரியார்களையும் நீண்ட நேரம் இருத்தி வைத்து படம் வரைந்து அதற்கான பண்டத்தைப் பெற்று வந்த மரபு வழி ஓவியர்களுக்கு நொடிப்பொழு-தில் விமபத்தைப் பிரதிசெய்யும் 'கமரா' பெருஞ் சோதனையாயிற்று.

ஓவியம் பற்றிய முரணான கருத்தமைவு கள் தோன்றத்தொடங்கின. மரபு ஓவியத் திலிருந்து நவீன ஓவியம் ஆரம்பமாயிற்று. மனபதிவுவாதம் என்ற கொள்கை உரு வாயிற்று. நவீன ஓவியம் மரபு ஓவியத் திற்கு முன்னதாகவே மாந்திரீகம் போன்ற விடயங்களில் பயன்பாட்டில் இருந்தது. எனினும் நவீன ஓவியங்கள் என்பவை வி-வேகம் சார்ந்தவையாக அமைந்தமை எனவும் முன்பு இருந்தவை மாந்திரீகங்க ளுக்கு பயன்பட்டவை எனவும் கருதப்பட் டது.

## யாழ்ப்பாணமும் மேற்கு ஓவியமும்:

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் ஓவியத்திற்கு என்று ஒரு மரபு இருக்க வில்லை. மேற்கத்தைய பாணி ஓவியங் கள் பாடசாலைகள் மூலம் ஊட்டப்பட்டது. ஆங்கிலேயர் தமது விட்டோரிய தத்ருபப் பாணி ஓவியங்களை அறிமுகம் செய்த னர்.

யாழ் ஓவிய வரலாற்றில் எம்மாற் குறித்துச் சொல்லக் கூடிய ஒருவர் ஓவியப் பாடக் கல்வியதிகாரி எஸ் ஆர் கனகசபை அவர் கள். SRK அவர்கள் இரட்டுத்துணியில் "ஆயில் பெயிண்ட்" (எண்ணெய் வண்ண) ஓவியங்களை முதன்முதல் ஆரம்பித்த ஒருவர். இது மேற்கத்தையப் பணியாகும்.

மாற்கு மாஸ்டர், எஸ் ஆர் கனகசபை அவர்கள் தான் மேற்கத்தியப்பாணியை எம்மிடத்தில் அறிமுகம்செய்தவர் எனவும் அதனை அன்று பலர் பின்பற்றுவதாகவும் தனியே ஒரு ஓவிய "இன்ஸ்பெக்டராக" இருக்காமல் பல விடயங்களைத் தேடி அறிந்த ஒருவர் அவர் என்றும் SRK பற் றிச் சொல்வார். எஸ். ஆர். கனகசபையின் பணி இலங்கை ஓவிய வரலாற்றில் முக்கி யம்பெற்ற 43 குழுவினருடன் தொடர்பு டையது.



SRK ஆரம்பித்த வின்சர் ஓவியக் கழகத் தின் பணியும் எமது ஓவிய வரலாற்றில் முக்கியமானது.

1938 மார்ச்சில் கோப்பாயில் தொடக்கப் பட்ட வின்ஸர் ஆட் கிளப்பில், SRK.யின் வழிகாட்டலில் ஓவியப்பயிற்சிகளில் ஈடு பட்ட இராசையா, எம்.எஸ்.கந்தையா. கே.கனகசபாபதி, ஐ.நடராசா, க.இராசரத் தினம் என்போர் பின்னாளில் புகழ்பெற்ற ஓவியர்களாகப் பரிணமித்தனர். ஓவியரும் நாடகத் தயாரிப்பாளருமான சானாவும் வின்ஸர் ஆட்கிளப்புடன் தொடர்புடைய வராயிருந்தவராவார்.

நாம் இன்று காணும் நவாலியூர்ச் சோமசுந்த ரப் புலவரின் படம் அமரர் SRK யினால் வரையப்பட்ட படமாகும்.

## மாற்குவும் அவர் விழுதுகளும்:

SRK யின் மறைவின் பின்னர் ஓவியர் மாற்குவுடன் இணைந்து சிலரால் ஆரம் பிக்கப்பட்டது விடுமுறைக்கால ஓவியக் கழகமாகும். நியூசீலாந்தில் வதியும் ஓவியர் அற்புதசிங்கம் இங்கு ஒரு வர்த்தக ஓவி யராகவும் அரங்க அமைப்பு ஓவியராக வும் பணியாற்றுபவர்.

இந்த விடுமுறைக்கு கழகத்தில் பயின்ற இவருடன் ரமணி, செல்வநாதன், தங்கராஜா, புகழேந்தி, ஞானமலர், பேபி ஆகியோரும் வேறு சிலரும் பயின்றுள்ளனர். விசாகப் பெருமாள், சுவாம்பிள்ளை ஆகியோர் ஆசிரியர்களாக இங்கு பணிபுரிந்துள்ளார் கள்.

நவீன ஓவியத்தை எங்களுக்கு அறிமுகம் செய்ததில் மாற்கு மாஸ்டருக்கும் விடுமு றைக்கால ஓவியக் கழகத்திற்கும் பெரும் பங்கு உண்டு.

மாற்கு மாஸ்டர் ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் கரவெட்டி சயன்ஸ் சென்ரரிலும் ஓவிய வகுப்பினை நடத்திவந்தார். நானும் அங்கு அவரது மாணவராகச் சேர்ந்து சுமார் ஒரு வருடத்துக்கும் மேலாக படிக்க முடிந்ததை இங்கு குறித்தல் பொருத்தமாகும்.

உயர்தரக்கல்வி, வேலைவாய்ப்புகள் என் பவற்றின் வாழ்வியல் சூழலின் வகிபா கங்களினால் இந்த வகுப்பும் முடிவுக்கு வந்தது. அவரது மாணவர்களின் ஓவியங் களை கண்காட்சிகளாக நடத்துவது அவ ரது ஊக்குவிப்பில் ஒன்று.

என்னைப் பொறுத்தவரையில் எனது தொலைக்காட்சி நெறியாள்கைக்கு அமைப் பிலிருந்து shots selection, காட்சித் தெரிவு, வண்ணச்சேர்க்கை என்பவற்றில் மாற்கு வின் பயிற்சி என் ஆளுமையில் பக்கத் துணையாக இருந்தது. ஓவியம் இங்கு காட்டும் வகிபாகத்தை நாம் உணரலாம்.

மாற்கு மாஸ்டரின் மாணவர்களில் குறிப் பிடத்தக்கவர்களாக அருந்ததி, வாசுகி, நிர்மலா, வைதேகி போன்றோர் தொடர்ந்தும் தமது ஆற்றலை வெளிப்படுத்தி நின்றவர் கள். பல்கலைக் கழகம் வரை அதனைத் தொடர்ந்தவர்களும் இவர்களில் அடங்கு வர்.

80களில் உச்சம் பெற்ற ஈழத்தமிழோவிய வரலாறு பின்னர் கோட்டு முறைச் சித்திர வகையில் இளையவர்களைக் கவர்ந்தது. 80களின் பின்னர் கைலாசநாதன், நிலாந் தன், சனாதனன் போன்றவர்கள் குறிக்கத் தகுந்தவர்களாகின்றனர். இவர்களது ஓவி யங்கள் மேற்குறித்த நவீன பாணிகளி னின்றும் வித்தியாசமானவையாகின.

## கணினியின் வருகை:

கணினியின் வருகை அதில் ஆர்வம்கொண்ட இளையவர்களின் ஓவிய ஆளுமை நவீன ஓவியத்தில் புதுமையையும் அறிவார்ந்த மட்டத்தையும் தோற்றுவித்தது. இணை யங்களின் வருகையினால் ஓவியங்கள் மீதான பார்வையாளர்களின் ரசனை மட் டத்தை மேவக்கூடிய வகையில் எம்மவர் கள் சிலர் இந்த ஓவிய முறையிலும் தங் கள் ஆற்றலை வெளிப்படுத்தினர்.

## ஊடகங்கள்:

நவீன ஓவியங்களை வெகுசன ஊடகங்கள் ஊக்குவிக்காமை எம்மத்தியில் அவை வீச்சான வளர்ச்சியை அடைய முடிய வில்லை. சில சஞ்சிகைகள் மட்டுமே முக் கியத்துவம் கொடுத்தன. யேசுராசாவின் அலை, உமா வரதராஜனின் வியூகம், மூன் றாவது கண் போன்றன குறிப்பிடத்தக்கவை. சரிநிகர், திசை ஆகிய பத்திரிகைகளைத் தவிர தேசிய வார இதழ்களில் தினக்குரல் 90களில் நவீன ஓவியங்களை உள்வாங் கியது. மக்களின் ரசனைக்கு முன்னர் ஊடகங்களின் பொறுப்பாளர்களுக்கும் ஆசிரிய பீடத்திலுள்ளவர்களின் நவீன ஓவியம் தொடர்பான ரசனையும் புரிதலும் ஈழத்து தமிழோவிய வளர்ச்சியில் முக்கிய மானதொன்றாயிற்று.

மேற்கின் பாணி இந்தியாவிலும் மட்டுமல்ல சீனாவிலும் ஓவியர்களிடத்தில் கலந்து கொண்டது. அதுபோலவே நவீன ஓவியங் களும் தென் இந்திய சஞ்சிகைகளில் பிர வேசிக்க எமது வாசகர்களின் புரிதலுடன் எங்களது வார இதழ்களிலும் அது படிப் படியாக அரங்கேறியது.

## வர்த்தக ஓவியம்:

இதே வேளை வர்த்தக ஓவியங்கள் என்று ஒரு புதிய கலைவடிவத்தின் தோற்றம் ஓவியத்தின் அடுத்த பரிமாணமாகியது.

சிங்கள ஓவியர்கள் பற்றியவிவரணமான 'டெலிதுட' (டெலி - தூரிகை) என்ற தொடர் தொலைக்காட்சி விவரண நிகழ்ச்சிக்கு நான் தயாரிப்பு உதவியாளனாக (ஓவி யத்தில் ஆர்வமுள்ளவனாக இருந்தமை யால் அதன் நெறியாளர் காமினி அபேய் கோன் (இவரும் இலங்கையின் சிறந்த ஓவியர்களில் ஒருவர்) எனது விருப்பத்தின் பேரில் என்னையும் தமது தயாரிப்புப் பணியில் இணைத்துக்கொண்டார். அதன் போது பல ஓவியர்களுடன் பழகும் வாய்ப் புக் கிடைத்தது.

சிலர் தாம் ரமணி மாஸ்டருடன் கற்றதாக வும் ரமணி ஒரு சிறந்த ஓவியர். ஆனால் அவர் வர்த்தக ஓவியத்துக்குள் தம்மை இணைத்துக்கொண்டுவிட்டார் என்று சொல் வார்கள். சிங்களத்தில் உள்ள சிலரின் பெயர்களை சொல்லி அவர்களை போல என்பார்கள்.

தொடர்தல் 29ம் பக்கம்

# அன்புள்ள கருணா!




எத்தனையோ மின்கடிதப் போக்குவரத்துக்கள் எங்களுக்குள் இருந்திருக்கும். இப்படி ஒரு கடிதத்தை உனக்கு எழுதுவேன் என நான் எப்பொழுதும் எண்ணிப் பார்த்ததில்லை. நீ இங்கு இல்லை என்ற செய்தியால் இதயம் இருண்டுபோய்க் கிடக்கிறது. வர்த்தக வாழ்க்கையில் நான் வழமைக்குத் திரும்பிவிட்டாலும் இனி நீ வரமாட்டாய் என நினைக்கும் போது நிஜம் வலியாய் நினைவுக்குள் வந்து இறங்குகிறது நண்பனே.

**என் வீட்டின் இன்னொரு சகோதரன்:**
1997ம் ஆண்டு பொன்னையா விவேகானந்தன் உடன் டொன்மில்ஸில் உள்ள உன் வரைகலை அலுவலகத்துக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 'கலையரசி' விழாவிற்கான வடிவமைப்பு வேலைகளுக்காக வந்தபோது நாங்கள் முதன் முதலில் சந்தித்துக்கொண்டோம். அன்று தொடங்கி 22 ஆண்டுகள் வளர்ந்த நட்பு மாசி 22 உடன் முடிந்து விடும் என்பதை நினைத்துக் கூடப்பார்த்ததில்லை. 'கருணா மாமா' என என் பிள்ளைகள் உரிமை கொண்டாடும் ஓர் உறவாக எங்களோடு உறவாடிய நீ நிரந்தரமாய் உறங்கிவிடுவாய் என என் உள்ளுணர்வுகள் எள் அளவும் சந்தேகித்ததில்லை.

**வரைகலைகளில் ரவிவர்மா:**
வரைதல் என்னும் வரத்துடன் நம்மிடையே வாழ்ந்த நல்ல நண்பனே! உன்னோடு பழகிய பின்புதான் ஓவியம் என்பதும் மனித கலாச்சாரத்தின் ஓர் அங்கம் என்பதையும் புரிந்து கொண்டேன். நினைப்பதை ஓவியமாக்கி அதற்கு உயிரூட்டும் பிரம்மாவே, உன் உயிர் நீக்கி உன்னை ஓவியமாக்கிய அந்த ஓரவஞ்சகனை எங்கு போய்த் தேடுவேன்?

கருணா என்னும் வரைகவியோடு கைகோர்க்காத அச்சகப் பதிப்புகள் இருக்க முடியாது, விளம்பரங்கள், புத்தக அட்டைகள், பெருந்திரை விளம்பரங்கள் என ஏராளம். 'ஸ்ரார் 67' என்னும் திரைப்படத்தின் உன் பெருந்திரை விளம்பரம் ஸ்காபரோ 'சினிப்பிளெக்ஸ்' திரையரங்கில் அத்திரை அரங்கின் சுவர் உயரத்துக்கு எழுந்து நின்றபோது பல்லினத்தவர்களும் அண்ணாந்து பார்த்துச் சென்ற பரபரப்பை எப்படி மறக்க முடியும் நண்பனே!

ஒளியைத் தூரிகையாக்கி நிறங்களை ஜாலங்களாக்கி நீ சுட்டுத் தள்ளிய நிழற்படங்கள் எத்தனை எத்தனை. பாடாவதி படப்பிடிப்புப் பெட்டியிலும் பரவசமூட்டும் புகைப்படங்களை கொடுக்கும் ஆளுமையின் சொந்தக்காரனே எப்படியடா கண்ணிமைக்கும் நேரத்தில் காலன் உன்னைக் கவர்ந்துசென்றான்? அங்கேதும் விஷேடமோ? ஞாபகம் வருகிறது...கமெராவின் சொறிக்கேட்டுப் படம் போடும் தமிழர் காலத்தில் மெழுகுவர்த்தி ஒளி உபயோகித்து செல்பேசியால் கூட சிறப்பான படங்களை செதுக்க முடியும் எனச் செய்து காட்டிய செயல் வீரனே செத்து மடிந்ததன் செய்தி தான் என்ன?

**அரங்க ஒலி, ஒளியின் பிரமாண்டம்:**
மேலைத்தேயத்தவர்களாலும் பாரியகுழு முயற்சினாலும் மட்டுமே ஓர் அரங்க ஒலி, ஒளி அமைப்புச் சாத்தியம் என்ற நம்பிக்கையைத் தகர்த்து ஓர் அங்க நாயகனாக பல அரங்கங்களை அலங்கரித்தவன் நீ. தனி ஒருவன் திறமையினாலும் சாதிக்க முடியும் என நடத்திக் காட்டியவன் நீ. அரங்காடலும் அரங்கியல் விழாவும் அதற்குச் சாட்சியல்லவா. எத்தனையோ அரங்குகள் பார்க்க வேண்டிய நீ இவ்வாறு அமைதியுற்றது ஏன்?

**நீ, நான், தேசியம்:**

2004ம் ஆண்டு காலப்பகுதி அது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சக வெளியீடுகள், அவர்களின் இலச்சினைகளை இலத்திரனியல் படுத்துதல், புதியன உருவாக்குவது என புலிகளது கர்மேசியல் (Commercial) வளர்ச்சியில் பாரிய இயக்கமாக இருந்தவன் நீ என்பது பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்களின் வேலைகள் செய்து கொண்டிருக்கும் நேரங்களில் எவரின் வருகையையும் தவிர்த்து விடுவாய். அதில் நானும் அடக்கம். அவர்களின் போராளி போல் இரகசியம் காத்த இலட்சியவாதி நீ.

என் நண்பர்கள் ஆரம்பித்த 'தேசியம்' பத்திரிகைக்கான ஆரம்ப வேலைகளைச் செய்து கொடுத்த நாட்களில் பத்திரிகைக்கான ஒழுங்கமைப்பு, வடிவமைப்பில் கையாளப்பட வேண்டிய நேர்த்தி என்பவற்றை சொல்லிக் கொடுத்து அப்பத்திரிகையின் தரத்தை பலரிடம் சிலாகித்தவன் நீ. உன் பேரிழப்பை என்னால் ஏற்க முடியுதில்லை.

**தமிழில் உயிரானவன்:**

தமிழர்களுக்குத் தமிழ் என்பது உயிர். புலம்பெயர் தேசத்தில் இந்த உயிர் மொழியை உயிர்ப்போடு பல உயரங்களுக்கு எடுத்துச் சென்ற மூத்த தளபதி அல்லவா நீ. இலக்கியம், சினிமா, கவிதை, உரையாடல்கள், பேச்சுகள் எனத் தமிழின் எல்லாத் திசைகளையும் தெரிந்து வைத்திருந்தவன் நீ. பண்டைத் தமிழைப் பல தடவைகள் மின்னியல் படுத்தியவன் நீ. 'கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே' என்னும் கந்த புராணம் போல் தமிழுக்காய்ப் பல்கிப் பெருகியவனே! மொழியிழந்த புலம்பெயர் வாளர்கள் போல் தமிழும் தவிக்கிறதே நண்பா?

பல மனித உரிமை மீறல்களைப் பார்த்த சமூகத்தைச்சார்ந்தவர்கள் நாங்கள். ஆனால் மரணம் கூட மரணஉரிமை மீறல் செய்யும் என என் மனதில் ஒருபோதும் எண்ணியதில்லை. உன்னைக் காவுகொண்ட பின் மரணம் கூட ஒரு கணம் வெட்கித் தலை குனிந்திருக்கும்.

**திருக்கயிலாயம்:**

*வானத்தார் போற்றும் மருந்தே போற்றி*
*வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி*
*ஊனத்தை நீக்கும் உடலே போற்றி*
*ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி*
*தேனத்தை வார்த்த தெளிவே போற்றி*
*தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி*
*கானத்தீ யாட லுகந்தாய் போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி.*

**பொழிப்புரை:**

தேவர் போற்றும் அமுதமாய் வந்து என் உள்ளம் புகுந்தவனாய், உயிர்களின் குறையைப் போக்கும் அருள் உருவம் உடையவனாய், ஓங்கித் தீப்பிழம்பாய் உயர்ந்தவனாய், தேனை வடித்த தெளிவு போல்பவனாய், தேவர்களுக்கும் தேவனாய், சுடுகாட்டுத் தீயில் கூத்தாடுதலை விரும்பியவனாய் உள்ள கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல .

சிவனைப் போற்றும் திருநாவுக்கரசர் போல் இனி உன்னைப் போற்றுவதைத் தவிர என்னிடம் வேறு வழி உண்டா சொல்? எங்கு இருந்தாலும் இளமை மாறாத உன் சிரிப்போடு உன்னதமான இடத்தில் நீ இருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன். மரணமே மறுபிறவியிலும் அவனைக் கருணாவாகப் பிரசவித்துவிடு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
நட்புடன்
க. சிவமணி



**- க. சிவமணி -**

# நான் கண்ட கருணா...

28ம் பக்கத் தொடர்ச்சி...

மரபு, நவீன ஓவியங்களின் அப்பால் - வர்த்தக ஓவியம் என்று ஒன்று இவற்றுக்குச் சமாந்தரமாக கோடு போடத்தொடங்கியது.

**கருணாவும் கரவெட்டியும்:**

மனித வரலாற்றுடன் இணைந்த ஓவியமும் சிற்பமும் மதங்களுடன் இணைந்தவை. சித்தன்னவாசல் குகை ஓவியங்களும் ஆசீவக இந்தியாவின் துறவிகளுடையது என்றும் சைன சமயத்தினருடையது என்றும் இருவேறுபட்ட கருத்துகள் கொண்டவை. அஜந்தா ஓவியங்களைப் போன்று தனிச் சிறப்பு மிக்க இந்த ஓவியங்கள் சுமார் 1000 - 1200 ஆண்டு பழமையானவை.

கத்தோலிக்க மதத்திலும் ஓவியங்களும் சிற்பங்களும் நன்கு பிணைந்தவை. விபரங்கள் இங்கு அவசியமில்லை. இங்கு ஆலயச் சுருபங்களும் ஆலயத்திலுள்ள படங்களும் கிறிஸ்துவின் திருப்பாட்டினைக் காட்டும் 14 தலங்களும் ஆலயப் பத்திருப்புகளும் சாளரக்கண்ணாடிகளின் வண்ணங்களும் ஓவியமாய் அவை சொல்லும் தகவலும் கத்தோலிக்க ஆலயங்களில் முக்கியமானவை.

என் அன்புக்குரிய கருணா எனது நெருங்கிய உறவினர். அயலவர். அதனால் (தான்) எனது ஊரவர். அவர் எமது தேவாலய விழாக்களில் அவற்றின் நிகழ்ச்சிகளான நாடகங்கள், வில்லுப்பாட்டுகள், இசை நிகழ்ச்சிகள் போன்றவற்றின் ஒத்திகைகள் நடைபெறும்போது சின்னஞ் சிறு பையனாக வந்திருந்து பார்ப்பார்.

இவரது தந்தையார் வின்சென்ற் மாஸ்டர் தான் பிரதானமான நாடகங்கள், வில்லுப்பாட்டு, உரையரங்கம் போன்றவற்றைப் பழக்குபவராவார். தந்தை பழக்கும்போது இவர் வந்திருந்து பார்ப்பார். சிலவற்றில் சிறு பாத்திரங்களில் நடித்துமுள்ளார்.

எனது தாயார் இசை நிகழ்ச்சிகளைப் பழக்குவார். ஆனால் கருணாவுக்கு இசை ஒத்துவராது என என் தாயார் அவரது தாயாருக்கு சொல்வது பற்றி கருணா எனக்குச் சொல்லிச் சிரித்துள்ளார். அதேவேளை அவருக்கு ஓவியத்தைப் பயிற்றுவிக்குமாறு அவர் ஊக்கப்படுத்தியதாகவும் சொன்னார். எனது தாயார் ஓவியங்களின் இரசிகை ஆவார்.

எமது கரவெட்டி அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலிகளில் திருப்பலிப் பீட உதவிப்பையனாகவும் (Alter Boy)

திருச்சிலுவைப் பாதை என்ற நிகழ்வு கிறிஸ்துவின் திருப்பாட்டு நாட்களில் ஆலயத்தில் நடைபெறும்போது 14 தலங்களிலும் ஒவ்வொரு தலத்தை நோக்கி அசைகையில் சிலுவையை ஏந்திச் செல்லும் பையன்களில் ஒருவராகவும் இருந்த நாட்கள் நான் அவரை நினைக்கும்போது வண்ண அலைகளாய் வருவதுண்டு. ஒழுங்காக ஆலயப்பணிகளில் சிறுவயதில் ஈடுபடுவதில் ஆர்வம் மிக்க அவர் மிகவும் பக்தியான கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தவர்.

அவருடைய தந்தையார் திரு வின்சென்ற், பருத்தித்துறை கலட்டி ரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் அதிபராக பணியாற்றியவர். கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக (வாக்காளர்களின் அமோக ஆதரவுடன்) நீண்டகாலம் பணியாற்றியவர். கரவெட்டியில் பல கத்தோலிக்க நாடகங்களை மேடையேற்றியவர். கடந்த சில மாதங்களுக்கு முன், பருத்தித் துறையில் வட்டாரக் கல்வியாதிகாரியாகப் பணியாற்றிய திரு துரைசாமி அவர்களைச் சந்தித்தேன். அவுஸ்திரேலியாவிலிருந்து தமது சகோதரியின் மரணச்சடங்கில் கலந்துகொள்ள அவர் நியூசிலாந்து வந்திருந்தார். எனது தந்தையரின் நண்பர் அவர் என்ற வகையில் அவரிடம் என்னை அறிமுகம் செய்தபொழுது "அப்பா போய் விட்டாரா என்ற கேள்விக்கு அடுத்த கேள்வியாக "வின்சென்ற் மாஸ்டர் போய்விட்டாரா?" என்று கேட்டார். கல்விப்பணியிலும் கலைத்துறையிலும் நிருவாகத் திறமையிலும் முதன்மை பெற்ற ஒருவர் அமரர் வின்சென்ற்.

கருணாவின் ஓவியங்களின் நிருமாணங்களிலும் அப்பாத்திரங்களின் நெறிப்படுத்தலிலும் வின்சென்ற் மாஸ்டரின் நாடக இயக்குகையைக் காண்கிறேன். தாய் றெஜினா ரீச்சர் பாடசாலையில் கதை சொல்வதற்கு மட்டுமன்றி எதனை விளக்குதற்கும் கரும்பலகையில் படபடவெனப் படம் வரைந்து விளக்கும் ஆளுமை மிக்கவர்.

கருணா எனது தங்கையுடன் படித்தவர். மிகவும் அமைதியானவர். சிறு வயதில் பாடசாலையில் அந்த நாட்களிலேயே ஓவியவேளைகளில் மட்டுமல்ல 'கைப்பணி' எனப்படும் hand work இலும் தாமாகவே புதுமையாகச் செய்து வருவார் என நாம் அறிந்துள்ளோம். அக்காலத்தில் வகுப்பு 1 இலிருந்து 5 வரை கைவேலை, ஓவியம், சங்கீதம் என்பன முக்கிய பாடங்கள். எனது சகோதரி என்னை உதவியாகக் கொண்டு கைவேலைப் பொருட்கள் செய்து கொண்டுபோவாள். "கருணா என்ன கொண்டு வருமோ தெரியாது" என்ற எதிர்பார்ப்பு அவளிடம் இருக்கும்.

எனது தாயார் கருணாவின் சங்கீத ஆசிரியர். கருணாவுக்கு சங்கீதத்திற்கு 10 (நூறுக்கு) புள்ளிகள் இட்டுவிட்டு வந்து "றெஜினா (கருணாவின் அம்மா) என்ன நினைக்குமோ தெரியாது என்று கவலைப் படுவதை நான் கண்டுள்ளேன். ஆனால் எங்களது குடும்ப உறவில் என் தாயாரின் சிறந்த ஆலோசனைக்குரிய நண்பியாக கருணாவின் தாயார் இருந்துள்ளார்.

கருணாவின் தாய்மாமன் மரியநாயகம் ஈழத்தின் புகழ்மிக்க ஓவியர்களில் ஒருவர். நீர் வண்ணங்களில் அவர் வரைந்த "காகமும் வடையும்", நரியும் திராட்சைப் பழமும்", சிங்கமும் முயலும்" எனது வீட்டில் இருந்த ஓவியங்கள்.

கேட்ட தாலாட்டு இசைக்குப்பிறகு நான் பார்த்த ஓவியங்கள் அவை என்பேன். இன்றைக்கும் அவை என் மனதில் நினைவில் உள.



**- எஸ்.எம். வரதராஜன் -**

# கருணா: அந்தந்தக் கணங்களில் வாழ்ந்த கலைஞன்




வழக்கமாக, தாய்வீட்டுக்காக கருணா என்னிடம் ஆக்கங்கள் கேட்பார், இன்று, முரண்துயராக கருணாவுக்காக டிலிப்குமார் என்னிடம் கட்டுரை கேட்டிருக்கிறார். நெருங்கிய நண்பர் ஒருவரைப் பற்றிய ஞாபகங்களை முழுவதுமாக எழுதி முடித்து விட முடியுமெனத் தோன்றவில்லை. எவ்வளவு நடந்தும் கடக்கமுடியாத இறந்த காலத்தின் சாலை அது. மேலும், ஒருவருடைய சடுதியான இழப்பினால் ஏற்படும் திகைப்பானது, அவரைக் குறித்த ஞாபகங்களின் ஒழுங்குவரிசையைக் குழப்பி விடுகிறது. செய்தியைக் கேள்விப்பட்ட அன்றிரவின் உறக்கம்போல, கருணாவைப் பற்றிய நினைவுகளும் என்னுள் துண்டு பட்டுக் கிடக்கின்றன.

விரும்பித் தேர்ந்த எனது நாடோடி வாழ்வில் ஏதோவோரிடத்தில் கால்கள் தரித்திருக்கும்வேளை, ரொறன்ரோ நேரம் இரவு பன்னிரண்டுக்குப் பிறகு மெசஞ்சர் வழி கருணாவிடமிருந்து அழைப்பு வருகிறதெனில், அவர் நண்பர்களுடன் இருக்கிறாரென்று பொருள்.

“இஞ்சை ஒருத்தர் உங்களோடை கதைக்கோணுமாம்'' நள்ளிரவின் களைப்பு துளியும் படியாத, உற்சாகம் பீறிடும் குரலில் சொல்வார். அலைபேசி கைமாறி மாறிப் போய்க்கொண்டிருக்கும். அன்று நண்பர்களுள் யாரோ ஒருவருடைய பிறந்தநாளாக இருக்கும். அல்லது 'தாய்வீடு' பத்திரிகையின் அரங்கியல் விழா போன்ற ஏதோவோர் நிகழ்ச்சி அன்று மாலை நடந்து முடிந்திருக்கும். நான் நீங்கிவந்த நிலத்திற்கும் எனக்குமிடையிலான இணைப்புக் கண்ணியாக இருந்தவர் அவர்தான். அறிமுகமான காலத்திலிருந்து இன்றுவரை 'நீ எங்களில் ஒருத்தி' என்ற, உரிமை கலந்த ஒட்டுதல் அவரிடம் குறைந்ததேயில்லை. கனடாவில் நான் இருந்தாலும் இல்லாமற்போனாலும் அந்த நட்புக்குடும்பத்தின் ஓரங்கமாக நானிருப்பதற்குக் காரணமானவர் கருணாவே.

எப்போதுமே நல்ல செய்திகளுடன் கருணா இணைப்பில் வருவதில்லை. கவிஞர் செழியன் மரணப்படுக்கையில் இருந்தபோதும், அவர் மறைந்தபோதும் அதை எனக்குத் தெரியப்படுத்தியவர் கருணாவே. பாபுவின் மரணச்செய்தியையும் அவரே என்னிடத்தில் கொணர்ந்து சேர்த்தார்.

எனது ஞாபகசக்தி சரியாக இருக்குமெனில், கருணாவும் நானும் முதன்முதலில் சந்தித்தது 1994ல் என்றெண்ணுகிறேன். அப்போது, அவருடைய அலுவலகம் டொன்மில்ஸில் இருந்தது. அப்போதுதான் எனக்குத் திருமணமாகியிருந்தது. பொறுப்புகள் எங்களை கழுத்தை நெருக்கிப் பிடித்திருக்கவில்லை. நானும் இராஜகுமாரனும் ரிம் ஹோட்டன்ஸ் கோப்பியும் கையுமாக கருணாவின் அலுவலகத்திற்குப் போவோம். மணிக்கணக்கில் உரையாடிக்கொண்டிருப்போம். அத்தனை சிறிய வயதில் தனக்கென தனியான ஓர் அலுவலகம், மனதுக்குப் பிடித்த வேலை என்றிருந்த அவர், என்னை ஆச்சரியப்படுத்தினார். புதிய நிலத்தில், இலக்கியமும் ஓவியமும் கணினி வரைகலையும் அறிந்த கருணாவைப் போன்ற ஒருவர் அந்நாட்களில் எனக்கு நண்பராக வாய்த்தது, பிறகான எனது எழுத்துப் பயணத்திற்குத் தூண்டுதலாக அமைந்திருக்கவேண்டும் என இப்போது உணர்கிறேன்.

அப்போது, கலை இந்த உலகத்தைப் புரட்டிப்போடும் என்று நாங்கள் சர்வநிச்சயமாக நம்பினோம். அதனோடு பின்னிணைப்பாக வரக்கூடிய இருண்ட பக்கங்களை அறியாதிருந்தோம். அதன் விளைவாக 'ரோஜா' என்ற சஞ்சிகைக்கு பங்களிப்பவர்களாக நாங்கள் மாறினோம். ஆனந்த் அதன் ஆசிரியராகப் பணியாற்றினார். கருணா படைப்புகளுக்கான ஓவியங்களை வரைந்தார். புகைப்படங்களை வழங்கினார். நானும் ராஜ்மோகனும் அதில் எழுதினோம். ஆக்கங்களைக்கேட்டு ஆட்களின் பின் அலைந்தோம். தனது இனிமையான குரல் மூலம் ரொறன்ரோவில் பிரபலமாகத் தொடங்கியிருந்த அருட்செல்வியின் நேர்காணல் 'ரோஜா'வில் வெளியானது. ஐரோப்பாவிலிருந்து ரொறன்ரோவுக்கு வந்திருந்த ஓவியர் அருந்ததியை நேர்காணல் செய்து பிரசுரித்தோம். சரளமாகத் தமிழ் கதைத்த சீனப் பெண்மணியொருவரைச்சந்தித்து அதைப்பற்றி எழுதினோம். நாங்கள் உன்னதமானதொரு விடயத்தில் ஈடுபட்டிருப்பதாக மனப்பூர்வமாக நம்பினோம். கலை எங்களை இணைத்தது. அந்நாட்களில் செல்லிடப்பேசி பாவனையில் இல்லை. அல்லது, அது எங்களது கைகளுக்குக் கிட்டியிருக்கவில்லை. பெல் கனடாவின் 'லான்ட் லைன்' வழி மணிக்கணக்கில் உரையாடினோம்.



கனடியத் தமிழர்களிடையே இன்று பல கணினி விற்பன்னர்கள் இருக்கிறார்கள். தமிழ் எழுத்துரு, கணினி வரைகலை ஆகியன குறித்த பரீட்சார்த்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சாதனைகளும் அடையப்பெறுகின்றன. அவற்றுக்கெல்லாம் கால்கோள் இட்ட முன்னோடிகளுள் க.ஞானபண்டிதன், சசி இவர்களைப்போல கருணாவுக்கும் மிகப்பெரிய இடமுண்டு. கருணா தொழிநுட்பரீதியான பல விடயங்களை புலம்பெயர் தமிழ்ச்சமூகத்திற்கு அறிமுகப்படுத்தினார். ஆனாலும், அவர் எங்குமே தன்னை முன்னிறுத்தியதில்லை. ஓவியர் மாற்குவின் மாணவர்களில் ஒருவர் எனத் தன்னைச் சொல்லிக்கொள்வதில் மட்டுமே அவர் பெருமைகொண்டிருந்தார்.

**- தமிழ்நதி -**

கருணா, ஓவியராக மட்டும் இருக்கவில்லை, அத்துறைசார் அறிவை தேடித் தேடி வளர்த்துக்கொண்டிருந்தார். அந்தத் தேடலானது பொருளாதார நோக்கத்தை இலக்காகக் கொள்ளாது, கலைமீது அவருக்கு இருந்த காதலை அடிப்படையாகக்கொண்டது. அவரது ஓவியங்களை வைத்து 2017 மே மாதம் நடத்தப்பட்ட கண்காட்சி பரந்தளவிலான கலாபிமானிகளைச் சென்றடைந்தபோது, அவர் பெருமகிழ்ச்சியடைந்தார்.

எப்போதும் நண்பர்களால் சூழப்பட்டிருப்பதை கருணா மிக விரும்பினார். கங்காதரன், 'காலம்' செல்வம், டிலிப்குமார், விவேகானந்தன் இவர்களில் ஒருவருடனோ அன்றேல் எல்லோருடனோதான் அவரைக் காணமுடியும். அவரிடம் நான் கண்டு வியந்த குணங்களுள் முக்கியமானதொன்று, அவர் அவ்வக்கணங்களில் வாழ்பவராக இருந்ததாகும். இறந்தகாலத்தின் விசனத்தையோ எதிர்காலத்தின் எதிர்பார்ப்புகளையோ அவரிடம் கண்டதில்லை.

கவிதைகள் மூலம் மட்டுமே நான் அறிந்திருந்த கவிஞர் சேரனை எனக்கு அறிமுகப்படுத்தியவரும் கருணாவே. சேரனிடம் கருணா மரியாதை கலந்த அன்பு வைத்திருந்தார். சேரன், இராஜகுமாரன், கருணா, நான் ஆகிய நால்வரும் அவ்வப்போது சந்தித்து உரையாடியிருக்கிறோம். எங்களது உரையாடல் விடிய விடிய நீண்டிருக்கிறது. கருணா நல்லதொரு உரையாடற் கலைஞனுங்கூட. உரையாடலின்போது தன் வார்த்தைகளைத் தானே மீறிச்செல்லும் வேகம் அவரிடம் மிகுந்திருக்கும். சிலசமயம், மற்றவர்கள் கதைத்து முடிப்பதற்கிடையில் அந்த வேகம் குறுக்கிட்டு விடுவதுமுண்டு. எந்தவொரு சந்திப்பிலும் நேரம் ஆக ஆக கதையாடலில் தொய்வு ஏற்படுவது வழக்கம். கருணா இருக்கும்போது அது நடக்காது. அவர் எடுத்துக் கொடுப்பின் இழைகளால் உரையாடலைத் தொடுத்துச் செல்லும் திறன்வாய்ந்தவர். இடையிடையே குட்டிக்கதைகளும் சொல்வார். அவர் தனக்கேயுரிய சிரிப்போடு “இப்பிடித்தானே...” என்று தொடங்கும் போதே நாங்கள் உசாராகிவிடவேண்டும். “நீங்கள் ஏன் இன்னும் கார் ஓடக் கற்றுக்கொள்ளவில்லை?” என்றால், “நான் ஒரு கார் வைத்திருந்தேன். அது எனது மாமி எனது ஏழாவது பிறந்தநாளுக்கு வாங்கித் தந்தது” என்று 'கதை' விடத் தொடங்கிவிடுவார். கடந்த சில ஆண்டுகளாக, கவிஞர் சேரனும் நானும் கருணாவும் சந்திக்க எடுத்த முயற்சிகள் கைகூடாமலே போயின. ஈற்றில் மரணம் எங்களது சந்திப்பில் தடாலடியாகக் குறுக்கிட்டு விட்டது.

மற்றவர்களுக்காக நேரத்தைச் செலவிடுவதற்குப் பலரும் தயங்கும் இந்தக் காலத்தில், தமிழகத்திலிருந்தோ ஈழத்திலிருந்தோ ரொறன்ரோவுக்கு எவரேனும் வருகிறார்களென்றால் கருணாவை உற்சாகம் தொற்றிக்கொண்டுவிடும். தான் வாழும் நகரத்தின் ஆன்மாவை, வருகிறவர் இனங்காணாமற் போய்விடக்கூடாதென்பதற்காக அரும்பாடுபடுவார். எங்கெங்கு சுவையான உணவு கிடைக்கும், வந்திருக்கிறவரை எந்தெந்த இடங்களுக்கு அழைத்துச்செல்ல வேண்டும், எவரையெல்லாம் சந்திக்கவைக்கலாம் என தனது நண்பர்களோடு இணைந்து திட்டமிடுவார். நயாகரா நீர்வீழ்ச்சி கருணாவை எத்தனை முகங்களோடு கண்டிருக்கும்! நானறிந்த கருணா மனிதர்களின் அருகாமையை மிக விரும்பினார். அவர்களோடு நேசங் கொண்டாடினார். தனிப்பட்ட வாழ்வின் தனிமை அவருள் நொதித்துக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால், அதன் ஒரு துளியைத்தானும் அவர் வெளிப்படுத்தி நான் கண்டதில்லை. இறுதி நாட்களில், கருணா தன்னைத் தான் தனிமைப்படுத்திக்கொண்டதாக நண்பர்கள் சொல்லக் கேட்டபோது வேதனையாக இருந்தது.

இறுதியாக, (இப்படி எழுதவேண்டி ஏற்பட்டுவிட்டதே] கருணா என்னோடு கதைத்தது ஜனவரி (இவ்வாண்டு) 8ம் திகதியன்று. “ஏன் இப்படிச் செய்தனீங்கள்?” என வருத்தந் தொனிக்கும் குரலில் வினவினார். மனதறிய நான் ஒரு தவறும் செய்திருக்கவில்லை. “அப்பாவின்ரை விசயத்தைப் பற்றி நீங்கள் என்னட்டைச் சொல்லேல்லை”. எனக்குப் புரிந்தது. டிசம்பர் 19ம் திகதியன்று அப்பா காலமானார். அப்பாவின் மறைவை முகநூல் மூலம் அறிவித்ததல்லாமல் தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் சொல்லியிருக்கவில்லை. கருணா, தனக்கும் அப்பாவுக்கும் இடையில் நடந்த ஓவியம் குறித்த உரையாடலை நினைவுகூர்ந்தார். தான் அவரை மீண்டும் ஒருதடவை சந்தித்து நேர்காணலொன்றைச் செய்ய எண்ணியிருந்ததாக வருத்தந்தோய்ந்த குரலில் கூறினார்.

2013ம் ஆண்டு டிசம்பர் மாதம் ரொறன்ரோ மாநகரம் கடும்பனிப்பொழிவை எதிர்கொண்டது. வீதிகள் உறைமழையால் இறுகிப் போயிருந்தன. கால்வைத்த மறுகணம் கரணம் என்ற நிலை. மரங்கள் பனிப்பாரம் தாங்காமல் முறிந்துவிழுந்தன. மின்சாரம் இல்லை. 'லான்ட் லைன்' தொலைபேசிகள் இயங்கவில்லை. பேரங்காடிகளும் திறக்கப்படவில்லை. ரொறன்ரோவில் அப்பாவும் அம்மாவும் தனித்திருந்தார்

தொடர்தல் 31ம் பக்கம்

# கருணா: படைப்புக்களில் உயிர்த்துக் கிடப்பான்




மனித வாழ்க்கை எங்காவது ஒரு புள்ளியில் நின்றுவிடுகிறது. சடுதியாய்ச் சற்றும் எதிர்பாராமல் அந்தத் துயர் நிகழ்கிறபோது, கூட இருந்தவர்களுக்கு அந்த புள்ளியைக் கடப்பது பெரும் சிரமமாகிறது. கூடியிருந்த நினைவுகள் நின்று கொல்லும். சிலரது மரணம் மட்டும் அவர்கள் சஞ்சரித்த எல்லாத் தளங்களிலும், சந்தித்த எல்லா மனிதர்களிலும் அதிர்வை ஏற்படுத்தி போகும். ஓவியர் கருணாவின் இழப்பில் அந்த அதிர்வைப் பரவலாக உணர முடித்த எனக்கு கருணாவை எண்பதுகளின் ஆரம்பத்தில் ஹாட்லியில் பக்கத்து வகுப்பில் படித்த சகமாணவனாக தெரியும். அப்போதெல்லாம். கட்டைக் காற்சட்டையோடும் வியர்வை தெரிகிற வெள்ளைச் சேட்டோடும் கூடி விளையாடி இடைவேளைகளைக் கழித்திருப்போம்.

எந்தச் சண்டை சச்சரவுகளிலும் முகம் காட்டியவர்களுள் அவனிருந்ததாக ஞாபகமில்லை. எங்கள் காலத்தில் திரு சாமுவேல் அதிபராக இருந்தார். சித்திரம் ஒரு பாடமாக இருந்தது. கருணாவுக்கு ஓவியம் வரைவது இயல்பாகவே கைவந்தது. சின்னவயதிலேயே அவன் வரைந்த சித்திரங்கள் சுற்றியிருந்த எல்லா வகுப்புகளையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

வர்ணம் கலக்காத வெறும் கோடுகளில் ஆயிரம் கதைகள் பேசுகிற மந்திரக்காரன் போலவே என்னுள் அவன் பதித்திருந்தான். படிப்புக்கும் விளையாட்டுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் இருந்த முக்கியத்துவம் காலையில் அந்த காலத்தில் கலை இலக்கியத்துக்கு இருக்கவில்லை ஆயினும் படிப்புக்கு வெளியே அரசியல், கலை, இலக்கியம் குறித்த தேடலோடு நிறையப்பேர் எங்களில் இருந்தார்கள்.




கருணாவின் ஓவியம் சுமந்த கையெழுத்துச் சித்திரக்கதைப் புத்தகம் எல்லா வகுப்புகளிளும் வலம் வந்தது. பாட இடைவெளியில் வண்ணத்துப் பூச்சிகள் என்ற கதம்ப நிகழ்ச்சி வகுப்புக்குள்ளேயே நடந்தேறும். 'மரணத்துள் வாழ்வோம்' கவிதைத் தொகுப்பு எங்கள் வகுப்புக்குள் உலவியது பற்றிய ஞாபகம் இப்போதும் இருக்கிறது.

சேரனும் செழியனதும் ஜெயபாலனதும் கவிதைகளோடு அறிமுகம் எங்களுக்கு சின்னவயதிலேயே வாய்த்துப் போனது. ஊருக்குள் எல்லா இயக்கங்களும் உலவித்திரிந்த காலம் அது. விரும்பிய இயக்கத்துக்குப் போவதுவும் வீண்பழி சுமத்தி யார்மீதும் குண்டுகள் பாயாத வாழ்வும் இருந்தது. அதுவெல்லாம் ஒரு நல்ல கனவு போல பின்னாளில் கலைந்து போனது. எண்பதுகளின் நடுக்கூற்றில் ஹாட்லியை இராணுவம் முழுவதுமாக ஆக்கிரமத்துக் கொள்ள, எங்கள் பள்ளி நாட்கள் சிதைந்துபோயின. சிலர் இயக்கங்களுக்குப் போனார்கள். இன்றும் சிலர் வெளிநாடுகளுக்குப் போனார்கள். எஞ்சியவர்கள் புற்றளை மகா வித்தியாலயத்துக்கு இடம் பெயர்ந்த புதிய ஹாட்லிக்குத் தொடர்ந்து படிக்கப் போனார்கள்.

அதற்குபின் ஹாட்லி நண்பர்களோடு முழுவதுமாக தொடர்பறுந்து போனேன். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் போன ஆண்டுத் தொடக்கத்தில் ஒரு குளிர்கால மாலையொன்றில் மீண்டும் பல பள்ளி நண்பர்களைச் சந்திக்க முடிந்தது. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கருணாவைப் பார்க்க முடிந்தது.

சிரித்தபடி நிதானமாகப் பேசுகிற பக்குவப்பட்ட மனிதன்போலத் தெரிந்தான். சின்ன வயது நினைவுகளையும் படிப்பித்த ஆசிரியர்கள் பற்றியும் ஊர் நிலைவரங்களையும் பல இரவுகள் பேசியிருப்போம்.

ஈழத்தின் பெயர் சொல்கிற ஓவியன் என்கிற கர்வம் அவனிடமிருந்ததில்லை. ஆயினும் ஓவியங்களுக்கு எங்கள் தமிழ்ச் சமூகத்தில் சரியான இடமில்லாமல் இருப்பது பற்றிய கவலை அவனிடமிருந்தது நானறிவேன்.

எல்லா நெருக்குவாரங்களையும் தாண்டி, தனக்குப் பிடித்தது போலவே ஒரு கலைஞன் வாழ்ந்து மறைந்து போனான். இனி எஞ்சிக்கடக்கிற ஓவியங்கள், படைப்புக்களில் உயிர்த்துக் கிடப்பான்.



- பிரியதர்சன் -

# கருணா: அந்தந்தக்...

30ம் பக்கத் தொடர்ச்சி...

கள். நானோ சென்னையில் இருந்தேன். வழக்கமாக அவர்களது உதவிக்கு வரும் தோழியும் மோசமான காலநிலையால் சென்று பார்க்கமுடியாத சூழல். பதற்றமடைந்தேன் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. அப்போது கருணாவை அழைத்து விபரத்தைச் சொன்னேன். உடனடியாகப் போய்ப் பார்த்துவருவதாகச் சொன்னார். அவர் அங்கு செல்வதற்கு முன்னதாகவே மாமா போய் அப்பா-அம்மாவைப் பார்த்துவிட்டு அவர்களது சுகநலன் பற்றி என்னிடம் கூறினார். அன்று அந்த உறைமழையில் தமது வேலைகளின் நிமித்தம் கூட யாரும் வெளியில் செல்லத் துணிய மாட்டார்கள். கருணா தன் நண்பர்களது குடும்பத்தினருக்கும் நண்பராயிருந்தார் என்பதற்கான சாட்சியம் இந்தச் சம்பவம்.

'தாய்வீடு' பத்திரிகையை அவர் தன்னுடையதெனவே கருதியிருந்தார். அதைத் தரம்படக் கொணரவேண்டுமென்பதில் அவருக்கிருந்த ஆர்வத்தை துடிப்பு என்று கூறினால் அஃது மிகைப்படுத்தலன்று. தன்னுடைய பிள்ளையை எதிர்பார்ப்புகளற்று நேசிக்கும் ஒரு தாயின் வாஞ்சையை தாய்வீட்டின்பால் அவர் கொண்டிருந்தார். ஆக்கங்கள் கேட்டோ எவரையேனும் நேர்காணல் செய்யவேண்டியிருந்தாலோ என்னை அழைப்பார். அலைச்சல்கள் நிறைந்த என் வாழ்வு, அவருடைய வேண்டுகோள்களை நிறைவேற்றுவதற்கு பெரும்பாலும் அனுமதிப்பதில்லை. அதையும் மீறித்தான் அம்பையையும் நாஞ்சில் நாடனையும் நேர்காணல் செய்தேன். சில கட்டுரைகளை எழுதினேன். வழக்கம்போல, மேற்குறித்த நேர்காணல்களின் புகைப்படங்களையும் கருணாவே எடுத்தார்.

"காமெராவைப் பாக்காதைங்க. நீங்கள் உங்கடை பாட்டிலை இருங்கோ" என்ற குரலை 1996ம் ஆண்டிலிருந்து கேட்டு வந்திருக்கிறேன். மிகச் சிறந்தவை என நான் கருதுகிற எனது புகைப்படங்களை கருணாவே எடுத்தார். எனது வாழ்வின் பல முக்கியமான தருணங்களை அவர் ஒளிப்படங்களாக்கியிருக்கிறார். நானே பார்த்திராத என்னுடைய புகைப்படங்களிற் சிலவற்றை திடுதிப்பென்று அனுப்பி, 'இதுவா?' என்பார். அதிலொரு குழந்தைக் குதூகலம் இருக்கும். அந்நேரம் கருணா எப்படிச் சிரித்துக்கொண்டிருப்பார் என்பதை என்னால் உணரமுடியும். என்னை மட்டுமென்றில்லை, எத்தனையோ எழுத்தாளர்களை, கவிஞர்களை, ஓவியர்களை அவர்களே விரும்பத்தகு விதத்தில் ஒளி நிழல்களாக விழுத்தியிருக்கிறார் கருணா. அ.யேசுராசாவை, அனாரை, சேரனை, அம்பையை, அ.ராமசாமியை, க.வாசுதேவனை, நாஞ்சில் நாடனை இன்னும் பலரை கருணா எடுத்த புகைப்படங்களில் எடுக்கப்பட்டவர்கள் மட்டும் இருக்கமாட்டார்கள், அவற்றில் கருணாவின் தனித்துவம் தெரியும். தொலைபேசியைக் கண்டுபிடித்த கிரஹாம்பெல் அவர்கள் வாழ்ந்த வீட்டில் வைத்து அ.யேசுராசாவை எடுத்த புகைப்படம் ஒரு புராதன ஓவியத்திற்கு ஒப்பானது. தொலைபேசி தொடர்பான பழைய பொருட்கள்... அதைக் கூர்ந்து பார்த்தபடி நிற்கும் தலைநரைத்த ஒரு மனிதர்... அதைப் பார்த்தபோது, நிகழ் அழிந்து வேறொரு காலத்தினுள் புகுந்து விட்டதானதொரு உணர்வு. அந்தப் புகைப்படத்தைக் குறித்துப் பாராட்டிய போது, மகிழ்ச்சிபொங்க அப்புகைப்படம் எடுக்கப்பட்ட நாள் குறித்து விபரமாகப் பகிர்ந்து கொண்டார். எனது நாவலாகிய 'பார்த்தீனிய'த்தின் அறிமுகம் மற்றும் விமர்சனக் கூட்டம், 2016 ஒகஸ்டில் ரொறன்ரோவில் நடைபெற்றது. அதற்கான அழைப்பிதழை வடிவமைத்தவர் கருணாவே. நிகழ்வின் புகைப்படங்களையும் அவரே எடுத்தார். அந்நிகழ்ச்சியையடுத்து அன்றிரவும் நாங்கள் சந்தித்தோம். நான் கருணாவைக் காணும் கடைசி நாள் அதுவே என்பதை அறியாதிருந்தேன். அன்றைய சந்திப்பில் வழக்கமான நண்பர்களுடன் மிச்சிக்கன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரனும் கலந்து கொண்டார்.

ஒரு தோழியாக, அவருக்கு என்னுடைய அபிப்பிராயங்கள் முக்கியமாக இருந்தன. தான் வரைந்த ஓவியத்தை (கடைசியாக அனுப்பிய ஓவியம், தமயந்தி-பானுபாரதியின் மகள் ஓவியாவை வரைந்தது) எழுதிய கட்டுரையை, ஒளியமைப்புச் செய்த நாடகத்தைப் பற்றிய குறிப்புகளை, எடுத்த புகைப்படங்களை, வடிவமைத்த அட்டைப் படங்களை எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வார். அவற்றைக் குறித்த அபிப்பிராயங்களைச் சொல்லத் தாமதித்தால், மறுபடியும் மறுபடியும் ஞாபகமூட்டுவார். அவரை நினைக்குந்தோறும், ஆவல் மினுங்கும் குழந்தையின் கண்களே ஞாபகத்தில் வருகின்றன.

"இன்று வேலைக்குப் போனபோது எனது மேசையில் இது இருந்தது" என ஒருநாள் ஒரு புகைப்படத்தை அனுப்பியிருந்தார். அதில் இரண்டு சிவப்பு ரோஜாக்கள் இருந்தன.

"இரகசியமாக உங்களை யாரோ காதலிக்கிறார்கள் போல" என்று பதிலளித்தேன். அதற்கு ஒரு சிரிப்பே பதிலாக வந்தது.

எல்லாவற்றையும் பகிர்ந்துகொண்ட கருணா தன்னுடைய உடல்நலமின்மையை, மனவுளைச்சலை என்னோடு பகிர்ந்துகொள்ளவில்லை. அவற்றைச் சொல்வதானது என்னைத் தொந்தரவு செய்வதாக அமைந்துவிடுமோ என அவர் கருதியிருக்கக்கூடும். அல்லது, அப்படிச் சொல்வதற்கான நெருக்கத்தை, கரிசனையை நான் அவரிடம் காட்டத் தவறியிருக்கலாம். நெருங்கியவர்களுக்காக போதியளவு நேரத்தைச் செலவழிக்க இயலாத அமனிதர்களாகிப் போனோம் நாம்! கருணாவோடு இன்னும் அதிகமாகக் கதைத்திருக்கவேண்டும் என்று குற்றவுணர்வு இன்று என்னைச் சாடுகிறது.

கருணாவைப் பற்றி முகநூல் பதிவுகளைப் பார்க்கும்போது, அவர் எடுத்த ஒளிப்படங்களைக் காணும் போதில் அவரது இன்மை வருத்துகிறது. வாழ்வின் அநிச்சயம் இரக்கமில்லாமல் பாய்ந்து முகத்திலறைகிறது. 'எங்கே போய்விடப்போகிறார்?' என நாம் எண்ணியிருந்த ஒருவர் திடீரென மறைந்துபோகிறபோது அதை எப்படி எதிர்கொள்வதென்ற திக்பிரமை சூழ்கிறது. 'இவ்வளவு சடுதியாக ஒருவர் இல்லாமற் (தூலமாக) போய்விட முடியுமா?' என்ற கேள்வியோடு அலமலந்து நிற்கிறேன்.

எந்த நிகழ்ச்சியென்றாலும் அது ஆரம்பமாவதன் முன்னதாக என்னை வாசலிலே எதிர்கொள்கிற, நிகழ்வு முடிந்ததும் காத்திருந்து உரையாடாமல் விடைபெறாத, 'ஓர் ஓவியனால் எழுதப்பட்ட புகைப்படக் கவிதைகள்' என்றவாறாக ஏதும் பகிடி பண்ணினால், "பெரிய கரைச்சலப்பா உங்களோடை!" என்று தன் புழுகத்தை மறைத்துக்கொண்டு சிரிக்கிற கருணா என்கிற நண்பன் இல்லாத ரொறன்ரோ, இனி என்னளவில் நிச்சயம் வெறுமையாகத்தானிருக்கும்.

உங்களுக்கு எப்படி விடைதருவது கருணா?
நினைவுள்ளவரை நீங்கள் எங்களோடே இருப்பீர்கள்,
என்றென்றைக்குமாக!



tamilnathy@thaiveedu.com

# முதல் ஈழத்தமிழ் டிஜிட்டல் ஓவியர் கருணா வின்சென்ற்




**கனடா உலகத்தமிழர் பத்திரிகை**

சிறந்த ஓவியரும் ஒளிப்படப் பிடிப்பாளரும் வரைகலைக் கலைஞருமான திரு இயூஜீன் கருணாகரன் வின்சென்ற் மறைந்த செய்தி எமக்குப் பெருந்துயரத்தைத் தந்திருக்கின்றது. வடிவமைப்பிலும் தலைப்புகளை உருவாக்கித் தந்த வகையிலும் தேசியத்துக்கான பல சுவரொட்டிகளை வடிவமைப்புச் செய்த வகையிலும் கருணவின் பங்களிப்பு கனடா உலகத்தமிழர் பத்திரிகையிலும் இருந்திருக்கின்றது. தொடர்ந்தும் சில விளம்பரங்களை வடிவமைத்துத் தந்துகொண்டிருந்தார்.

சிறந்தவொரு வரைகலை ஆளுமையாகத் திகழ்ந்த கருணா அவர்களைப்பற்றிய தகவல்கள் சிலவற்றை இங்கு பதிவு செய்வதன் வாயிலாக அவருக்கான இறுதி வணக்கத்தைச் செலுத்துகின்றது கனடா உலகத் தமிழர் பத்திரிகை.

தாயகத்திலேயே ஓவியத்துறையில் நாட்டம் கொண்டு, ஆசிரியர் மாற்கு அவர்களிடம் ஓவியம் பயின்ற கருணா, மரபுவழிப்பட்ட ஓவிய மரபிலிருந்து மாறுபட்டவராக, நவீன ஓவிய நுட்பங்களில் ஈடுபாடும் திறமையும் பெற்றவராக இருந்தார்.

பல்வேறு கலைகளில் சிறந்து விளங்கிய குடும்பப்பாரம்பரியத்தில் தோன்றிய கருணா சிறுவயதிலிருந்தே ஓவியத்துறையில் ஆர்வம் காட்டிவராவார். இவருடைய தாய்மாமனாராகிய திரு மரியநாயகம் சிறந்தவொரு ஓவியராக அடையாளம் காணப்பட்டவர்.

ஓவியக்கலையில் பலபரிமாணங்கள் உண்டு என்பதைப் பலரும் அறிவர். தற்போது அதிகம் பேசப்படுகின்ற ஓவியங்களாக நவீன ஓவியங்களே திகழ்கின்றன. நவீன ஓவியக்கலையில் தனக்கென ஒரு தனி-மரபைக் கொண்டிருந்தவர் ஓவியக்கலைஞர் மாற்கு அவர்கள். எளிமையாக வாழ்ந்த மாற்கு தமிழ் ஓவிய உலகில் பெரிதும் மதிக்கப்பட்ட கலைஞராவர்.

ஓவியக் கலைஞர் மாற்குவிடம் மிகுந்த விருப்பத்தோடு கருணா ஓவியம் பயின்றார். நவீன ஓவியத்தின் நுட்பங்களை அவரிடம் அறிந்தார்.

மாற்கு அவர்களிடம் பயின்ற மாணவர்களுள் ஒருவரான வாசுகி தன்னுடைய ஓவியக் கண்காட்சியொன்றை 1989ல் யாழ்ப்பாணத்தில் நடத்தினார். அந்தக் கண்காட்சியில் மாற்கு அவர்களின் பிற மாணவர்களின் ஓவியங்கள் சிலவும் வைக்கப்பட்டன. அதில் கருணாவின் ஓவியங்கள் சிலவும் இடம்பெற்றிருந்தன. இதுவே இவருடைய ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்ட முதல் நிகழ்வாகும்.

22 வயதில் கனடாவில் கருணா காலடி எடுத்து வைத்த காலத்தில் கணினி எல்லாத்துறைகளையும் ஆட்கொள்ளத் தொடங்கியிருந்தது. தொடக்கத்தில் ஒளிப்படக் கலைஞராகப் பணியைத்தொடர்ந்த கருணா கணினியுடன் இணைந்து அச்சுத்துறைக் குள்ளும் கால் வைத்தார். அத்துறையில் கால் நூற்றாண்டு காலத்துக்கு மேலாகக் கோலோச்சியவர் கருணா.

யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட 'முதுசம்' என்ற அமைப்பு 2004ல் பதின்மூன்று யாழ்ப்பாண ஓவியர்களின் ஓவியங்களைக் காட்சிப்படுத்தியது. கண்காட்சிக்காக அந்த அமைப்பு தேர்ந்தெடுத்த பதின்மூன்று ஓவியர்களுள் கருணாவும் ஒருவராக இடம் பெற்றமை பெருமைக்குரியதாகும்.

டிஜிட்டல் ஓவியக்கலை ஈழத்து ஓவியக் கலைஞர்களிடையே செல்ல நீண்டகாலம் பிடித்தது. 1992ல் முதற்றடவையாகக் கருணா டிஜிட்டல் முறையில் ஓவியங்களை வரைய ஆரம்பித்தார். கருணா டிஜிட்டல் முறையில் ஓவியங்கள் வரைய ஆரம்பித்த முதல் ஈழத்து ஓவியராகக் கருதப்படுகின்றார்.

இதுவரை நூற்றுக்கணக்கான ஓவியங்களை வரைந்திருக்கும் கருணா ஓவியத்திறனோடு ஒட்டிய வரைகலையிலும் சிறந்து விளங்குகினார். 500க்கு மேற்பட்ட நூல்களுக்கு அட்டைப்படங்களை வரைந்து வடிவமைத்திருக்கின்றார். நூற்றுக்கணக்கான சுவ-ரொட்டிகள், பதாதைகளை உருவாக்கியிருக்கின்றார். பல்வேறு அமைப்புகள், மன்றங்களின் இலச்சினைகளை வடிவமைத்துக் கொடுத்துள்ளார்.

சர்வதேசத்தரம் வாய்ந்த வரைகலை வடிவமைப்புகளைச் செய்து வரும் கருணாவின் ஆற்றலுக்குப் பலமாக இருப்பது அவரு-டைய ஓவியத்திறனே.

உலகளாவியவகையில் தமிழ் ஓவியர்கள் பலரோடும் தொடர்புகளைப் பேணி, ஓவியக்கலை தொடர்பான தேடல்களை மேற் கொண்டவர் கருணா.

கனடாவில் குடியேறிய காலத்தில் ஒளிப் படத்துறை அவருடைய தொழில்சார் துறையாகவும் இருந்தது. அதிவேகத் தொழில் நுட்ப வளர்ச்சி பெற்றுவரும் ஒளிப்படத்துறையோடு ஒட்டி வளர்ச்சிபெற்று, அதில் தேர்ச்சி பெற்றவராகவும் திகழ்ந்தார். ஒளிப் படச்சுருளைப் பயன்படுத்தி கருணா பிடித்த படங்கள் பல, இன்றும் பலராலும் புகழப் படுகின்றன.

ஓவியர்கள் எல்லோராலும் எழுதமுடிவதில்லை. கருணா ஓவியம் தொடர்பாக பல்வேறு கட்டுரைகளை கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக எழுதி வந்தவர். மேற்குலக ஓவியர்களின் வரலாற்றை தமிழில் எழுதி வந்தவர்.

தமிழகத்திருந்து ஓவியர் மருது, ஓவியர் ஜீவா நந்தன் போன்றோர் தாய்வீடு இதழ் சார்பில் கனடா வருவதற்கும் காரணமாக அமைந்தவர் இவரே. இவருடைய மறைவு குறித்து அவர்கள் வெளியிட்டிருக்கும் இரங்கல் செய்தி உருக்கமானது.

ஓவியம் தொடர்பாக பல நேர்காணல்களை வானொலியிலும் தொலைக்காட்சியிலும் வழங்கியுள்ளார். அவ்வப்போது ஓவியம் தொடர்பான கருத்தரங்குகளையும் நடத்தியிருக்கின்றார்.

ஓவியம் நவீன உத்திகளை அறிவதிலும் பரிசோதனை முயற்சிகளைச் செய்வதிலும் ஆர்வம் கொண்டிருக்கும் கருணா ஓவியத் துறை சார்ந்த கணினித் தொழில் நுட்பத்தில் நம்மவரிடையே உச்சம் பெற்றுத் திகழ்ந்தார். படைப்புத்திறனிலும் வண்ணத் தெரிவிலும் இவரது தனித்துவம் எப்போதும் பளிச்சிடும்.

2017ம் ஜனவரி மாதம் மார்க்கம் மாநகர-சபையோடு இணைந்து, தமிழர் மரபியல் பண்பாட்டு மையம் முன்னெடுத்த பொங்கல் விழாவில் கருணாவின் நாற்பதுக்கு மேற்பட்ட ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டன. ரொறன்ரொவின் நடைபெற்ற பெரியளவிலான கருணாவின் ஓவியக் கண் காட்சி இதுவெனலாம். இதே பொங்கல் விழாவில் கருணா சிறந்த கலைஞராக விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ந்து 2017 ஜனவரி இறுதியில் ரொறன்ரோ கல்விச்சபை நடத்திய தமிழர் மரபுரிமை நிகழ்ச்சியிலும் கருணாவின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. அந்த நிகழ்விலும் கருணா விருது பெற்றார்.

கடந்த 2018ல் மொனிற்ரோபா மாகாணத்தில் மனிதவுரிமை அருங்காட்சியகம் நடத்திய முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவு நிகழ்ச்சியிலும் இவருடைய ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

தான் மிகவும் நேசித்த ஓவித்துறையினூடாக மற்றுமொரு பரிமாணத்தைத் தொட்டிருக்க வேண்டியவர் கருணா.

தமிழ்மொழியைக் கணினியில் பயன்படுத்துவது குறித்து ஆழ்ந்த அறிவு கொண்டவர். 92ம் ஆண்டிலேயே கணினி வரை-கலை வல்லுனர் சசிகரன் பத்மநாதனுடன் இணைந்து வரைகலை அனுபவத்தையும் தமிழ் எழுத்துருக்கள் பற்றிய பயன்பாட்டையும் அறிந்து பயன்படுத்தியவர்.

கனடாவில் பிற வரைகலைக்கலைஞர்கள் உருவாவதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் வரைகலை முன்னோடிகள் எனக் கருதபடக் கூடிய சிலருள் கருணாவும் ஒருவர்.

பல அரங்கியல் ஆற்றுகைகளிலும் ஒளியமைப்பு, ஒலியமைப்பு போன்றவற்றில் புதிய நுட்பங்களைப் புகுத்தியவர் கருணா.

நல்ல வாசகரான இவர், தரமான விமர்சனங்களையும் எழுதி வந்துள்ளார்.

நீண்டகாலம் இந்த மண்ணிலே வாழ்ந்து, சமூகத்துக்கும் பலவகையிலும் பயன் நல்கியிருக்கவல்ல ஆற்றல் மிக்க படைப்பாளனை, கலைஞனை நாம் இன்று இழந்துள்ளோம்.

கனடியத் தமிழரின் தொடக்ககால வரை-கலை வரலாற்றிலும் கனடாவில் தமிழர் ஓவியம் என்ற வகையிலும் கருணாவின் ஆற்றலும் ஆளுமையும் ஆழமாகவே பதிவு-செய்யப்பட்டுள்ளது.

கருணா அவர்களின் பிரிவு உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் கொடுந்துயரைக் கொடுத்திருக்கக் கூடியது. அவர்கள் துயரில் கனடா உலகத்தமிழர் பத்திரிகையும் பங்குகொள்கின்றது.

■ ■ ■



# வியக்க வைக்கும் விசரன்!




வியப்பு குழந்தைகளுக்குரிய அற்புதப் பண்பு. அந்த வியப்புத்தான் அவர்களை உயிர்ப்பாக வைத்திருக்கிறது. அந்த உயிர்ப்புத்தான் அனைத்துக் குழந்தைகளும் அழகாக இருக்கக் காரணமாக உள்ளது. பெரியவர்களில் வியக்கத் தெரிந்தவர்கள் பாக்கியவான்கள். அவ்வாறு வியக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெரியவர்கள் புத்தெழுச்சி கொள்கிறார்கள். பெரியவர்களை வியக்க வைக்கக் கூடிய ஆற்றலைக் கைவரப்பெற்றவன் சாதாரணன் அல்லன். அவன் பிரபஞ்ச ஆற்றலைத் தன்னகத்தே கொண்ட ஒரு அசாதாரணன். அத்தகைய பிரபஞ்ச ஆற்றலைத் தன்னகத்தே கொண்ட அசாதாரணனாகவே ஓவியன் கருணா என்கின்ற என் பள்ளித் தோழன், கலையுலகச் சகா, உற்ற நண்பன் இயூஜின் எனக்குத் தெரிகின்றான். ஹாட்லிக் கல்லூரியில் ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போது என்னை முதன் முதலாக வியக்க வைத்தான் இந்த இயூஜின். அவன் பென்சிலால் வரைந்து வடிவமைத்து வெளியிட்ட சித்திரக்கதைப் புத்தகத்தைப் பார்த்த போது ஆறாம் வகுப்பில் நான் அடைந்த வியப்பு அது.

நான் இருந்த C வகுப்பில் நான்தான் படம் கீறுவதில் விண்ணன் என்ற நினைப்பில் இருந்த நான் ஒருநாள் பக்கத்து B வகுப்பில் இருக்கிற இயூஜின் கீறின படங்களைக் கண்டு மலைத்துப் போய் நின்றேன். நல்லாப் படம் கீறினால் மட்டும் போதாது, டீச்சரிடம் 'வெறிக் குட்' வாங்கினால் மட்டும் போதாது, தவணைப் பரீட்சையில் சித்திரப் பாடத்துக்கு 80 புள்ளி வாங்கினால் மட்டும் போதாது. நாம் வரையும் படங்கள் பார்ப்போரை வியக்க வைக்கவேண்டும் என்பதை அப்போது நான் உணர்ந்து கொண்டேன். நான் கண்டு வியந்தது ஒன்று இரண்டு படங்களல்ல, அது ஒரு புத்தகக் கட்டு. ஏ வகுப்பில் இருந்த செல்வக்குமாரின் (கதி. செல்வக்குமார்) கதையைத் தன் ஓவியங்களால் தொடர் சித்திரக்கதையாக்கிக் கொண்டிருந்தான் இயூஜின். கையெழுத்துப் பிரதியாக நாலோ ஐந்து மாதங்கள் (சரியாக ஞாபகம் இல்லை) தொடர்ச்சியாக வெளிவந்தது அந்த சித்திரக்கதை மாத இதழ். கடற்கரைக் காட்சிகளையும் வயல்களையும் நதிகளையும் கலர் கலராகவும் மனிதர்களை உருவங்களாகவும் கீறிக்கொண்டிருந்த நான் இயூஜின் பென்சில் கோடுகளாலும் ஷேட்டுகளாலும் (shade) கீறிய பல்வேறுபட்ட குணாதிசங்கள் கொண்ட கதாபாத்திரங்களையும் அவர்களின் பாவங்களையும் ஆக்ஷன்களையும் படத்துக்குப் படம் அவை சொல்லும் கதைகளையும் கண்டு வியந்து நின்றேன். உண்மையில் மனிதர்களை பாத்திரங்களாகப் பார்க்கவும் படைக்கவும் நான் தூண்டப்பட்டது இயூஜின் கீறிய மனிதர்களைப் பார்த்தபின்னர்தான். டிஜிட்டல் ஓவியங்கள் உட்பட அவன் இறுதி வரை கீறிய படங்களில் வரும் மனிதர்கள் பாத்திரங்களாகவே இருந்தனர். அந்தப் படங்கள் பல கதைகளைக் கற்பனை செய்யத் தூண்டும் அதிசயங்களாகவுமே எனக்குத் தெரிந்தன.

எங்கள் சிறு வயதுக் காலத்தில் மனிதர்களின் அங்கங்களை தத்ரூபமாகக் கீறுவது என்பது எமக்கெல்லாம் பெரும் சவாலாக இருந்தது. முறைப்படி கீறுவதற்குச் சொல்லித் தரவோ கற்பிக்கவோ தெரியாத சித்திர வாத்தியார்களே எமக்கு வாய்க்கப்பெற்றிருந்தனர். ஆனாலும் வெறும் 12 வயதில் இந்த இயூஜினால் எப்படி மனிதர்களின் அங்கங்களையும் அசைவுகளையும் அவரவர் குணாதிசயங்களுக்கு ஏற்ப முகபாவங்களையும் உடல்மொழியையும் ஓவியமாகக் கீற முடிந்தது என்பது எனக்கு இன்னமும் வியப்பாகவே இருக்கின்றது. காட்சிமொழி பற்றி கொஞ்சமும் நாம் அறிந்திராத காலம் அது. ஆனால் இயூஜின் அந்த சித்திரக்கதையில் கீறியிருந்த குளோசப் காட்சிகளையும் தூரக் காட்சிகளையும் இன்று நினைத்துப் பார்க்க எனக்கு வியப்பாக உள்ளது. எந்த விடயத்தை எந்தக் கோணத்தில் கீற வேண்டும் என்பது அவனுக்கு அப்பவே தெரிந்திருந்தது.

ஒன்பதாம் வகுப்பில் நாங்கள் வர்த்தகம் அல்லது சித்திரம் இவற்றுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும். எவ்வளவுதான் படம் கீறுவதில் கெட்டிக்காரனாக இருந்தாலும் ஓ.எல் இல் சித்திரத்துக்கு C பாஸ் எடுப்பதே கஸ்டம் என்பது எங்களுக்குள் பரவலாக இருந்த



பலமான நம்பிக்கை. ஆதனால் நாங்கள் எல்லாம் ஒன்பதாம் வகுப்பில் சித்திரத்தைக் கைவிட்டு வர்த்தகத்தைத் தழுவிக் கொண்டோம். ஆனால் வருங்கால டொக்டர், எஞ்சினியர் வகையறாவுக்குள் இருந்த இந்த இயூஜின், "வர்த்தகம் வேண்டாம் சித்திரம்தான் படிப்பேன்" என்று பிடிவாதமாக நின்றபோது சித்திர வாத்தியார், "உனக்கென்ன விசரே? சித்திரம் படிச்சு என்னத்தைக் கிழிக்கப் போறாய்?" என்று புத்திமதி கூறினார். சித்திர வாத்தியார் இவனைப் பார்த்து "உனக்கென்ன விசரே?" என்று மட்டுந்தான் கேட்டார். நாங்கள் "இவன் வெறும் விசரன்" என்றே முடிவு கட்டிவிட்டோம்.


ஓ எல் க்குப் பிறகு அதாவது 1985க்குப் பிறகு அந்த வெறும் விசரனோடு என்னைத் தொடர்புபடுத்தி விட்டவர் விக்கி அண்ணன். அதுக்குப் பிறகு திரும்பவும் என்னை அடிக்கடி வியப்பில் ஆழத்திக் கொண்டேயிருந்தான். இப்போது ஓவியங்களால் மட்டுமல்ல அன்பால், கருணையால், அக்கறையால், நட்பால், நாகரீகத்தால், நல்ல தமிழால், தன் குரலால், தன்னடக்கத்தால், தன் பண்பால், தொழில்நுட்பத் தேர்ச்சியால், பல்துறை அறிவால், தேடலால், தகவல் திரட்டுகளால், உணவுப் பழக்கவழக்கத்தால், தளராத ஆதரவால், ஓயாத ஊக்கமளிப்பால், எல்லயற்ற பொறுமையால், பட்டறிவால், பற்றற்ற போக்கால், சமாதான மனத்தால் அவன் என்னை அடிக்கடி வியப்பில் ஆழ்த்திக் கொண்டிருந்தான்.

முதன் முதலாக நான் அவனுக்கு அனுப்பி வைத்த என் படைப்பு 'புங்குடுதீவு' ஆவணப்படம். அதைப் பார்த்துவிட்டு அவன் சொன்ன வார்த்தை, "ஷொக்காயிட்டன் மச்சான்!". ஆனால் அவன் அந்த ஆவணப்படம் தொடர்பாக என்னுடன் பகிர்ந்து கொண்ட கருத்துகள் அவன் அடைந்த வியப்பை விட பன்மடங்கு வியப்பில் என்னை ஆழ்த்தின. அவ்வளவு நுட்பமான, ஆழமான அவதானிப்பும் ஆவணப்படம் பற்றிய அறிவும் அவனுடையது. அத்தகைய ஒரு விமர்சகன் என் படைப்புகளுக்கு எதிர்வரும் காலத்தில் கிடைக்கப் பெறுவானா என்பது சந்தேகம்தான். விடயப் பொருள் பற்றி விலாவாரியாகப் பேசப் பலர் உண்டு. தொழில்நுட்பம் பற்றிப் பேசவும் சிலர் உண்டு. ஆனால் விடயப்பொருளையும், தொழில்நுட்பத்தையும் பற்றி சேர்த்து அவ்வளவு துல்லியமாகக் கதைக்கவும் தட்டிக் கொடுக்கவும் தட்டிநிமிர்த்தவும் அவனால் மட்டுமே முடியும். உலக சினிமாவுடனான அவனுடைய பரிச்சயமும் இரசனையும் என்னை மேலும் வியப்பில் ஆழ்த்தின. 'த கேர்ல் வித் பேர்ல் இயறிங்' என்ற படம் எனது திரைப்பட உருவாக்கல் வகுப்புகளில் நான் படிப்பவர்களுக்குப் அடிக்கடி போட்டுக்காட்டும் படம். ஏதோ ஒரு கதையில் அந்தப்படம் பற்றி நான் இயூஜினிடம் வாய் உன்னிவிட்டேன் ஒருநாள். அடுத்த கணம் இயூஜின் அந்தப்படம் பற்றி எனக்கு எடுத்துவிட்ட விடயங்களும் தகவல்களும் அவனிடம் இருந்து எனக்குக் கிடைத்த இன்னொரு வகை வியப்பு. பின்னர் அவன் தாய்வீடு பத்திரிகையில் த கேர்ல் வித் பேர்ல் இயறிங் படம் பற்றி எழுதிய கட்டுரையை வாசித்தேன். இவன் எங்களுக்கொரு பொக்கிசம் என எண்ணினேன் நான்.

உரு குறுந்திரைப்படத்துக்கு ஒரு லோகோ வேண்டும் என்று கேட்டேன் அவனிடம். கேட்டு அரை மணி நேரத்தில் குறுஞ் செய்தியாக ஒரு சாம்பிள் வடிவமைத்து அனுப்பி வைத்தான். என் தாய் மேல் சத்தியமாகச் சொல்வேன், "நான் அசந்து போய் நின்றேன்!". உருவும் உடுக்கும் சேர்ந்து வந்தால் நல்லது என்று மட்டுமே அவனிடம் சொல்லியிருந்தேன். அவன் உரு என்ற சொல்லையே உடுக்காக உருமாற்றி அனுப்பினான். உருவுக்குள் உடுக்கையும் உடுக்குக்குள் உருவையும் அரை மணி நேரத்துக்குள் உள்ளடக்கிவிட அவனால் மட்டுமே முடியும். ஏனெனில் அவனுக்கு ஓவியம் மட்டுமல்ல எமது வாழ்வியலும் பண்பாடும் கலைகளும் கதைகளும் கூட தண்ணி பட்டபாடு. அந்த உருவை நாம் இலண்டனில் காட்சியும் எழுச்சியுமாக வெளியிட்டபோது அவன் அதை விளம்பரப்படுத்த எடுத்த முயற்சியும் உழைப்பும் என்னை வியப்புக்கு மேல் வியப்புக்குள்ளாக்கியது. மைனஸ் 40 டிகிறியில் கனடா தேசம் உறைந்திருந்த அந்த காலப்பகுதியில் அவன் உருவுக்காகவும் நட்புக்காகவும் நம் தேசத்துக்காகவும் செய்தனுப்பிய வீடியோக்கள் ஒவ்வொன்றும் உருவின் வெற்றியின் ஒவ்வொரு படிக்கற்கள். அதற்காக அவன் தேர்ந்தெடுத்த ஆட்கள் ஒவ்வொருவரும் மிகப் பொருத்தமான ஆளுமைகள். அதே போன்று கனடாவில் நாம் உருவை உருவேற்றிய போது விளம்பர வேலைகள் அனைத்தையும் பொறுப்பெடுத்துக் கொண்ட அவன் சொன்னான், "டிக்கட் விக்கிற வேலை மட்டும் செய்யமாட்டன்". ஆனால் அங்கும் என்னை வியக்க வைத்தான். படக்காட்சிக்கு முதலில் மிகவும் அதிக எண்ணிக்கையில் விற்கப்பட்ட டிக்கட்டுகள் அவன் எனக்கு அறிமுகம் செய்து வைத்த ஆட்கள் மூலமாக விற்கப்பட்டவையே. ஒரு படைப்பை எவருக்கு எந்த வழியில் எவர் மூலமாகக் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டும் என்பது பற்றிய அவனுடைய புரிதல் மிகத் துல்லியமானது. அவ்வளவு துல்லியமான மார்க்கெட்டிங் அறிவு கொண்ட இந்த 'வெறும் விசரன்' வர்த்தகத்தில் நாட்டம் கொள்ளாமற் போனது எனக்கு இன்னமும் வியப்பாகவே உள்ளது.

பள்ளிப்பருவம் முதல் இந்த ஐம்பது வயது வரை என்னை வியக்க வைத்துக் கொண்டிருந்த அவன் என்னை உறைய வைத்து இவ்வளவு அவசரமாகச் செல்வான் என கனவிலும் நினைக்கவில்லை. ஆயினும் அவன் தன் மரணத்தை முன் கூட்டியே அறிந்து வைத்திருந்தானோ என நான் இன்று வியக்கிறேன். அவனுடைய அண்மைக்காலச் செயல்களையும் நடத்தைகளையும் அவன் அடிக்கடி பேசிய வார்த்தைகளையும் எண்ணிப் பார்க்க எனக்கு அப்படித்தான் தோன்றுகின்றது. அதற்கான பல உதாரணங்கள் உள்ளன. அவன் அடிக்கடி என்னிடம் சொன்ன வார்த்தை ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கிறேன், "டேய் இடைக்கிடை எடுத்துக் கதையுங்கடா. சும்மா இரண்டு வார்த்தையாவது கதையுங்கடா".

இது அவன் தன் தனிமையைப் போக்கச் சொன்ன வார்த்தைகள் அல்ல. தனித்தனியாகப் போய்க் கொண்டிருக்கும் நம் எல்லோருக்கும் விட்டுச் சென்ற செய்தியாகவே நான் இதைப் பார்க்கிறேன். அடிக்கடி ஒன்று கூடுவதிலும் ஒன்று சேர்வதிலும் அவன் அதீத ஆர்வம் கொண்டிருந்தான். அதுவே நமக்கான பலம் என்று அவன் திடமாக நம்பினான். அவன் தன் மரணத்துக்குப் பின்னும் என்னை வியக்க வைத்துக் கொண்டிருக்கிறான்.



**- ஞானதாஸ் காசிநாதர் -**

# கலையோடு கருத்தான அற்புத மனிதன்




நினைத்துப் பார்க்கிறேன். இயூஜினை நான் அறிந்து கொண்டது 1980ஆம் ஆண்டு. ஹாட்லிக் கல்லூரியில் ஆறாம் வகுப்பில்.

யாழ் மாவட்டம் - வடமராட்சியைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் மாணவர்கள் ஹாட்லி அனுமதிப் பரீட்சை எழுதி அதில் சித்தி பெற்ற நூற்று அறுபது மாணவர் தெரிவா யினர். தெரிவான நூற்று அறுபது மாண வர்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்து நான்கு வகுப்பறைக்குள் விடுமுன் பொது மண்டபத்தில் (assembly hall) நாலு மூலை களில் நான்கு வகுப்புகளும் அமர்த்தப் பட்டன. ஒரு வகுப்பிலுருந்து மற்ற வகுப் பினரைப் பார்க்கவும் கேட்கவும் முடிகின்ற சூழ்நிலையில் முதல் முதலில் நாங்கள் அறிமுகமானோம்.

பாடங்கள் சரியாக ஆரம்பிக்காத நிலை யில் நானும் எனது நண்பன் மதியழகனும் ஆறாம் வகுப்பு ஏ பிரிவு பின் வாங்கிலி ருந்து ஒரு சித்திரக் கதைப்புத்தகம் எழுத ஆவன செய்தோம். அதாவது கதையை எழுதி ஒரு அறுபது பக்கம் கொண்ட கொப்பியில் படங்களை வரைய ஆரம் பித்திருந்தோம்.

இரண்டு மூன்று நாட்கள் நான்கு ஐந்து படங்கள் வரைந்திருப்போம் என நினைக் கிறேன். அந்நிலையில் B பிரிவைச் சார்ந்த இயூஜின் எங்களை அணுகி "நான் கீறவா" எனக் கேட்டார். "நீர் கீறுவீரா" எனக்கேட்ட வண்ணம் கொப்பியைக் கொடுத்தோம்.

நாங்கள் பேசிக் கொண்டதற்கிணங்க நான் கதை சொல்லக் கடகட என வரைய ஆரம்பித்தான். அவனுடைய வரைகின்ற வேகம், தெளிவான, அழகான வரைதல் முறை. முதல் சித்திரக்கதைப் புத்தகத்தை மிக வேகமாக ஓரிரு நாட்களில் முடித்து விட்டோம். முடித்து அதனை எமது சக மாணவர்களுக்கு சுழற்சி முறையில் பகிர்ந்தோம். பலத்த வரவேற்பின் காரண மாக மூன்று நான்கு சித்திரக் கதைப் புத்தகங்கள் வெளியிட்டதாக நினைவு. அந்த சமயம் சித்திரக் கதைப் புத்தகம் சகமாணவர்கள் மத்தியில் மிகவும் வர வேற்பைப் பெற்றது. இன்று வரை எங்க ளின் சித்திரப் புத்தகம் ஹாட்லி நண்பர் களால் சிலாகித்துப் பேசப்படுகிறது.

சித்திர வகுப்புகளில் தலைப்பினைக் கொடுத்து வரையச் சொல்வது வழமை. நாங்கள் அனைவரும் இயூஜின் என்ன வரைந்திருப்பார் என ஆவலாக யோசித்து அனேகமாக அந்தக் கிழமைக்குள் அதனை பார்த்து விடுவோம். எங்கள் வகுப்பில் ஓவியன் என்றால் இயூஜின் கருணாகரன் தான். இவ்வாறே ஹாட்லியில் அவன் நினைவு எமக்கிருந்தது.

அதன் பின் 1991ஆம் ஆண்டு கனடா- வுக்குப் புலம் பெயர்ந்தேன். 1993லிருந்து கருணாவைப் பல சந்தர்ப்பங்களில் சந் தித்துள்ளேன். பல அரங்காடல், அரங் கியல் நிகழ்வுகளில் சந்தித்துள்ளேன். பல பத்திரிகைகள் வடிவமைப்பு செய்யும் பொழுது சந்தித்துள்ளேன். அக்கால கட் டத்தில் பத்திரிகை வடிவமைப்பவர்களில் முதன்மையானவனாக கருணா இருந்தான்.

இந்தக் காலகட்டத்தில் எங்களுக்குள் தகவல் பரிமாற்றங்கள் பரிவர்த்தனைகள் நிறைய நடந்தன.

2003 முதல் நாள் என்ற இறுவட்டு (CD) வெளியிட்டிருந்தேன். அதற்கான அட்டை வடிவமைப்பதற்காக கருணாவிடம் போ- னேன். அவன் வடிவமைக்கையில் இடை யில் பேச்சுக் கொடுத்தேன். நான்

கருணாவிடம், "உங்களுக்குச் சித்திரக் கதை (comics) செய்வதில் ஆர்வமிருக்கா, உடன் வருவீர்களா" என வினவ. அதற்கு அவற்றை விட்டுவிட்டதாக அவர் சொன்னார். அந்தச் சமயம் நான் சொன்னேன் "எனக்கு ஒரு நண்பன் இருந்தவன். அவன் இங்கி ருந்தால் அவனும் நானும் சில சித்திரக் கதைப்புத்தகங்கள் விடலாம்" என. அவர் எனது நண்பன் பெயரைக்கேட்க நான் அவன் ஹாட்லியில் படித்த நண்பன் என்றேன். அதற்கு அவன், "ஹாட்லியா? "உங்கள் நண்பன் பெயர் என்ன?" என வினவ 'இயூஜின்' எனப்பதிலளித்தேன். உடனே நாற்காலியைச் சுழற்றித் திரும்பி 'Meet Mr Eugine' எனக் கை கொடுத்தான். 1993 முதல் 2003 வரை பத்தாண்டுகள் நாங்கள் பழைய நண்பர்கள் என அறி யாமல் பழகியிருந்தோம்.



அதன் பின் அவனிற்கும் எனக்குமான உறவு பன்மடங்கு அதிகமானது. பழைய நண்பன் தான் கருணா என அறிய முன் னரே எனது 'மனோரஞ்சிதம்' இறுவட்டு வடிவமைப்பு கருணாவே செய்தான். பழைய நண்பன் இயூஜின் தான் கருணா என அறிந்தபின் எனது அனைத்து முயற் சிகளிலும் கருணாவின் பங்களிப்பிருந்தது.

நாங்கள் எடுக்கும் வேலைத்திட்டங்களில் அதீத அக்கறை காட்டுவான். தினம் இரவு எடுத்து அதுபற்றி உரையாடுவான். ஏதே னும் சந்தேகம் கேட்டால் அடுத்த நாள் பல ஆய்வுகள் செய்து அதன் இணைப் புகளுடன் அனுப்பி வைப்பான். கணினி, கணினி வடிவமைப்பு, டிஜிட்டல் போன்ற வற்றில் எங்களை விட நான்கைந்து வரு டங்கள் முன்னோடியாகவே திகழ்ந்தான். அவன் ஓர் Apple, iPhone காதலன்.

நான் திரைப்படம் செய்யும் போது Apple கணினி வாங்கக் காரணமாக இருந்தவன் கருணா. அவனின் ஊக்குவிப்பு, அறிவு ரையிலேயே வாங்கினேன்.

தனிப்பட்ட உறவு, நட்பு, தொடர்புகளைக் கடந்து கருணா என்றால் கலை நயத்தோடு, மாசற்ற அன்போடு, கருத்தோடு, அக்க- றையோடு செயற்படும் உதவும் நல்ல நண்பன். இனிமேல் எமக்கு எல்லா விட யத்திலும் அவனைப் போல் துணைவரக் கூடிய நண்பன் கிடைக்கப் போவதில்லை. கருணாவிற்கு ஈடு இணை யாருமில்லை. அவன் வெற்றிடத்தை யாராலும் நிரப்ப முடியாது.

கருணாவைப் பற்றிக் கதைக்கும் போது கண்ணீரை அடக்கிக் கதைப்பதே கடின- மாக உள்ளது.

அவனைப் போல ஒரு நண்பனைக் காண் பது அரிது. அவன் எந்தச் சர்சைக்குள்ளும் உட்பட்டதில்லை. இன்னொரு நண்பனோடு மனஸ்தாபம் எனின் அவன் அதைப்பற்றிக் கதைக்க விரும்ப மாட்டான். அவனோ டையே எனக்குக் கருத்து வேறுபாடிருப் பின் அதனையும் அவன் எதிர்கொள்ள மாட்டான். நேரடியாக அதைப்பற்றிக் கதைக்க மாட்டான். நானாக அதைத் திரும்பக் கதைக்க வந்தாலும் "அதெல் லாம் முக்கியமில்லை மச்சான், விடு வேற வேலையைப் பார்ப்பம்" என்பான். அதாவது எந்தக் காலத்திலும் ஒருவர் மனம் புண்படும் படி கதைக்கவோ நடக் கவோ அவனால் முடியாது. எந்தக் காலத் திலும் அவன் ஒருவரைக் குறை கூறி அறியோம். எல்லாருடைய நல்ல விடயங் களைபும் உயர்வாகக் கதைப்பான். தன் னைச் சுற்றியுள்ள அனைவரையும் புகழு வான். எனக்கெல்லாம் சொல்லுவான் "உனக்கு உன் பலம் தெரியாது" என. என் பலம் எனக்குத் தெரியாமலிருக்கலாம், ஆனால் உனக்கு உன் பலம் அறிந்தும் நீ அனுபவிப்பதில்லை என நான் கூறுவது வழமை. அவன் பலம் அவன் ஆற்றல். ஆனால் அந்த ஆற்றலுக்கு ஏற்ற வாழ்க் கையை அவன் வாழவில்லை. இது எங்களுடைய ஆதங்கம். ஆதங்கங்கள் எமக்கே ஆனால் அவன் ஒரு ஞானியா கவே நடந்து கொண்டான். தனக்கென எதுவும் வைத்திருக்கவில்லை, எதுவும் செய்யவில்லை. தனிப்பட்ட முறையில் சொத்துச் சேர்ப்பது, வாழ்வது போன்ற விடயங்களில் அவன் பொறுப்பில்லாது நடப்பதாக அவனிடமே கூறியுள்ளோம். தனிப்பட்ட எந்தக் கேள்விக்கும் பதில் தராது மழுப்பி பொது விடயத்திற்கு கொண்டுவருவான். நான், கங்கா எல்லாரும் அவனைப்பற்றி கவலைப்பட்டுக் கதைத் ததுண்டு. தன்னைப்பற்றிய அக்கறையற்ற வனாக இருக்கிறானே எனக் கவலைப் பட்டதுண்டு. இப்போது நினைக்கப் போனால் அவன் பெரிய ஞானியாகவே படுகிறான். தன்னாலான நன்மையை மட்டுமே அனைவருக்கும் செய்தான்.

அவன் எவ்வாறு என் வாழ்வைத் தொட் டானோ அதே அன்போடும் ஆழத்தோ டும் தான் இன்னும் பல நூறு பேரின் வாழ்க்கையையும் தொட்டிருக்கிறான் என் பதை அவனின் இறுதி நிகழ்வில் உணர்ந்து கொண்டேன்.

அவன் தன்னைத் தவிர உலகின் அழகான விஷயங்களை அளவற்ற காதலோடு ஆகர்சித்திருக்கிறான்.

ஒரு குறுகிய வாழ்நாளில் அத்தனை பேருக்குப் பிரயோசனமாக மட்டும் வாழ்ந் திருக்கிறானே என எண்ணும் போது மலைப்பாகப் பெருமையாக இருக்கிறது. இப்படிப்பட்ட நண்பனோடு நீண்ட நெடிய காலம், கள்ளம் கபடமற்ற அப்பழுக்கற்ற பாசத்தோடு வாழ்ந்தோம் என்பதை நினைக்கவே பெருமையாக உள்ளது. அவன் அனைத்து நண்பர்களுக்கும் நல்ல வனாக இருந்தான். அதேபோல் அனைத்து நண்பர்களும் அவனுக்கு நல்லவர்களா கவே இருந்தனர். அவன் ஓர் அழகான மனிதன். இருக்கும் காலம் வரை அனை வருக்கும் பிரயோசனமாக இருந்து போய் விட்டான்.



- கதி. செல்வக்குமார் -





# ஒன்றான இரண்டு கருணாக்கள்

**- கார்த்திகா ஞானச்சந்திரன் -**

வணக்கம் கருணா

வாழும் போது நாம் பேசிய சிலவற்றையும் பேச மறந்த பலவற்றையும் எடுத்து வரும் மடல் இது. அருகிருக்கும் போது உணராத எமக்கு, நீ மறைந்த பின்னே இன்னுமொரு பாரதியாகத் தெரிந்தாய். பெருஞ்சிறப்பு மிக்க படைப்புகள், தமிழுலகெங்கும் பெயர் சொல்லும் புகழ், அவையடக்கம், அழகான சிரிப்பு அனைத்தையும் அருகிருந்து பார்த்தும் அவ்வப்போது பாராட்டியதோடு அடங்கிவிட்டோம். பாவரசன் பாரதி போல் வரலாற்றில் வாழப்போகும் ஒருவரைக் கண்டுகொள்ளாது எம் வாழ்வை மட்டும் பார்த்துக் கொண்டு வாழ்ந்துவிட்டோம், சராசரி மனிதராக, எமக்கு உன் வலி புரியாது. எம்மைக் குற்றவாளி ஆக்கிவிட்டு, அமைதியாய்த் தூங்குகிறாய் ஆறடி நிலத்தடியில். உன் இறுதி நிகழ்வில் உனக்கான பிரார்த்தனையில், நீ உயிர்த்தெழுவாய் என்றார்கள். இப்போதே உயிர்த்தெழுந்து வா நண்பா! உன்னை தலையில் வைத்துக் கொண்டாடுவோம்.

ஒரு புறம் குற்ற உணர்வு மனதைக் குடைந்தாலும், கோலோச்சி நிற்கின்றன உன்னோடு பழகிய இனிமையான நினைவுகள். ஓவியனாக மட்டுமே பலரும் உன்னை அறிந்திருக்க, தமிழ் உணர்வாளனாய் தேசியத்தின் பணியூடு, தொலைபேசி வாயிலாக, Digi கருணாவாக அறிமுகம் ஆனாய். 'கருணா' என்ற கற்பனை உருவம், பெட்டி முகத்தோடு, நடுத்தர உடலமைப்பு, கருமை நிறம், அலை போன்ற கரிய முடியெனக் கடந்தன ஆண்டுகள் எட்டு. இக்காலம் வானொலிப் பணி கங்காவை அறிமுகம் செய்தது. கங்காவின் பள்ளித் தோழன் கருணா என, எம் வானொலி நிகழ்வுகளை ஆய்வு செய்து கூறும் இன்னொரு கற்பனைக் கருணாவாக என் நினைவுகளில் மீண்டும்



நீ. ஓரிரு மாதத்தில், எதேச்சையான பேச்சின் போது, கற்பனைக் கருணா - ஒன்றும், கற்பனைக் கருணா - இரண்டும் ஒன்றே என்ற புரிதலால், மீண்டும் தொலைபேசி நண்பரானோம். உன் நண்பன் என் நண்பனாக உறவுப்பாலம் அமைந்ததால் அன்று ஒரு நாள் என் ஊர்தியில் உன்னையும் அழைத்து வந்தேன். உன் பணிமனையில் இருந்து ஊர்தி நோக்கிச் செல்கையில், கற்பனைக் கருணாவும் கற்பனைக் கார்த்திகாவும் காணாமற் போக, உன் பெட்டி முகம் வட்டமானது, நடுத்தர உடலமைப்பு குண்டானது, கருமை நிறம் அப்படியே இருக்க கரிய அலை போன்ற முடி இருந்திருக்குமா என்று ஆய்வு செய்ய முடியாத அளவுக்கு தலையோடு ஒட்டிய அளவுக்கு ஆங்காங்கே முடி. இது என் கற்பனை கலைந்த கதை. குரலை வைத்து நீ கற்பனை செய்த என் உருவமும் high school பிள்ளை போல் இருக்கே என்றானது.

நாட்கள் நகர்ந்தன. சிறந்த ஓவியனாக அறிந்து கொண்டேன். அதையும் கடந்து தமிழ் மொழியின் தொன்மை, சிறப்பு, வரலாறு, கலை, தமிழர் உணவுகள் என பலவற்றைப் பலவேளைகள் பேசினாய், பேசினோம். தூய தமிழ்ப் பயன்பாடு, தமிழர் இசை, சிறு தானிய உணவகம் அமைத்தல் என உன் எண்ணம் ஊற்றெடுத்தது. இதுவே உன்னோடு அதிகம் பேச வேண்டும் என்ற ஆவலை அதிகரித்தது. இச்சிறிய உலகில் என் கணவரோடும் நண்பனாகி எம் குடும்ப நண்பனும் ஆன போது எமக்கான ஒளிப்படப் பிடிப்பாளன், எம் தொழில்சார் வரைகலைஞன் என நீண்டது நம் நட்பு.

காலங்கள் ஓடின. எம் நிறுவனத்திலும் ஒரு பணியாளனாக, தனித்துவமான உன் திறமையால் எம் வளர்ச்சிக்கான படிக்கட்டில் ஓர் ஏணியானாய். அதே வேளை அங்கு மிக அமைதியானாய். நண்பன் போல் அல்லாது ஓர் இடைவெளியை உணர வைத்தாய். ஏன் என்ற வினாவுக்கு விடை தெரிந்த போது நீ விண்ணுலகம் சென்றிருந்தாய். அருகில் இருந்தும் அடையாளம் கண்டு அக்கறை கொள்ளத் தவறிவிட்டு, உன் இறுதி ஊர்வலத்திலும், உன்னை ஆறடி நிலத்தடியில் விதைக் கையிலும் மலர் வைத்து மன்றாடி நின்றோம். எம்மைப் பொறுத்துக்கொள்க நண்பனே, பெரும் மதிப்புக்குரிய கலைஞனே. தனித்தமிழ்ப் பயன்பாட்டின் போதும் ஒவ்வொரு முறையும் சிறு தானிய உணவுகளை உட்கொள்ளும் போதும் எம் வீட்டில் தொங்கும் உன் ஓரே ஒரு ஓவியத்தின் ஊடாகவும்
என்றும் எம்
நினைவில் நீ!



karthiga.g@thaiveedu.com

# Karuna Mama never stopped learning

Karuna Mama was remarkable in so many ways. He lived his life to the fullest and touched all of us during his time here with us. We all have a scope of memories that we will always carry with us, memories that defined him and memories that we will always hold dear.

For those who knew Karuna Mama, you are lucky enough to have known of his art. He was an extremely talented individual who's passion could be seen in his art.


Karuna Mama continued to touch many others and as we look through the memories of his life, we see him as a respected colleague. He shared his expertise with all his colleagues. He never stopped learning.


His artwork added so much to our lives but even beyond that he added so much to the ones that surrounded him. If you were lucky enough to call him a friend or in my case an uncle he was always there supporting our endeavors. For the many theatre plays my dad held, or for the digital media he created to accompany magazines or whether it was just a listening ear he was always there assisting us, and it is not only a huge loss in our lives but to our community.

It is very hard to say goodbye and we don't want to, but I think it'll help to remember that he touched so many people's lives, so positively. He leaves an amazing legacy behind. Karuna Mama, we miss you and we will always remember you!



**- Jennifer Dilipkumar -**





# ஓவியங்களை உயிர்ப்பித்தவன்

ரஷ்மி

அவன் ஓவியங்களை
பச்சை நிறங்களால் குளிர்வித்தான்
சிவப்பின் கோபத்தினால் எரியூட்டினான்
மழையை நீலத்தினால் உறைவித்தான்
மஞ்சட் பேதங்களாலும் கறுப்பின் உறுதி கொண்டும்
அவற்றை உயிர்ப்பித்தான்

அவனுடைய இதழ் சிவந்திருந்த பெண்களிடம் கேட்டேன்
நீளக் கண்களையுடைய ஆண்களைக் கேட்டேன்
இவ்வளவு செழிப்புள்ள நிறங்களை எங்கு பெறுகிறான் என்று
இவ்வளவு ஓர்மையான கோடுகளை எப்படி வரைகிறான்
என்று– 'அவனே ஆகுகிறான்' என்றார்கள் அவர்கள்

இந்த நிறங்களையெல்லாம் தீர்த்துவிட்ட நாளில்
என்ன செய்வாய் என்று
நான் அவனைக் கேட்டிருக்கவில்லை.

பிறகொருநாள் அவர்கள் அவனை அடக்கம் செய்தார்கள் –
பெட்டியை வெறுமையாக்கி நிறங்களாகத் தேங்கிக்
கொண்டான் அவன்.






# கனிந்தனன் இறைவன் தானே!

தீவகம் இராசலிங்கம்

உயிர்களும் உருவம் கொள்ளும்
இயற்கையும் ஒருகால் நிற்கும்
பயிர்களும் பருவம் கொள்ளும்
பார்வைகள் சிலைகள் சொல்லும்
தயிரினில் நெய்யுண் டாகும்
'சயிக்கிளில்' ஆச்சி அப்பு
இயக்கியே பயணஞ் செய்வர்
இதுவொரு வரையா ஊற்றே!

காவியம் கதைகள் பேசும்
கற்பனை விதைகள் வீசும்
சாவினை வென்று வாழும்
சரித்திரம் கரத்தில் மீளும்
கோவிலின் தெய்வம் வந்து
திருமுகம் உருவே கொள்ளும்
ஓவியன் கருணா வென்றோர்
உத்தம புரத்தில் தானே!

திறமைகள் துருவி யார்க்கும்
திக்குகள் திசைகள் சேர்க்கும்
அறமெனக் கவிதை யாக்கும்
அற்புதம் மறைபோல் கேட்கும்
பறையென முரசம் கொட்டும்
பட்டறை படங்கள் காட்டும்
பறவையாய்ப் பார்த்த அந்த
பைங்கிளி பறந்த தாமோ?

அருமையாய்ப் பிழம்பு மாகி
அனலிலும் குழம்பு மாகி
கருமையும் நிறமும் ஊற்றிக்
காட்சியை வலைக்குட் போற்றி
உருவமும் உதிரம் கொட்டும்
உள்ளொளி நரம்பும் யாத்த
கருணாவென் றொருவன் போந்தான்
கனிந்தனன் இறைவன் தானே!






# கலைஞர் கருணா: வரையப்படுகிற நினைவுகள்

**- ஓவியர் அமரதாஸ் -**

ஓவிய நண்பர் கருணா அவர்களின் சடுதியான மறைவு, தமிழ்ச்சூழலில் கனத்த வெற்றிடத்தையும் துயரலைகளையும் தோற்றுவித்திருக்கிறது.

ஓவியக்கலையில் மட்டுமல்லாமல், ஒளிப்படக்கலையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த கலைஞர் கருணா, கனடாவில் நீண்டகாலமாக பல்வேறு கலைச்செயற்பாடுகளில் தனது காத்திரமான பங்களிப்பினை வழங்கிவந்தவர். உலகெங்கிலும், இனிய நண்பர்கள் பலரைப் பெற்றிருந்தவர்.


ஓவியம் சார்ந்த அவரது விரிந்த தேடல்களை, அவருடனான உரையாடல்களிலும் படைப்புகளிலும் புரிந்துகொள்ள முடிந்திருக்கிறது. ஓவியத்துறையில் அவர் வீச்சுடன் இயங்கிக்கொண்டிருந்த காலத்தில், அவரது இழப்பு சடுதியாக நிகழ்ந்துவிட்டது. உண்மையில், தமிழ்க் கலைச்சூழலில் அது ஒரு பேரிழப்பாகும். வயதில் மூத்தவராக இருந்தாலும், நிதானமாகவும் வெளிப்படையாகவும் மதிப்பார்ந்து என்னுடன் உரையாடக்கூடிய நல்ல நண்பராக இருந்தார்.

அவர் கனடாவிலும் நான் சுவிஸிலும் வசிக்கும் காலத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவ்வப்போது உரையாடி வந்திருக்கிறோம். மிக அண்மையில், சில நாட்கள் முன்னதாக, என்னுடன் நீண்ட நேரம் உரையாடியிருந்தார். ஓவியம் மற்றும் ஒளிப்படம் போன்ற காட்சிக்கலைகள் மீது அவருக்கும் எனக்கும் இருந்த தீராக்காதல் தான், நம்மை நெருக்கமாக்கியிருந்தன.

வெவ்வேறு காலங்களில் ஓவியர் அ. மாற்கு அவர்களின் ஓவிய மாணவர்களாகப் பலர் இருந்திருக்கிறார்கள். அவர்களில் கருணா மிகவும் முக்கியமானவர், வித்தியாசமானவர். ஓவியர் மாற்குவுடன் கருணாவும் நானும் வெவ்வேறு காலங்களில் நெருங்கிப் பழகியிருக்கிறோம். எனது பதின்பருவ காலத்தில், ஓவியர் மாற்குவை அடிக்கடி அவரது வீட்டிலேயே சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். அவரது ஓவிய மற்றும் சிற்பக் கலைச்செயற்பாடுகளையெல்லாம் அருகிலேயே இருந்து அவதானிக்கவும், அவரிடமிருந்து கலை நுட்பங்கள் பலவற்றைக் கற்றுக்கொள்ளவும் முடிந்திருக்கிறது. மாபெரும் யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின்னர், வன்னியில் அலைக்கழிந்து பல்வேறு துன்பங்களை அவர் அனுபவிக்க நேர்ந்த காலப்பகுதியில், கனடாவிற்குப் புலம்பெயர்ந்திருந்த கருணாவுடன் கடிதத்தொடர்பில் இருந்திருக்கிறார். யாழ்ப்பாண இடப்பெயர்வுக்கு முன்னர், நீண்ட வெண்தாடியுடன் அவர் இருந்த முதுமைக்காலத்தில், அவருடன் நெருங்கியிருந்த நினைவுகள் மறக்க முடியாதவை. ஓவியர் மாற்குவின் மூலம் கருணாவும் நானும் பெற்றுக்கொண்ட அரிதான அனுபவங்களை, அவ்வப்போது பகிர்ந்துகொள்வதுண்டு.

தாயகத்திலிருந்து கருணா புலம்பெயர்ந்த பின்னர், ஓவியத்துறை சார்ந்த நவீன தொழில்நுட்ப மாற்றங்களை உள்வாங்கித் தனது ஓவிய ஆளுமையை விருத்திசெய்துகொண்டேயிருந்தார். மாற்குவின் மாணவர்களாக இருந்த திரு. க.கிருஸ்ணராஜா, திருமதி. அருந்ததி போன்றவர்கள், புலம்பெயர் சூழல்களில் தொடர்ந்து ஓவியர்களாக இயங்கி வருபவர்கள்.

ஓவிய நண்பரான மருது அவர்கள், டிஜிற்றல் ஓவிய நுட்பமுறைமைகள் தமிழ்ச் சூழலில் அதிகம் செல்வாக்குப் பெறக் காரணமாக இருந்தவர். அவரது தனித்துவம் மிக்க ஓவியங்கள் குறித்தும் அவருடன் நமக்கிருந்த நட்புக் குறித்தும், கருணா வும் நானும் பலமுறை உரையாடியிருக்கிறோம். ஓவியர் மாற்குவின் தாக்கமும் ஓவியர் மருதுவின் தாக்கமும் கருணாவின் ஓவியங்கள் சிலவற்றில் வெளிப்படுவதை அவதானிக்க முடிந்திருக்கிறது. பிற்காலத்தில், டிஜிற்றல் தொழில்நுட்பத்துடன் கூடிய, அசைவியக்கம் கொண்ட எளிய கோடுகளால், தமிழர் வாழ்வியலைத் தனித்துவமாகப் பதிவுசெய்ய முயன்றுகொண்டிருந்தார். மாற்குவின் ஓவியங்களில் மாற்குவின் பெயர் வரையப்பட்டிருக்கும் சாயலில், கருணாவின் ஓவியங்களில் கருணாவின் பெயர் வரையப்பட்டிருக்கும். (அதுபோலவே கிருஸ்ணராஜாவின் ஓவியங்களில் அவரது பெயர் வரையப்பட்டிருக்கும்.)




2017ம் ஆண்டில், கருணாவின் ஓவியங்கள் கனடாவில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. கருணாவின் கலைப்பயணத்தில் அது மிகவும் முக்கிய நிகழ்வாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட அவரது படைப்புகள், நூல் வடிவில் இனி வெளிக்கொண்டு வரப்பட வேண்டியது அவசியமாகும்.

பல்வேறு கலைஞர்களின் கூட்டு முயற்சியில், ‘இற்றைத் திங்கள் இந்நிலவில்…’ என்னும் அரங்க நிகழ்வு, கனடாவில் சாத்தியமாகியிருந்தது. பல்வேறு நிலைகளில் முக்கியத்துவம் கொண்ட ஒரு நிகழ்வு அது. அதன் வீடியோ இணைப்பினை, கருணா எனக்கு அனுப்பியிருந்தார். அந்த அரங்க நிகழ்வின் ஒளியமைப்பினை அவர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தனது ஒளியமைப்புப் பணி தொடர்பிலான எனது கருத்தை அறியும் ஆவலை வெளிப்படுத்தியிருந்தார். ஈடுபாடுள்ள துறைகள் சார்ந்து, மேலதிகமாகக் கற்றுக்கொள்வதில் மிகுந்த நாட்டம் கொண்டவர். பல்வேறு தளங்களில் அவரது அறிதலும் இயக்கமும் தொடர்ந்திருக்கின்றன.

தனது கலை சார் பணிகள் குறித்துத் தனது நண்பர்களுடன் கலந்துரையாடிக்கொண்டேயிருந்தார். தன்னைச் சுயமதிப்பீட்டுக்கு உள்ளாக்கிக்கொண்டே பயணித்துக்கொண்டிருந்தார் என்பது கவனிக்கப்பட வேண்டியது. 2018-05-18 அன்று மிக நீண்டநேரம் அவரும் நானும் உரையாடியிருக்கிறோம். முள்ளிவாய்க்கால் பற்றி, எனது போர்க்கால ஒளிப்படங்கள் பற்றி, கியூபெக் பற்றி, ஓவியர் மாற்கு பற்றி, ஓவியர் வாசுகியின் ஓவியக்காட்சி பற்றி, ஓவியரும் நண்பருமான மருது பற்றி, நண்பர் கங்காதரன் பற்றி, இன்னும் பல்வேறு விடயங்கள் பற்றியெல்லாம் அன்று உரையாடினோம். ஓவியர் மாற்கு, எழுதி அனுப்பியிருந்த ‘உருக்கமான’ இறுதிக் கடிதம் பற்றிய தகவல்களையும் அன்று பகிர்ந்துகொண்டார்.

கனடாவில் தொடர்ந்து வெளிவரும் ‘தாய்வீடு’ பத்திரிகையில் கருணாவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. மிக அண்மையில், அவருடன் விரிவாகப் பேசவேண்டியிருந்தது. தாய்வீட்டுக்காக, என்னுடன் ஒரு நேர்காணல் பதிவு செய்ய ஏற்பாடு செய்திருந்தார். சில கேள்விகளையும் என்னுடன் பகிர்ந்துகொண்டிருந்தார். 2019ம் ஆண்டில் வருகிற ‘முள்ளிவாய்க்கால் நினைவுக்காலத்தை’ முன்னிட்டு, எனது போர்க்கால ஒளிப்படங்களுடன் சிறப்பிதழாகத் தாய்வீடு வெளிவரவேண்டும் என்று விரும்பியிருந்தார். எனது போர்க்கால ஒளிப்படங்கள் பலவும், தாய்வீடு பத்திரிகையில் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டுள்ளமையினை நன்றியுடன் நினைவுகூர்ந்தார். இவை குறித்து, தாய்வீடு சார்ந்த நெருங்கிய நண்பர்களான கங்காதரன், திரு. திலீப்குமார் ஆகியோரோடு உரையாடியிருக்கிறார். கருணாவின் மறைவுக்குப் பின்னர், இழப்புத்துயரையும் சில நினைவுகளையும் அந்த நண்பர்கள் என்னுடன் பகிர்ந்துகொண்டார்கள்.

கருணா என்னும் கலைஞனது இழப்பின் கனத்தை, சமூக வலைத்தளங்களிலெங்கும் சமநேரத்தில், காணக்கூடியதாக இருந்தது. கருணா என்னும் இனிய நண்பரை இழந்த பெருந்துயரைக் கடந்துசெல்வது, எனக்கு இலகுவானதாக இருக்காது.



amarathaas@thaiveedu.com

# மனிதம் பற்றிச் சிந்தித்த மகத்தான மனிதன்!




எம் பாசம் நிறை தம்பி கருணா இன்று எம்முடன் இல்லையே என்று நினைக்கும் போது இதயம் கனக்கின்றது. நான் கனடா வரும் போதேல்லாம் அண்ணா என்று கனிவுடன் அழைத்து, விருந்தோம்பிய தம்பி



இன்று இல்லையே என நினைக்கும் போது இதயம் மீண்டும் கனதியாகின்றது. உன் கலைத்திறமை, ஆற்றல், உன் பிறப்போடு பின்னிப் பிணைந்த உன்னை கலையுலகிற்கு அடையாளப்படுத்தியது உன் ஓவியம். அது என்றுமே அழியாதது தான். பெருமைப்படுகின்றேன். நீ இத்தமிழ் பேசும் உலகிற்கு ஆற்றிய அளப்பரிய பங்களிப்பை வார்த்தையினால் வடித்துவிட முடியாது. தமிழின விடுதலைப் பயணத்தில் மக்கள் சிந்திய குருதியை, இழப்புகளை, மரண ஓலங்களை உன் தூரிகையினால் துல்லியமாக, பேசா மொழியினூடாக, மொழிகடந்தும் எல்லோரும் புரிந்துகொள்ள வித்திட்டாயே! தலை வணங்குகிறேன். பல்துறைகளிலும் விரிந்திருக்கும் விடயப் பரப்புகளையும் அவற்றின் ஆழ்ந்த அறிவையும் தெளிவையும் நான் பார்த்து வியந்துள்ளேன். நீ பெற்ற அறிவை, அனுபவத்தை என்னோடு பகிர்ந்து கொள்வாய். அப்போதேல்லாம் நான் உன்னை நினைத்து பெருமை கொள்வேன்.

தம்பி கருணாவிற்கு இன்னொரு முகம்!

எம் மண்ணில் இனங்கட்கிடையே உறவுப் பாலத்தை ஏற்படுத்த கருணா பல முனைகளில் முயற்சித்துள்ளார். மதம், மொழி, இனம், சாதி கடந்து 'மனிதம் மட்டுமே' என சிந்தித்து, உறவை வளர்க்க முற்பட்டான். இம்முயற்சியின் விளைவாக பல இஸ்லாமியச் சகோதரர்கள் என்னுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, சந்திப்புகளையும் மேற்கொண்டோம்.

'எல்லாவற்றையும் கடந்து மனிதம் பற்றி சிந்தித்த ஒரு மகத்தான மனிதன் என் தம்பி' என்று எண்ணும்போது உன் பிரிவின் வேதனையிலும் மனம் ஆறுதல் அடைகின்றது.

உலகிற்கு நீ மகத்தான கலைஞனாக, ஓவியனாக அடையாளப் படுத்தி நல்ல உறவுகளைச் சம்பாதித்துள்ளாய். உதிரத்தால் ஒன்றுபடாவிட்டாலும் உள்ளத்தால் ஒன்றுபட்ட நல்லுறவுள் இவ்வளவு உண்டு என்று காணும்போது பெருமைப்படுகின்றாம். ஆனால், நாம் உள்ளத்தால், உணர்வுகளால், உதிரத்தால் ஒன்றுபட்ட உன் உறவுகள். நீ எமக்கு எம் மாமா - மாமியின் மகன், அன்புத்தம்பி. அதனால் தான் உன் திடீர் மறைவு எம் இதயங்களை கனக்க வைக்கின்றது. எம் உணர்வுகள் வாழும் வரை உன் நினைவுகளோடு வாழுவோம்.

தங்கத்தம்பி எங்கு நீ சென்றாய்? ஆண்டவரின் இல்லத்தில் உறைகின்றாய் என்பது எமது கிறிஸ்தவ நம்பிக்கை! என்றோ ஒரு நாள் இறைவனின் இல்லத்தில் சந்திப்போம் என்ற நம்பிக்கையில் எம் இவ்வுலகப்பயணம் கலங்கிய விழிகளோடு தொடரட்டும்.

ஆண்டவனில் அமைதியுற உன் நித்திய தங்குமிடத்திற்குச் செல். அங்கு சந்திக்கும் வரை கனத்த இதயத்தோடு என்றும் உன் பாசம் மறவா...

ஜெயக்குமார்
அண்ணா



**அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார்**

# தனது சமூகத்துக்கு ஒளியூட்டியவர்

கருணாவின் மறைவு பலரையும் போலவே என்னையும் திசையறியாது தடுமாற வைத்துள்ளது. நாங்கள் உரையாடிக் கொண்டிருக்கையில் இடைநடுவே எழுந்து சென்றுவிட்டார் போல் தோன்றுகிறது. அவரை இறுதியாக நான் கண்டது தமிழியல் மாநாட்டிலேதான். எனினும் ஒருங்கமைப்புப் பணிகளில் நான் மும்முரமாக இருந்ததால் அவருடன் அதிகம் பேசமுடியவில்லை.

சிலவேளைகளில் அவர் என்னை அழைத்து நான் அவசியம் பார்க்கவேண்டுமென்று அவர் விரும்பிய அரங்க நிகழ்வுகள் பற்றிச் சொல்வார். அப்போதெல்லாம் அவர் எப்போதும் தவறாமல், "உங்களுடன் இளையோர்கள் பலரையும் கூட்டிவாருங்கள்" என்று சொல்வார். அவ்வப்போது இணையத்தில் தான் கண்டெடுத்த ஓவியங்களை எனக்கு அனுப்பிவைப்பார். அவர் எனக்கு கடைசியாக அனுப்பிவைத்த ஓவியம் ஓர் இளம் ஓவியருடையது. அதிலே மிகவும் முறுக்கான உடற்கட்டையும் ஒளிபொருந்திய கண்களையும் உடைய திருவள்ளுவர் ஒரு குகைக்குள் இருந்து சூரிய ஒளிக்குள்ளே வருவதாக ஓவியர் வரைந்திருந்தார். "இந்தத் திருவள்ளுவரைப் பார்த்தால் ஹொலிவூட் நடிகர் ஜேசன் மொமோஆ போல் உள்ளதே" என நான் வேடிக்கை செய்தேன். அவரோ என்னிடம், முன்னரும் பலமுறை கூறியதுபோலவே, "ஓவியத்திலே உள்ள ஒளியைப் பாருங்கள்" என்றார்.

"ஓர் ஓவியத்தின் கருவையோ பொருளையோ ஓவியர் தெரிவுசெய்யலாம். ஆனால் ஓவியத்தை இயக்குவது ஒளிதான்" எனக் கூறுவார்.

நிகழ்வுகளுக்குப் பின்னான ஒன்றுகூடல்களிலோ, அல்லது கவிஞர் சேரன் வீட்டில் கூடும் பொழுதுகளிலோ, அவர் பெரியவர்களும் இளையவர்களும் பேசுவதை பெரும்பாலும் கண்ணில் ஒளிதெறிக்க உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருப்பார். எப்போதாவது இடையிட்டு சில வார்த்தைகள் கூறுவார், அல்லது ஒரு சான்றைச் சுட்டிக்காட்டுவார், அல்லது தனக்கேயுரிய பாணியில் ஏதாவது வேடிக்கையாகக்கூறுவார்.

அவர் ஓவியங்களை அணுகிய அதேவிதமாகவே வரலாற்றையும் அணுகினார் - அதன்மீது அவர் ஒளிபாய்ச்ச விரும்பினார். அந்த அடைவையெட்டும் முயற்சியின் ஓர் அங்கமாகவே அவர் தாய்வீடு இதழில் தனது பணியை நோக்கினார். போரினால் புலம்பெயர்க்கப்பட்ட தனது பட்டறிவால் உந்தப்பட்டாரோ என்னவோ, அவர் வரலாற்றின் வரைவிலிருந்து மக்கள்யாரும் விடுபடுவதை விரும்பவில்லை. வரலாறு பற்றிய அறிவு அவரிடம் தேங்கிக்கிடந்தது எனினும், என்னிடம் அவர் பெரும்பாலும் ஓவியங்கள் பற்றி மட்டுமே பேசினார். நகருக்குப் புதிதாக வந்திருக்கும் ஏதாவதொரு கண்காட்சியைப்பற்றிக்கூறி, நான் அதைப் பார்த்துவிட்டேனா என வினவி, அதற்கு யாரையாவது அழைத்துச் செல்வது பற்றிப் பேசுவார். நகருக்குப் புதிதாக வந்திருக்கும் பாவியல் ஓவியக் கண்காட்சி பற்றி அவருடன் பேசவேண்டுமென்று விரும்பியிருந்தேன் அந்த ஓவியங்களுக்கு உயிரூட்டும் ஒளியின் விளையாட்டு அவருக்கு நிச்சயம் களிப்பூட்டியிருக்கும்.

வேறோர் உலகில், கருணாவுக்கு நெய்வர்ண ஓவியங்கள் மீது தன் கவனத்தைச் செலுத்துவதற்கான காலமும் வெளியும் கிட்டியிருக்கும். புலம்பெயர்க்கப்பட்டு பங்குபோடப்பட்ட வெளிகளில் பல்லாண்டுகளாக வாழ்ந்துவந்த கருணா தனது கலைக்கான ஊடகத்தை நெய்வர்ணத்திலிருந்து எண்ணியலுக்கு மாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டார். எண்ணியல் ஓவியங்களில் அவரால் வெளிக்கொணரக்கூடிய படுகைபடுகையானதும் பல்லூடகம் போன்றதுமான படிமங்களின் சிறப்பை அவர் மதித்தபோதும், நெய்வர்ணங்களினோடும் நீர்வர்ணங்களினோடும் உறவாடவே ஏங்கினார்.

தமிழ்க் காண்பியல் கலைஞர்களுக்கு எமது சமூகம் இன்றுவரை போதிய ஆதரவு வழங்குவதில்லை என தனது மனக்குமுறலை எனக்கு சில வேளைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார். இருந்தபோதும் தனது சமூகத்தின்மீது அவர் பார்வை விழ்ந்தபோது, ஒவ்வொருமுறையும் அவர் மிகுந்த பரிவுடனேயே நோக்கினார். தமிழியல் மாநாட்டில் அவர் எடுத்த புகைப்படங்களே நான் பார்த்தவற்றிலேயே எமது கலையிலக்கிய சமூகத்தையும் அறிஞர்கள் சமூகத்தையும் மிகவும் அன்பொழுகப் பதிவு செய்தவை என்பேன். மார்க்கம் நகரிலே அவரின் ஓவியங்களின் கண்காட்சியொன்று நடந்தபோது, பார்வையாளர்கள் அவற்றைச் சுற்றிநின்று தமது குடும்பப் புகைப்படங்கள் பற்றிப்பேசுவதுபோல தமது நினைவுகளை மீட்டுக்கொண்டார்கள். அது அவர்களுக்காக அவர் நிகழ்த்திய ஓர் அதிசயம். போரினால் இடம்பெயர்க்கப்பட்டு, தங்கள் வாழ்வின் நெகிழ்ச்சிக்குரிய தருணங்களை நினைவுகூரக் குறைந்தபட்சம் ஒரு புகைப்படந்தானும் இல்லாமலே வாடிய மக்கள், அவரின் வரைவுகளிலே தங்கள் வாழ்வின், தங்கள் மனிதத்தின் சான்றுகளைக் கண்டார்கள்.

ஒருவேளை கருணாவை நான் அப்படித்தான் நினைவில் வைத்திருப்பேனோ? தனது சமூகத்தை நோக்கிய பார்வையில் சொட்டிய அன்பால் தனது சமூகத்துக்கு ஒளியூட்டிய ஒருவராக...தனது அன்பால் தனது சமூகத்தை வீடு வந்தடையச் செய்த ஒருவராக...!



**நேத்ரா ரொட்ரிகோ**
**- York University**




# எல்லாமும் இருக்க; இல்லாது போயினையே...

- பொன்னையா விவேகானந்தன் -

சாவு மீது கடுஞ்சினத்தை தோற்றுவித்த நாளாகவும் அது இருந்தது.

முதல்நாள் இரவுவரை தடுமாற்றமே இல்லாமல் பேசிக்கொண்டிருந்தவன் மறுநாள் மண்ணுலகில் இல்லையென்றால், சாவைச் சபிக்காமல் என்ன செய்வது?

உயிரை உலுப்பிய இந்தத் துயரத்தை இதுவரை நான் அனுபவித்திருக்கவில்லை என்றே எண்ணுகின்றேன். உயிரை ஒடுக்கிய அந்தக் கொடூரச் செய்தியைச் சுமந்துவந்த கணங்களுக்குப் பின், என் வாராந்தச் சுழற்சி தலைகீழாய் மாறிப்போனது. இப்போதைக்கு மீண்டெழ முடியாது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

கருணாவின் இல்லாமையை இன்னமும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது மனம். நாள்தோறும் வரும் அவர் அழைப்பை எதிர்பார்த்து ஏங்குகின்றது இதயம். மற்றுமொரு தடைவ, "steeped tea milk and sweetener வாங்கிக்கொண்டு வாங்கோ" என்று கேட்க மாட்டாரா என்று வாடுகின்றன உணர்வுகள்.

"அண்ண, பின்னேரம் free யோ வீட்டுப்பக்கம் வரட்டே" என்று கேட்டுவிட்டு, சொந்தவீடு போல் என் வீட்டுக்கு வந்துபோகின்றவர் மீண்டும் வரமாட்டாரா என்று தவிக்கின்றது என் வீட்டு வாசல்.

ஒரு பெருநூலே எழுதுமளவுக்கு அளவிறந்த அனுபவங்களை எனக்குள் விதைத்தவரை மொழியின் ஆழத்துக்குள் அடக்கி விட முடியாது.

பன்முக ஆளுமைகளின் களமான கருணா வைச்சமூகம் பல கோணங்களில் போற்றி நிற்கின்றது. ஒவ்வொருவருக்கும் தேவைப்பட்ட கோணங்களில் விரிந்துநின்று வாரி வழங்கியவர் கருணா. கருணாவால் மட்டுமே அது முடியும்.

நானும் கருணாவும் சந்தித்துக்கொண்ட 1994மே மாதத்திலிருந்து கடந்த பெப்ரவரி 1ம் நாள் வரை இருவரும் நெருங்கிப் பணியாற்றிய நிகழ்வுகள் ஏராளம்.

நானும் கருணாவும் சந்தித்துக்கொண்ட நிகழ்வே மிகவும் சுவையானது. அதை அடிக்கடி கருணா கூறிக்கொண்டிருப்பார். அதே யாண்டில் நான் வானொலித்துறையில் காலடி வைக்க, கருணா என் பின்புலமாக இருந்தார். கனடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நான் தயாரித்த சஞ்சிகை நிகழ்ச்சிகளுக்கு இசைப் பின்னணியாலும் நெறிப்படுத்தலாலும் உயிரூட்டியவர் கருணா என்பதைப் பலரும் அறிய மாட்டார்கள்.

ரோஜா என்ற சஞ்சிகையை ஆனந் என்பவர் வெளியிட்டுவந்த நேரம், ஒரு சிறப்பிதழைத் தயாரிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த இதழுக்கான வடிவமைப்பு கருணாவின் பொறுப்பு. இருவருமாகச் சேர்ந்தே அந்த இதழை உருவாக்கினோம்.

பின்னாளில் ஆசிரியர் அ.கந்தசாமி அவர்களின் முயற்சியால் முகரம் இதழ் தோற்றம் கொண்டது. அதன் இணையாசிரியர்களில் நானும் ஒருவன். அதுவும் கருணாவின் கைவண்ணத்தில் பேரழகு பெற்றது.

கனடியத் தமிழ் வானொலி தோன்றிய பின் அதன் வளர்ச்சிக்குக் கருணா வழங்கிய அறிவுரைகளும் பின்பலமாய் ஆற்றிய பணிகளும் மிகப்பெரியவை.

இப்படிப் பட்டியலிட்டால் எனக்கும் கருணாவுக்குமான நெருக்கம் பலவாறாக விரிந்து செல்லும்.

தாய்வீடு இதழ் கருணா போற்றிய பெருவீடு. தாய்வீட்டின் ஒவ்வொரு செங்கல்லிலும் கருணாவின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கும். அதன் வடிவத்தையும் உள்ளடக்கத்தையும் சிறுகச் சிறுக சிந்தித்துச் செதுக்கியதில் கருணாவின் பங்கு மிகப்பெரிது.

அரங்கியல் விழாவில் நான் நெறிப்படுத்திய நாடகங்கள் அனைத்துக்குப் பின்னாலும் கருணாவின் கைப்பக்குவம் இருக்கும்.



நாடகத்தை எழுதி முடித்தவுடன் டிலிப்குமாரையும் கருணாவையும் அழைத்து நாடகத்தை விபரிப்பேன். அவ்வேளைகளில் நாடகப்படியை உற்றுக் கவனிக்கும் கருணா, அதில் எங்கெங்கெல்லாம் அரங்க உத்திகளைப் பயன்படுத்தலாம், ஒளியை எவ்வாறு கையாளலாம் என்பதையெல்லாம் விரிவாகக்கூறுவார். அவருடைய கருத்துகளுக்கேற்ப, நான் என் நாடகத்தைச் செப்பனிட்டுக்கொள்வேன்.

இனி யாரிடம் செல்வேன்?

சில ஆண்டுகளுக்கு முன்பு எனது பேராசிரியர் மு.பி. பாலசுப்ரமணியம் அவர்கள் கனடா வந்திருந்தபோது, அவருடைய முதன்மைச் சுற்றுலா வழிகாட்டிகள் கங்காவும் கருணாவும்தான். அமெரிக்க எல்லையான நயாகரா ஆற்றின் கரையில் நின்றபடி, அமெரிக்கா கனடா யுத்தத்தைப் பற்றி கருணா விபரிக்க, பேராசிரியர் வியப்போடு கேட்டுக்கொண்டிருந்தார்.

'இதுதான் நான் எதிர்பார்ப்பது. இந்த விடயங்களைத்தான் நான் அறிந்து கொள்ள வேண்டும்" என்று கருணாவைப் பாராட்டிய பேராசிரியர், தமிழகம் சென்று கனடாப் பயணக்கட்டுரையை ஒரு நூலாக எழுதினார். அதில் கருணாவைப்பற்றி குறிப்பிடுகின்றார்.

புதிதாக ஒரு வாழ்வியல் தளத்தின் கட்டுமானத்தைக் கனடாவில் தமிழ்ச் சமூகம் எழுப்பிக்கொண்டிருந்த காலத்தில், ஓவியம், ஒளிப்படம், வரைகலை போன்ற துறைகளில் புதிய வாசல்களை அறிமுகப்படுத்தியதில் கருணாவின் பங்கு முதன்மையானது.

கருணா ஒரு கற்பகதரு என்றே நான் கூறுவேன். எல்லாவகையாலும் சமூகத்துக்குப் பயன்மிக்கவராக இருந்தார். எம்மைப் போன்ற பலருக்குச் சிறந்தவொரு நட்பாகத் திகழ்ந்தார். எங்கள் வாழ்வில் என்றும் நின்று நிலைக்கவல்ல பேரத்தியாயம் கருணா.

கருணா குறித்து விரிவாக எழுதவும் பேசவும் வாய்ப்புகள் வரும். அவ்வேளை பகிர்ந்து கொள்வதற்காக நிறைவே உள்ளன நினைவுகள்.

இல்லாதது எதுவுமில்லை உன்னைச் சூழ..
இல்லாது போயினையே..
ஏன் நண்பா?

*vivekanandan.p@thaiveedu.com*

